# தமிழ் இலக்கண மரபுகள்

## கி. பி. 800–1400

## இலக்கண நூல்களும் உரைகளும்

இரா. சீனிவாசன்

The PARKAR

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

# தமிழ் இலக்கண மரபுகள்

*கி. பி. 800 – 1400*

இலக்கண நூல்களும் உரைகளும்

இரா. சீனிவாசன்

***The PARKAR***

**293, Ahamed Complex, 2nd Floor,**

**Royapettah High Road, Royapettah**

**Chennai - 600 014.**

தமிழகப் பல்கலைக்கழக ஆய்வேடுகள் நூலாக்கத் திட்டம்
தமிழியல் ஆய்வு நூல் வரிசை - 1 (மே. பா; வீ. அ)

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | தமிழ் இலக்கண மரபுகள்<br>கி.பி. 800 - 1400<br>இலக்கண நூல்களும் உரைகளும் |
| Author | : | இரா. சீனிவாசன் |
| Copy Right | : | ஆசிரியர் |
| Publisher | : | தி பார்க்கர்<br>293, Ahamed Complex, 2nd Floor,<br>Royapettah High Road,<br>Chennai - 600 014. |
| Language | : | Tamil |
| Edition | : | Ist Edition |
| Year | : | November, 2000 |
| Paper Used | : | N.S. Maplitho 18.6 kg |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 points |
| No.of Pages | : | 288 |
| Price | : | 120/- |
| No.of Copies | : | 1200 |
| Wrapper Design | : | V. Karunanithy |

---

| | | |
|---|---|---|
| Printed by | : | **The PARKAR**<br>293, Ahamed Complex, 2nd Floor,<br>Royapettah High Road, Chennai - 600 014.<br>Ph : 821 5684, email: theparkar@eth.net |

என் தந்தை

உயர்திரு வ. ராஜவேலு

அவர்களுக்கு

## தமிழ் இலக்கண மரபைத் தேடி...

தமிழ்நூல்தொகுப்பின் உச்ச வளர்ச்சி, தமிழ் நூல்களுக்கு உரை உருவாக்கம், நிகண்டுகள் உருவாக்கம், பிரபந்த நூல்கள் உருவாக்கம், தத்துவ நூல் தொகுப்பு, சிற்பம், ஓவியம், கட்டிடம், மருத்துவம், வானியல், நீரியல், நிலப்பகிர்வியல் ஆகிய துறைகளில் உச்ச வளர்ச்சி எனப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்ற காலச் சூழலில், 'தமிழ் இலக்கண மரபுகள்' எவ்விதம் உருப் பெற்றன? என்ற வினாவுக்கு விடை காணும் முயற்சியாக இந்நூல் உருவாகியுள்ளது.

வரலாற்று இலக்கணம், (Historical Grammar) இலக்கண வரலாறு (History of Grammar) ஆகிய துறைகளில் செயல்படும் போது, தமிழ் இலக்கண மரபுகளைக் காணமுடியும். இவ்வகையில், பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் (1934), தெ.பொ.மீ (1974), சிதம்பரநாதன் செட்டியார் (1977), ஆ. வேலுப்பிள்ளை (1979), சோம. இளவரசு (1969), இரா. இளங்குமரன் (1989) செ.வை. சண்முகம்(1976), சோ. ந. கந்தசாமி (1989), ச. அரங்கராசன் (1983) ஆகியோர் செயல்பட்டுள்ளனர். இவர்களின் தொடர்ச்சியாக இரா.சீனிவாசனும் இந்நூலின் மூலமாக அறியப்படுகிறார். இத் தொடர்ச்சியில் இந்நூலின் தனித்த கூறுகள் சிலவற்றை இனம் காண முடிகிறது.

பெயரும் சில பகுதிகளும் மட்டுமே கிடைக்கும் மறைந்து போன தமிழ் இலக்கண நூல்கள் வழி, தமிழ் இலக்கண மரபைத் தேட முயன்றுள்ளார். தொல்காப்பியம், நன்னூல் என்று கூறும் மரபை, இவர் தொல்காப்பியம், அவிநயம், நன்னூல் என்று வரிசைப்படுத்த முயல்கிறார்.

தொடர்ச்சி அறுந்துபோன சூழலில், அத்தொடர்ச்சியை எப்படி ஊகிக்க முடியும் என்பதைக் கிடைக்கும் ஒருசில நூற் பாக்கள் வழி தேட முயலுவதைக் காண்கிறோம்.

மிக வளர்ச்சியடைந்த, சிற்ப - கட்டிடக்கலை மரபு நமக் குண்டு. இம்மரபில், குறிப்பாகச் சிற்பக் கலைக்கும் பாட்டியல் நூல் மரபுகளுக்கும் உள்ள உறவை இந்நூல் விவாதித்திருப் பதைக் காண்கிறோம். சமகாலங்களில் உருவான வேறுபட்ட கலைகள், தமக்குள் ஊடாட்டம் செலுத்தும் மரபை இதன் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது. இவ்வகை ஊடாட்டம் பற்றி அறிவதின் மூலம் பல்குரல் கூறுகளை நாம் புரிந்துகொள்ள முடியும்.

இனங்கள், மொழி வாயிலாகத் தம்மை அடையாளப்படுத் திக் கொள்கின்றன. சங்கதமொழி, பாகத மொழி ஆகியவற்றுக் கும் தமிழுக்கும் நீண்ட கால உறவு உண்டு. இதில் சங்கதமொழி, இந்திய மொழிகளோடு கொண்ட உறவால், அம்மொழி வழக் கொழியும் சூழல் உருவானது; அதே நேரத்தில் பல மொழிகள் அதற்குள்ளிலிருந்து உருப்பெற்றன. சங்கதமொழிக்கும் தமிழுக் கும் ஏற்பட்ட உறவில் தமிழ் காலந்தோறும் அதன் தனிக்கூறு களைப் பேணிவந்திருப்பதைக் காண்கிறோம். தமிழ் இலக்கண உருவாக்க மரபில், சங்கத மொழி மரபுகள் உள்வாங்கப்பட்டு, இலக்கணங்கள் எழுதப்பட்டன. குறிப்பாகச் சொல்லிலக்கண மரபுகள் உருவாக்கப்பட்டன. இவ்வகையான செயல்பாடு, சைவர்களான சேனாவரையர் முதலாகச் சிவஞான முனிவர் வழியாகத் தொடர்ந்தது. இதனால் தமிழ், தனது தனிக்கூறு களை இழக்காமல் நின்ற போராட்டம், விதந்து பேசவேண்டிய ஒன்றாகும். இவ்வகை மரபுப் போராட்டம் பற்றிய செய்திகளை சீனிவாசன் விவாதித்துள்ளார்.

தமிழ் இலக்கண மரபுத் தேடலை முன்னெடுப்பதற்கான சில எடுகோள்களை முன்வைப்பதின் மூலம் இந்நூல், தமிழ் இலக்கண வரலாறெழுதியல் என்ற துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது. இவ்வகையில், ஆய்வுக்கு எடுத்துக்

கொண்டுள்ள காலப்பகுதியில், சமயம் மற்றும் பிற அறிவுத் துறைகள், எவ்வகையில் இலக்கண மரபு உருவாக்கத்தில் செயல் பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது. நுண்ணிய பார்வை யோடு, உருவாகியுள்ள இவ்வாய்வை நாம் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, பாட்டியல் மற்றும் அணி ஆகிய இலக்கண மரபுகள், கடந்த இரண்டாயிரமாண்டு தமிழ் இலக்கணப் போக்கில், கடந்து வந்த சுவடுகளை நுண் ணியதாக அறியவேண்டிய தேவை உண்டு. அதற்கான ஓர் எடுத்துக்காட்டாக இந்நூல் அமைகிறது என்று கருதலாம்.

இத்துறைகள் ஒவ்வொன்று குறித்தும் விரிவான ஆய்வு நூல்களை இரா. சீனிவாசன் எதிர்காலத்தில் உருவாக்குவதற் கான கட்டியமாக இந்நூலைக் கொள்ளலாம்.

இரா. சீனிவாசன் தமது முனைவர் பட்டத்திற்காகச் செய்த ஆய்வு, நூல் வடிவம் பெற்றுள்ளது. அவரது ஆய்வுக் காலத்தில் தோழனாக, மேற்பார்வையாளனாக இருந்த இனிய அநுபவங்கள், மீண்டும் நினைவுத்திரையில் நிழலாடுகின்றன... ஆசிரியராக இருப்பதன் அரிய பேறுகளில் ஒன்று, பல ஆய்வு நண்பர்களை மாணவர்களாகப் பெறுவது. இந்த வகையில் எனது ஆய்வு நண்பர்கள் வரிசையில் சிறப்பான இடம் பிடித் தவர் இவர். வருங்காலங்களில், தொடர்ந்து ஆய்வுப் பணிகளில் ஈடுபடும் மனநிலை உடையவர். அவரது சக ஆய்வு நண்பர்களில் ஒருவரான வே. கருணாநிதி (பார்க்கர் நிறுவனம்) இந்நூலை வெளியிடுகிறார். எனது ஆய்வு மாணவ நண்பர்களில் அவரும் ஒருவர். தெருக்கூத்துக்களைத் தேடி அலைந்த ஆய்வாளர், இப்போது நல்ல நூல்களை உருவாக்குகிறார். இவர்கள் பெறும் இன்பம், நான் பெறும் இன்பம்.

அன்போடு

**வீ. அரசு**

பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | *முன்னுரை* | *09* |
| *1.* | *இலக்கண மரபுகள்* | *21* |
| *2.* | *எழுத்திலக்கண மரபுகள்* | *63* |
| *3.* | *சொல்லிலக்கண மரபுகள்* | *89* |
| *4.* | *பொருளிலக்கண மரபுகள்* | *131* |
| *5.* | *யாப்பிலக்கண மரபுகள்* | *179* |
| *6.* | *பாட்டியல் இலக்கண மரபுகள்* | *227* |
| | *துணை நூற் பட்டியல்* | *257* |
| | *பின்னிணைப்புகள்* | *265* |
| | *பொருளடைவு* | *277* |

## குறுக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| இலக். | - | இலக்கணக்கொத்து |
| இ.வி. | - | இலக்கண விளக்கம் |
| சுவாமி. | - | சுவாமிநாதம் |
| செய். | - | தொல்காப்பியம் செய்யுளியல் |
| திவா. | - | திவாகரம் |
| தொல். | - | தொல்காப்பியம் |
| நம்பி. | - | நம்பியகப்பொருள் விளக்கம் |
| நவநீத. | - | நவநீதப்பாட்டியல் |
| நன். | - | நன்னூல் |
| பிர. | - | பிரயோக விவேகம் |
| புறப். | - | புறப்பொருள் வெண்பாமாலை |
| மயிலை. | - | நன்னூல் மயிலைநாதர் உரை |
| யா.கா. | - | யாப்பருங்கலக் காரிகை |
| யா.வி. | - | யாப்பருங்கல விருத்தியுரை |
| வரை. | - | வரையறுத்த பாட்டியல் |
| வீர. | - | வீரசோழியம் |
| வெண். | - | வெண்பாப்பாட்டியல். |

# முன்னுரை

'தமிழ் இலக்கண மரபுகள் - கி.பி. 800 - 1400, இலக்கண நூல்களும் உரைகளும்' என்ற தலைப்பில், 1995ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு முனைவர் பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு இப்பொழுது புத்தகமாக வெளி வருகிறது. ஆய்வேடு சமர்ப்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்பு, புத்தக வடிவம் பெறுகிறது. இந்த ஐந்து ஆண்டு களில் இலக்கண ஆய்வுத்துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட் டுள்ளன. இலக்கண ஆய்வுத்துறை மிகவும் பரந்தது. தமிழ்நாடு தவிர இலங்கையிலும் ஆழமான இலக்கண ஆய்வுகள் நடந் துள்ளன. இருப்பினும் இலக்கணங்களினது மரபுகளை கண் டெடுக்க முனையும் நோக்கில் குறிப்பிடத்தக்க ஆய்வுகள் தோன்ற வில்லை. முக்கியமாகப் பாட்டியல் நூல்கள் பற்றியும், சிற்ப நூல் களுக்கும் இலக்கண நூல்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் ஆய்வுகள் ஏதும் வெளிவரவில்லை.

தமிழில் இலக்கண ஆய்வு மிகவும் பரந்து விரிந்தது. அறி ஞர்கள் பலர் இத்துறையில் உழைத்து இலக்கண ஆய்வு வளர்ச் சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர். மொழியியல் கல்வி தமிழில் நன்கு பரவிய பின் புதிய கண்ணோட்டத்துடன் இலக்கண ஆய்வுகள் பன்முக வளர்ச்சி பெற்றுள்ளன. பழைய இலக்கணங் களைப் பற்றி ஆராயும் அதேவேளை தற்காலத் தமிழுக்கு இலக் கணம் எழுத வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்படுகிறது.

இலக்கண ஆய்வுகள் முதலில் பதிப்புப் பணியோடு தொடங் கின. தொடர்ந்து புதிய உரைகள் எழுதப்பட்டன. மரபுவழிப் பட்ட புலவர்கள் பழைய இலக்கண நூல்களுக்கு நவீன மொழி யில் விளக்கம் அளிக்க முற்பட்டனர். இந்த நேரத்தில் ஐரோப்

பியர்கள் மொழியியல் அணுகு முறையில் தமிழ் மொழியை ஆராய முற்பட்டனர். உண்மையில் நவீன இலக்கண ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்தவர்கள் ஐரோப்பியர்களே. ஐரோப்பியர்களின் இலக்கண ஆய்வுகளில் ஒரு முக்கிய கட்டமாக இருந்தது கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'. அதுவரை வடமொழியில் இருந்து வந்ததே தமிழ் மொழி, வடமொழி இலக்கணமே தமிழ் மொழி இலக்கணம் போன்ற கருத்துகள் பரவி இருந்தன. 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூல் தமிழ் இலக்கண ஆய்வாளர்களுக்குப் பல வாசல்களைத் திறந்துவிட்டது. இதனால் தமிழ் இலக்கணத்தை அணுகும் முறையில் ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டது.

இலக்கண ஆய்வுகளில் மட்டுமன்றி இலக்கிய, சமூகவியல் ஆய்வுகளிலும் இந்த நூல் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாகத் தமிழ் மரபு தனித்துவம் கொண்டது, வட மொழி மரபுக்கு இணையானது என்ற கருத்துகள் மேலோங்கின. இந்த எண்ணம் தமிழியல் ஆய்வுக்கு மிகப்பெரிய உந்து சக்தியாக இருந்தது. சுதந்திரப் போராட்டமும் தமிழியல் ஆய்வுகளில் ஒரு வேகத்தை ஏற்படுத்தியது.

தமிழ் இலக்கண ஆய்வுகளைக் கூர்ந்து நோக்கினால் இலக்கணத்தின் சிறிய பகுதிகளை நுண்ணியல் அளவில் நுட்பமாக செய்யப்பட்ட ஆய்வுகளே மிகுதியாகத் தோன்றியுள்ளதை கவனிக்கலாம். எழுத்து, சொல், யாப்பு இலக்கணங்களில் இத்தகைய ஆய்வுகளே மிகுதியாக வெளிவந்துள்ளன. இவற்றால் இந்த இலக்கணங்கள் விளக்கம் அடைந்தன என்பதை மறுப்பதற்கில்லை. இலக்கணத்தைப் பேரியல் அளவில் நோக்கிச் செய்யப்பட்ட ஆய்வுகள் சிலவே வந்துள்ளன. மொழிவரலாறு, இலக்கணக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வுகள் பேரியல் நோக்கில் செய்யப்பட்டவை.

இலக்கண வரலாற்றை, இலக்கிய வரலாற்றிலிருந்து பிரித்து விட முடியாது. இலக்கியங்களின் தொடர்ச்சியை நோக்குவது போல இலக்கண நூல்களின் தொடர்ச்சியையும் நோக்குதல்

வேண்டும். அவ்வாறு நோக்கும் போது இலக்கண நூல்களுக் கிடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை இனம் காண வேண்டும். இவை அந்தந்த இலக்கண நூல்களினது இலக்கண எழுதுமுறை, நூலாசிரியரது தத்துவம், சமயப் பின்னணி முதலிய வற்றுடன் இணைத்துக் காணப்படும்போது, இலக்கணக் கோட் பாட்டை அறிய வழிசெய்யும்.

தமிழ் இலக்கண உருவாக்கம் எந்தக் காலத்திலும் ஒரே மையத்தில் குவிந்ததில்லை. தமிழ் நிலப்பரப்பில் பரவலாக பல இடங்களிலும் இலக்கண நூல்கள் தோன்றின. பல சமயங் களைச் சார்ந்தவர்களும் இலக்கணங்களை உருவாக்குவதில் ஈடு பட்டனர். இலக்கண நூலாசிரியர்கள் வேறுபட்ட தத்துவ மரபு களைச் சார்ந்தவர்கள். இலக்கண நூல்கள் உருவான காலமும் வேறுபட்டிருந்தது. இந்தக் காரணிகள் எல்லாம் சேர்ந்து இலக் கண வரலாற்றில் நேர்க்கோட்டுத்தன்மையற்ற போக்குகளுக்கு வழி செய்தன.

பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கியதாக இருப்பதால் இலக்கண வரலாற்று ஆய்வு சிக்கல் நிரம்பியதாக உள்ளது. இதுவரை தமிழில் இலக்கண வரலாறு பற்றிய கருத்தாக்கம் உருப்பெறவில்லை. இலக்கிய வரலாறு எழுதுவதில் உள்ள சிக் கல்களை கா.சிவத்தம்பி அவர்களின் 'தமிழில் இலக்கிய வர லாறு' புத்தகம் எடுத்துக்கூறியது போல இலக்கண வரலாற்றுச் சிக்கல்கள்கூட விவாதிக்கப்படவில்லை. இலக்கண வரலாற்றில் அடிப்படையான காலகட்டப் பிரச்சினை கூட இதுவரை எழுப் பப்படவில்லை. இந்தப் புத்தகம் இலக்கண நூல்களை நான்கு கால கட்டங்களாக வகுத்துள்ளது.

இலக்கண வரலாறு குறித்துப் பேசும்போது இலக்கண உருவாக்கம் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. தமிழ் இலக் கணங்களில் ஒவ்வொரு தனிப்பகுதியும் எவ்வாறு உருப்பெற்றது என்றும் ஆராயப்பட வேண்டியுள்ளது. அந்த வகையில் செ.வை. சண்முகம் அவர்களின் இலக்கண உருவாக்கம் என்ற புத்தகம் முதல் முயற்சி. இதில் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டி யுள்ளது.

இலக்கண வரலாறு என்ற பெயரில் இரண்டு புத்தகங்கள் வெளிவந்துள்ளன. 1969இல் சோம. இளவரசு எழுதிய இலக்கண வரலாறு முதல் புத்தகமாகும். இது சுருக்கமானது. சில நூல்களின் ஆசிரியர், நூலமைப்பு போன்ற விவரங்களைத் தருகிறது. 1989இல் இரா. இளங்குமரன் இலக்கண வரலாறு என்ற அதே பெயரில் மற்றொரு புத்தகத்தை எழுதினார். இது விரிவானது. பல நூல்களை உள்ளடக்கியது. இலக்கண நூல் பற்றிய விவரங்களை விரிவாகத் தருகிறது. இலக்கண நூலாசிரியர், உரையாசிரியர்கள் பற்றி இதுவரை வெளிவந் துள்ள ஆய்வுகளைத் திரட்டித் தருகிறது. எனினும் சில விடுபாடு களும் உள்ளன. மேற்காட்டிய இரண்டு இலக்கண நூல்களுக் கும் இலக்கண வரலாறு என்று பெயரிடப்பட்டிருப்பினும் இவற்றில் வரலாற்று ரீதியான அணுகுமுறை இல்லை. பாடப் புத்த நோக் கில் எழுதப்படும் இலக்கிய வரலாற்றுப் புத்தகங்கள் போல தகவல்களைத் தொகுத்துத் தரும் பணியை மட்டுமே செய்கின்றன. நூல்களுக்கிடையே உள்ள தொடர்ச்சி, இலக்கண நூல்களின் தருக்கரீதியான வளர்ச்சி முதலியவை இவற்றில் விவாதிக்கப்படவில்லை.

ச. அரங்கராசன் 'இலக்கண வரலாறு - பாட்டியல் நூல்கள்' என்ற புத்தகத்தை 1983ஆம் ஆண்டில் எழுதினார். இலக்கண ஆய்வாளர்கள் அதிகம் அக்கறை காட்டாத பாட்டியல் நூல் களின் வரலாற்றை எழுதி இருப்பது நல்ல முயற்சி. இதில் உள்ள தகவல்கள் மிகுந்த நம்பகத்தன்மை வாய்ந்தவை. இயன்ற வரை எல்லாத் தகவல்களையும் திரட்டித் தந்துள்ளார். ஆனால் இது வும் மேற்காட்டிய நூல்களில் உள்ள குறைபாடுகள் நீங்கிய புத் தகம் என்று கூற முடியாது.

'தமிழ் வரலாற்று இலக்கணம்' என்ற புத்தகத்தை ஆ. வேலுப் பிள்ளை 1979ஆம் ஆண்டில் எழுதினார். இது வரலாற்று முறையில் இலக்கணத்தைக் கூறும் புத்தகமாகும். எனவே இதில் இலக்கண வரலாற்றை எதிர்பார்க்க இயலாது. எனினும் இலக் கண வரலாற்றைச் சுருக்கமாகச் சில பக்கங்களில் இவர் எழுதியுள்

ளார். இவர் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு இலக்கண ஆசிரியர்களையும் உரையாசிரியர்களையும் வகைப்படுத்தியுள் ளார். இவர் எழுதியுள்ள வரலாறும் அதில் உள்ள பிரச்சினை களும் வேறு இடத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.

மரபு என்ற சொல் பிரச்சினைக்கு உரிய சொல்லாகும். மரபு என்று கூறப்படுவது எது என்ற கேள்விக்கு விடை கூறி விடுவது அவ்வளவு எளிதல்ல. புதுக்கவிதை பற்றிய விவாதத்தில் சரஸ் வதி இதழில் நடந்த மரபு பற்றிய விவாதங்களை இதற்கு உதாரண மாகச் சொல்லலாம். இலக்கண நூல்களிலேயே மரபு என்ற சொல்லாட்சி மிகுந்த குழப்பத்திற்கு இடந்தருவதாகவே ஆளப் பட்டுள்ளது. தொல்காப்பிய மரபியலில் உள்ள மரபு என்ற சொல்லுக்கும் நூன்மரபு, மொழிமரபு ஆகியவற்றிலுள்ள மரபு என்ற சொல்லுக்கும் பொருள் வேறுபாடு உண்டு. நன்னூலில் வரும் மரபு, மரபு வழுவமைதி ஆகியன குறிப்பதும் மேலே தொல் காப்பியத்தில் வரும் மரபு என்ற சொல்லும் ஒரே பொருள் தரு வன அல்ல. இந்த ஆய்வில் இலக்கண நூல்களுக் கிடையில் உள்ள ஒற்றுமை அல்லது வேற்றுமை என்னும் இரண்டு அடிப்படை களில் நோக்கப்பட்டுள்ளது. இலக்கண நூல்கள் எடுத்துக் கொண்ட பொருள் அல்லது பொருளை வரையறை செய்து கொண்ட விதம், இலக்கணம் கூறும்முறை ஆகிய இரண்டு அடிப்படைகளில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஒரு நூலுக்கும் மற்றொரு நூலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் மரபு பற்றிய ஆய்வில் முக்கிய இடம் பெறுகின்றன. முதலில் தோன்றிய நூல்களுக்கும் காலத்தால் பின் தோன்றிய நூல்களுக்கும் உள்ள வேறுபாடுகளை வளர்ச்சி என்று மட்டுமே எடுத்துக்கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க இயலாது. உதாரணமாகத் தொல்காப்பியத்திற்கும் நன்னூலுக் கும் இடையே உள்ள வேறுபாடுகள் கால மாற்றத்தால் மொழி யில் ஏற்பட்ட வளர்ச்சியால் உண்டானவை என்றே கூறப்பட்டு வந்தன. ஆனால் ஊன்றி ஆராயும்போது நன்னூலுக்கு அவிநயம் முன்மாதிரியாக இருந்ததை அறிய முடிகிறது. இப்படி மரபு வழியாகப் பார்க்கும் நோக்கு உண்டாக வேண்டும்.

○ ○ ○

இந்தப் புத்தகத்தில் இலக்கண நூல்கள் நான்கு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியத்திற்குப் பின்னும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னும் உள்ள இடைப்பட்ட காலத்தில்(இரண்டாம் கட்டம்) பல இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. (பின்னிணைப்பு 1) இவற்றில் சில தொல்காப்பியத்திற்குச் சமகாலத்தில் தோன்றியவையாகவும் இருக்கலாம். ஆனால் இன்று இவை எல்லாம் அழிந்துவிட்டன. இங்கே குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் பெரும்பான்மையானவை அழிந்துவிட்டன. இவற்றின் சிற்சில பகுதிகள் உரைகள் மூலமாகவும் திரட்டு நூல்கள் மூலமாகவும் கிடைக்கின்றன. இலக்கண நூல்களைப் பொருத்தவரை அவிநயம், பன்னிருபடலம், காக்கை பாடினியம் முதலிய நூல்கள் முக்கியமானவை. ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றிய இலக்கண நூல்கள்மேலே குறிப்பிட்ட அழிந்து போன இலக்கண நூல்களைப் பின்பற்றி இயற்றப் பட்டவை என்பது இப்போது உறுதியாகின்றது.

இதே காலத்தில் இசைத்தமிழ், நாடகத்தமிழ் இலக்கண நூல்கள் பலவும் எழுந்துள்ளன. இந்த நூல்களில் உள்ள பல கருத்துகள் இயல் தமிழ் இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாகப் பாவினம் பற்றிய கருத்துகள் இசை, நாடக நூல்களில் இருந்தே வந்திருக்க வேண்டும். பாட்டியல் நூல்களில் உள்ள பொருத்தம் பற்றிய கருத்துகளின் தோற்றுவாயாகவும் இசை, நாடக நூல்கள் இருந்தன.

இலக்கண மரபு பற்றிய ஆய்வுக்கும் இலக்கண வரலாற்று ஆய்வுக்கும் மறைந்து போன இயல், இசை, நாடக இலக்கண நூல்கள் மிகவும் முக்கியமானவை. இலக்கண, இலக்கிய ஆய்வாளர்கள் இவற்றை இதுவரை கண்டுகொள்ளவில்லை. இந்தப் புத்தகம் மறைந்து போன நூல்களின் முக்கியத்துவத்தைக் கருதி அவற்றையும் இன்றியமையாத ஆய்வுத் தரவாகக் கொண்டுள்ளது. இலக்கண மரபுகளை இனம் காணுவதில் மறைந்து போன நூல்கள் பேருதவி புரிகின்றன.

○ ○ ○

பாட்டியல் நூல்கள் பல பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் இவற்றைப்பற்றிய ஆய்வுகள் மிகவும் குறைவு. பாட்டியல் நூல்கள் பற்றிய ஆய்வுகள் விரிவாகச் செய்யப்பட வேண்டும். பாட்டியல்களில் உள்ள பொருத்தம் பற்றிய பகுதிகளும் பிரபந்தங்கள் பற்றிய பகுதிகளும் மிகவும் முக்கியமானவை. குறிப்பாகப் பொருத்தம் பற்றிய பகுதியில் உள்ள மங்கலச்சொல் விளக்கம் முக்கியமானது. தமிழில் உள்ள பெரும் பான்மையான இலக்கியங்கள் பாட்டியல்களில் கூறப்பட்டுள்ள மங்கலச் சொற்களை முதலில் வைத்தே தொடங்குகின்றன. பொருத்தம் பற்றிய கருத்தாக்கம் எவ்வாறு பாட்டியல் நூல்களில் நுழைந்தது, நம்பிக்கை சார்ந்த செயற்கையான கருத்துகள் பொருத்தங்களில் எவ்வாறு தோன்றின போன்ற கேள்விகளுக்கு விடை காண முற்படவேண்டும்.

தமிழில் கிடைத்துள்ள சுவடிகளில் மருத்துவ நூல் சுவடிகளும் சோதிட நூல் சுவடிகளுமே அதிகம். சோதிடக் கருத்துகள் பாட்டியல்களில் முக்கிய இடம் பெறுகின்றன. நாள், உண்டி, தானம், பால், கணம் முதலிய பொருத்தங்கள் சோதிட நூல்களில் சொல்லப்படுபவை. இந்தக் கருத்துகள் பாட்டியல்களில் இடம் பெற்றது, அக்காலத்தில் இலக்கிய வாதிகளுக்கு இருந்த சோதிட அறிவையும் நம்பிக்கையையும் காட்டுகின்றன. அவர்களது இலக்கிய இலக்கணங்களைப் பற்றி ஆராயும் போதும் சோதிட நூல் கருத்துகளையும் இணைத்தே ஆய்வை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

பாட்டியல்களும் சோதிட நூல்களும் தமிழ் மொழியில், தமிழ் வரிவடிவத்திலேயே இருப்பவை. ஆகமங்களும் சிற்ப சாத்திரங்களும் வடமொழியில் கிரந்த வரி வடிவில் எழுதப்பட்டுள்ளன. வடமொழியில் எழுதப்பட்டிருப்பினும் இவை தமிழ்ச் சமூகத்தில் தோன்றியவையே. தமிழர்கள் வடமொழியை எழுதப் பயன்படுத்திய கிரந்த வரிவடிவத்திலேயே இவை உள்ளன. இவற்றில் சிற்ப நூல்கள் இலக்கண ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்கின்றன. எட்டுச் சிற்ப நூல்கள் இதுவரை அச்சிடப்பட்

டுள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவை ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் தோன்றியவை. இவற்றில் உள்ள சிற்ப, கட்டட, அமைப்புகள் தமிழ் நாட்டுக் கோயில்களில் காணப்படுபவையே. சிற்ப நூல்களில் காணப்படும் பல கருத்துகள் இலக்கண நூல்களிலும் அப்படியே உள்ளன. சிற்ப நூல்களில் படிமங்களின் உடல் உறுப்புகள் பற்றிக் குறிப்பிடும்போது, உறுப்புகள் எவ்வாறு இருக்க வேண்டும் என உவமை மூலமாகக் கூறுகின்றனர். இங்கு கூறப்படும் உவமைகள் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள உவமைகளைப் பெரிதும் ஒத்துள்ளன. உதாரணத்திற்கு, கண் - மலர், கெண்டைமீன்; தோள் - மூங்கில்; இடை - உடுக்கை முதலியவற்றைக் காட்டலாம். இந்த உவமைகள் இலக்கியங்களில் அப்படியே ஆளப்பட்டுள்ளன. குறிப்பாக உவமைகளைத் தொகுத்துச் சொல்லும் உவமான சங்கிரக நூல்களில் உள்ள உவமைகளைப் பெரிதும் ஒத்துள்ளன. அதனால் இலக்கண ஆராய்ச்சியில் சிற்ப நூல்களையும் இணைத்தே ஆய்வு செய்ய வேண்டும்.

○ ○ ○

தமிழ் மொழியில் இலக்கண உருவாக்கம் குறித்துச் சிந்திக்கும் போது தமிழ் வழங்கும் நிலப்பரப்பு முக்கிய இடம் வகிக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதியில்,மூன்று புறமும் கடல் சூழ்ந்த பகுதியில் உள்ள நிலத்தில் தமிழ் மொழி வழங்கி வந்தது. பண்டைக் காலத்தில் தமிழகத்தின் எல்லைகளைப் பற்றிக் கூறியுள்ள பல கருத்துகள் இங்கு நினைக்கத்தக்கவை. இலக்கண நூலாசிரியர்கள் தமிழகத்தின் நில எல்லை பற்றிக் கவனம் செலுத்தியுள்ளனர். ஒவ்வொரு இலக்கண ஆசிரியரும் தமது இலக்கண நூலில் மொழி வழங்கும் எல்லையைக் கூறியுள்ளனர்.

தமிழ் மொழியைப் பொருத்தவரை இலக்கணம் உருவாகிய காலம் பற்றியோ காரணம் பற்றியோ அறியப்போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை. தமிழில் கிடைக்கும் தொன்மையான இலக்கணமாகிய தொல்காப்பியத்தை வைத்துக் கொண்டு இலக்கண

உருவாக்கத்தைப் பற்றிச் சிந்திப்பதில் சிக்கல் உண்டாகிறது. தொல்காப்பியம் தமிழ் இலக்கணத்தின் நன்கு வளர்ச்சி பெற்ற காலத்தையே காட்டுகிறது. தமிழில் இலக்கண உருவாக்கம் பற்றி - குறிப்பாகப் பொருள் இலக்கணத்தின் உருவாக்கத்தைப் பற்றி - விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

ஒரு மொழியின் அடிப்படைக் கட்டமைப்பானது ஒன்றாகத் தான் இருக்க முடியும். ஆனால், அதைப் புரிந்து கொள்வதில் ஒன்றுக்கு மேற்பட்ட அணுகுமுறைகள் பயன்பட வாய்ப்புகள் உள்ளன. இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட அணுகுமுறைகள் செயல் பட மனிதனின் சிந்தனைதான் காரணமாகும். சிந்தனை முறை கள் மாறுபட்டிருந்தால் இலக்கணம் பற்றிய புரிதலிலும் வேறு பாடுகள் இருக்கும். இத்தகைய வேறுபாடுகள் காலம் காலமாக மக்கள் மத்தியில் செயல்படும்போது, தனித்தனி மரபுகளாகப் பரிணமிக்கின்றன. வழிவழியாகத் தோன்றும் இலக்கண ஆசிரியர் களிடத்தில் இப்படிப் பல மரபுகள் காணப்படுகின்றன.

ஒரு இலக்கண நூல் தோன்றும் போது, அது எந்த இலக் கண மரபைப் பின்பற்றித் தோன்றுகிறது என்ற கேள்வி எழும். இந்தக் கேள்வியானது, அந்தக் குறிப்பிட்ட இலக்கண நூலின் தோற்றத்திற்கான காரணத்தையும் எந்த வாசகருக்காக இலக் கணம் எழுதப்பட்டது என்ற நோக்கத்தையும் உள்ளடக்கியது. எனவே ஒரு இலக்கண நூலின் தோற்றமானது மேற்குறித்த இரண்டு கருத்துகளையும் உள்ளடக்கியதாகவே இருக்கும். இலக் கண நூல் தோன்றிய காலமும் இங்கு முதன்மை பெறுகிறது.

இலக்கண மரபுகள் குறித்த ஆய்வுக்குத் தமிழில் தோன்றிய எல்லா நூல்களையும் எடுத்துக்கொண்டு ஆய்வு செய்ய வேண் டும். அதுவே தமிழ் இலக்கண மரபுகளை அறிந்து கொள்ள உத வும். எனினும் காலமும் இடமும் கருதியும் முனைவர் பட்ட ஆய் வின் நோக்கத்தைக் கருத்தில் கொண்டும் ஒருகுறிப்பிட்ட காலப் பகுதி மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தொல்காப்பியத்திற்குப் பின்னும் ஒன்பதாம் நூற்றாண் டிற்கு முன்னும் தோன்றிய நூல்கள் அழிந்துவிட்ட நிலையில்,

ஒன்பது முதல் பதினான்கு வரையுள்ள நூற்றாண்டுகளில் தோன் றிய நூல்களே மரபுகள் பற்றிய ஆய்வுக்கு வாய்ப்பாக அமை கின்றன. இந்த நூற்றாண்டுகளில் அதிக அளவில் இலக்கண நூல் கள் தோன்றின. பழைய நூலாகிய தொல்காப்பியத்திற்கும் புதி தாகத் தோன்றிய இலக்கண நூல்களுக்கும் உரைகள் எழுந்தன. தமிழ்நாட்டில் அரசியலிலும் கல்வியிலும் இலக்கியத்திலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கால கட்டத்தில் பல இலக்கண நூல்களும் தோன்றின. அன்றைய சூழலில் பழைய நூலான தொல் காப்பியத்திற்குப் புதிதாக சிலர் உரைகளை எழுதினர். சில உரை யாசிரியர்கள் புதிதாகத் தோன்றிய இலக்கண நூல்களுக்கு உரை எழுதினர். உரையாசிரியர்களின் இரண்டு வகையான போக்கிற் கும் காரணங்களை அறிய வேண்டியது அவசியம். இங்கே குறிப் பிட்ட காலத்தில் தோன்றிய நூல்களே அந்தந்தத் துறைகளில் சிறப்பாக கற்கப்பட்டு வருகின்றன. எது எவ்வாறாயினும் இலக் கண மரபுகள் பற்றிய ஆய்வுக்கு மிகவும் ஏற்ற காலம் இதுவே. இக்காரணம் பற்றியே ஆய்வுக்கு ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையுள்ள காலம் தேர்வு செய்யப் பட்டது.

இலக்கண நூல்களேயன்றி, இக்குறிப்பிட்ட காலத்தில் தோன் றிய இலக்கண உரைகளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட் டன. இவை இந்த ஆய்வில் முதன்மைத் தரவுகளாகும். இந்த இலக் கணங்களைப் பற்றி வெளிவந்துள்ள ஆய்வுகளைத் துணைமைச் சான்றுகளாகக் கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கண மரபுகள் என்ற இந்த ஆய்வில் எழுத்து, சொல், பொருள், பாட்டியல் இலக்கணங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. தமிழில் அணியியல் என்ற ஒரு அணி இலக் கணம் இருந்தது என்று யாப்பருங்கல விருத்தி மூலம் அறிய முடிகிறதேயன்றி, அந்த நூல் கிடைக்கவில்லை. இன்று உள்ள நூல் களில் வீரசோழிய அலங்காரப்படலமும் தண்டியலங்காரமும் வடமொழி காவ்யா தர்சம் என்னும் நூலின் மொழி பெயர்ப்புகளே என்பதால் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

தமிழ் இலக்கண மரபுகள் என்ற இந்த ஆய்வில் மரபுகளை இனம் காண்பதற்கு வேண்டிய அளவுக்கு மட்டுமே ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. இலக்கண நூல்களுக்கிடையில் உள்ள வேறு பாடுகள் அனைத்தும் இங்கு ஆராயப்படவில்லை. இந்த ஆய் வில், இலக்கண நூல்களின் இயல்பிரிப்பு முறைக்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது.

○ ○ ○

இலக்கண மரபுகள் பற்றிய ஆய்வேட்டைத் தயாரித்த போது ஆய்வேட்டிற்கு உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கப் பட்டது. எனினும் அவர்கள் உதவியின் முக்கியத்துவம் கருதி இங்கே மீண்டும் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் (பொ) பேராசிரியர் வீ. அரசு அவர்கள், ஆய்வு மாணவனாக நான் பணி புரியும் போது எனக்குக் கொடுத்த சுதந்திரம் இன்னும் என்னை வியக்கவைக்கிறது. நான் விரும்பிய பொருளில் விரும்பிய முறையில் ஆய்வு செய்ய அனுமதித்ததுடன் பல வகையிலும் ஊக்கமளித்து உதவினார். பேராசிரியர் க. சிவத்தம்பி சென்னை யில் தங்கியிருந்தபோது மிகவும் சிக்கலான பல விடயங்கள் குறித்துத் தெளிவுபடுத்தினார். ஆய்வேடு புத்தகமாக வெளிவர வேண்டும் என்று மிகவும் வற்புறுத்தியவரும் அவரே. அவருடன் நடத்திய விவாதங்களால் இந்தப் புத்தகம் மிகவும் செழுமை யடைந்தது. சென்னையில் அவர் தங்கியிருந்த குறுகிய காலத்தில் எனக்காகவும் சிறிது நேரத்தை மனம் உவந்து ஒதுக்கினார். இவர் கள் இருவரும் ஆய்வேடு தயாரிக்கும் போதும் அது புத்தகமாக வெளிவரும் போதும் செய்த உதவிகளை இந்த நேரத்தில் நன்றி யுடன் நினைவு கூர்கிறேன். ஆய்வேட்டை முடித்தபின், பேரா.செ. வை. சண்முகம் அவர்களை அண்ணாமலை நகரில் உள்ள அவ ரது இல்லத்தில் சந்தித்து உரையாடினேன். ஆய்வேடு புத்தகமாக உருவாகும் போது அவர் கூறிய கருத்துகள் மிகவும் உதவி புரிந் தன. இரண்டு நாள்கள் தமது பணிகளை ஒதுக்கிவிட்டுப் பொறு மையாக என்னுடன் விவாதித்த அந்த அறிஞருக்கு எனது நெஞ் சார்ந்த நன்றி.

ஆய்வேட்டைப் புத்தகமாக வெளியிட அனுமதி அளித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நன்றி. புத்தகம் தயாராகி வருபோது பலவிதங்களிலும் ஒத்துழைப்பும் ஊக்கமும் அளித்த திருத்தணி அ. சு. சு. அரசு கலைக்கல்லூரி முதல்வர் கே. ஏ. பால கிருஷ்ணன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியுரியது.

ஆய்வேடு உருவாகும்போது தானே பொறுப்பெடுத்துக் கொண்டு ஆய்வேட்டைச் சிறப்பாக தயாரித்து உதவியவர் நண் பர் வே.கருணாநிதி. அப்போது அவர் செய்த உதவிகளை என்றும் மறக்க இயலாது. தற்பொழுது ஆய்வேட்டை அவரே புத்தக மாக வெளியிட முன்வந்து அப்பணியை அழகாகவும் செய்து முடித்துள்ளார். புத்தகங்களை அழகாகத் தயாரிக்க வேண்டும் என்பதில் மிகுந்த நாட்டம் கொண்டவர். அவர் வெளியீடாக இப்புத்தகம் வருவது மிகவும் மகிழ்ச்சி தருகிறது. இப்புத்தகம் வெளிவருவதில் உதவி புரிந்த பார்க்கர் நிறுவனத்தில் பணி யாற்றும் செல்வன் ஜே. ஜூட், செல்வி ஜே. கலைவாணி, செல்வி எஸ். கயல்விழி, செல்வன் ஜே. சரவணன், செல்வி எஸ். டி. சுபானி, செல்வன் பி. விஜி ஆகியோருக்கு எனது அன்பான நன்றிகள்.

○ ○ ○

# 1

# இலக்கண மரபுகள்

( இலக்கண உருவாக்கம் - தமிழ் இலக்கண வரலாற்றுக் கட்டங்கள் - இலக்கண நூல்கள் தோன்றக் காரணம் - நூலின் நோக்கம் - தொல்காப்பியத்தின் காலம் - இலக்கணம் பற்றிய கருத்துகள் - வீரசோழியம் எழுந்ததன் நோக்கம் - வேலுப் பிள்ளை காட்டும் இலக்கண மரபுகள் - இலக்கண மரபுகளுக்கான காரணங்கள் - சமயம் - இசை, நாடக நூல்கள் - சிற்ப நூல்கள் - உரையாசிரியர்கள்)

உலக மொழிகளில் பழமையும் சிறப்பும் வாய்ந்த மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. கிரேக்க, இலத்தீன், சமஸ்கிருத மொழிகளுக்கு இணையான பரப்பும் நீண்ட பழமையும் வாய்ந்தது தமிழ் மொழியாகும். அத்துடன் காலத் தொடர்ச்சியும் உடையது தமிழ் மொழி. தமிழில் இலக்கியம் போலவே, இலக்கணமும் பழமை வாய்ந்தது. பொதுவாக மொழியில் இலக்கியம் தோன்றிய பின்பே இலக்கணம் தோன்றுதல் இயல்பு. உலக மொழிகளில் பழமை வாய்ந்த நூல்களாகக் கிடைப்பவை இலக்கியங்களாகவே இருக்கின்றன. தமிழ் மொழியில் இன்று கிடைக்கும் பழமையான இலக்கியங்கள் அனைத்திற்கும் முந்தியதாகத் தொல்காப்பியம் என்ற இலக்கண நூலே கிடைக்கிறது. இது தமிழில் இலக்கணச் சிந்தனைகளுக்கு அளிக்கப்பட்ட சிறப்பான இடத்தைக் காட்டுகிறது எனக் கொள்வதில் தவறில்லை.

வடமொழியில் பழமை வாய்ந்த வேதங்கள் நான்கு உள்ளன. அவற்றிற்கு ஆறு அங்கங்கள் உண்டு. இவற்றை வேதாங்கம் என்று கூறுவர். அவை, மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதி,

நிருக்தம், சோதிடம் ஆகியவையாகும். இவற்றுள் வியாகரணம் என்பது இலக்கணம் ஆகும். வேதத்தின் அங்கங்களில் ஒன்றாக வியாகரணம் அமைந்ததற்கான காரணம் என்ன என்ற கேள்வி யானது, வடமொழி இலக்கணம் எவ்வாறு, எதற்குத் தோன்றியது என்ற கேள்விக்கு இட்டுச் செல்லும்.

வேதங்கள் வழங்கி வந்த வேதமொழி, கால மாற்றத்தால் பழையதாகிவிட்டது. இந்த மொழியின் மீது பிற மொழிகளின் தாக்கம் நேர்ந்தது. இதனால் வேதமொழியில் பல கிளை மொழி கள் தோன்றின. வேதம் புனிதமானது என்ற எண்ணம் நிலவியது. தவிர வேதத்தை அதற்கு உரிய உச்சரிப்புடன் ஓத வேண்டியதும் அவசியம் என்ற எண்ணம் வலுப்பட்டது. எனவே வேத மொழி யின் புனிதத்தை நிலை நிறுத்தவும் அதைச் சரியான உச்சரிப்பு டன் ஓதவும் விதிகளை உருவாக்கத் தொடங்கினர். இந்த வகை யில் உருவானவற்றில் யாஸ்கர் இயற்றிய நிருக்தம், நிகண்டு ஆகி யன முதன்மை வாய்ந்தவை. இதற்குப் பின்னர் பாணினியின் 'அஷ்டாத்யாயி என்ற இலக்கண நூல் தோன்றியது. எனவே வடமொழியில் இலக்கண உருவாக்கம் என்பது வேதமொழியில் பிறமொழியின் தாக்கம் உண்டான போது தோன்றியதே ஆகும். *(இராசாராம்: 1992: 137,138)*

தமிழ் மொழியில், இலக்கண உருவாக்கம் பற்றிய சிந்தனை கள் இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை. தமிழில் கிடைத் திருக்கும் இலக்கண நூல்களில் பழமையானது தொல்காப்பி யம். இந்த இலக்கண நூல் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவு கின்றன. தொல்காப்பிய நூல் இன்று உள்ள வடிவத்தை, அது தோன்றியபோதே பெற்றிருந்ததா அல்லது அதில் சேர்க்கை களும் இடைச் செருகல்களும் நேர்திருக்குமா என்பது குறித்து அறிஞர்கள் சிந்தித்துள்ளனர். தொல்காப்பியம் இலக்கணம் கூறும் முறை பற்றிய (குறிப்பாக வடமொழி இலக்கணத்துடன் அதற்குள்ள தொடர்பு பற்றி) சிந்தனைகளும் தோன்றியுள்ளன. தமிழ் இலக்கண மரபுகள் பற்றிய இந்த ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட காலப் பகுதியில் தொல்காப்பியம் அடங்காததால் தொல்காப்பியம் குறித்த ஆய்வு இங்கு மேற்கொள்ளப்படவில்லை.

தமிழ் இலக்கண உருவாக்கம் குறித்துப் பேசும் அளவில் மட்டுமே இங்கு தொல்காப்பியம் குறித்த கருத்துகள் கூறப்படுகின்றன.

வடமொழி இலக்கண வரலாற்றிற்கு இணையான இலக் கண வரலாறு கொண்ட மொழி தமிழாகும். வடமொழி இலக் கண உலகில் பன்னிரண்டு சிந்தனை மரபுகள் நிலவின என்று கூறப்பட்டுள்ளது. (இராசாராம், சு. 1992:137) அதே போல **தமிழிலும் பல இலக்கண மரபுகள் நிலவி இருக்க வாய்ப்புகள் உண்டு** என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகிறது. தமிழில் நிலவிய இலக்கண மரபுகளை ஆராயும்முன் தமிழ் இலக்கண வரலாற்றைச் சுருக்க மாகவேனும் அறிதல் வேண்டும்.

தமிழ் இலக்கண வரலாற்றை நான்கு கட்டங்களாகப் பிரித்துக் கொள்ளலாம்.

1. தொல்காப்பியம் வரையிலான காலம்.
2. தொல்காப்பியத்திற்குப் பின் கி.பி. 800 வரை.
3. கி.பி. 800 முதல் கி.பி. 1400 வரை.
4. கி.பி. 1600 முதல் கி.பி. 1900 வரை.

முதல் கட்டத்தைச் சேர்ந்த நூலாக இன்று கிடைப்பது தொல்காப்பியம் ஒன்றே. இந்த நூலில், என்ப, என்மனார் போன்ற வாய்பாடுகளில் பல இடங்களில் இதற்கு முன் இருந்த இலக்கண ஆசிரியர்கள் சுட்டப்படுகின்றனர். ஆனால் இதைப் பற்றி அறிய வேறு சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. தொல் காப்பியரின் ஆசிரியராகக் கதைகளில் கூறப்படும் அகத்தியர் பற்றிய செய்திகளும் இங்கு இடம் பெறத்தக்கவை. 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று சிறப்புப் பாயிரத்தில் கூறப் படும் ஐந்திரத்திற்கும் தொல்காப்பியத்திற்கும் உள்ள தொடர்பு கள் குறித்த ஆய்வுகளும் நிகழ்த்தப்பட வேண்டியவையே.

முதல் கட்டத்தைவிட அதிகம் விளக்கம் பெற வாய்ப்புகள் இருந்தும் விளக்கம் பெறாமலே இருப்பது இரண்டாவது கால கட்டமாகும். தொல்காப்பியத்திற்குப் பின் தொடங்கி கி.பி. 800

வரை என்று இந்தக் காலகட்டம் வரையறை செய்யப்பட்டிருப் பினும் இலக்கண நூல்கள் தோன்றுவதற்கான வாய்ப்பு கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின்பே ஏற்பட்டது எனலாம். தமிழ கத்தில் பல்லவர் ஆட்சி தோன்றியதும், சங்க இலக்கியம் என்ற அக, புறப்பாகுபாடு அமைந்த இலக்கியம் பாடும் முறை மாறி நீதி உணர்த்தும் இலக்கியமுறை தோன்றியதும் மேற்கூறிய முடிவுக்கு தருக்க ரீதியாக வலுச் சேர்க்கும் சான்றுகளாகும். மொழியில் மாற்றம் தோன்றி அம்மாற்றம் நிலைபெற்றதொரு காலமே இலக் கண நூல்கள் தோன்றுவதற்கு உகந்தகாலம் ஆகும். எனவே ஐந் தாம் நூற்றாண்டிற்குப் பின் உள்ள காலமே இலக்கண நூல்கள் தோன்றுவதற்கு ஏற்ற சூழல் நிலவிய காலம் எனலாம்.

தொல்காப்பியத்திற்குப்பின் ஒன்பதாம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தில் தமிழ் இலக்கண உலகில் நிகழ்ந்தேறிய நிகழ்வு களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. எழுத்து, சொல், பொருள் என்று இருந்த இலக்கணப் பிரிவு கள் யாப்பு, அணி ஆகியவற்றுடன் கூடி ஐந்திலக்கணமாக வளர்ச்சி பெற்றன.

2. இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற மூன்று பிரிவுகளில் இயல் தமிழில் தோன்றியது போலவே இசைத் தமிழ், நாடகத் தமிழ் ஆகிய பிரிவுகளிலும் பல இலக்கண நூல்கள் தோன்றின.

3. பாட்டியல் நூல்கள் தோன்றியதும் இக்காலப் பகுதியிலே தான்.

4. சமண சமயத்தினர் தமிழ்க் கல்வியில் சிறந்து விளங்கி இலக்கண நூல்கள் பல இயற்றினர்.

5. இலக்கணத்தின் சிறு பிரிவுகளையும் விளக்கும் தனி நூல்கள் தோன்றின. (கூற்றியல், திணை நூல், கைக்கிளைச் சூத் திரம், தூக்கியல், அடிநூல்)

தமிழ் இலக்கண உலகில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் காலகட்டத்தில் தோன்றிய இலக்கண நூல்கள் யாவுமே

(இறையனார் களவியல் தவிர) அழிந்துவிட்டடன. இந்தக் குறிப் பிட்ட காலகட்டத்தில் தோன்றிய இலக்கியங்களில் பெரும் பான்மையானவை அழிந்துவிட்டன. சிலப்பதிகாரம், மணிமே கலை, பெருங்கதை, நந்திக்கலம்பகம் முதலியனவே தனி நூல் களாகக் கிடைப்பவை. பன்னிரு திருமுறையிலும் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்திலும் உள்ள பாடல்கள், அவை தோன்றி வெகு காலத்திற்குப் பின்பே தொகுக்கப்பட்டன. ஆக ஒன்பதாம் நூற் றாண்டு முடிய உள்ள காலத்தில் தோன்றிய நூல்களில் பெரும் பாலானவை அழிந்துவிட்டன. எனவே,

1. தொல்காப்பியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, சிலப்பதிகாரம், நன்னூல், நேமிநாதம், நவநீதப் பாட்டியல், களவியல் காரிகை, வீரசோழியம் முதலிய நூல்களின் உரைகள்.
2. பன்னிரு பாட்டியல், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய இலக்கண நூல்கள்.
3. புறத்திரட்டு என்ற திரட்டு.

ஆகிய நூல், உரைகளின் மூலமாகவே ஒன்பதாம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்தில் தோன்றிய நூல்கள் பற்றி அறிய முடி கிறது. இவற்றின் மூலம் எந்த நூலும் முழுமையாகக் கிடைக்க வில்லை. சில நூல்கள் பெயரளவிலும், சில நூல்கள் ஒரு சில சூத்திரங்களுமாகத் தெரியவருகின்றன. தமிழ் இலக்கண வர லாற்றையும் இலக்கண மரபுகளையும் அறிந்து கொள்ள இந்தக் கால கட்டத்தில் தோன்றிய நூல்களை ஆராய்வது மிகவும் அவ சியம் ஆகும். முழு நூல்கள் கிடைக்காவிட்டாலும் கிடைக்கும் குறிப்புகளும் சூத்திரங்களும் அவற்றின் முக்கியத்துவம் கருதி இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக் காலத்தில் இரு பத்தைந்துக்கும் மேற்பட்ட இலக்கண நூல்களும் ஏழு இசை நூல்களும் ஏழு நாடக நூல்களும் தோன்றின. (பின்னிணைப்பு 1)

மூன்றாவது கால கட்டத்தில் தோன்றிய நூல்களில் பெரும் பான்மையானவை முழுமையாகக் கிடைத்துள்ளன. (தமிழ் நெறி

விளக்கம், களவியல் காரிகை தவிர) தமிழ் இலக்கண உலகில் நெடுங்காலமாகப் பயிலப்படும் நூல்களும் இக்காலத்தில் தோன்றியவையே. எழுத்து, சொல் இலக்கணங்களுக்கு நன்னூல்; அகப் பொருள் இலக்கணத்திற்கு நம்பி அகப்பொருள் விளக்கம், புறப் பொருள் இலக்கணத்திற்குப் புறப்பொருள் வெண்பாமாலை; யாப்பு இலக்கணத்திற்கு யாப்பருங்கலக் காரிகை; அணி இலக் கணத்திற்கு தண்டியலங்காரம் ஆகியவையே மிகுதியும் பயிற்சி யில் இருந்த நூல்களாகும். இவற்றில் பல நூல்கள் இயற்றப் பட்ட குறுகிய காலத்திற்குள் உரையும் பெற்றுவிட்டன.

பழைய இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கும் புதி தாக உரைகள் தோன்றின. தொல்காப்பியத்திற்குத் தோன்றிய உரைகள், சமூகத்தில் தொல்காப்பியம் பயிற்சியில் இருந்தது என்பதைக் காட்டுகின்றன. தொல்காப்பியத்தின் ஒவ்வொரு அதி காரத்திற்கும் ஒன்றுக்கு மேற்பட்ட உரைகள் தோன்றியுள்ளன. எழுத்து அதிகாரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரை களும் சொல் அதிகாரத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர், நச்சினார்க்கினியர், ஆசிரியர் பெயரற்ற ஒரு உரை ஆகியனவும், பொருள் அதிகாரத்திற்கு இளம் பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரை களும் உள்ளன. மேற்கண்ட உரையாசிரியர்களுக்கிடையே விளக் கம் கூறுதல், உதாரணம் காட்டுதல், இயைபுபடுத்துதல் முதலிய பல அம்சங்களில் வேறுபாடுகள் உள்ளன. உரைகளுக்கிடையில் உள்ள வேறுபாடுகளை நோக்கும் போது, பல மரபுகளில் தொல் காப்பியம் பயிலப்பட்டதை உணரலாம்.

இரண்டாம் கட்டத்தில் ஐந்து இலக்கணங்களுக்கும் தனித் தனி நூல்கள் தோன்றி இருந்ததையும் கவனிக்கலாம். ஐந்திலக் கணங்களையும் ஒரே நூலில் கூறும் வீரசோழியம் மூன்றாவது கட்டத்தில்தான் தோன்றியது. மூன்றாவது கட்டத்திலும் வீர சோழியம் ஒன்றே ஐந்திலக்கணங்களையும் விளக்குவது ஆகும். வீரசோழியம் வடமொழி இலக்கண மரபைத் தமிழில் ஏற்றித் தமிழ் மொழிக்கு இலக்கணம் கூறும் நூலாகும். ஆனால் வீரசோழி யத்திற்கு முன்பே இதுபோல வடமொழி இலக்கணத்தைத்

தமிழ் மொழியில் ஏற்றி இலக்கணம் உரைக்கும் மரபு இருந்தது. இவர்களை 'வடநூல் வழித் தமிழாசிரியர்' என்ற தொடரால் யாப் பருங்கல விருத்தியுரை ஆசிரியர் கூறுவதை அறியலாம்.

இலக்கணமே அன்றிப் பாட்டியல்கள், நிகண்டுகள், உவ மான சங்கிரகம் ஆகிய நூல்களும் மூன்றாம் கால கட்டத்தில் தோன்றியவையாகும். மேற்கூறிய காரணங்களால் மூன்றாம் கால கட்டம் தமிழ் இலக்கண வரலாற்றில் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகிறது. இந்தக் கால கட்டத்தில் தமிழ் இலக்கணக் கூறுகள் எல்லாவற்றிலும் பல மரபுகள் நிலவின என்பதை அறிய முடிகிறது.

நான்காவது கால கட்டத்தில் பல ஐந்திலக்கண நூல்கள் தோன்றின. பாட்டியல் இலக்கண நூல்களும் நிகண்டுகளும் மிகுதியாகத் தோன்றின. மூன்றாவது கால கட்டத்தில் பாட்டியல் நூல்கள் தனியாகவும் பிற இலக்கண நூல்கள் தனியாகவும் விளங் கியது போல் அல்லாமல் ஐந்திலக்கணம் கூறும் நூலிலேயே பாட்டியலும் இடம் பெற்றது. உரைநடையிலும் இலக்கண நூல் கள் தோன்றின. வடமொழி இலக்கண மரபைப் பின்பற்றி எழு தப்பட்ட பிரயோக விவேகம் இதே காலத்தில் தோன்றியது. மூன்றாவது கட்டத்தில் தோன்றிய நூல்களுக்கு உரையியற்று வதும் அந்த நூல்களைப் பதிப்பிப்பதும் நடந்தன.

இருபதாம் நூற்றாண்டு வேறொரு புதிய போக்கைக் காட்டக் கூடியதாகும். இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் பூர்வமாக மொழியை அணுகும் முறையும் ஆராய்ச்சிப் பார்வையும் தோன்றி யது. இருபதாம் நூற்றாண்டில் ஒவ்வொரு மொழிக்கும் தனித் தன்மை வாய்ந்ததாக இருந்த இலக்கியங்கள் போய் சிறுகதை, நாவல், புதுக்கவிதை போன்ற உலகம் தழுவிய இலக்கியங்கள் தோன்றிவிட்டன. மொழி, இலக்கியம் இரண்டிலுமே உலகம் தழுவிய பார்வை தோன்றிவிட்டது. தனிப்பட்ட மொழியின் இலக்கணத்தை ஆராய்வதை விட பல மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் ஒப்பாய்வியல் அணுகுமுறை தோன்றியது. மொழியின் அமைப்பை அறிவியல் பூர்வமாக அணுகும் மொழியியல் ஆய்வு

உருவானது. இருபதாம் நூற்றாண்டில் இலக்கண ஆய்வு மொழி யியல் ஆய்வாகவே பரிணமித்தது.

அணி இலக்கணம் தமிழில் இரண்டாவது கால கட்டத் திலேயே தோன்றிவிட்டது. யாப்பருங்கல விருத்தியுரையில் ‘அணியியல்’ என்ற நூலில் உள்ள இருபத்தேழு அணிகளின் பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. (யா.வி.:550) திவாகர நிகண் டில் இருபத்தி எட்டு அணிகளின் பெயர்கள் கொடுக்கப்பட் டுள்ளன. சூத்திரம் பின்வருமாறு:

உருவகம், உவமை, வழிமடக்கு, நிலைமடக்கு,
(விரிசுடர்) விளக்கு என விரவி வருவனவும்,
வேற்றுமை நிலையே, வெளிப்படு நிலையே,
வார்த்தை, தன்மை, பிறபொருள் வைப்பு எனப்
பாற்படக் கிளந்த பகுதியின் வருநவும்,
சிறப்புமொழி, சிலேடை, மறுத்துமொழி நிலையே,
நோக்கே, உட்டொடர் தொகைமொழி, மிகைமொழி,
உடனிலை, கூட்டம், உவமான முருவகம்,
நுவலா நுவற்சி, தலைக் கட்டிய மொழி,
நிதரிசனம், பாராட்டு, ஒருங்கியல் நிலையே,
ஐயம், உயர்வே, விரவியல், வாழ்த்து என
எய்தக் கூறிய இருபத்தெட்டு அலங்காரம். (திவா. 2458)

திவாகரம் ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றுவதற்கு முன்பே எழுந்த அணியிலக்கண நூலில் இருந்தே இவற்றைத் திவாகரம் தொகுத்திருக்க வேண்டும். இதை நோக்கும்போது, அணி இலக் கணம் இரண்டாவது கால கட்டத்திலேயே தமிழில் தோன்றி விட்டது எனலாம்.

இலக்கிய நூல்களைப் போலன்றி, இலக்கண நூல்களைப் பொருத்தவரை ‘யாருக்காக எழுதப்பட்டது?’ என்ற கேள்வி மிகவும் அவசியமானதாகும். ஒரு குறிப்பிட்ட இலக்கண நூலின் வாசகர் யார் என்ற இந்தக் கேள்விக்கான விடை, நூல் எழுந்த தன் நோக்கத்தையும் இலக்கணத்தின் பரப்பையும், இலக்கணம்

கூறப்படும் மாதிரியையும் உள்ளடக்கியதாகும். இந்தக் கேள் வியை ஒவ்வொரு இலக்கண நூலையும் நோக்கி எழுப்பி விடை காணுதல், அந்தக் குறிப்பிட்ட இலக்கண நூல் பற்றிய ஆழமான ஆராய்ச்சியில் தவிர்க்க முடியாததாகும்.

இலக்கண நூல்களின் சிறப்புப் பாயிரத்தில் இக்கேள்வி களுக்கு விடை கூறுவது போல சில பகுதிகள் இருக்கும். சிறப்புப் பாயிரத்தில், ஆசிரியரின் பெயர், வழி, எல்லை, நூற்பெயர், யாப்பு, நுதலும் பொருள், கேட்போர், பயன், காலம், களன், காரணம் ஆகிய பதினொரு பொருளும் இருக்கும். இதில் கேட்போர், பயன், காரணம் ஆகியவற்றில் நூல் எழுந்ததன் நோக்கம், நூலின் வாசகர் முதலியன கூறப்பட்டிருக்கும். சிறப்புப் பாயிரம் இல்லாத நூலுக்கு உரையாசிரியர் இவற்றை எல்லாம் தம் உரையில் கூறு வார். (எடுத்துக்காட்டு: இறையனார் களவியல்) அதன் மூலம் இவற்றை அறிய வாய்ப்புள்ளது. இங்கு எடுத்துக் கொண்ட இலக்கண நூல்கள் பெரும்பாலானவற்றுக்குச் சிறப்புப் பாயிரம் மூலம் இச்செய்திகள் தெரிய வருகின்றன. அவை பின் இயல் களில் ஏற்ற இடங்களில் கூறப்படும்.

தமிழ் இலக்கண உலகில் தொல்காப்பிய மரபுக்கு மாறாக உள்ளது வீரசோழிய மரபாகும். இந்த இரண்டு இலக்கண நூல் களையும் இங்கு ஆராய்வது பொருத்தமானதாகும். தொல் காப்பியத்தின் இலக்கணக் கோட்பாடு, குறிப்பாக வடமொழி இலக்கணத்துடன் தொல்காப்பியத்திற்கு உள்ள தொடர்பு குறித்துப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இந்த ஆராய்ச்சி யில் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திற்கும் (ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்) முச்சங்கங்கள் பற்றிய செவிவழிக் கதைகளுக் கும், அகத்தியர், அவரது பன்னிரு மாணவர்கள் பற்றிய குறிப்பு களுக்கும் உரையாசிரியர்களின் (இறையனார் அகப்பொருள் உரையாசிரியர், இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார்) கூற்றுகளுக்கும் சிறப்பான இடம் உண்டு. மேலும் தொல்காப்பியரின் சூத்திரங்களுக்கு வடமொழி இலக் கணத்துடன் தொடர்புபடுத்தி உரை எழுதிய சேனாவரையர்,

சிவஞானமுனிவர் முதலியவர்களின் கருத்துகளுக்கும் சிறப்பான இடம் உண்டு. இராசாராம்,

> பொதுவாக சமஸ்கிருத மரபிலக்கணங்களில் காதந்திரத்திற்கு முன்னும் பின்னும் காணமுடியாத இலக்கணப்பகுதிகள் தொல்காப்பியத்தில் உள்ளன. மேலெழுந்த வாரியாக காதந்திர மரபுக்கும் தொல்காப்பிய மரபுக்கும் இடையே ஒற்றுமை காணப்பட்டாலும் இலக்கணத்தின் உள்ளமைப்பில் தொல்காப்பியம் தமிழ் இலக்கணத்தின் தனித்துவத்தைக் காட்டி நிற்கிறது. ஐந்திரத்தோடு உணரப்படும் ஒற்றுமைப் பகுதிகளை விலக்கி விட்டுப் பார்க்கும் போது தொல்காப்பியத்தில் தூய்மையான தமிழின் பழைய இலக்கண மரபு கோலோச்சி நிற்பதை அறிய முடிகிறது. (1992:175, 176)

என்று தொல்காப்பியத்தை வடமொழி இலக்கண நூல்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தபின் முடிவுக்கு வருகிறார். இந்த முடிவு எழுத்து, சொல் இலக்கணங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரும் தொல்காப்பியத்தின் காலம், அமைப்பு குறித்து ஐயம் தெரிவித்துள்ளார். (1971:59,60) தொல்காப்பியத்தில் காணப்படும் முரண்பாடுகளுக்கு இரண்டு விதமான காரணங்களை இவர் கூறுகிறார்.

1. தொல்காப்பியத்தில் சில இடங்களில் தட்டுப்பாடுகள் காணப்படுவதாக எண்ணித் தொல்காப்பியத்தைப் பயின்ற மாணவர் சிலர், சில நூற்பாக்களைத் தாங்களாகவே சேர்த்திருக்கலாம்.
2. தொல்காப்பியம் என்பது தனிப்பட்ட ஒருவரால் எழுதப்பட்டதென்பதைவிட காலப்போக்கில் சில சிந்தனைப் போக்குகளை வளர்த்துக் கொண்டு வரும் ஓர் இலக்கணக் கோட்பாட்டி

> னரின் கூட்டு முயற்சியால் உருவானதொன்றாக இருக்கக்கூடும். (மீனாட்சிசுந்தரன்,1982:69)

இதை இன்னும் விரிவாக ஆராய வேண்டும். எனினும் தொல்காப்பியர் எழுதிய வடிவத்திலேயே தொல்காப்பியம் இன்று இல்லை; தொல்காப்பியத்தில் பல இடைச் செருகல்கள் உள்ளன; தொல்காப்பிய அதிகாரங்களுக்கிடையே முரண்பாடுகள் உள்ளன என்ற கருத்துகளை ஆதாரங்களோடு வலியுறுத்தியவர் என்பதால் மீனாட்சிசுந்தரனாரின் கருத்துகள் மிகவும் முக்கியமானவை. ஜான் மார்,

> தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதல் இரு இயல்கள் தமிழ் இலக்கியத்திற்கே சிறப்பாக உரிய இலக்கணத்தைப் பேசுகின்றன. மூன்று முதல் ஐந்து வரை உள்ள இயல்களில் இலக்கணம் (அகப்பொருள்) விரிவாகப் பேசப்படும் இடத்தில் பல சமஸ்கிருதக் கருத்துகள் காணப்படுகின்றன. ஆறாவது, ஏழாவது இயல்கள் பிற்காலத்தில் இணைக்கப்பட்டவையாகவோ இடைச் செருகலாகவோ இருக்க வேண்டும். ஏனெனில் இப்பகுதியில் வடமொழி நாடகக் கோட்பாடும் உவமைக் கோட்பாடும் கூறப்பட்டுள்ளன. (மார் 1985: 15)

இதற்கு அவர் காட்டும் காரணங்கள் பின்வருவன.

1. அகத்திணையியலில் அகப்பொருள் இலக்கணத்தை ஐந்திணைப் பாகுபாட்டில் அமைத்திருக்க, களவு, கற்பியல்களில் ஐந்திணை அடிப்படை மேற்கொள்ளப்படவில்லை.

2. களவியல் முதல் சூத்திரம் 'இன்பமும் பொருளும் அறனும்' என தர்ம, அர்த்த, காமம் என்பன அகத்துடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.

3. வேதங்களில் சொல்லப்பட்டுள்ள எண்வகை மணங்களில் ஒன்றான கந்தர்வத்துடன் களவு ஒப்பிடப்பட்டுள்ளது.

4. வேட்கை, ஒருதலை உள்ளுதல் (களவியல் - 9) முதலியன வாத்ஸ்யாயனரின் காம சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள 'அவத்தை'களுடன் ஒத்துள்ளன.

5. கற்பியலில் முதல் நான்கு சூத்திரங்களில் காணப்படும் 'கரணம்' ஐந்திணை பாகுபாட்டுடன் தொடர்பில்லாதது.

6. கற்பியல் மூன்றாம் சூத்திரத்தில் நால்வருணச் சிந்தனை காணப்படுகிறது.

7. 'காமம் சான்ற கடைக்கோட்காலை' என்ற கற்பியலின் இறுதிச் சூத்திரத்தில் தலைவனும் தலைவியும் இல்லறத்தை நடத்தியபின் வீடு பேற்றிற்காக முயலவேண்டும் என்று ஆசிரமக் கோட்பாடு (வானப்பிரஸ்தம்) கூறப்பட்டுள்ளது.

8. பொருளியல் 28 ஆம் சூத்திரத்தில் 'பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே' என்று வருணம் பற்றிய கருத்து இடம்பெற்றுள்ளது. (மார், 1985: 53 - 55)

மேற்கண்ட காரணங்களைக் காட்டி, களவியல், கற்பியல், பொருளியல் ஆகியன நாட்டிய சாத்திரம், காமசாத்திரம் ஆகிய நூல்களில் உள்ள கருத்துகளை அறிந்து கொண்டு, அகப் பொருள் இலக்கணத்தை விரிவுபடுத்திய இடைச் செருகல் முயற்சியே ஆகும் என்று எழுதியுள்ளார். மெய்ப்பாட்டியலும், உவமவியலும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை என்றும் இவர் கூறுகிறார்.

தொல்காப்பியம், குறிப்பாகப் பொருளதிகாரம் ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் இயற்றப்பட்டது என்பதற்கான சான்றுகளைக் கொண்டுள்ளது. அவர்கள் சம காலத்திலோ முன் பின்னாகவோ வாழ்ந்திருக்கலாம் (மேற்படி: 55-56) என்று மார் முடிவுக்கு வருகிறார். இவர் பொருளதிகாரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

மூன்றாம் கட்டத்தில் தோன்றிய இலக்கண நூல்களுள் ஒன்றான வீரசோழியம்,

நாமே எழுத்துச் சொல் நற்பொருள் யாப்பு அலங்காரமெனும்
பாமேவு பஞ்ச அதிகார மாம்பரப் பைச்சுருக்கித்
தேமேவிய தொங்கல் தேர் வீரசோழன் திருப்பெயரால்
பூமேல் உரைப்பன் வடநூல் மரபும் புகன்று கொண்டே. (3)

என்று கூறுகிறது. இதில் ஐந்து அதிகாரங்களையும் சுருக்கிச் சொல்லுதல், தமிழ் மரபுடன் வடநூல் மரபையும் இணைத்துச் சொல்லுதல் ஆகியவை இந்த நூலின் நோக்கங்களாகக் கூறப் பட்டுள்ளன. விசயவேணுகோபால்,

> புத்த விகாரையில் சமயக் கல்வி முதலியவற்றைக் கற்க வருவோர்க்கு இருமொழி இலக்கிய, இலக் கண மரபுகளை எடுத்துக் கூறும் ஒரு கையே டாக (Hand book) உதவத்தக்க வகையில் இந்நூல் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம். *(1985:35)*

என்று நூல் எழுந்ததன் காரணத்தைக் கூறுகிறார். இராசாராம் வீரசோழியத்தைச் சமயத்துடன் மட்டும் தொடர்புபடுத்திக் கூறுதலைவிட்டு, பரந்த நோக்கத்தில் அக்காலத்தில் நிலவிய மொழிச்சூழலை அடிப்படையாக வைத்துப் பின்வருமாறு கூறி யுள்ளார்.

> இடைக்காலச் சோழர் காலத்தில் தமிழ் நாட் டில் உருவாகிய பிறமொழிச் சூழமைவு சமஸ் கிருத மொழியின் செல்வாக்கைப் பெருக்கி யிருந்தது. சோழர் காலச் சமுதாய மொழியியல் உருவரையில் தமிழைப் போல் சமஸ்கிருதம் பெரு நிலைமொழி அந்தஸ்தைப் பெற்றிருந்தது இங்கு குறிப்பிடத்தக்க செய்தியாகும். தமிழறி யாத வடமொழியாளர்கள் தமிழைக் கற்க வேண்டிய, கற் றல், கற்பித்தல் சூழல் உருவானது இக்காலத்தில் தான். இத்தேவையை நிறைவு செய்ய எழுதப் பட்ட ஒரு பயிற்று இலக்கணம் (Pedagogical grammar) வீரசோழியம். *(1992:318)*

இதிலிருந்து வீரசோழியம் சமயம் சார்ந்த இலக்கண நூலாக மட்டும் இன்றி அக்கால மொழிச் சூழலில், (குறிப்பாக சோழர் கால அரசியலில் வடமொழி பெற்றிருந்த ஆதிக்கம்) வடமொழிக்கு இருந்த இடத்தையும், அதன் காரணமாக வடமொழி இலக்கணத்தின் பரந்துபட்ட முக்கியத்துவத்தையும் உணர முடிகிறது. வீரசோழியம் தோன்றியதன் நோக்கத்தை, விசயவேணு கோபால்,

> தமிழ் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் எனும் ஐந்து பகுதிகளிலும் வடமொழி இலக்கண மரபுகளை எங்ஙனம் பயன்படுத்திப் புரிந்து கொள்ளலாம் என்ற வகையில் அமைந்த முதல் முயற்சி என்றும் முடிவு செய்யலாம். (1985:35)

என்று கூறியுள்ளார். ஆனால் வீரசோழிய நூலின் அமைப்பையோ, அந்த நூல் இலக்கணம் கூறும் முறையையோ நோக்கும் போது மேற்கூறிய கருத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. குறிப்பாகச் சொல் இலக்கணத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது இக்கருத்தை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. இராசாராம்,

> வீரசோழியத்தை வடமொழி தமிழ் ஒப்புமை இலக்கணம் என்றும் தமிழும் அதிகமாக வடமொழியும் கலந்த இடைக்காலத் தமிழுக்கு எழுதப்பட்ட இலக்கணம் என்றும் ஒரு சில இலக்கண அறிஞர் கூறுவர். ஆனால் வீரசோழியம் ஒரு புடைமாற்று ஒப்புமை இலக்கணம். இவ்விலக்கணம் தாய்மொழியைத் தவிர மற்றொரு மொழியைக் கற்கும் அல்லது கற்பிக்கும் சூழலில் எழுதப்படுகிறது. இச்சூழலில் தாய் மொழி இலக்கண அறிவைத் தூண்டுவதின் மூலமாகக் கற்கப்படும் அல்லது கற்பிக்கப்படும் மொழியின் இலக்கணத்தை எளிதாகக் கற்க அல்லது கற்பிக்க இயலும் என்பதும் தாய் மொழி மற்றும் கற்கவிருக்கும் அல்லது கற்பிக்க விருக்கும் இலக்கணங்களிடையே

> காணப்படும் அமைப்பொற்றுமைகள் கற்றலை அல்லது கற்பித்தலை எளிதாக்கும் என்பதும் இவ்விலக் கணத்தின் தற்கோள்களாகும். இத்தற் கோள்களின் அடிப்படையில் தாய்மொழி இலக் கணம் கற்க அல்லது கற்பிக்கவிருக்கும் மொழிக் குப் புடை மாற்றப்படுகிறது. (1992: 320)

என்று கூறியுள்ளார். இவர் கருத்துப்படி வீரசோழியம் இரு மொழி இலக்கணங்களை ஒப்பிடும் இலக்கண நூலாகும். வடமொழி அறிந்தவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பிக்கப் படுவதால் வடமொழி இலக்கண அமைப்பைத் தமிழ் மொழிக்குப் புடை மாற்றி இந்நூலில் இலக்கணம் கூற்றப்பட்டுள்ளது. இவற்றை,

1. வீரசோழியம் இலக்கண அமைப்பைத் தமிழுக்குப் புடை மாற்றி இலக்கணம் கூறும் நூல்
2. இந்த ஒப்பீடு வடமொழி இலக்கண மாதிரியின் அடிப் படையில் அமைந்துள்ளது.
3. வடமொழி அறிந்தோர்க்குத் தமிழ் இலக்கணத்தை உணர்த்த எழுந்த நூல்
4. சோழர் கால அரசியல் சூழலில் தமிழ்நாட்டில் நன்கு பரவியிருந்த வடமொழி அறிவு இந்த நூல் தோன்றக் காரணமாகும் என்று தொகுத்துக் கூறலாம்.

தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களே இருந்தாலும் பொருளதிகாரத்தில் யாப்பும் அணியும் பேசப்பட்டுள்ளன. ஆக இப்பொழுது உள்ள தொல் காப்பியத்தில் ஐந்து இலக்கணங்களும் உள்ளன. இன்று கிடைக் கும் இலக்கணங்களுள் முதலாவதும் முதன்மையானதும் தொல் காப்பியமே என்பதால் தொல்காப்பிய இலக்கண மரபையே தமிழ் இலக்கண மரபு எனக்கொள்வர். பின் வந்த இலக்கண நூல்களில் இந்த ஐந்து இலக்கணங்களையும் ஆராய்ந்த நூல் களும் உள்ளன, இவற்றில் சிலவற்றைத் தனியே ஆராய்ந்த நூல்

களும் உள்ளன. தமிழ் மரபு ஐந்திலக்கண மரபு என்பதில் வேறு கருத்து இல்லை.

இந்த ஐந்திலக்கணங்களில் முக்கியமானது எது என்ற கேள்வி எழும்போது பொருள் இலக்கணமே முக்கிய இலக்கணம். பிற இலக்கணங்களெல்லாம் அதற்குச் சார்பானவையே என்ற கருத்து தெளிவாகிறது. இதை விளக்க பிரபலமாக வழங்கும் மேற்கோளைக் காட்டலாம்.

> எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப் பட்டிலேம் என்று வந்தார். வர அரசனும் புடை படக்கவன்று என்னை எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட் டன்றே, பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம். (இறையனார் களவியல்: *1976 : 10*)

இதனால் தமிழ் இலக்கணங்களில் பொருளதிகாரம் பெற்றிருந்த முக்கியத்துவம் நன்கு புலப்படும். வியாகரணம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட சொல்லிலக்கணமே வடமொழியில் மிகவும் விரிவாக ஆராயப்பட்டது. பாணினி முதலிய பேரறிஞர்கள் வியாகரணம் இயற்றுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டனர்.

தமிழ் இலக்கணம் அறிந்தவர்கள் வடமொழி இலக்கணத்தையும் கற்று அதில் ஈடுபடும் காலம் வந்த பிறகு, தமிழ் இலக்கணத்திலும் இத்தகைய எண்ணம் தலையெடுத்தது. தொல்காப்பியத்திற்கு இன்று கிடைக்கும் உரைகளில் பழமையானது இளம்பூரணர் உரையே. இவர் உரை, நூல் முழுவதற்கும் உள்ளது. இதற்கு அடுத்துத் தோன்றியது சேனாவரையர் உரை. தொல்காப்பியர் சொல்லதிகாரத்திற்குக் கொடுக்காத முக்கியத்துவத்தை சேனாவரையர் கொடுத்திருக்கிறார். சேனாவரையரின் காலத்தில் வடமொழி இலக்கணம் நன்கு வளர்ச்சி பெற்றது: தமிழ்நாடு முழு

வதும் பரவி இருந்தது. இதனால் சேனாவரையர் தம் சொல்லதி கார உரையில் வடமொழிக் கருத்துகளை ஏற்றி உரைத்திருக் கிறார். வடமொழியின் கருத்துக்கு உடன்பட்டே சேனாவரையர் சொல்லதிகாரத்தை மட்டும் சிறப்பித்து உரை வரைந்துள்ளார்.

> வடநூற்கடலை நிலைகண்டு அறிந்த சேனா வரையர் எழுத்ததிகாரத்திற்கு உரை செய்தாரா யின் இன்னோரன்ன பொருளனைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர். அவர் சொல் லதிகாரம் போலப் பெரும் பயன்படாமை கருதி எழுத்துக்கு உரை செய்யாது ஒழிந்தமையின் (சிவ ஞானமுனிவர், *1968 : 46*)

என்ற சிவஞானமுனிவரின் கருத்தால் இதை உணரலாம். வட மொழிச் சார்பாகவே இலக்கணம் இயற்றியவரும் இவ்வாறே சொல்லிலக்கணத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துள் ளனர். ஆழ்வார் திருநகரி சுப்பிரமணிய தீட்சிதர் (பதினேழாம் நூற்றாண்டு) சொல்லிலக்கணத்தை மட்டும் விளக்கும் பிர யோக விவேகம் இயற்றினார். இந்நூலின் தற்சிறப்புப் பாயிரத் தில், 'ஏர்கொண்ட சொற்பிரயோக விவேகம் இயம்புவனே' என்றும், இதன் உரையில் (நூலாசிரியரே உரையும் இயற்றியுள் ளார்) "வடமொழிப் பிரயோக விவேகத்திலும் சொல்லிலக் கணம் அல்லது எழுத்திலக்கணம் கூறாமையின் சொற்பிரயோக விவேகம் என்றாம்" (பிர.1) என்றும் எழுதியுள்ளார். இப்படி இலக் கணங்களில் சொல்லிலக்கணத்திற்கே முக்கியத்துவம் கொடுக் கும் முறை வடமொழிச் சார்பாளரிடத்தே தோன்றியது. இலக் கணக் கொத்து நூலை இயற்றிய சுவாமிநாத தேசிகரும் (17 ஆம் நூற்.) சொல்லிலக்கணம் குறித்துத்தம் நூலை இயற்றியுள்ளார். இந்த நூல்களில் எழுத்ததிகாரத்திற்கு முக்கியத்துவம் அளிக் காதது வடமொழி மரபு பற்றியே என அறியலாம்.

வடமொழி இலக்கணக் கருத்துப் பற்றி தமிழிலும் சொல் லிலக்கணத்தைச் சிறப்பித்தது போலவே, மொழி இயல் கல்வி பரவிய பின்பு, மொழியியல் எல்லைக்கு உட்பட்ட எழுத்தும் சொல்லுமே இலக்கணம் என்ற கருத்தும் மேலெழுந்து நிற்கின்

றது. மொழியியல் கல்வி சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து தொடங்கினாலும் இந்த நூற்றாண்டிலேயே தமிழில் மொழியியல் கல்வி நன்கு வளர்ந்தது. மொழியியல் கற்றவர்கள் இலக்கண ஆராய்ச்சியை மேற்கொள்ளும் போது, எழுத்திலக் கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் மட்டும் இலக்கணம் என்ற வரையறைக்குள் கொண்டு வருகின்றனர்.

வரலாற்று நோக்கில் இலக்கணத்தை ஆராயும் ‘தமிழ் வர லாற்றிலக்கணம்’ என்ற நூல் எழுத்திலக்கணம், சொல்லிலக் கணம் ஆகிய இரண்டின் அடிப்படையில் தமிழ் இலக்கண நூல் களை மூன்று மரபுகளாகப் பிரிக்கிறது.

> இலக்கணங்களையும் உரைகளையும் மூவழியின வாக வ்குக்கலாம். தொல்காப்பியர் வகுத்ததே தமிழ் மரபு எனக் கொண்டு, அந்த இலக்கணத் தையே அடிப்படையாக வைத்து, இன்றியமை யாத இடங்களில் மாத்திரம் புதுமைகளை ஏற் றவர்கள் ஒருசாரார். சோழப் பெருமன்னர் காலத் தில் தமிழ் இலக்கணத் துறையில் உழைத்த சம ணர் இவ்வழியையே பின்பற்றினர் எனலாம். இளம்பூரணர், குணவீர பண்டிதர், பவணந்தி யார், மயிலைநாதர், என்போர் தொல்காப்பிய நெறியையே உள்ளபடி ஏற்கின்றனர். இவர்களின் காலத்தின் பின் சமணர் இலக்கண நூல்களை இயற்றவில்லை. சைவர்களில் ஒரு சாரார் இவ் வழியைப் பின்பற்றுகின்றனர். தமிழுடன் நெருங் கிய தொடர்பு கொண்ட மதுரையில் வாழ்ந்த தாற் போலும் நச்சினார்க்கினியர் பழைய தமிழ் மரபை ஒட்டியே உரை வகுத்துள்ளனர். தமிழின் இனிமையில் தன்னைப்பறி கொடுத்த குமரகுரு பரர் தாபித்த தருமபுர ஆதீனத்தில் ஆதரவு பெற் றிருந்ததனால் போலும் வைத்தியநாத நாவலரும் இவ்வழியில் நின்றுள்ளார்.

தொல்காப்பியர், நன்னூலார் ஆகியோர் கூறிய இலக்கணத்தைப் பொதுவாக ஏற்று வடமொழி இலக்கணக் கொள்கைகளை இயன்றவரை அதனுள் புகுத்த முயற்சி செய்தனர் சைவ சமயத்தவர் எனலாம். இன்றுள்ள தமிழிலக்கண ஆசிரியர்களையும் உரையாசிரியர்களையும் வரலாற்று முறையில் வைத்துப் பார்க்கும் பொழுது, தமிழ் இலக்கணத் துறையில் பிரவேசித்த முதற் சைவர் சேனாவரையரே. இவர் சோழப்பெரு மன்னர் காலத்தில் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை வாழ்ந்தவர் எனலாம். வடநூற் கடலை நிலைகண்டு உணர்ந்த சேனாவரையர் என்பர் சிவஞானமுனிவர். வடநூல் முடிவுகளையும், கொள்கைகளையும் தமிழ் மொழிக்குரிய இலக்கணங்களில் புகுத்தி அமைதி கூறியவர் சேனாவரையர்... வடமொழியையும் தமிழையும் ஒருங்கே பேணி வந்த திருவாவடுதுறை ஆதீனத்தோடு தொடர்புடைய சங்கர நமச்சிவாயர், சுவாமிநாத தேசிகர், சிவஞானமுனிவர் என்போர் சேனாவரையர் காட்டிய வழியிலேயே செல்கின்றனர் எனலாம். தொல்காப்பிய இலக்கணத்தை மறுத்து சங்கத மொழி இலக்கணமும் தமிழிலக்கணமும் ஒன்றே என்று கொண்டு சங்கத இலக்கணத்தை அப்படியே தமிழுக்கு கொண்டுவர நடந்த முயற்சியே தமிழிலக்கணத் துறையில் மூன்றாவது வழி எனலாம். கி.பி. பதினோராம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியம் இக்குறைபாட்டுக்கு இடம் தருகிறது. பண்டிதர்கள் இந்நூலை போற்றாததற்கு இது ஒரு காரணம். இன்னொரு காரணம் இது பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் காணப்பட்ட மொழி வழக்குகள் பலவற்றிற்கு இலக்கணம் கூறுவது... பெருந்தேவனார் வீரசோழியத்திற்குச் சிறந்த உரை வகுத்து மொழி நிலையை உணர்த்தும் உதாரணங்கள் தந்துள்

> ளார். கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் இறுதி யில் வாழ்ந்த சுப்பிரமண்ய தீட்சிதர் என்ற ஸ்சவ அந்தணரும் பிரயோக விவேகம் என்னும் சங்கத இலக்கணத்தை எடுத்தாள்வதில் வீரசோழியம் சென்ற வழியில் சென்று இயற்றியுள்ளார். வட மொழிக்கும் தென்மொழிக்கும் உள்ள இலக்கண ஒற்றுமையை எடுத்துக்காட்ட முயன்ற நூல் பிர யோக விவேகம். (வேலுப்பிள்ளை, ஆ: 1966: 19 - 23)

இந்தப் பாகுபாடு பொதுவாகச் சமயம் சார்ந்துள்ளது. சமணர் மரபு தமிழ் மரபு என்றும், சைவர் மரபு தமிழ் மரபோடு வட மொழி இலக்கணக் கொள்கைகளைக் கலக்கும் மரபு என்றும், பௌத்த மரபு வடமொழிக்கும் தமிழுக்கும் இலக்கணம் ஒன்றே எனக் கொண்டு வடமொழி இலக்கணத்தைத் தமிழுக்குக் கொண்டு வரும் மரபு என்றும் மூன்றாகப் பிரிக்கிறார். ஒரு சில விலக்குகள் தவிர (நச்சினார்க்கினியர், வைத்தியநாத தேசிகர், சுப்பிமணிய தீட்சிதர்) சமய அடிப்படையில் இந்தப் பாகுபாடு அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் இவர் நூலாசிரியர் உரை யாசிரியர் என்று பிரிக்காமல் எல்லோரையும் ஒரே நோக்கில் வைத்துப் பிரித்துள்ளார். முன்கூறியபடி எழுத்து, சொல் ஆகிய இரண்டு இலக்கணங்களை மட்டும் அடிப்படையாகக் கொண் டது இந்தப் பாகுபாடு, மேலும் எல்லா நூலாசிரியர்களையும் உரையாசிரியர்களையும் உள்ளடக்கியதாக இப்பகுப்பு இல்லை. தெய்வச்சிலையார், கல்லாடர் முதலிய உரையாசிரியர்களையும் தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம் முதலான நூல்களினது ஆசிரியர்களையும் உள்ளடக்கியதாக இப்பகுப்பு இல்லை. இத்தகைய குறைபாடுகள் சில இப்பகுப்பில் உள்ளன.

வேலுப்பிள்ளையின் இந்த அணுகுமுறையானது, தமிழ் இலக்கண நூல்களைச் சமய அடிப்படையிலும், வடமொழி நெறி, தமிழ் நெறி ஆகிய அடிப்படையிலும் வகைப்படுத்தி யுள்ளது. வடமொழி நெறி, தமிழ் நெறி என்ற அடிப்படை மட்டு மன்றி, தமிழ் நெறியிலேயே பல மரபுகள் தமிழ் இலக்கண நூல் களில் காணப்படுகின்றன. இவற்றில் எழுத்து, சொல் இலக்கணங்

களில் தொல்காப்பியம், அவிநயம், வீரசோழியம், நன்னூல், நேமிநாதம் முதலிய நூல்கள் முதன்மையானவை. இந்த நூல்களி லும் இவற்றின் உரைகளிலும் இருந்தும் தெரிய வரும் மரபுகளை ஆராய்வது தமிழ் இலக்கணம் பற்றிய புரிதலுக்கு மிகவும் அவ சியமானதாகும். இவ்வாறே பிற இலக்கணப் பகுதிகளில் நிலவிய மரபுகளை விளக்குவதும் இன்றியமையாதது.

பொருள் இலக்கணத்தைப் பொருத்தவரையில் இரண்டா வது கட்டத்தில் தோன்றிய இறையனார் களவியல், பன்னிரு பட லம் முதலிய நூல்களும் மூன்றாவது கட்டத்தில் தோன்றிய பொருள் இலக்கண நூல்களும் முதன்மையானவை. யாப்பிலக் கணத்தைப் பொருத்தவரை இரண்டாவது கட்டத்தில் தோன் றிய நூல்களும், மூன்றாவது கட்டத்தில் தோன்றிய யாப்பருங் கலம், யாப்பருங்கலக்காரிகை, இவற்றின் உரைகள், தொல் காப்பியச் செய்யுளியல் உரைகள் ஆகியவை முதன்மையானவை ஆகும். இந்த நூல்களும் உரைகளுமே தமிழ் இலக்கண வரலாற் றில் நிலவிய பல்வேறு மரபுகளை ஆராய முதன்மையான சான்று களாக அமைகின்றன.

மேலே நான்கு கட்டங்களாக வகுக்கப்பட்ட இலக்கண வர லாற்றுக் காலகட்டங்களில் மூன்றாவது காலகட்டமே தமிழ் இலக்கணங்களில் உள்ள மரபுகளைக் கண்டெடுக்க ஏற்ற கால கட்டமாகும். முதலிரண்டு காலகட்டங்களில் தோன்றிய நூல் களில் பெரும்பான்மையானவை அழிந்து விட்டன. நான்காவது காலகட்டத்தில் தோன்றிய நூல்கள் அதிகம் பயிலப்படவில்லை. ஆகவே கி.பி. 800 முதல் 1400 வரை உள்ள மூன்றாவது காலகட் டமே தமிழ் இலக்கண மரபுகளை ஆராய்வதற்கு ஏற்ற கால மாகும். இங்கு எடுத்துக்கொண்ட காலப்பகுதியில் ஒவ்வொரு இலக்கணப்பிரிவிலும் நிலவிய மரபுகள் தனித்தனி இயல்களில் ஆராயப்படும்.

○ ○ ○

தமிழ் இலக்கண மரபுகள் பற்றிய இந்த ஆய்வில் ஒரு அடிப் படையான கேள்வி எழுகிறது. அக்கேள்வியே இவ்வாய்வுக்கு ஆதாரமாக அமைவதும் ஆகும். தமிழில் பல இலக்கண மரபுகள்

நிலவியதற்கான காரணம் என்ன? என்பதே அக்கேள்வியாகும். கேள்வி சாதாரணமானதாக இருப்பினும் மிகப்பெரிய பொருளை தன்னுள் அடக்கியிருக்கிறது. தமிழ் இலக்கண உலகில் நிகழ்ந் தேறிய பல நிகழ்வுகளுக்கும் அடித்தள விளக்கமாக, இக்கேள் விக்கான பதில் அமையும். இன்னும் சொல்லப் போனால் இலக் கிய - இலக்கண உலகில் உள்ள பல்வேறு கேள்விகளுக்கும் சேர்த்து விடையளிக்கும் கேள்வியாக - விடையை வருவிக்கும் கேள்வியாக - இது அமையும். இலக்கியத்துடனும் மொழியுட னும் பிரிக்கமுடியாத தொடர்புடைய இலக்கணமானது, இலக் கியம் போல் உணர்ச்சியை நிலைக்களனாகக் கொள்ளாமல் அறிவு சார்ந்தும், தர்க்கம் சார்ந்தும் செயல் படுவது. மேற்கண்ட கேள்விக்கு விடை தேடுவதற்கு முன் இலக்கணம் சமயம், சிற்பம், இசை, நடனம், தத்துவம், தர்க்கம் முதலிய பல அறிவுத்துறை களுடன் இலக்கணம் பிரிக்கமுடியாத தொடர்பு கொண்டிருக் கிறது என்பதை வலியுறுத்திக் கூற வேண்டும்.

இலக்கணத்தில் பல மரபுகள் நில்வியதற்கான காரணங் களை ஆராயும்போது முதன்மையாக கவனிக்க வேண்டியது இலக்கணத்திற்கும் பிற துறைகளுக்கும் இருந்த ஊடாட்டம் ஆகும். இதன் அடிப்படையிலான ஆராய்ச்சியே இங்கு செய் யப்பட்டுள்ளது. தமிழகத்தில் இலக்கியம், இலக்கணம் செழித்து வளர்ந்தது போலவே இசை, நடனம், சிற்பம், கட்டடம் ஆகிய கலைகளும் தத்துவம், மருத்துவம், இரசவாதம், கணிதம், சோதி டம், ஆகமம் முதலிய துறைகளும் செழித்து வளர்ந்திருந்தன.

சமயச் சிந்தனைகள் இலக்கண உலகில் வேறுபட்ட சிந் தனை மரபுகள் தோன்றக் காரணமாக இருந்தன. தமிழில் சம ணம், பௌத்தம், சைவம், வைணவம், கிறித்துவம்,இஸ்லாம் முத லிய சமயங்களைச் சார்ந்தவர்கள் இயற்றிய இலக்கண நூல்கள் உள்ளன. நூலாசிரியர்கள் சார்ந்திருந்த சமயச் சிந்தனைகள், அவர்களின் இலக்கண நூல்களில் படிந்திருப்பது இயல்பே. இலக்கண நூல்களுக்கும் சமயச் சிந்தனைகளுக்கும் நிறைய ஒற் றுமைகள் உள்ளன. எல்லா இலக்கண நூல்களும் தம் சமயக் கட வுள் வணக்கத்துடனேயே தொடங்குகின்றன என்பதைச் சுட்டிக் காட்டலாம்.

# 1

எழுத்துகளின் பிறப்பைக் குறித்துச் சொல்லும் போது, 'உந்தி முதலா முந்துவளி தோன்றி' (பிறப்பியல் - 1) என்று தொல் காப்பியர் கூறுகிறார். வயிற்றில் உள்ள காற்றானது மேல்நோக்கி வந்து, எழுத்துகள் பிறக்கக் காரணமாக அமைகிறது என்பது இதன் பொருள்.

> நிறை உயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
> எழும் அணுத்திரள். (நன்னூல் - 74)

என்று பவணந்தி முனிவர் கூறுகிறார். உள்ளிருந்து எழும் அணுத் திரள்தான் எழுத்துகள் பிறக்கக் காரணமாக அமைகிறது என்பது இதற்குப் பொருள். ஒலி அணுத்திரளால் எழுத்துகள் பிறக்கின் றன என்பது சமண சமயக் கொள்கையாகும். மயிலைநாதர் நன் னூல் உரையில்,

> ஆற்றலுடை உயிர் முயற்சியின் அணுவியைந்து
> தேற்றன ஒலியாய்த் தோற்றுதல் பிறப்பே
>
> என்றார் ஆசிரியர் அவிநயனாருமெனக் கொள்க.
> (மயிலை : 26)

என்று சமண சமயத்தைச் சார்ந்த அவிநயனார் சூத்திரத்தை மேற்கோள் காட்டி பவணந்திமுனிவரின் கருத்தை உறுதிப் படுத்துகிறார். யாப்பருங்கலவிருத்தியில்,

> ஆற்றல்சால் ஆவி முயல அகத்தியல்கால்
> ஏற்றெழுந்த தெட்டிடத்தும் முத்திறத்தால் - தோற்றி
> விசையாம் அணுக்கந்தம் ஐந்தெழுத்தாய் பத்துத்
> திசையாய்ச் செவிப்புலனாய்ச் சென்று. (யா.வி.: 46)

என்ற வெண்பா காட்டப்பட்டு இருப்பதால் அவரும் அணுத் திரள் தான் எழுத்துகளின் தோற்றத்திற்குக் காரணம் என்ற கொள்கை உடையவர் என்பதை அறியலாம். புத்தமித்திரரின்

வீரசோழியத்தில், 'உந்தி முதலெழுங் காற்றுப் பிறந்து' (எழுத்ததிகாரம் - 6) என்று காணப்படுகிறது. பெருந்தேவனார் உரையிலும், 'நாபிக் கமலத்தினின்று எழாநின்ற வாயுவானது' (வீர.: 6) என்றே காணப்படுகிறது. வீரசோழிய நூலாசிரியர் புத்த மித்திரரும் அதன் உரையாசிரியர் பெருந்தேவனாரும் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்கள். சமண சமயக் கோட்பாடான அணுத்திரள் ஒலியை இவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இலக்கண விளக்கத்தில்,

> மொழிக்காரணமா நாதகாரிய வொலி (இ.வி. – 3)
>
> உயிர் உழப்புதான வளி நாதம் (இ.வி. – 9)

என்று வைத்தியநாத தேசிகர் எழுதுகிறார். இவர் சைவ சித்தாந்த மரபில் வந்தவர். எனவே அம்மரபுப்படி நாதம் எழுத்தாகப் பிறக்கிறது என்று எழுதுகிறார். சுவாமிகவிராயர்,

> மொழிக்குக் காரணமாகிப் பரையருளான் மூலமுகிழ்
> நாதகாரியமாம் விந்தொலி.(சுவாமிநாதம் – 2)

என்று தம் சுவாமிநாதம் என்னும் இலக்கண நூலில் கூறுகிறார். இந்நூலின் பழைய உரையாசியர் தமது உரையில்,

> பராசக்தி அருளினாலே மொழிக்குக் காரணமாகி மூலாதாரத்தின் கும்புநாதமாகிய சிவ தத்துவத்தினின்றும் காரியப்படும் விந்துவாகிய சக்தி தத்துவத்தின் எழுத்து அறியப்படும் ஓசையைச் செவிப்புலனால் அறிந்து (சுவாமி: 12)

என்று சைவசித்தாந்தக் கருத்துத் தோன்றும்படி உரை எழுதுகிறார். இதே உரையாசிரியர் பிறிதோரிடத்தில்,

> உடலின் கண் நிறைந்த உயிர்க்கிழவனது முயற்சியானே முன்னர்க்கூறிய முறையே மூலாதாரத்தில் சக்தி தத்துவமாகிய விந்துவின் சூக்கும வாக்காய் எழுகின்ற ஓசை உந்தியின் வந்து பொருந்தி உதான வாயுவைக் கலந்து (மேலது: 25)

என்று எழுதுகிறார். இவ்வாறு சைவ சித்தாந்த மரபை ஒட்டி எழுதுவதற்கு உரையாசிரியர்,

> நன்னூலாரும் இலக்கண விளக்கத்தாரும் கூறிய சூத்திரங்கள் எண், எழுத்துப் பிறவி இனிது விளங்காமையான் இனிதின் விளங்கக் கூறும் ஞான நூலிற் கண்டு இம்முறை இலக்கண நூலிற் கும் அமையும் என (மேலது:*27*)

நூலாசிரியர் இயற்றியதாகக் காரணம் கூறுகிறார். மேலும் இங்கு சிவப்பிரகாசம் என்னும் சைவ சித்தாந்த சாத்திரத்தில் இருந்து இரண்டு சூத்திரங்களை மேற்கோளும் காட்டுகிறார்.

மேலே காட்டியதிலிருந்து தொல்காப்பியர், பவணந்தி முனிவர், அவிநயனார், யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர், புத்தமித்தரர், பெருந்தேவனார், வைத்தியநாத தேசிகர், சுவாமி கவிராயர், சுவாமிநாத விருத்தி உரையாசிரியர் ஆகியோர் கொண்டிருந்த மாறுபட்ட கருத்துகள் புலனாகும். சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் அணுத்திரள் ஒலியையும் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் நாதகாரியமாகிய விந்தொலி என்று சைவ சித்தாந்த மரபிலும், தொல்காப்பியர், புத்தமித்திரர், பெருந்தேவனார் ஆகியோர் உந்தியிலிருந்து பிறக்கும் காற்றே மொழிப் பிறப்புக்குக் காரணமாகிறது என்றும் வேறுவேறு கருத்துகளைக் கூறுகின்றனர். இவை ஒவ்வொன்றும் தனித் தனிச் சிந்தனை மரபுகளாகத் தெரிகின்றன. இந்தச் சிந்தனை மரபுகளுக்குக் காரணம் அவரவர் சமயச் சார்பே என்பதும் புலனாகிறது. ஆகவே தமிழ் இலக்கணத்தில் பல மரபுகள் திகழ்வதற்குரிய முக்கிய காரணங்களுள் சமயமும் ஒன்று என்பது வெளிப்படை.

## 2

தொல்காப்பியம் உயிர்களை ஆறு வகையாகப் பிரிக்கிறது.

> ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே;
> இரண்டு அறிவதுவே அதனொடு நாவே;

மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே;
நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே;
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே;
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே (மரபியல் -27)

தொல்காப்பியத்தில் காணப்படும் இந்த வகைப்பாடு அறிவு களின் அடிப்படையில் அமைந்துள்ளது. பவணந்தி முனிவர்,

மெய்ந், நா, மூக்கு, நாட்டம், செவிகளில்
ஒன்று முதலாக் கீழ்க்கொண்டு மேலுணர்தலின்
ஓரறிவு ஆதியா உயிர் ஐந்தாகும் (நன். -444)

என்று உயிர்களை ஐந்து வகையாகப் பிரிக்கிறார். பவணந்தி முனிவரின் இப்பாகுபாடு புலன்களின் அடிப்படையிலானது. ஆகவே, ஐந்து வகை கொண்டதாக இருக்கிறது. தொல்காப்பி யத்தில் காணப்படும் வகைப்பாடு அறிவு அடிப்படையிலானது. இதைத் தெளிவுபடுத்திக் கொள்ள உயிர்கள் பற்றித் தொல்காப் பியர் கூறுவதையும், நன்னூலார் கூறுவதையும் நோக்குதல் வேண் டும். ஒன்று முதல் நான்கு வரையுள்ள உயிர்களின் வகைப்பட் டில் இருவருக்கும் பெரிய வேறுபாடுகள் இல்லை. ஐந்து அறிவு உயிர், ஆறு அறிவு உயிர் ஆகியவற்றை இருவரும் பிரிக்கும் முறையை ஒப்பிடுவதே போதுமானதாகும்.

மாவும் மாக்களும் ஐயறி வினவே;
மக்கள் தாமே ஆறு அறிவு உயிரே; (மரபியல் - 32,33)

என்று தொல்காப்பியர் மாவையும் மாக்களையும் ஐயறிவு என் றும் மக்களை ஆறறிவு என்றும் பகுத்தார்.

வானவர், மக்கள், நரகர், விலங்கு, புள்,
ஆதி செவியறிவோடு ஐயறிவு உயிரே (நன். -449)

என்று நன்னூலார், மக்களையும் விலங்கு, பறவை ஆகிய வற்றை யும் ஒரே பகுப்பில் அடக்குகிறார். புலன்களின் அடிப்படையில் இவ்வாறு பகுக்கிறார். இதைப் பற்றி வெள்ளைவாரணன்,

நன்னூலார் சமண சமய அடிப்படையில் எழுதி
யதால் ஐந்தறிவு என்று கொள்ள வேண்டி வந்தது.

ஐந்தறிவாகப் பிரிக்கும் முறை சமண சமயம் சார்ந்தது (1957: 161)

என்று எழுதுகிறார். இதுவும் சமயச் சிந்தனை இலக்கண மரபுகள் வேறுபடக் காரணமாக இருந்தது என்பதற்கு நல்ல உதாரணமாகும்.

## 3

பழங்காலத்தில் தமிழ் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது. மூன்று பிரிவுகளுமே பழங்காலத்தில் செழுமையாக வளர்ந்தன. ஆனால் இன்று இசை, நாடக நூல்களுள் பெரும்பாலானவை இறந்து விட்டன. இந்த மூன்று பிரிவுகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல் தவிர்க்க முடியாதவை. அப்படியான ஊடாட்டங்களின் மூலம் இசை, நாடக நூல்களிலிருந்த கூறுகள் இயலுக்கு வந்திருக்க வாய்ப்பு உண்டு. அப்படி வந்திருந்த கூறுகளால் இலக்கண உலகில் வேறுபட்ட மரபுகள் உருவாகி உள்ளன. யாப்பருங்கலத்தில்,

ஒழுகிய ஓசையின் ஒத்து அடி இரண்டாய்
விழுமிய பொருளது வெண் செந்துறையே (63)

என்று வெண்செந்துறையின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. உரையில் இதற்கு உதாரணமாக,

கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

என்ற செய்யுள் காட்டப்பட்டுள்ளது. செந்துறை என்பது இசைப் பாவாகும். ‘நாற்பெரும்பண்ணும் இருபத்தொரு திறனும் ஆகிய இசையெல்லாம் செந்துறை’ (யா.வி.:581) என்று யாப்பருங்கல விருத்தியிலும்,

செந்துறை வெண்டுறை தேவபாணிய் யிரண்டும்
வந்தன முத்தகமே வண்ணமே - கந்தருவத்து
ஆற்றுவரி கானல்விரி முரண் மண்டிலமாத்
தோற்றும் இசைப்பாச் சுட்டு (இசை நுணுக்கம்)

செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை
தப்பொன்றும் இல்லா சமபாதம் - மெய்ப்பபடியும்
செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப
பைந்தொடியாய் இன்னிசையின் பா (பஞ்சமரபு)

என்ற அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டும் இரண்டு இசைத்தமிழ் நூல் சூத்திரங்களாலும் செந்துறை என்பது இசைப் பாடல் வகை என்பது தெளிவடைகிறது.

பேராசிரியர் செய்யுளியலில் 'தரவின்றாகி' (செய்யுளியல் - 143) என்ற நூற்பாவின் உரையில் 'கொன்றை வேய்ந்த' என்ற செய்யுளைக் காட்டி, 'என்பது கந்திருவ மார்க்கமாதலின் ஈண்டை இலக்கணம் எல்லாம் பெறுதல் சிறுபான்மை எனக்கொள்க' (செய்.:720) என்று எழுதுகிறார். அதாவது வெண்செந்துறை என்பது இசைப்பாடல்கள் எழுதும் யாப்பு வகையாக, இசை நூல்களில் சொல்லப்படுவதாகும். ஆகவே, இயல் தமிழ் இலக் கணத்தில் அதற்கு இலக்கணம் சொல்வது பொருந்தாது. அல் லது வெறும் யாப்பு எனும் சட்டகம் மட்டுமே இதில் கூறமுடியும். அதற்கு உண்டான இசைக்குறிப்புகளை இங்கு கூறமுடியாது என்பது பொருள். இதிலிருந்து இசைப்பாடலுக்கு உரியதாக இசை நூல்களில் சொல்லப்படும் யாப்புக்கு இலக்கணம் சொல்லி அந்த யாப்பை இயலிலும் ஏற்றுக் கொள்ளும் மரபு ஒன்று இருந் தது; (யாப்பருங்கலம்) இதற்கு மாறாக இயல் நூல்களில் இசைப் பாடல் யாப்புகளுக்கு இலக்கணம் கூறுவது சரியல்ல என்று கூறும் மற்றொரு மரபும் இருந்தது (பேராசிரியர்) என்பது புலனாகிறது.

## 4

சிற்ப நூல்களுக்கும் இலக்கண நூல்களுக்கும் உள்ள தொடர்பு இருவகைப்பட்டது. சிற்ப நூல்களில் சொல்லப்படும் மாதிரிகள் இலக்கண நூல்களில் காணப்படுவது முதலாவது வகை யாகும். சிற்ப நூல்களில் காணப்படும் சில கூறுகள் அப்படியே இலக்கண நூல்களில் காணப்படுவது இரண்டாவது வகையாகும்.

சிற்ப நூல்களில் அளவுகளைக் குறிப்பிடும்போது எந்த ஒன்றையும் உத்தமம், மத்திமம், அதமம் என்றே எல்லா இடங்களிலும் மும்மூன்றாகப் பிரித்துச் சொல்வார்கள். எல்லாச் சிற்ப நூல்களிலும் இதைக் காணலாம். சிலை வடிக்கக் கணக்கிடும் அளவுகள்; இலிங்கம், கருவறை, விமானம் ஆகியவற்றின் நீள, அகல, உயர அளவுகள் முதலிய எல்லா இடங்களிலும் மூன்று வகையாகப் பிரிப்பது சிற்ப நூல் வழக்கம். பின்வரும் எடுத்துக் காட்டு இதை விளக்கும். இப்பகுதியில் இலிங்கம் அமைத்து வழிபடும்போது இலிங்கத்தின் உயரம் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

> கர்பகிருஹத்தின் அளவில் 5ல் 3பங்கு (உயரம்) இருக்கும் லிங்கமானது உத்தம லிங்கமாகும். அதில் சரிபாதியளவு இருப்பது, மத்திம லிங்கமாகும்... மத்திய அளவை 9 பாகங்களாகச் செய்ய வேண்டும். அவைகளில் ஒவ்வொரு அளவும் தனித் தனியே 9வித லிங்கமாகும். இந்த 9வித லிங்கமானங்களில் அதிக அளவுள்ள 3ம் உத்தமமாகும். மத்தியிலுள்ள 3ம் மத்தியமமாகும். குறைந்த அளவுள்ள 3ம் அதமமாகும். (சுப்ரமண்ய சாஸ்திரி: 1960: 92 -93)

இப்பகுதியில் குறிப்பிட்ட உயரத்தில் ஒரு இலிங்கத்தை வடிக்க வேண்டும் என்னும் விதிப்படி அதை 9 பகுதிகளாகப் பிரித்து, மேலே இருக்கும் மூன்றும் உத்தம அளவு என்றும் இடையே உள்ள மூன்றும் மத்திம அளவு என்றும் எஞ்சியது அதம அளவு என்றும் கூறப்பட்டுள்ளது. இதைப் போலவே உலோகச் சிலைகளின் உயரத்தை விளக்கும் பின்வரும் பகுதியிலும் கூறப்பட்டுள்ளது.

> 124 அங்குலம் (உயரம்) உடையது உத்தம தச தாலமாகும். 120 அங்குலம் உடையது மத்தியம தச தாலமாகும். 116 அங்குலம் உடையது அதம தச தாலமாகும். இவ்விதம் தச தாலமானது மூன்று விதமாகும். (மேற்படி :26)

என்றும்,

> ஒரு தாலம் பன்னிரண்டு அம்சமென்றும் எனவே நவதாலம் 108 அம்சங்களைக் கொண்டது என் றும் இவ்வளவினைக் கொண்டு ஒரு படிமத்தின் பல்வேறு உறுப்புகளை அளவிட்டுச் செய்வதென் றும் முன்னர் கண்டோம். இவ்வளவினை நடு அளவாகக் கொண்டது மத்திம நவதாலமென்று கூறப்படுகிறது. இந்த 108 அம் சத்தோடு நான்கு அம்சம் சேர்ந்து வந்த 112 அம்ச நவதால அளவை உத்தம நவதாலமென்றும் நான்கு அம்சங்கள் குறைத்துக் கொண்டு பெற்ற 104 அம்ச நவதால அளவினை அதம நவதாலமென்றும் கொள்ள வேண்டும். (மேற் படி: 26)

என்றும் வரும் பகுதிகளிலும் பிற இடங்களிலும் அளவுகளை மூன்று வகையாகப் பிரித்துப் பார்ப்பது சிற்ப நூல்களின் இயல் பாகும்.

இதே போல இலக்கண நூல்களிலும் மூன்றாகப் பிரித்துப் பார்க்கும் பழக்கம் உண்டு. இலக்கணங்களில் எதுகைத் தொடை யைப் பிரிக்கும்போது, பேராசிரியர் பின்வருமாறு எழுதுகிறார்.

> இரண்டடியிலும் முதனின்ற சீர் முதலெழுத் திரண்டும் ஒழிய அல்லனவெல்லாம் ஒன்றி வரு வதும் ஒரோவெழுத்தோ ஒன்றி வருதலுமென இங்ஙனங் கூறிவற்றுள் அஃதொழித்து (முதல் எழுத்து) அச்சீர் முழுதொன்றில் தலையா கெதுகை யென்றும், இரண்டா மெழுத்தொன் றில் அடியாகெதுகை யென்றும் வழங்கப் படும்... இதனை இடையாகெதுகை யெனவும் அமை யும். ஒழிந்தன கடையா கெதுகை யெனப்படும். (செய்.:480)

யாப்பருங்கல விருத்தியில்,

> எதுகைத் தொடையிற் சீர்முழுவதும் வருவது தலையாகு எதுகை, ஒரெழுத்தே வரத் தொடுப் பது இடையாகு எதுகை, இனத்தானும் மாத்

திரையானும் பிறவற்றானும் வரத்தொடுப்பது
கடையாகு எதுகை. (யா.வி.:147)

என்று இப்படிக் கொள்ளும் மரபும் உண்டென்று காட்டப்பட்டுள்ளது. ஆக, இலக்கணத்திலும் மூன்றாகத் தலை, இடை, கடை என்று பிரித்துப் பார்க்கும் மரபு உண்டென்று தெரிகிறது. (தலை, இடை, கடை என்ற மூன்று சொற்களும் உத்தமம், மத்திமம், அதமம் என்பனவற்றுக்கு இணையான சொற்கள்)

## 5

பாட்டியல் நூல்களில் பொருத்தம் என்ற பகுதி விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இதில் பாட்டுடைத் தலைவனுக்கும் அவன் மேல் பாடப்படும் நூலின் முதலெழுத்து, சீர் முதலியவற்றிற்கும் இருக்க வேண்டிய பொருத்தங்கள் கூறப்பட்டிருக்கும். முதல் எழுத்து, சீர் ஆகியவற்றை, நாள், கதி, உண்டி, பால் முதலிய சோதிட நூல் விவரப்படி பிரித்துக்கொள்வார்கள். பின்பு பாட்டுடைத்தலைவன் பெயருக்கும் நூலின் முதல் எழுத்து அல்லது சீர் ஆகியவற்றிற்கும் அமைய வேண்டிய பொருத்தங்களைக் கூறுவர். இது பாட்டியல் நூல்களின் பொதுவான இயல்பாகும்.

மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணவு, வருணம், நாள், கதி, கணம் எனப் பத்துப் பொருத்தங்கள் பாட்டியல் நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான பகுதிகள் சிற்ப நூல்களில் மிக விரிவாகக் காணப்படுகின்றன. இப் பகுதி சிற்ப நூல்களில் இயல்பாகவும் பொருத்தமாகவும் அமைந்துள்ளது. பாட்டியல் நூல்களில் காணப்படும் பொருத்தங்கள் பற்றிய பகுதியைச் சிற்ப நூல்களில் உள்ள பொருத்தப் பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பயனுள்ள பணியாகும். பாட்டியல் நூல்களின் தோற்றத்திற்கான காரணங்களையும் காலச்சூழலையும் விளங்கிக் கொள்ள இத்தகைய ஆராய்ச்சி பயன்படும்.

ஒரு இலிங்கத்தை இயற்றி வழிபட விரும்புவோனுக்கும் அந்த இலிங்கத்திற்கும் இருக்க வேண்டிய பொருத்தங்கள் எல்

லாம் சிற்ப நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. கர்த்தா (அரசன், எஜமான்) என்று சொல்லப்படுபவர் இலக்கணங்களில் சொல் லப்படும் பாட்டுடைத் தலைவன் போல கோயில், சிலைகள் ஆகியவற்றைச் செய்விப்பவர். இவருக்கும் இவரால் நிர்மாணிக் கப்படும் சிலை முதலியவற்றிற்கும் நாள், கதி, வருணம் முதலிய பொருத்தங்கள் அமைய வேண்டும் என்பது சிற்ப நூல் மரபு. இலிங்கம் செய்து வழிபட விரும்பும் ஒருவருக்கும் செய்யப்படும் இலிங்கத்திற்கும் இருக்கவேண்டிய பொருத்தங்கள் பின்வரு மாறு சொல்லப்படுகின்றன.

> (இலிங்கத்தின்) உயர அங்குலத்தை 8 ஆல் பெருக்கி 27 ஆல் வகுத்து மீதம் வரும் எண்ணானது அசு வதி முதலிய நக்ஷத்திரங்களாகும் அரசன் யஜ மானன் இவர்களின் ஜன்ம நக்ஷத்திரம் முதல் லிங் கத்தின் நக்ஷத்திரம் வரையில் எண்ண வேண்டும். அவ்விதமே தேவலாய நக்ஷத்திரம் முதல் லிங்கத் தின் நக்ஷத்திரம் வரையில் எண்ண வேண்டும்... ஜன்ம த்ரயம் (1-10-19 வது நக்ஷத்திரங்கள்) ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 2 வது நக்ஷத்திரம் 4 வது நக்ஷத் திரம் 8 வது நக்ஷத்திரம் 6வது நக்ஷத்திரம் இவை கள் சுப பலனைக் கொடுக்கக் கூடியவைகள் என்று கூறப்பட்டிருக்கின்றன. மற்ற (3 -5 -7வது) நக்ஷத்திரங்கள் அசுப பலனைக் கொடுக்க கூடி யவைகளாம். யஜமானனுடைய ஜன்மலக்கினம், சந்திரலக்கினம் இவைகளுக்கு 8-வது ராசிக் குரிய நக்ஷத்திரங்கள் வைநாசிக நக்ஷத்திரம் (3 - வது நக்ஷத்திரம்) யஜமானனுடைய நக்ஷத்திரம், லிங்கத்தின் நக்ஷத்திரம், இஃ(,ருவ்விரண்டு நக்ஷத்திரங் களில், ஒன்று நரகண நக்ஷத்திரமாகவும் மற் றொன்று ராக்ஷஸகண நக்ஷத்திரமாகவும், இருப் பதுமான நக்ஷத்திரம், இவைகள், அசுப பலனைக் கொடுக்கக் கூடியவைகள், ஆகையால் இவை கள் விலக்கப்பட்டவைகளாம். (சுப்ரமண்யசாஸ் திரி: 1960 : 99 -101)

சிலை முதலிவற்றிற்கு இராசி, நட்சத்திரம், கதி முதலியன கணிக்கும் முறைக்கு, மேலே காட்டியது ஒரு உதாரணமாகும். இன்ன பொருத்தம் இருந்தால் இன்ன நல்லது நடக்கும்; இன்ன பொருத்தம் இல்லாவிட்டால் இன்ன தீயது நடக்கும் என்றெல் லாம் விரிவாகச் சொல்வது இவற்றின் இயல்பு.

பாட்டியல் நூல்கள் பொதுவாக இரு முக்கியப் பகுதி களைக் கொண்டிருக்கும். பொருத்தங்களைப் பற்றிக் கூறும் பொருத்தவியல், பிரபந்தங்களின் இலக்கணம் கூறும் பிரபந்த வியல் என்பன. பொருத்தப் பகுதிகளை மட்டுமே கூறும் சம்பந்த பாட்டியல், பொருத்தவிளக்கம் முதலிய நூல்களும் உள்ளன. இங்கு மாதிரிக்கு வெண்பாப் பாட்டியலில் காணப்படும் பொருத்தப் பகுதிகள் சில, முன்காட்டிய சிற்பநூல் பொருத் தப்பகுதியோடு ஒப்பிடப்படுகின்றன. நட்சத்திரப் பொருத்தம் வெண்பாப் பாட்டியலில் காணப்படுகிறது. அ, ஆ, இ, ஈ - கார்த் திகை; உ, ஊ, எ, ஏ, ஐ - பூராடம்; ஒ, ஓ, ஔ - உத்திராடம்; க, கா, கி, கீ - திருவோணம் என்று முறையில் 102 எழுத்துகளும் 27 நட் சத்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றில்,

> சொல்லிய நாள் இருபத்தேழையும் ஒன்பது ஒன்ப தாக மூன்று கூறாக்கி பாட்டுடைத் தலைமகன் இயற்பெயரின் முதலெழுத்தின் நாளைத் தொடங்கிக் கூறுகளை எண்ண ஒன்று, மூன்று, ஐந்து ஏழ்வரின் பொருந்தா. அல்லாத நாட்களுள் பாட்டுடைத் தலைவன் பெயர் முதலெழுத்தின் இராசி தொடங்கி எட்டாமிராசி நாட்களும் பொருந்தா. வயினாசியமாகிய எண்பத்தெட் டாங்கால் நின்ற நாளும் பொருந்தா. (வெண்.: 19)

எனவரும் பகுதியில் எதற்கு எது பொருத்தம் என்று கூறப் பட் டுள்ளது. சிற்ப நூல்களிலும் பாட்டியல் நூல்களிலும் சிலை, எழுத்து முதலியவற்றிற்கு நாள்களைக் கணக்கிடும் முறையும், எந்த நட்சத்திரத்திற்கு எது பொருந்தும் என்றும் கூறப்பட்டுள் ளன. இரண்டிலுமே ஒற்றைப்படை எண்கள் விலக்கத்தக்கன என்றும் வயினாசியம் என்ற நாள் நீக்கத்தக்கது என்றும் கூறப் பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

பால் பொருத்தம் பற்றிக் கூறும்போது, சிலை வடிக்க உதவும் மரம், கல் முதலியவற்றை ஆண், பெண், அலி என்று மூன்றாகப் பிரித்துத் தக்கதைத் தேர்ந்தெடுத்து சிலை வடிக்கப் பயன்படுத்துவர்.

> மணியோசையைப் போல் அதிக சத்தமும் நீண்ட வடிவமும் உடையது புருஷ சிலை(கல்) யாகும் என்று கூறப்பட்டுள்ளது. பனையைப் போன்ற ஓசையும் நீண்ட வடிவமும் உடையது ஸ்திரீ சிலையாகும் என்று கூறப்பட்டுள்ளது. பளபளப்பில்லாமல் உறுதி இல்லாமல் கரடு முரடாய் ஒலி இல்லாமலிருக்கும் சிலையானது நபும்ஸக சிலை என்று கூறப்பட்டுள்ளது.
>
> இவ்வாறு ஒலியினால் பேதம் கூறப்பட்டுள்ளது. இனி, உருவத்தினால் பேதத்தைக் கூறுகிறேன்.
>
> சச்சதுரமாகவும் எட்டுக் கோணமாகவும் இருக்கும் சிலையானது ஸ்திரீ சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கின்றது. நீண்ட சதுரமாகவும் வட்டவடிவமாகவும் பத்துக் கோணமாகவும் பன்னிரண்டு கோணமாகவும் இருப்பது புருஷ சிலை என்று கூறப்பட்டுள்ளது. நன்கு வட்ட வடிவமாக இருப்பது நபும்ஸக சிலையாகும். புருஷ சிலையினால் லிங்கத்தைச் செய்ய வேண்டும். ஸ்திரீ சிலையினால் பிண்டிகையைச் செய்ய வேண்டும். (பிண்டிகை -பீடம்) நபும்ஸக சிலையினாலே பாதாதாரத்தைச் செய்ய வேண்டும் (பாதாதாரம் - லிங்கத்தின் அடித்தளத்தின் ஆதாரம்) இப்படிக்குச் செய்யமால் இதற்கு விபரீதமாகச் செய்தால் அது எப்பொழுதும் கர்த்தாவுக்கு அழிவை உண்டு பண்ணும். (சுப்ரமண்ய சாஸ்திரி: 1960 : 88 -90)

இந்தப் பகுதியில் சிலை செய்யத் தேர்ந்தெடுக்கும் கல்லை ஆண், பெண், அலி என்று மூன்று விதமாக ஒலி, உருவம் ஆகிய இரு அடிப்படைகளிலும் பகுத்துள்ளனர். இதே போல பாலை,

ஸ்திரி(யுவதி), விருத்தை என்று அகவை அடிப்படையிலும் விவரிப்பது உண்டு.(மேற்படி: 88) சிலை செய்யப் பயன்படும் மரங்களும் ஆண், பெண், அலி, என்று மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

> நைப்பான நிலத்தில் செவ்வியதாய் உரைத்ததாய் கெட்டியாய், கனத்ததாய், பழம், பூ, இலை, உடையதாய் குளிர்ச்சியும் வெக்கையும் கலந்ததாய் குறைந்த தைலப்பசையும் சாறும் உடையதாய் காணப்படும் மரங்கள் ஆண் மர வகையைச் சாரும். மிருதுவான நிலத்தில் முளைத்ததாய் நேரியதாய் அடி முதல் நுனி வரை முறையே கரைந்து மெலிந்ததாய் பூ, காய், இலை மென்மையாய் மிகவும் குளிர்ந்ததாய் தைலமும் சாறும் மிக்கதாய் காணப்படும் மரங்கள் பெண் மர வகையைச் சாரும். மெலிந்த தூருடையதாய் பூ, இலை, காய் குறைந்ததாய் உறுதியற்றதாய் காணப்படும் மரங்கள், அலி மரம் எனப்படும்.

ஆண் மரங்கள் ஆண் படிமங்களுக்கு ஏற்றதாம். பெண் மரங்கள் பெண் படிமங்களுக்கு ஏற்றதாம். ஆனால் அலி மரங்கள் சூலங்களுக்குக் கொள்ளலாகா. எம்மரத்தை எப்படிமத்திற்கு ஏற்பினும் அலி மரத்தைப் பெண்படிமங்களுக்கு உபயோகித்தலாகாது. (மேற்படி:112)

இப்பகுதி மரங்கள் ஆண், பெண், அலியென மூன்றாகப் பிரிக்கப்படுவதைக் காரணத்தோடு விளக்குகின்றது. சூலங்கள் செய்யப்பயன்படும் மரங்கள் வளர்ந்திருக்கும் நிலம், மரத்தின் வடிவம், தைலம், சாறு, பூ, இலை முதலியவற்றின் அடிப்படையில் இந்தப் பாகுபாடு அமைந்துள்ளது. பாட்டியல் நூல்களிலும் பால் பொருத்தம் பற்றிப் பேசப்பட்டுள்ளது. வெண்பாப் பாட்டியலில் பால் அடிப்படையில் எழுத்துகளை வகைப்படுத்தும் சூத்திரம் பின்வருமாறு:

> எண்ணும் குறில் ஆண், இயைந்த நெடில் எல்லாம்
> பெண்ணாகும், ஒற்று ஆய்தம் பேடாகும்; - பெண்ணோடு

ஆண் புணர்ச்சிக்கு அவ்வவ் எழுத்தே; மயங்கினுமாம்;

மாண்பில் பேடு என்றார் மதித்து. (வெண். -7)

இதன் உரையில்,

குற்றெழுத்தெல்லாம் ஆண்பாலெழுத்தாம். நெட்டெழுத் தெல்லாம் பெண்பாலெழுத்தாம். ஒற்றெழுத்தும் ஆய்த வெழுத்தும் அலி எழுத்தாம். ஆண் பாலைப் புகழுமிடத்து ஆணெழுத்துச் சிறப்புடைத்து, பெண் பாலைப் புகழுமி டத்து பெண்ணெழுத்துச் சிறப்புடைத்து, மயங்கி வந்தன வெனினும் வரையப்படா. அலி எழுத்து முன் னிற்குந் தகைமைய அல்ல. (வெண்.: 11)

என்று உரை எழுதப்பட்டுள்ளது. இதில் சிற்ப நூலில் காணப் படும் வகைப்பாட்டின் தாக்கம் தெரிவது வெளிப்படை. சிற்ப நூல்களில் இதற்கான காரணமும் கூறப்பட்டுள்ளது. இலிங்கம் செய்யப் பயன்படும் கல்லைப் பற்றிக் கூறிய பகுதியில் இலிங் கத்தின் இந்த உறுப்பு இந்தக் கல்லில் செய்யப்பட வேண்டும் என்ற விளக்கம் இலிங்கத்தின் அமைப்பு பற்றிய தத்துவார்த்த ரீதியான விளக்கத்தோடு ஒத்துள்ளது. சிற்ப நூல்களில் காணப் படும் பொருத்தங்கள் காரணத்தோடு இருப்பது தெளிவு ஆனால் பாட்டியல் நூல்களில் இத்தகைய பகுப்புகளுக்குக் காரணம் கூறப்படவில்லை. சிற்ப நூல்களின், தாக்கத்தாலேயே இலக்கணங் களில் இம்மாதிரியான சிந்தனைகள் தோன்றியிருக்க வேண்டும் என்பது வலியுறுகிறது.

## 6

வடமொழி இலக்கண நெறிகளைத் தமிழ்மொழி இலக் கணத்தில் புகுத்தி இலக்கணம் வகுப்பது ஒரு சில ஆசிரியர் களின் கொள்கை; இவர்களை, 'வடநூல் வழித் தமிழாசிரியர்' என்று யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் குறிப்பிடுகிறார். *(யா.வி.: 48,487)*

வடமொழி நெறிகளைத் தமிழ் இலக்கணத்தில் புகுத்தி இலக்கணம் செய்த ஆசிரியர்களைப் பற்றித் தமிழுலகம் நன்கு

அறியும். யாப்பருங்கல விருத்தியிலேயே இவ்வாறு கூறப்படுவதால் இந்நெறி மிகவும் பழமையானது என்றும் தெரிகிறது. கிடைக்கும் நூல்களில் வீரசோழியமே இவ்வகையான நூல்களில் பழமையானதாகும். வடநூல் மரபில் தமிழ் இலக்கணம் உரைப்பது இந்நூலின் நெறி. தண்டியலங்கார ஆசிரியர், சுப்பிரமணிய தீட்சிதர் (பிரயோக விவேகம் நூல் ஆசிரியர்) முதலியோரும் இதே நெறியைப் பின்பற்றுகின்றனர். உரையாசிரியர்களிலும் இத்தகைய ஒரு நெறி உண்டு. சேனாவரையர் முதல், சிவஞான சுவாமிகள் வரை உள்ளவர்கள் இதே நெறியில் செல்வதாக மு.வை. அரவிந்தன் கூறுகிறார். (1968: 556, 57) தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்று இவர்கள் கொண்டதுதான் இப்படிச் சொல்லக் காரணமாகும்.

இலக்கண நூல்களே அன்றிக் கருவி நூல்களான நிகண்டுகளிலும் இத்தகைய ஒரு நெறி இருந்தது. பல்பொருள் சூளாமணி என்ற நிகண்டு வடமொழி நெறியில் தோன்றியுள்ளது. இந்நிகண்டைப் பற்றி வையாபுரிப்பிள்ளை அவர்கள்,

> அமரகோசம் என்னும் வடநூலைப் பின்பற்றி இவரும் (ஈசுரபாரதி) தமது நூலை மூன்று காண்டங்களாகப் பகுத்து, முதற்காண்டம் ஒரு சொல்லொரு பெயர்த் தொகுதியாகவும் இரண்டாங் காண்டம் ஒரு சொல் பல்பொருட்டொகுதியாகவும் மூன்றாங்காண்டம் பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதியாகவும் அமைத்திருக்கின்றனர். (1989 : 357)

என்று கூறியுள்ளதிலிருந்து இது தெளிவாக விளங்கும். இதற்கு முன்வந்த திவாகரம், பிங்கலம், சூடாமணி நிகண்டு முதலியவற்றிலிருந்து வேறுபட்டு, பல்பொருள் சூடாமணி நிகண்டு, வடமொழி நெறியைப் பின்பற்றி இயற்றப்பட்டுள்ளது.

## 7

உரையாசிரியர்களாலும் இவ்வாறு வேறுபட்ட இலக்கண மரபுகள் தோன்றியிருக்கலாம். அதற்கான ஆதாரங்கள் பலவாக

உள்ளன. நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என ஆசிரியர் மூவகைப்படுவர். எனினும் நூலாசிரியரும் உரையாசிரியரும் கூட போதகாசிரியராக விளங்கினர். உரையாசிரியர்கள் போதகாசிரியராக இருந்தமைக்குச் சான்றுகள் பல உள்ளன. உரைகளில் வினாவிடையாக உரையெழுதும் முறையைப் பற்றிச் சொல்லும் போது 'அது உரை மரபுகளில் ஒன்று' என்று கூறினாலும் உரையாசிரியர்கள் போதகாசிரியர்களாக விளங்கினார்கள் என்பதற்கும் இவற்றைச் சான்றுகளாகக் காட்டலாம்.

ஒரு மூல நூலிற்குப் பல உரைகள் எழுவதற்கான காரணங்களை ஆராயும் பொழுது, பல இலக்கண மரபுகள் நிலவியதற்கான காரணங்களும் புலப்படும். போதகாசிரியர்கள் ஒரு நூலை மாணவர்களுக்குப் பாடம் சொல்லி வரும்போது, தமக்குத் தோன்றிய - நூலில் இல்லாத - கருத்துகளையும் சேர்த்துப் பாடம் சொல்லுவார்கள். காலகதியில் மொழியிலும் இலக்கியத்திலும் தோன்றும் மாற்றங்களையும் நன்கு உள்வாங்கி, அவற்றையும் சேர்த்தே மாணவர்களுக்குப் பாடம் சொல்வர். இப்படிப் பாடம் கேட்கும் மாணவர்கள், அவர்களுடைய மாணவர்களுக்குப் பாடம் சொல்லும் போது இன்னும் சிலவற்றைச் சேர்த்துப் பாடம் சொல்லுவார்கள். இப்படி நூலுடன் பல பகுதிகளும் சேர்ந்து வரும். பின்னால் புதியதாக நூல் இயற்றும் ஆசிரியர், இப்பகுதிகளை உள்வாங்கித் தம் மூல நூலில் ஏற்பனவற்றைச் சேர்த்து நூல் இயற்றுவார். பல போதக ஆசிரியர்கள் வெவ்வேறு இடங்களில் தோன்றி மாணவர்களுக்குப் பாடம் சொல்லி வரும் போது, அவர்கள் அனைவரும் சொல்லும் பாடம் ஒரே மாதிரியாக இருக்கும் என்று கருத முடியாது. அந்தந்த ஆசிரியர்கள் தமக்குச் சரியென்று தோன்றியவற்றை எல்லாம் சேர்த்துக் கொள்வர். பின்னர் இவர்களின் மரபில் வரும் சிலர் உரையை எழுதி வைக்கும் போது உரைகளுக்கு இடையே வேறுபாடுகள் தோன்றுகின்றன. ஆகவே, இவ்வாறு வேறுபாடுகள் உரையாசிரியரிடம் தோன்ற, பாடம் சொல்லும் போதகாசிரியர்கள் ஒரு வகையில் காரணமாகின்றனர்.

ஒரு நூலில் உரையாசிரியர், உரையிற் கோடல் மூலம் சேர்த்துச் சொல்லும் பகுதிகள் பின்வரும் இலக்கண நூல் ஆசிரி

யர்கள் நூல் இயற்றப் பயன்படுகின்றன. தொல்காப்பியம் தோன்றிப் பல நூற்றாண்டுகள் கழித்து இளம்பூரணர் உரை தோன்றுகின்றது. இவர்தம் காலம் வரையில் மொழியில் நேர்ந்த மாற்றங்களையும் சேர்த்தே தம் உரையை எழுதுகிறார். பின்வந்த பவணந்தி முனிவர் தம் நூலில் இளம்பூரணர் எழுதிய பகுதிகளை எல்லாம் உள்வாங்கி சேர்த்துக் கொண்டார். உரையாசிரியர் மூலம் மற்றொரு இலக்கண மரபு தொடங்குவதற்கு நன்னூல் சிறந்த எடுத்துக்காட்டு. (மு. அருணாசலம் இதை இன்னும்விரிவாகவே கூறி உள்ளார். 1981: 164-168) தொல்காப்பிய நூற்பா, இளம்பூரணர் உரை, நன்னூல் நூற்பா ஆகியவற்றை அடுத்தடுத்து வைத்துப் பார்க்கும் போது இது புலப்படும். எடுத்துக்காட்டாக ஒரு இடம் மட்டும் இங்கு காட்டப்படும்.

> ஐ ஒடு கு இன் அது கண் என்னும்
> அவ்வாறு என்ப வேற்றுமை உருபே (புணரியல் - 11)

என்பது தொல்காப்பிய நூற்பா.

> ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்று சொல்லப்படும் அவ்வாறும் என்று சொல்வர் வேற்றுமை உருபுகளை. இவ்வாறும் அல்லன எல்லாம் அல்வழி எனப்படும். அவை, எழுவாயும், விளியும், உவமத்தொகையும், உம்மைத்தொகையும், பண்புத்தொகையும், இருபெய ரொட்டுப் பண்புத் தொகையும், முற்றும், இருவகை எச்சமும், இடையும், உரியும் என இவை

என்பது இளம்பூரணர் உரை.

> வேற்றுமை ஐம்முதல் ஆறு ஆம்; அல்வழி
> தொழில், பண்பு, உவமை, உம்மை, அன்மொழி,
> எழுவாய், விளி, ஈர் எச்சம், முற்று, இடை, உரி,
> தழுவு தொடர் அடுக்கு என ஈர் ஏழே. (நன். - 182)

என்பது நன்னூல் சூத்திரம். இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது மேற்கூறியதன் உண்மை புரிகிறது.

போதகாசிரியரால் புது நூலே உருவாகும் என்பதற்கு இலக்கண விளக்கம் நல்ல சான்று. இதன் ஆசிரியர் திருவாரூர் வைத்தியநாத தேசிகர். இவர் திருமலை நாயக்கரின் ஆணையாளர் களில் ஒருவரான திருவேங்கடநாத அய்யரின் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கச் சென்றார். மாணவர்களுக்குப் பாடம் சொல் லும் போது தொல்காப்பியம், நன்னூல் முதலிய நூல்களின் போதாமையை உணர்ந்து, தாமே புதியதாக ஒரு இலக்கண நூலை இயற்றினார். அதுவே, ஐந்திலக்கணங்களையும் கூறும் இலக்கண விளக்கம் என்ற நூல். இந்த நூலில் பெரும் பகுதி தொல்காப்பியம், நன்னூல் சூத்திரங்களை வைத்துக்கொண்டு, வேண்டிய இடங்களில் தாம் புதிதாக நூற்பாக்களை இயற்றிச் சேர்த்துக் கொண்டார். எழுத்ததிகாரத்தில் உள்ள 158 நூற் பாக்களில் வைத்தியநாத தேசிகருடைய நூற்பாக்கள் 43; சொல் லதிகாரத்தில் உள்ள 214 நூற்பாக்களில் இவரது நூற்பாக்கள் 41. இவற்றை நோக்கும் போது இவர் நூல் இயற்றியதன் காரண மும், நூல் இயற்றிய விதமும் நன்கு புலப்படும்.

நிகண்டுகளிலும் இவ்வாறே போதகாசிரியர்கள் நூற்பாக் களை எழுதிச் சேர்ப்பதும் விரிவுபடுத்துவதும் புதிய நிகண்டு களை இயற்றுவதும் ஆகிய செயல்கள் நிகழ்ந்துள்ளன. சூடா மணி நிகண்டு தமிழ் இலக்கிய உலகில் பெரிதும் பயிலப்பட்டு வந்தது. இதன் பதினோராவது தொகுதியாகிய ஒருசொல் பல் பொருள்பெயர்த் தொகுதி மிகவும் பிரபலமாக விளங்கியது. எதுகை முறையில் 310 செய்யுள்களில் அமைந்த இத்தொகுதி சுருக்கமானது; சில குறைகளை உடையது. அக்குறைகளை நீக்க, பலர் முனைந்தனர். இதனால் புதிய நிகண்டுகள் பல உருவாயின. இதை,

> நோக்கியுணர் கருவி நூலாய் அமைந்ததன் கண் ணும் பற்பல குறைபாடுகள் உளவாயின. இக் குறைகள் பிற்காலத்தில் பற்பல நிகண்டு நூல் கள் தோன்றுதற்குரிய அவசியத்தைப் பெரிதும் விளக்குகின்றன. சூடாமணி நிகண்டினைச் செப் பஞ் செய்யும் முயற்சியின்கண்ணேயே ஆசிரியர்

> பலர் முனைந்து நின்றனர். பாடங்கற்பித்த தமிழ சிரியர்கள் தாம் கற்பிக்கும் பிரதிகளில் தத்த மக்குத் தோற்றிய சிற்சில திருத்த முறைகளைக் கையாளத் தொடங்கினர்... அதன்கண் கூறப் படாத ஒரு சொற்பல பொருட்களை எல்லாம் தொகுத்து எதுகை - முறைபற்றிச் செய்யுட்கள் இயற்றி அச்செய்யுட்களை அந்நூலின் இடை யிடையே கோர்த்து 11ம் தொகுதியை நிரம்பிய நூலாக அமைத்து விடுதற்கும் பல ஆசிரியர்கள் முயன்றிருக்கவேண்டும். அவ்வகை முயற்சிகளுள் ஒன்று நமக்கு கைக்கு எட்டி இருக்கிறது. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கியவரும் சிறந்த வித்வானும் தமிழ் நூல்கள் பலவற்றை அச்சு வாயிலாக வெளியிட்டவரும்நஅ(,ரு ஆகிய களத் தூர் வேதகிரி முதலியார் என்பவர் சூடாமணியில் 11ம் நிகண்டினைப் புதுக்கிச் சுமார் 600 செய்யுட் கள் உள்ள தனி நூலாக அமைத்து உரையும் வகுத்து யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சங்கத்தார் வாயிலாக 1842ல் வெளியிட்டனர். (வையாபுரிப் பிள்ளை: 1989: 348, 349)

என்ற பகுதி நன்கு காட்டுகிறது. போதகாசிரியர்களால் நிகண்டு களில் தோன்றிய மாற்றங்களைப் போலவே இலக்கண நூல் களிலும் தோன்றி, வேறுபட்ட மரபுகளில் இலக்கணம் உருவாக வழி செய்தது.

தத்துவச் சிந்தனைகளும் தமிழில் பல இலக்கண மரபுகள் நிலவுவதற்கு வழி வகுத்திருந்தன. உலகெங்கிலும் தத்துவச் சிந் தனைகளில் வேறுபாடுகள் நிலவியது என்பது ஆதாரம் வேண் டாத உண்மையாகும். தமிழ்நாட்டில் பல தத்துவச் சிந்தனை களைச் சார்ந்தவர்கள் வாழ்ந்திருந்தனர். இராமானுசர், தத்து வராய சுவாமிகள் முதலியோர் புகழ் பெற்றவர்கள். சைவ சித் தாந்தம் தமிழ் நாட்டில் மிக நீண்ட காலம் நிலவி வளர்ந்த சிந் தனை முறையாகும். சமண தத்துவமும் பௌத்த தத்துவமும்

தமிழகத்தில் நீண்ட காலம் விளங்கியவை. இத்தத்துவச் சிந்தனைகளைப் பயின்ற அறிஞர்கள் இலக்கணம் இயற்றும் போது, வேறுபட்ட இலக்கண மரபுகள் தோன்றி இருக்க வாய்ப்பு உண்டு.

தத்துவம் தருக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. தத்துவச் சிந்தனையாளர்களுக்கு தருக்கம் அரிச்சுவடி போன்றதாகும். தருக்க நூல் அறிவு இலக்கண உலகில் ஈடுபட்டோரிடமும் காணப்படுகிறது. சேனாவரையர், பரிமேலழகர், சிவஞான முனிவர் யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் ஆகியோரை உதாரணமாகக் காட்டலாம். இவர்கள் தருக்கரீதியில் தம் கருத்துகளை நிலைநாட்டுவதையும் பிறர் கருத்தை மறுப்பதையும் அவர்தம் உரைகளில் காணலாம். தருக்கம், இலக்கண நூலுக்கும் தத்துவ சிந்தனைகளுக்கும் உள்ள நெருக்கத்தைக் காட்டுகிறது.

# 2

# எழுத்திலக்கண மரபுகள்

(எழுத்து, சொல் இலக்கணங்களின் முக்கியத்துவம் - சொல் இலக்கணம் மட்டுமே கூறும் நூல்கள் - எழுத்து, சொல் இலக்கண ஆய்வுகள் - தொல்காப்பிய எழுத்ததி கார அமைப்பு - எழுத்திலக்கண வகைப்பாடு - வீரசோழிய எழுத்திலக்கணம் - வீரசோழியமும் நேமிநாதமும் - நன்னூல் அமைப்பு - நன்னூலில் எழுத்ததிகாரம்.)

எழுத்து, சொல் ஆகிய இரண்டு இலக்கணங்களை ஆராயும் போது, பின்னர் பொருள், யாப்பு, பாட்டியல் இலக்கணங்களில் ஆராய்வது போல் அல்லாமல் இலக்கண நூல்களை அடிப்படை அலகாக வைத்து ஆராய்ச்சி செய்யப்படுகிறது. பொருள் இலக்கணத்தில் களவு பற்றிய இலக்கணத்தை எடுத்துக்கொண்டு, அது ஒவ்வொரு நூலிலும் சொல்லப்பட்டுள்ள முறை கால ஒழுங்கில் ஆராயப்படும். இதே போல மற்றப் பிரிவுகளிலும் ஆராய்ச்சி செய்யப்படும். இங்கு இலக்கணங்களை ஒரு படித்தாக வைத்து ஆராயும்போதுதான் அந்நூலின் அமைப்பையும், இலக்கணத்தை விளக்க ஒவ்வொரு நூலாசிரியரும் மேற்கொண்டுள்ள முறையையும் அறிய வசதியாக இருக்கும். மேலும், இலக்கணத்தை உணர்த்தும் முறையில் ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடுகின்றனர்.

இதைப் புரிந்து கொள்ள அவர்களது இலக்கணத்தை ஒட்டுமொத்தமாக ஆராயும் போதுதான் நூல் அமைப்பைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வழி பிறக்கும். இலக்கண நூல்களில் இலக்கணங்களின் கூறுகளை விளக்க, ஆசிரியர்கள் பின்

பற்றும் முறையை ஆராய்வது எவ்வளவு அவசியமோ அதே அளவு நூல் அமைப்பை ஆராய்வதும் அவசியம். ஏனெனில் நூல் அமைப்பு, ஆசிரியர் பின்பற்றும் இலக்கண மரபையும், ஆசிரியர் இலக்கணத்தை உணர்த்தும் போக்கையும் (தொகை, வகை, விரி) காட்டுகிறது.

ஆய்வுமுறை என்பது, எடுத்துக்கொண்ட பொருளை விட்டுத் தனியாக நிற்கும் ஒன்று அல்ல. பொருளுடன் தொடர்பு கொண்ட அதிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். எனவே ஆய்வு முறையானது, ஆய்வுக்குத் தொடர்பில்லாமல் ஆய்வாளர் கள் மேல் அமர்ந்து ஏவல் செய்து கொண்டிருப்பதல்ல. ஆய்வா ளனின் தேவைக்கும், அவனது நோக்கிற்கும் ஏற்ப இயைந்து அவன் தன் சிந்தனைகளைச் செலுத்த வசதியாக அமைவதே ஆகும்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது இங்கு எடுத்துக் கொண்ட இலக்கணப் பொருளுக்கு ஏற்ப ஆய்வு முறையையும் நெகிழ்த்துக் கொண்டு போவது தவிர்க்க இயலாதது. மேலும், இங்கு எடுத்துக்கொண்டுள்ள பொருளை விளக்குவதற்கு இதுவே ஏற்ற முறையாக அமையும். இந்தக் கருத்து ஆய்வுக்குக் எடுத்துக் கொண்டுள்ள நூல்களை நோக்கும் போதும் சரியென்று தோன் றும். எனவே இந்த இயலில், ஒரு இலக்கண நூலை மற்றொரு இலக்கண நூலுடன் ஒப்பிட்டு ஆராயும் முறையே பெரிதும் பின்பற்றப்படுகிறது.

இங்கு கி.பி. 800 முதல் 1400 வரையுள்ள காலத்தில் தோன் றிய இலக்கண நூல்களும் உரைகளும் ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளப்பட்டுள்ளன. தமிழில் பொருள், யாப்பு, அணி இலக்கணங் களைத் தனியாகக் கூறும் இலக்கண நூல்கள் இயற்றப்பட் டுள்ளன. ஆனால் எழுத்திலக்கணத்தை மட்டுமோ, சொல்லிலக் கத்தை மட்டுமே தனியாகக் கூறும் நூல்கள் தோன்றவில்லை என லாம். 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரயோக விவேகமும், இலக்கணக் கொத்தும் இதற்கு விதி விலக்குகள் ஆகும். பிரயோக விவேகத்தில் சொல் இலக்கணமே கூறப்பட்டுள்ளது. இலக்கணக்

கொத்து, சொல்லதிகாரத்தில் அபூர்வமாக வரும் விதிகளை விளக்குவதற்கு எழுந்த நூலாகும். இங்கு எடுத்துக் கொள்ளப் படும் நூல்கள் பின்வருவன:

1. தொல். - எழுத்து அதிகாரம், இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகள்.
2. வீரசோழியம் - பெருந்தேவனார் உரை.
3. நேமிநாதம் - உரை.
4. நன்னூல் - மயிலைநாதர் உரை

இந்த நூல்களை அடிப்படையாகக் கொண்டு இங்கு ஆய்வு நிகழ்த்தப்படுகிறது. இங்கு முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அதாவது, தமிழ் இலக்கணப் பரப்பில் எழுத்து, சொல் இலக்கணங்கள் முதன்மை கொடுத்து ஆராயப்பட்டுள் ளன. தமிழ் இலக்கண மரபு ஐந்திலக்கண மரபாகும். ஐந்து இலக்கணங்களிலும் பொருள் இலக்கணமே முதன்மையான பகுதியாகும். இறையனார் களவியல் உரை மூலம் இதனை அறி யலாம். எனினும், வடமொழியின் தொடர்பு அதிகமாகி, வட மொழி இலக்கணக் கருத்துகளைத் தமிழ் இலக்கணத்தில் ஏற்றி இலக்கண நூல் இயற்றும் காலம் தோன்றிய பின், எழுத்து, சொல் இலக்கணங்களே சிறப்பிடம் பெற்றன.

அதிலும் சொல் இலக்கணமே சிறப்பிடம் பெற்றது. இதை இரண்டு வகையில் கூறலாம். முதலாவதாக எழுத்து, சொல் இலக் கணங்களை மட்டுமே விளக்கும் நூல்கள் எழுந்தன. நேமிநாதம், நன்னூல் ஆகியவை இந்த வகையின. மேலும் ஐந்திலக்கணங்களை யும் விளக்கும் வீரசோழியம் சொல் இலக்கணத்திற்கே முதன்மை கொடுத்துள்ளது. இரண்டாவதாக, பழைய நூலான தொல் காப்பியத்திற்கும் சொல்லதிகாரத்திற்குத் தான் (அதில் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்கள் இருப்பினும்) அதிக அளவில் உரைகள் எழுந்தன. சேனாவரையர், தெய்வச் சிலையார், கல்லாடர் ஆகிய மூவர் சொல்லதிகாரத்திற்கு மட் டுமே உரை எழுதியுள்ளனர். அதனால் எழுத்து, சொல் இலக்

கணங்களே தமிழ் இலக்கண உலகில் சிறப்புற்று விளங்கியமையை அறியலாம். மேலும் இருபதாம் நூற்றாண்டில் மொழியியல் கல்வி தமிழில் அறிமுகமான போது, அந்தக் கண்ணோட்டத்தில் எழுத்து, சொல் இலக்கணங்களே ஆராயப்பட்டன.

தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பையும் பழமையையும் வலியுறுத்த, இருபதாம் நூற்றாண்டின் முற்கூறில் தனித்தமிழ் இயக்கமும், திராவிட இயக்கமும் தோன்றின. இந்த இயக்கங்கள் தந்த உந்துதலில் பொருள் இலக்கணம் தொடர்பான ஆய்வுகள் தோன்றின. அதனுடைய ஒரு கூறாகத் தமிழ் மொழியின் தனித்தன்மையை (அது வடமொழியில் இருந்து தனித்து நிற்பது; அதற்கு இணையானது) நிலைநாட்ட திராவிட மொழிக் குடும்பம் பற்றிய ஆய்வுகள் நடந்தன. இவற்றோடு மொழியியல் அடிப்படையிலும் எழுத்து, சொல் இலக்கண ஆய்வுகள் உருவாயின. குறிப்பாக வடமொழி இலக்கண மரபுக்கும் தமிழ் இலக்கண மரபுக்கும் இடையே உள்ள உறவுகள் குறித்து ஆழமான ஆய்வுகள் விரிவாகவே நடந்துள்ளன. தமிழ் இலக்கண மரபுகள் என்ற அடிப்படையில் பார்க்கும் போது வடமொழி மரபை அதிகமும் பிரயோகிக்கும் வீரசோழியத்தை நோக்கியே இவ்வாய்வுகள் பெரும்பான்மையும் நிகழ்ந்தன. எனினும் பிற இலக்கண நூல்களைக் குறித்த ஆய்வுகளும் எழுந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

எழுத்து, சொல் இலக்கணங்கள் மிகவும் விரிவானவை. இவற்றை முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்தி மரபுகளை இனம் காண்பது தனிப்பெரும் ஆய்வாக அமையும். 'சொல்லிலக்கண ஆய்வு விரிவானதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் இன்றும் கருதப்படுகிறது', என்று அத்துறையில் வல்லுநரான சண்முகம் (1984: 8) கூறியுள்ளார். இந்தக் கூற்று சொல்லிலக்கண ஆய்வுப் பரப்பின் விரிவையும் ஆய்வை மேற்கொள்வதில் உள்ள சிக்கல்களையும் புலப்படுத்துகிறது. எழுத்து, சொல் இலக்கண ஆய்வை முற்று முழுதாக மேற்கொண்டு செய்வதென்பது, தமிழின் ஐந்திலக்கணங்களிலும் நிலவிய மரபுகளைக் காணும் நோக்கிலான

இந்த ஆய்வின் இயலுவதன்று. ஆகவே எழுத்து, சொல் இலக் கணங்களில் நிலவிய மரபுகளைக் காட்டப் போதுமான அள வில் மட்டுமே இங்கு ஆய்வு நிகழ்த்தப்படுகிறது. இந்த நிலையும் மேற்கூறியபடி இலக்கண நூல்களின் அடிப்படையிலான ஒப் பீட்டுக்கு மேலும் வலுச்சேர்க்கும்.

எழுத்திலக்கண ஆராய்ச்சி என்று எடுத்துக் கொள்ளும் போது, இலக்கண மரபு குறித்த இந்த ஆய்வில் தொல்காப் பியத்தை அடிப்படையாக வைத்தே ஆய்வு நிகழ்த்தப்படுகிறது. தொல்காப்பிய நூல் அமைப்பையும் அந்த நூல் இலக்கணம் உணர்த்தும் முறையையும் முதலில் கவனத்தில் கொள்வது அவ சியம். தொல்காப்பியம்,

நூன் மரபு
மொழி மரபு
பிறப்பியல்
புணரியல்
தொகை மரபு
உருபியல்
உயிர் மயங்கியல்
புள்ளி மயங்கியல்
குற்றியலுகரப் புணரியல்

என ஒன்பது இயல்களில் எழுத்து இலக்கணத்தை உணர்த்து கிறது.

தொல்காப்பியத்தில் கூறப்படாத ஆனால் பிற இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள ‘எழுத்திலக்கணம் இத்தனை வகை யில் ஆராயப்படும்’ என்ற கருத்தை வைத்து இவற்றை விளக்க லாம். அதன்படி இளம்பூரணர் இந்த நூல் எட்டுவகையாக இலக் கணம் உணர்த்தியுள்ளதாகக் கூறியுள்ளார். அவை எண், பெயர், முறை, அளவு, பிறப்பு, புணர்ச்சி, தன்மை, வடிவு ஆகியனவாகும். இவற்றுள் எண், பெயர், முறை, அளவு, தன்மை, வடிவு ஆகியவை

தொல்காப்பிய நூன் மரபிலும், மொழி மரபிலும் கூறப்பட்டுள் ளன. பிறப்பு, பிறப்பியலிலும், புணர்ச்சி, மற்ற ஆறு இயல்களி லும் கூறப்பட்டுள்ளன. இவற்றைக் கருவி இலக்கணம், செய்கை இலக்கணம் என்று கூறும் பாகுபாடு உள்ளது. (தேவநேயப் பாவா ணர்: 1964: 9) எனினும் தொல்காப்பியர் தாம் இத்தனை வகை யாகத் தம் நூலைப் பிரித்து உணர்த்தினார் என்பதற்கு நூலில் ஆதாரம் இல்லை. மேலும், தொல்காப்பிய எழுத்ததிகாரம், எழுத்தியல், பிறப்பியல், புணரியல் என்று மூன்று பெரும் பிரி வாக அமைந்துள்ளது என்று கொள்வது அவருடைய இலக்கணக் கோட்பாட்டை விளக்குவதாக அமையும் என்ற சண்முகம் (1980: 30) அவர்களின் கருத்துப்படி எழுத்தியல், பிறப்பியல், புணரியல் என்று பிரித்துப் பார்க்கும் முறையும் உள்ளது என்பதை அறியலாம். இந்த பகுப்புகளில் முதலில் கூறியதை அடிப்படை யாக வைத்து ஆய்வது இயல்பான ஒன்று.

சந்தி இலக்கணத்தைக் கூறும் ஆறு இயல்களில் முதலாவ தாகிய புணரியல் சந்தி இலக்கணத்தில் வழங்கப்படும் கலைச் சொற்களையும், பொது இலக்கணத்தையும் உணர்த்தும். தொகை மரபில் பொதுவான சந்தி இலக்கணம் தொகுத்துச் சொல்லப் பட்டுள்ளது. உருபு இயல் பெயர்ச் சொற்களுடன் வேற்றுமை உருபுகள் சேரும் போது ஏற்படும் மாற்றங்களைக் கூறுகிறது. அதன் பின் உள்ள மூன்று இயல்களிலும் உயிர் ஈறு, மெய் ஈறு, குற்றியலுகர ஈறு ஆகியவற்றின் சந்தி இலக்கணம் பேசப்பட்டுள் ளது. குற்றியலுகர ஈற்றுக்குத் தனி இயல் தொல்காப்பியத்தில் மட்டுமே உள்ளது.

**வீரசோழியம்**

தொல்காப்பியத்தை அடுத்து, கால வரிசையில் முதலில் வந்த நூல் வீரசோழியமாகும். வீரசோழியத்திற்கு முன்னும் தொல்காப்பியத்திற்குப் பின்னும் தமிழில் எழுத்து, சொல் இலக் கணங்களை விளக்கும் நூல்கள் தோன்றியிருப்பினும் அவற்றில் ஒன்றேனும் இன்று கிடைக்கவில்லை. அவ்வாறு இறந்த நூல் களுள் முதன்மையானது அவிநயம். இலக்கணத்தில் எல்லாப்

பகுதிகட்கும் (அணி தவிர) அவிநய நூற்பாக்கள் ஒரு சிலவேனும் கிடைக்கின்றன. இவ்வாறு கிடைக்கும் நூற்பாக்களைத் தொகுத்து நோக்கும் போது அவை தொல்காப்பியக் கருத்துக்கு மாறுபட்டு இருப்பதை உணரலாம் எனினும் அவற்றை இங்கு ஆராயப் போவ தில்லை. காரணம் நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை என்ப தேயாகும். இதனுள் எழுத்திலக்கணம்,

> எண் பெயர் முறை பிறப்பு அளவியல் வடிவு
> புணர்தலோடு ஏழும் பொருந்திய வழக்கே (நேமிநாதம்: 3)

என்று ஏழுவகையாகக் கூறப்பட்டுள்ளது எனத்தெரிகிறது. இதைப் போலவே வேறு சில நூற்பாக்களும் கருத்துகளும் உரைகளால் தெரிய வருகின்றன. அவை ஏற்ற இடத்தில் காட்டப்படும்.

வீரசோழியத்தின் எழுத்ததிகாரம் சந்திப்படலம் ஒன்றையே கொண்டுள்ளது. இதனுள் இருபத்தெட்டு காரிகைகள் உள்ளன. இருபத்தெட்டே காரிகைகளில் படலப்பிரிவுகள் எதுவும் இன்றி எழுத்திலக்கணத்தைச் சுருக்கமாக இந்நூல் உணர்த்துகிறது. இதுவே தொல்காப்பியத்திற்கும் வீரசோழியத்திற்கும் உள்ள வேறுபாட்டை விளக்கப் போதுமானதாகும். தொல்காப்பியம் மிக விரிவாக ஒன்பது இயல்களில் 483 நூற்பாக்களில் விளக்கிய எழுத்திலக்கணத்தை இருபத்தெட்டே காரிகைகளில் வீரசோழி யம் கூறுவது எழுத்ததிகாரத்திற்கு இந்த நூல் அளிக்கும் முக்கி யத்துவத்தின் அளவைக் காட்டு கிறது எனலாம்.

எழுத்துகளைத் தொல்காப்பியர் முதல், சார்பு என இரண் டாகப் பிரிக்கிறார். உயிர் எழுத்துகளும், மெய் எழுத்துகளும் முதலெழுத்துகள் என்றும், ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலு கரம் ஆகிய மூன்றும் சார்பெழுத்துகள் என்றும் தொல்காப் பியர் பிரிக்கிறார். வீரசோழியத்தில் இப்படி முதல், சார்பு என்ற பிரிவினையே இல்லை. எழுத்துகளின் முறையைக் கூறும் போது, தொல்காப்பியம் முதலெழுத்துகளைச் சுட்டிய பின்பு குற்றிய லிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற முறையில் சார்பு எழுத்து களை அமைத்துள்ளது. வீரசோழியம் ஆய்த எழுத்தை 'நடுவாய்

தம்' என்று குறிப்பிட்டு உயிரெழுத்திற்கும் மெய்யெழுத்திற்கும் இடையில் வைக்கிறது. அளபெடையைத் தொல்காப்பியம் ஒரு தனி எழுத்தாகக் கொள்ளவில்லை.

> மூஅளபு இசைத்தல் ஓர் எழுத்து இன்றே (15)
>
> நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய
>
> கூட்டி எழூஉதல் என்மனார் புலவர் (16)

என்று தொல்காப்பியம் கூறியிருப்பதால் இதை அறியலாம். வீரசோழியம் அளபெடையைத் தனியொரு எழுத்தாகவே கொண்டுள்ளது. எழுத்துக்களுக்கு மாத்திரை கூறும் போது ஐ, ஔ என்ற் இரண்டு குறுக்கங்களுக்கும் ஒன்றரை மாத்திரை என்று வீரசோழியத்தில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் வீரசோழியம், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம், ஐகாரக்குறுக்கம், ஔ காரக் குறுக்கம் ஆகியவற்றைச் சார்பெழுத்துகள் என்று கூற வில்லை. தொல்காப்பியர் ஐகாரக்குறுக்கம் ஒரு மாத்திரை பெறும் என்று கூறியுள்ளார். ஆனால் ஔகாரக்குறுக்கம் பற்றிக் கூற வில்லை. நன்னூலாரும் ஐகார, ஔகாரக் குறுக்கங்களுக்கு ஒரு மாத்திரையே கூறியுள்ளார்.

வீரசோழியத்தில் எழுத்ததிகார உரைப்பகுதியில் உரையா சிரியர் எடுத்துக்காட்டு எதுவும் தரவில்லை. அதனால் இப்பகுதி யைப் புரிந்து கொள்வது சிரமமாக உள்ளது. வல்லெழுத்து களுடன் மெல்லெழுத்துகள் இணைந்து வருவது வர்க்க எழுத்து என்று கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் வர்க்கம் என்ற பெயரோ, கருத்தோ இடம் பெறவில்லை. வடமொழியில் உள்ள வர்க்க எழுத்துக்களை நோக்கித் தமிழிலும் இந்தப் பெயரை வீரசோழிய நூலாசிரியர் ஆள்கிறார். தொல்காப்பியத்தில்,

*அ + இ= ஐ (21),*

*அ + உ= ஔ (22)*

என்று கூறப்பட்டுள்ளது. வீரசோழியம்,

*அ + வ் = ஔ,*

*அ+ ய் =ஐ (3)*

என்று கூறியுள்ளது. இதில் ஔகாரம் பற்றிய விளக்கம் தொல்காப்பியத்தில் இல்லாத, தொல்காப்பியத்திற்கு மாறான கருத்தாகும். சந்தி இலக்கணத்தைத் தொல்காப்பியர் பலவாறாகப் பகுத்துக் கொள்கிறார்.

வேற்றுமை , அல்வழி

உயிர் + உயிர்

மெய் + மெய்

உயிர் + மெய்

மெய் + உயிர்

வினை + வினை

பெயர் + பெயர்

பெயர் + வினை

வினை + பெயர்

எனப் பல அடிப்படைகளில் பகுத்துக் கொள்கிறார். இவற்றுடன், வேற்றுமை உருபுகள் பெயர்களுடன் சேரும் போது தோன்றும் சாரியைகள், முதலியன தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டுள்ளன. வீரசோழியத்தில் இத்தகைய பாகுபாடுகள் ஏதும் இல்லை. வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்ற பாகுபாடு கூட இல்லை.

வீரசோழியம் கூறும் சந்தி இலக்கணங்களில் பல தொல்காப்பியத்தில் இல்லை. அவற்றில் சிலவற்றை இங்கு சுட்டுதல் வேண்டும். தொல்காப்பியத்தில் உயிர் முன் உயிர் வரும்போது,

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் (புணரியல் 38)

என்றபடி உருபு கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. வீரசோழியத்தில், இ, ஈ, ஐ என்ற உயிர்களின் முன் யகரமும்; பிற உயிர்களின்முன் வகரமும்; ஏ என்ற உயிர் முன் இவ்விரு எழுத்தும் வரும் என்று கூறப்பட்டுள்ளது(13). இகர, ஈகார, ஐகார ஈறுகளுக்குப்பின் வருமொழியில் நகரம் வரும் போது நிகழும்

மாற்றம் பற்றி வீரசோழியத்தில் கூறும் விதி புதுமையானது. இதன்படி,

இ, ஈ, ஐ + ந= ஞ
கவி + நன்று = கவிஞன்று
தீ + நன்று = தீஞன்று
திணை + நன்று = திணைஞன்று

என வரும். இவ்விதி தொல்காப்பியத்தில் இல்லாதது. ழகர, ளகர வீற்றுப் புணர்ச்சியும் வீரசோழியத்தில் புதுவிதமாகக் கூறப்பட்டுள்ளது. ழ் + த= ட்ட, ள் + த= ட்ட. இதில் ழகர, ளகர நிலை மொழி ஈறுகளும் வருமொழியில் முதல் தகரமும் திரிந்து, இரண்டும் தனித்தனியாக இரண்டு டகரமாகும். நிலை மொழி ஈற்றில் உள்ள மெய் (ழகர, ளகரங்கள்) கெடுதலும் உண்டு அவை,

பாழ் + தீமை = பாட்டீமை
நாள் + தீமை = நாட்டீமை
பாழ் + தீது = பாடீது
நாள் + தீது = நாடீது

எனவரும். இது மிகவும் அபூர்வமான விதி. வேறு எந்த இலக்கண நூல்களிலும் காணப்படாததாகும். ழகர ஒற்றீற்று முன் வல்லினம் வர ழகரம் டகரமாகவோ ணகரமாகவோ திரியும்.

பாழ் + செய் = பாண்செய்
தமிழ் + சொல் = தமிட்சொல்

இதுபோலவே சில விதிகள் உள்ளன. இங்கு காட்டப்பட்ட தமிட் சொல் என்ற ஆட்சி வீரசோழியக் காரிகையிலேயே உள்ளது. 'செம்பியன் வீரராசேந்திரன் தன்நாவியல் செந்தமிட் சொல்"(7) என்று வருகிறது. இதைத் தவிர,

புகட்சி பரவல் குறிப்புக் கொடிநிலை கந்தழியே
இகட்சி மலிவள்ளி என்று இவை ஆறும் நெறிமுறையில்
திகட்சி மலைதரு பாடண் பகுதி; செப்பாதனவும்
இகட்சி உண்டாகா வகை தேர்ந்தறிதல் இயல்புடைத்தே (104)

என்ற இந்த நூல் சூத்திரத்தில் அடிதோறும் ழகர ஒற்றிற்குப் பதில் டகர ஒற்று பயன்படுத்தப்பட்டுள்ளது. உரையிலும் 'வாட்கை' (வாழ்கை) என்ற சொல் (வீர.: 117) கையாளப்பட் டுள்ளது. புகழ்ச்சி, இகழ்ச்சி, முதலிய சொற்களும் வாழ்க்கை என்ற சொல்லும் புணர்மொழிகள் அல்ல. அவை தனிச் சொற் கள். தனிச் சொற்களிலும் இவ்வாறு ழகர மெய்க்குப் பதில் டகர மெய்யை பயன்படுத்தி இருப்பது இந்த நூலேயாகும்.

வீரசோழியத்தில் தமிழ்ச் சந்தி இலக்கணம் கூறுவதற்கு முன்பாக மூன்று சூத்திரங்களில் வடமொழிச் சந்தி விதிகள் கூறப்பட்டுள்ளன. வடமொழியில் ஒரு சொல்லிலும் ஒரு எழுத்தி லும் உலோபம்,(கெடுதல்) ஆகமம்,(தோன்றல்) ஆதேசம் (திரிதல்) ஆகிய மூன்று விகாரங்களும் வரும். முதல், நடு, இறுதி ஆகிய மூவிடத்தும் மூன்றும் விகற்பிக்க ஒன்பதாகும். அவையே மொழி, எழுத்து என விகற்பிக்கப் பதினெட்டாகும்(10).

விருத்தி சந்தி என்பது அகரத்திற்கு ஆகாரமும், இகரத் திற்கு ஐகாரமும், உகரத்திற்கு ஔகாரமும் இருவுக்கு ஆர் என்ப தும் திரிந்து வருவதாகும். குணசந்தி என்பது உகரம் ஔகாரமாக வும் இகரம் ஏகாரமாகவும் திரிவதாகும். இவை தத்திதப் பெயரி லும் தாதுப் பெயரிலும் வரும் (12). இந்த மூன்று சூத்திரங்களிலும் கூறப்பட்டவை நிலைமொழியும் வருமொழியும் வடமொழிச் சொற்களாவே இருக்கும் வடமொழிச் சந்தி விகற்பங்களாகும். வடமொழிச் சந்தி விகற்பங்களைக் கூறும் இடத்தில் மட்டும் இன்றித் தமிழ்ச் சந்தி விதிகளைக் கூறும் இடத்திலும் வடமொழிக் கலைச் சொற்களையே நூலாசிரியர் ஆள்கிறார். உரையாசிரி யரும் வடமொழிக் கலைச் சொற்களையே ஆள்கிறார். ஆகமம், ஆதேசம், உலோபம், தாது, தத்திதம், வர்க்கம் முதலிய பல கலைச் சொற்கள் இவ்வாறு ஆளப்படுகின்றன. இவற்றிற்கு இணை யான தமிழ்ச் சொற்கள் தொல்காப்பியத்திலும் பிற இலக்கணங் களிலும் இருந்தும், வீரசோழிய நூலில் வடமொழிக் கலைச் சொற்கள் பெரிதும் ஆளப்பட்டுள்ளன. சந்திவிதிகள் கூறும் போது எழுத்துகளைச் சுட்டும் இடத்தில், எழுத்துகள் நெடுங்

கணக்கு வரிசையில் அமைந்துள்ள எண்ணைச் சுட்டியே பெரும் பாலும் எழுத்துகளைக் குறிப்பிடுகிறார்.

பன்மூன்றதாம் உடல் நப்பின் வரும் எனின் ஈற்று எழுத்தாம்
பன்னேழதாம் வன்மை பின்வரின் ஆயிடைத் தவ்வும் அஃதாம் (17)

என்ற சூத்திரத்தில் பதின்மூன்றாம் உடல் என்று லகர ஒற்றும் பதி னேழாம் எழுத்து என்று றகர ஒற்றும் சுட்டப்பட்டுள்ளன. இது போலவே இந்த அதிகாரம் எங்கும் உள்ளது.

இவற்றை எல்லாம் தொகுத்து நோக்கும் போது வீரசோழி யம் இலக்கணம் கூறும் முறையை மூன்று வகையாகப் பிரித்துக் காணலாம்.

1. தொல்காப்பியம் முதலிய நூல்களில் இல்லாத இலக்கண விதிகளைக் கூறுதல். தமிழ்ச் சந்தி கூறும் பகுதியில் ழகர ஈற்றுப் புணர்ச்சியும், இ, ஈ, ஐ எழுத்துகளின் பின்னர் நகர ஒற்று வரும் போது ஞகரமாக மாறும் என்பதும் இந்த வகை யைச் சேர்ந்தவை.

2. தமிழ் மொழிக்கு இலக்கணம் கூறும் போது வடமொழி இலக்கண மரபையும் கலைச்சொற் களையும் ஆளுதல். வர்க்கம் என்ற கருத்தும் ஆக மம், ஆதேசம், உலோபம், தாது, தத்திதம் முதலிய கலைச்சொல் ஆட்சியும் இந்த வகையைச் சேர்ந் தவை.

3. வடமொழிக்கே உரிய இலக்கணத்தை தமிழ் இலக்கணத்தில் கூறுதல். எதிர்மறைப் பொருளில் வரும் நகரப் புணர்ச்சி, விருத்தி சந்தி, குண சந்தி முதலியனவும் வடமொழியில் வரும் விகாரப் புணர்ச்சியும் இந்த வகையில் அடங்கும். இவை யாவும் நிலை மொழியும் வருமொழியும் வட மொழிச் சொற்களாகவே இருக்கும் போது நேரும் மாற்றங்களாகும்.

இவற்றை நோக்கும்போது வீரசோழிய ஆசிரியரின் இலக்கண மரபு புலனாகும். இப்படி மூன்று நிலைகளில் சொல்லும் போதும் வடமொழி இலக்கணத்திற்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது.

நேமிநாதம்

வீரசோழியத்திற்கு அடுத்துத் தோன்றிய நூல் நேமிநாதம். இந்த நூல் எழுத்து, சொல் ஆகிய இரண்டு இலக்கணங்களையே கூறுவது ஆகும். இந்த நூலில் எழுத்ததிகாரம் உட்பிரிவுகள் எதுவும் இன்றி 24 சூத்திரங்களால் இயன்றுள்ளது. சூத்திரங்கள் யாவும் வெண்பாக்களே. நேமிநாதம் நூலை இயற்றிய குணவீர பண்டிதரின் மற்றொரு நூலான வச்சணந்தி மாலையும், வெண்பா யாப்பில் ஆன நூலேயாகும். நேமிநாதத்தின் எழுத்ததிகாரத்தில் உட்பிரிவுகள் இல்லை. எனினும் எழுத்ததிகாரம் இத்தனை வகையால் கூறப்பட்டுள்ளது என்பதைச் சுட்டும் வெண்பா ஒன்று (சிறப்புப் பாயிரம்) உள்ளது. இதன்படி இந்த நூலின் எழுத்ததிகாரத்தில் எண், பெயர், முறை, மாத்திரை, பிறப்பு, வடிவம், புணர்ச்சி என ஏழும் இதில் சொல்லப்பட்டுள்ளன. பாயிர உரையில்,

> எண்பெயர் முறைபிறப் பளவியல் வடிவு
>
> புணர்தலோ டேழும் பொருந்திய வழக்கே

என்ற அவிநய நூற்பாவை மேற்கோள் காட்டி, எழுத்திலக்கணம் ஏழு வகையாகக் கூறப்படும் என்று எழுதப்பட்டுள்ளது. இதனால் இத்தனை வகையாகக் கூறுதல் என்று கோட்பாடு அவிநயத்தில் இருந்து பெறப்பட்டமை தெரிகிறது.

நேமிநாதத்தில் எழுத்துகள் முதல் வைப்பு, இரண்டாம் வைப்பு என்று பிரிக்கப்பட்டுள்ளன. இவை முதல் எழுத்து, சார்பு எழுத்து என்பனவற்றுக்கு இணையாகப் பயன்படுத்தப் பட்டுள்ள சொற்களாகும். முதல் வைப்பில் உயிர், ஆய்தம், மெய் ஆகியவை இடம் பெறுகின்றன. ஆய்த எழுத்தை உயிர், மெய் எழுத்துகளுக்கு இடையில் வைத்து 'ஆய்தம் இடைமேவும்' என்று இலக்கணம் கூறுவதில், இந்த நூல் வீரசோழியத்தைப்

பின்பற்றுகிறது. வீரசோழியத்திலும் ஆய்தம், உயிர், மெய் எழுத்து களுக்கு இடையில் வைக்கப்பட்டு 'நடுவாய்தம்' என வழங்கப் பட்டுள்ளது. ஆனால் ஆய்த எழுத்தை முதலெழுத்தில் வைப்பது வேறு எந்த இலக்கண நூலிலும் காணமுடியாதது.

சார்பெழுத்துகள் இந்நூலில் கூறப்பட்டுள்ள முறை தெளி வாக இல்லை. மூன்றாம் சூத்திரத்தில் உயிர், மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஆகியன கூறப்பட்டுள்ளன. உரையாசிரியர் இவற்றை இரண்டாம் வைப்பு என்று கூறியுள்ளார். நான்காவது சூத்திரத்தில் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் ஆகியவை கூறப்பட்டுள்ளன. இவற்றை உரையாசிரியரோ, நூலாசிரியரோ இரண்டாம் வைப்பு என்று விதந்து கூறவில்லை. எனினும் இவற்றை இரண்டாம் வைப் பாகவே இவர்கள் கருதினர் என்று கொள்ளலாம். மாத்திரை களைக் கூறும் ஐந்தாம் சூத்திரத்தில் மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம் ஆகியன கூறப்பட்டுள்ளன.

இந்த நுலில் காட்டப்படும் எழுத்து வகைப்பாட்டைப் பின் வருமாறு காட்டலாம்.

எழுத்து

| முதல்வைப்பு | இரண்டாம்வைப்பு |
|---|---|
| உயிர் | உயிர்மெய் |
| ஆய்தம் | உயிரளபெடை |
| மெய் | ஒற்றளபெடை |
| | குற்றியலிகரம் |
| | குற்றியலுகரம் |
| | ஐகாரக்குறுக்கம் |
| | ஔகாரக்குறுக்கம் |
| | மகரக்குறுக்கம் |
| | ஆய்தக்குறுக்கம் |

நேமிநாதத்தில் உள்ள மாத்திரை வகைப்பாட்டை சண் முகம் அவர்களும் இப்படியே காட்டியுள்ளார். (1980; 109) மாத்

திரையைக் கூறும் போது ஐகார, ஔகாரக் குறுக்கங்கள் ஒன் றரை மாத்திரை பெறும் எனக் கூறப்பட்டுள்ளது. (நேமிநாதம் -5) உரையில்,

> ஒன்றரை அறிவது எற்றாலோ எனிற் கட என்
> புழி டகர அகரம் ஒரு மாத்திரை ஆயவாறும்
> கடா என்புழி டகர ஆகாரம் இரண்டு மாத்திரை
> ஆய வாறும் கடை என்புழி டகர ஐகாரம் ஒரு மாத்
> திரையில் ஏறி இரண்டு மாத்திரையிற் குறைந்த
> வாறும் கண்டு கொள்க (நேமிநாதம்: 11)

என்று ஒன்றரை மாத்திரையாக வருவதற்கு விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது. வீரசோழியத்திலும் ஐகார, ஔகாரக் குறுக்கங் களுக்கு ஒன்றரை மாத்திரையே சொல்லப்பட்டுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது.

போலி எழுத்துக்களைச் சொல்லும் போது. ஔ என்ற எழுத்து அகரமும் வகர ஒற்றும் கூடியும் வரப்பெறும் என்று கூறப்பட்டுள்ளது. (9) இதன்படி அ+வ் =ஔ என்று வரும். இது வும் வீரசோழியத்துள் கூறப்பட்டுள்ளது. சகரம், ஞகரம், யகரம், இவைகளுக்கு முன் நிற்கும் அகரமானது மொழிக்கு முதலிலும், இடையிலும் வரும் போது ஐகாரம் ஆதலும் உண்டு. இதன்படி,

தச்சு - தைச்சு
மஞ்சு -மைஞ்சு
அரயர் - அரையர்
இலஞ்சி - இலைஞ்சி
அரயர் - அரையர்

என வரும். இந்த இலக்கணம் தொல்காப்பியத்திலோ, வீரசோழி யத்திலோ கூறப்படாதது.

சந்தி இலக்கணத்தில் இரண்டு சூத்திரங்கள் (10,11) வட மொழிச் சந்தி இலக்கணத்தைக் கூறுகின்றன. முதல் சூத்திரம் அகரம் ஆகாரமாகவும், இகரம் ஐகாரமாகவும் இரு என்பது ஆர் எனவும், இரண்டு சொற்கள் சேரும் இடத்தில் இகரம் ஏகார

மாகவும் உகரம் ஔகாரமாகவும் வரும் என்றும் கூறுகிறது. இதன்படி,

அருகனைத் தெய்வமாக உடையவன் ஆருகதன்
தசரதனின் மகன் தாசரதி
சிவனைத் தெய்வமாக உடையவன் சைவன்
புத்தனைத் தெய்வமாக உடையவன் பௌத்தன்
நரன் + இந்திரன் = நரேந்திரன்
குலம் + உத்துங்கன் = குலோத்துங்கன்

எனவரும். இந்த விதிகள் வீரசோழியத்திலும் கூறப்பட்டுள்ளன. இரண்டாவது சூத்திரம், ஒரு சொல்லின் பொருளை மாற்று வதற்கு அதன்முன் இடப்படும் நகரம், அந்தச் சொல்லின் முத லெழுத்து உயிர்மெய் ஆயின் நகர ஒற்றுக் கெட்டு அகர உயிர் மட்டும் நிற்கும்; முதலெழுத்து உயிர் ஆயின் நகரம் உயிர், மெய் எனப் பிரிந்து முன்பின்னாக மாறி நிற்கும். மொழி முதல் நின்ற ஏகரம் ஐகாரமாகும், ஒகாரம் ஔகாரமாகும் என்று கூறி யுள்ளது. என வரும். இந்த விதிகளும் வீரசோழியத்துள் கூறப் பட்டுள்ளன.

பன்னிரண்டு முதல் இருபத்து நான்கு வரையுள்ள பதின் மூன்று சூத்திரங்களிலும் தமிழ்ச்சந்தி இலக்கணம் தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய விகாரங்களும் சொற்கள் நிற்கும் நிலை ஆகியனவும் காட்டப்பட்டுள்ளன. தொடர்ந்து உடம்படு மெய் களும் குற்றுகர, முற்றுகர ஈற்றுச் சந்தியும் சொல்லப்பட்டுள்ளன.

நேமிநாதம் மூன்றாம் சூத்திரத்தில் கங, சஞ, டண, தந, றன இவை வர்க்க எழுத்துகள் என்று கூறப்பட்டுள்ளன. இந்த நூலில் சந்தி இலக்கணப் பகுதியில் எழுத்துக்களைச் சுட்டும் போது,

ஐந்து ஆறாம் ஆறு பதினாறாம் ஒற்றுமிகும் (24)

என்று எழுத்துகளை அவை நெடுங்கணக்கில் அமையும் எண்ணைச் சுட்டிக் கூறும் முறையைக் காணலாம். இதில் டகரம் (ஐந்து) ணகரம் (ஆறு) ளகரம்(பதினாறு) ஆகிய எழுத்துகள்

குறிப்பிடப்பட்டுள்ளன. இதுவரை ஆராய்ந்ததில் வீரசோழியத் திற்கும் நேமிநாதத்திற்கும் சில ஒற்றுமைகள் உள்ளன என்று தெரி கிறது. அவை,

1. ஆய்தத்தை உயிர் எழுத்துகளுக்கும் மெய்யெழுத் துகளுக்கும் இடையில் வைத்தல்.
2. ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கங்களுக்கு ஒன்றரை மாத்திரை கூறுதல்.
3. போலி எழுத்தில் அ + வ் = ஔ என வரு வித்தல்.
4. வடமொழிச் சந்தி விதிகள் கூறுதல். இதில் விதி களைக் கூறியுள்ள விதத்திலும் அவற்றைத் தமிழ்ச் சந்தி விதிகளுக்கு முன்பு வைத்துள்ள முறையிலும் வீரசோழியத்தை நேமிநாதம் பின்பற்றுகிறது.
5. எழுத்துகளைச் சுட்டும்போது நெடுங்கணக் கில் அவை அமைந்துள்ள எண்ணைக்கொண்டு சுட் டுதல்.
6. வருக்க எழுத்துகள் என்ற வடமொழிக் கருத்தைத் தமிழ் இலக்கணத்தில் கூறுதல்.
7. எழுத்ததிகாரத்தை உட்பிரிவுகள் எதுவும் இன்றிக் கூறுதல்.
8. எழுத்ததிகாரத்தில் உள்ள இலக்கணத்தை வைத் துள்ள முறையிலும் நேமிநாதம் வீரசோழியத் தைப் பின்பற்றியுள்ளது.
9. சுப்பிரமணிய சாஸ்திரி, நேமிநாதம் சந்தி இலக் கணம் கூறியுள்ள பதினைந்து சூத்திரங்களில் பத்து சூத்திரங்கள் வீரசோழியத்தைப் பின்பற்றி யவை: வடமொழிச் சந்திகளில் மட்டும் ஓரளவு வேறுபாடு காணப்படுகிறது என்று கூறியுள்ளார் (1934:97)

இவை எல்லாவற்றையும் நோக்கும் போது நேமிநாதம் நூலின் எழுத்ததிகாரம் வீரசோழியத்தின் எழுத்ததிகாரத்தைப் பின் பற்றியுள்ளது என்பது தெளிவாகும். இங்கு சண்முகம் அவர்களின், "வரலாற்று நிலையில் நேமிநாதம் எழுத்ததிகாரத்தைப் பொறுத்த வரையில் வீரசோழியத்தையே பெரிதும் பின்பற்றியுள்ளது" (1980:30) என்ற கருத்து மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது.

**நன்னூல்**

நன்னூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் இரண்டு அதிகாரங்களை உடையது. இந்த நூல் ஐந்து இலக்கணங்களையும் கூறும் ஐந்து அதிகாரங்களை உடையது என்றும் ஒரு கருத்து உண்டு. நன்னூல் தோன்றிய காலத்திற்கு (13ஆம் நூற்றாண்டு) அண்மைக் காலத்தில் வாழ்ந்தவரும் நன்னூலுக்கு முதலில் உரை இயற்றியவரும் ஆகிய மயிலைநாதர்,

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே (நன். -461)

என்ற சொல்லதிகாரப் புறநடைச் சூத்திரத்திற்கு உரை எழுதும் போது, 'இந்நூலிற் சொன்ன ஐந்ததிகாரத்திற்கும் சிங்க நோக்கமாய் நிற்பதொரு புறநடையுணர்த்துதல் நுதலிற்று' (மயிலை.: 249) என்று எழுதியுள்ளார். இதை நோக்க நன்னூலில் ஐந்து இலக்கணங்கள் கூறப்பட்டதோ என்ற ஐயம் எழுதல் இயல்பே. அருணாசலம்,

நெஞ்சுக்கு இருள்கடி தீபம்; அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல அமுதம்; தமிழ நன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம்; ஆரண சாரம்; பரசமயப்
பஞ்சுக்கு அனலின் பொறி; பரகாலன் பனுவல்களே.

என்ற கூரத்தாழ்வாரின் பெரிய திருமொழித் தனியனையும் அதற்குப் பிள்ளை லோகார்யஞ்சீயர் எழுதிய,

திராவிட சாஸ்திரம், எழுத்துச் சொல் பொருள்
யாப்பு அலங்காரம் என்கிற விலக்ஷணமான பஞ்ச

> லக்ஷணத்தோடே கூடியிறே நிற்பது, அன்னிக்கே தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சு லக்ஷணத் தையும் அறுதியிடுவதான நன்னூல் என்று ஒரு சாஸ்திரம் உண்டு, அத்தைச் சொல்லிற்றாதல்.

என்ற உரையையும் மேற்கோள் காட்டி, இதில் நன்னூல் ஐந் திலக்கணங்களையும் கூறுவது என்றுள்ள கருத்தையும், முன் கூறிய மயிலைநாதர் கருத்தையும் மறுத்து,

> நன்னூலார் இரண்டே அதிகாரங்கள் செய்தார். பொருள், யாப்பு, அணி செய்யவில்லை என்பது தெளிவு. தமிழ் மக்கள் இந்த நூலைச் சிறப்பாகப் போற்றுகிறார்கள். தமிழ் நூற்பரப்பில் பிற மூன்று அதிகாரங்களைப் பற்றிய பேச்சு வந்த தில்லை. ஒரு சூத்திரத்தைக் கூட யாரும் குறிப் பிட்டதில்லை. உண்மையில் இவர் பின் மூன்றை யும் செய்திருந்தால் தமிழ் மக்கள் அவற்றைக் கைவிட்டிருக்க மாட்டார்கள். (1970: 162-164)

என்று எழுதியுள்ளார். இன்று நன்னூலில், எழுத்து, சொல் என்ற இரண்டே அதிகாரங்கள்தாம் உள்ளன.

நன்னூல் எழுத்ததிகாரத்தில் 202 சூத்திரங்களும் சொல்லதி காரத்தில் 205 சூத்திரங்களும் உள்ளன. எழுத்ததிகாரத்திற்கு முன் பாயிரப்பகுதியில் பொதுப்பாயிரம் என்று 45 சூத்திரங் களும் சிறப்புப்பாயிரம் என்று 9 சூத்திரங்களும் ஆக 54 சூத்திரங் கள் உள்ளன. பாயிரப் பகுதியில் சில வெண்பாக்கள் உள்ளன. ‘தோன்றா தோற்றி’(52), ‘மன்னனுடை மன்றத்து’(53) என்று தொடங்கும் சூத்திரங்கள் இரண்டும் பனம்பாரனார் சூத்திரங் கள் என்று மயிலைநாதர் உரையில் கூறியிருக்கிறார். பாயிரச் சூத்திரங்களில் சில இறையனார் அகப்பொருள் உரையிலும் (5, 6,7,8,) சில யாப்பருங்கல விருத்தியிலும் (5,6,7,8,10,11,12,) காட்டப் பட்டுள்ளன. ஐந்து சூத்திரங்கள் (10,11,12,13,14) பாடலனார் சூத் திரம் என்று கூறப்பட்டுள்ளன. ‘வினையின் நீங்கி’(6) என்பது தொல்காப்பியச் சூத்திரம்(1586) ஆகும். இவற்றை நோக்கும்

போது, இந்தப் பாயிரப் பகுதியை நன்னூலாரே இயற்றினார் என்று கூறமுடியாது. பல நூல்களில் இருந்து எடுத்து அமைத்துக் கொண்டார் என்றே கூற வேண்டியுள்ளது.

எழுத்ததிகாரம், நன்னூலில் பன்னிரண்டு விதமாக வகைப் படுத்தி ஆராயப்பட்டுள்ளது.

எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை,
முதல், ஈறு, இடைநிலை, போலி யென்றா,
பதம், புணர்ப்பு, எனப் பன்னிருபாற்று அதுவே (நன்.-1)

என்ற சூத்திரம் இவற்றைக் காட்டும். இவை எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல் நிலை, இடை நிலை, ஈற்று நிலை, போலி, பதம், புணர்ச்சி எனப் பன்னிரண்டாகும். இவற்றில் முதலில் கூறப்பட்ட ஆறொடு சந்தியும் ஆக ஏழும் நேமி நாதத்தில் கூறப்பட்டுள்ளன.

முதல் நிலை, இறுதி நிலை, போலி ஆகிய மூன்றும் நேமி நாதத்தில் கூறப்பட்டிருப்பினும் அந்த நூலில், அவை எழுத் திலக்கணத்தின் வகைகளாகக் கூறப்படவில்லை. இடைநிலை என்ற மெய்மயக்கம் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. நேமிநாதத்தில் இல்லை. பத இலக்கணம் என்ற வகை மற்ற தமிழ் இலக்கணங்களில் காணப்படாதது.

இந்தப் பன்னிரண்டு உறுப்புகளையும் விளக்கும் நன்னூலின் எழுத்ததிகாரம்,

1. எழுத்தியல்
2. பதவியல்
3. உயிரீற்றுப் புணரியல்
4. மெய்யீற்றுப் புணரியல்
5. உருபு புணரியல்

என ஐந்து இயலாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் எண் முதல் போலி வரை உள்ள பத்து எழுத்திலக்கண வகைகளும் எழுத்தியலில் விளக்கப்பட்டுள்ளன. பதம், பதவியலில் விளக்

கப்பட்டுள்ளது. சந்தி மற்ற மூன்று இயல்களிலும் விளக்கப்பட்டுள்ளது. எழுத்தியல், எழுபத்திரண்டு சூத்திரங்களில் எழுத்திலக்கணத்தின் பத்து உறுப்புகளையும் கூறுகிறது. இதில் முதலெழுத்துகள் உயிர் மெய் என இரண்டு என்றும் சார்பெழுத்துகள் பத்து என்றும் அவற்றின் விரிவு முந்நூற்று அறுபத்து ஒன்பது என்று கூறப்பட்டுள்ளன. இதைப் பின்வருமாறு காட்டலாம்:

எழுத்து

| | | | |
|---|---|---|---|
| முதலெழுத்து 2 | சார்பெழுத்து | 10 | |
| உயிர் 12 | உயிர் மெய் | 216 | |
| மெய் 18 | ஆய்தம் | 8 | |
| | உயிரளபெடை | 21 | |
| | ஒற்றளபெடை | 42 | |
| | குற்றியலிகரம் | 37 | |
| | குற்றியலுகரம் | 36 | |
| | ஐகாரக் குறுக்கம் | 3 | |
| | ஔகாரக் குறுக்கம் | 1 | |
| | மகரக் குறுக்கம் | 3 | |
| | ஆய்தக் குறுக்கம் | 2 | = 369 |

இவற்றில் ஆய்தத்தை முதலெழுத்து என்று, நேமிநாதம் அதை உயிருக்கும் மெய்க்கும் இடையில் வைத்துள்ளது. மற்ற சார்பெழுத்துகள் பற்றிய சிந்தனை நேமிநாதத்திலும் உள்ளது. தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றையே சார்பெழுத்துகளாகக் கொண்டார். தொல்காப் பியர் கணக்குப்படி எழுத்துகள் முதலெழுத்து முப்பதும் சார்பெழுத்து மூன்றும் ஆக முப்பத்து மூன்றே. குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆய்தம் ஆகியவற்றைத் தொல்காப்பியர் சார்பெழுத்துகளாகக் கூறியிருந்தும், இவற்றின் விரியை நன்னூலில் உள்ளபடி கூறவில்லை. ஐகாரக்குறுக்கம், மகரக் குறுக்கம், அளபெடை ஆகியவற்றைத் தொல்காப்பியர் குறிப்பிட்டிருந்தாலும் சார்பெழுத்தாகக் கூறவில்லை. உதாரணமாக நன்னூலில் குற்றியலுகரம் பிரிக்கப்பட்டுள்ளதைக் காட்டலாம். க,ச, ட, த, ப, ற ஆகிய ஆறு வல்லின மெய்களின் மேலும் ஏறிய உகரம் குறுகும். அது, நெடில்

தொடர், ஆய்தத் தொடர், உயிர்த் தொடர், வன் தொடர் மென் தொடர், இடைத் தொடர் என ஆறு இடத்தில் வரும். எனவே 6X 6 = 36 என முப்பத்தாறு இடங்களில் குற்றியலுகரம் வரும். குற்றியலுகரத்தின் பின் வருமொழி முதலில் யகரம் வரும்போது, உகரம், இகரமாகத் திரிந்து குறுகி ஒலிக்கும். இந்த இகரம் குற்றியலிகரம் எனப்படும். இதுவும் முப்பத்தாறு வகைப்படும். அசைச் சொல்லாகிய மியாவில் உள்ள இகரம் குறுகும். ஆகக் குற்றியலிகரம் முப்பத்தேழு வகைப்படும் என்கிறது நன்னூல். இந்தச் சார்பெழுத்துகளை எங்கிருந்து நன்னூல் பெற்றது என் பதற்கு இதன் உரையாசிரியர் மயிலைநாதர்,

> ஒற்றளபெடையும் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் மகரக் குறுக்கமும் ஆய்தக் குறுக்க மும் யாண்டு பெற்றாமோ வெனின்,
>
> வன்மையோடு ரஃகான் ழஃகான் ஒழிந்தாங்கு
> அன்மெய் யாய்தமோ டளபெழு மொரோவழி,
> அளபெடை தனி இரண்டல்வழி ஐ ஔ
> உளதா மொன்றரை தனிமையுமாகும்.
> பதினெண் மெய்யு மதுவே மவ்வோ
> டாய்தமு மளபரை தேய்தலும் உரித்தே.
>
> என்றார் ஆசிரியர் அவிநயனாரு மெனக் கொள்க.
> (மயிலை: 20)

என்று எழுதியுள்ளார். எனவே, இந்த ஐந்தும் அவிநயத்தில் சார் பெழுத்துகளாகக் கூறப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க லாம். எழுத்துகளின் பிறப்பைப் பற்றிக் கூறும் இடத்தில்,

> நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
> எழும் அணுத் திரள் உரம், கண்டம், உச்சி,
> மூக்கு, உற்று இதழ்,நாப் பல், அணத் தொழிலின்
> வெவ்வேறு எழுத்தொலியாய் வரல் பிறப்பே: (74)

இதில் அணுத்திரள் ஒலியே எழுத்துகளின் பிறப்பிற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இது அவிநயனாரைப் பின்பற்றிக் கூறப் பட்டது என்பது முன்பே விளக்கப்பட்டது.

> அவிநய நூலாசிரியர் ஜைன மதத்தைச் சேர்ந்தவர் என்பது இவர் இயற்றிய அவிநயச் சூத்திரம் ஒன் றால் தெரிகிறது. இந்தச் சூத்திரத்தில் ஒலி அணு வினால் எழுத்து ஒலிகள் பிறக்கின்றன என்னும் ஜைன சமயக் கொள்கையைக் கூறுகிறார். அவிநய நூலுக்கு மிகப் பிற்பட்ட காலத்தவராகிய பவ ணந்தியாரும் தாம் இயற்றிய நன்னூலில் ஒலி யணுத்திரளி னாலே எழுத்துக்கள் பிறக்கின்றன என்னும் ஜைன சமயக்கருத்தைக் கூறியுள்ளார். *(வேங்கடசாமி: 1967:243)*

இக்கருத்தின் படி எழுத்துக்களின் பிறப்பை நன்னூலார் தம் சமயத்தின் கொள்கைப்படி கூறியுள்ளார் என்பது தெளிவா கிறது. தொல்காப்பியர் தலை, மிடறு, நெஞ்சு, ஆகிய மூன்றை மட்டும் பிறப்பிடமாக் கொண்டுள்ளார். நன்னூலார் இவற் றோடு மூக்கையும் பிறப்பிடமாகக் கொண்டுள்ளார்.

சொல்லின் முதலில் அமையும் எழுத்துகளைக் கூறும் போது, சகரமும், ஙகரமும் மொழி முதல் வரும் என்று நன்னூலில் *(47)* கூறப்பட்டுள்ளது. இவை மொழி முதலில் வரும் எனத் தொல் காப்பியத்தில் கூறப்படவில்லை. சகரம் மொழி முதலில் வரும் என்பது காலமாற்றத்தில் இலக்கியத்தில் இடம் பெற்ற தென் பதை புரிந்து கொள்ளலாம். ஙகரம் மொழி முதலில் வருவதற்கான வழக்கம் இல்லை. இதற்கு மயிலைநாதர்,

> ஙகரம் மொழிக்கு முதலாமோ வெனின்
>
> கசதப ஙவ்வே யாதியு மிடையும்
>
> டற விடை ணனரழ லள இடை கடையே
>
> ஞநமய வவ்வே மூன்றிட மென்ப

என நகரம் ஈரிடத்தும் நிற்குமென்றார் ஆசிரியர்
அவிநயனாரு மெனக் கொள்க. (மயிலை.:36)

என்று எழுதியுள்ளமையை நோக்கும்போது இந்தக் கருத்து அவிநயத்தில் இருந்து பெறப்பட்டதை அறியலாம்.

பதவியல் இருபத்து மூன்று நூற்பாக்களில் இயற்றப்பட்டுள்ளது. இதில் பகுபதம், பகாப்பதம் இவற்றின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. ஓரெழுத்து ஒரு மொழி நாற்பத்திரண்டு (பதவியல்-2) என்றும் கூறப்பட்டுள்ளது. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறு வகைப்பெயர்ச் சொற்களும் காலம் பற்றி வரும் வினைச்சொற்களும் பகுபதங்கள் ஆகும். பகுபத உறுப்புகள் ஆறு. அவை பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பனவாகும். பண்புப் பகுதி, தெரிநிலை வினைப்பகுதி, ஏவற்பகுதி ஆகிய பிரிவுகளில் பகுதிகள் இவை என்று கூறப்படுகிறது. தொடர்ந்து, விகுதிகளும் காலம் காட்டும் இடைநிலைகளும் கூறப்பட்டுள்ளன. பதவியலில் வடமொழி ஆக்கம் பற்றி நான்கு சூத்திரங்கள் உள்ளன. இவை வடமொழிப் பதம் தமிழில் வரும் பொழுது திரியும் வடவெழுத்துகள் பற்றியும் அந்த எழுத்துகளுக்கு மாற்றாக வரும் தமிழ் எழுத்துகள் எவை என்பதும் ர,ல,ய ஆகியன தமிழில் முதல் எழுத்தாக வரும்போது அவற்றின் முன் அ, இ, உ ஆகிய எழுத்துகள் நிற்கும் முறையும் வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவாக உள்ள எழுத்துகளும் தமிழுக்கே உரிய எழுத்துகளும் இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளன. இங்கு வடமொழி எழுத்துகள் தமிழில் வரும்போது நேரும் திரிபுகள் தான் சொல்லப்பட்டுள்ளனவே தவிர, நேமிநாதம், வீரசோழியம் ஆகியவற்றில் உள்ளது போல வடமொழிச் சந்தி விதிகள் கூறப்படவில்லை.

உயிரீற்றுப் புணரியலில் ஐம்பத்து மூன்று சூத்திரங்கள் உள்ளன. இதில் முதலில் சந்தி நிலைகள் உயிர், மெய், ஈறு முதல்கள் சொல்லப்பட்டுள்ளன. பின்னர், வேற்றுமை அல்வழிப் புணர்ச்சிகளும், இயல்பு, விகாரப் புணர்ச்சிகளும், செய்யுள் விகாரங்களும்

உள்ளன. இந்த விதிகள், தொல்காப்பியத்தில் தொகை மரபு, புணரியல்களில் உள்ள விதிகளோடு ஒக்கும். உயிரீற்றுச் சிறப்பு விதிகள் அகர ஈறு, ஆகார ஈறு என்று தொல்காப்பிய முறை யிலேயே அமைந்துள்ளன. தொல்காப்பியத்தில் முற்றுகர ஈறு கள் உயிர் மயங்கியலிலும் குற்றியலுகர ஈறுகள் குற்றியலுகரப் புணரியலிலும் உள்ளன. தொல்காப்பியர், பொது விதி, சிறப்புவிதி, என ஒவ்வொரு ஈற்றிற்கும் தனித் தனியாகச் சொல்லிக் கொண்டே போகிறார். மரப்பெயர் வந்தால் தனியாகவும் பிற பெயர் வந் தால் தனியாகவும் இலக்கணம் கூறுகிறார். குற்றியலுகர ஈற்றில் திசைப்பெயர், அளவுப் பெயர், நிறைப்பெயர், எண்ணுப் பெயர், ஆகியவற்றிற்குப் பல விதிகள் கூறப்பட்டுள்ளன.

நன்னூலில் முப்பத்து ஆறு நுற்பாக்கள் கொண்ட மெய் யீற்றுப் புணரியலில் ண, ன, ம, ய, ர, ழ, ல,ள, வ ஆகிய ஈறுகளுக்குச் சிறப்பு விதிகள் உள்ளன. சொற்களோடு வேற்றுமை உருபுகள் சேரும்போது நிகழும் சந்தி வேறுபாடுகளை உருபு புணரியல் பதினெட்டு நூற்பாக்களில் கூறுகிறது. வேற்றுமை உருபுகள் நாற் பது வகைப்படும் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல, என்ற ஐந்து பால்களுடனும் எட்டு வேற்றுமை உருபுகளையும் உறழ நாற்பது என்று காட்டும் முறை வேறு நூல்களில் இல்லை. இவற்றில் முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை. விளி வேற்றுமைக்கும் உருபு இல்லை. இருந்தும் இவ் வகைப் பகுப்பு நன்னூலில் காணப்படுகிறது.

தொல்காப்பியத்தோடு நன்னூலை ஒப்பிடும்போது பல வேறுபாடுகளைக் காணமுடிகிறது.

1. தொல்காப்பியர் பொதுவிதி, சிறப்பு விதி என்று ஒவ்வொரு ஈற்றுக்கும் உயிர் மயங்கியலி லும் மெய் மயங்கியலிலும் விதிகளை வகுக்கிறார். அதன்பின் சிறப்பு விதியிலும் பொருள் மாறு படும் சொற்களுக்குத் தனிவிதி வகுக்கிறார். எடுத் துக்காட்டாக 'சே' என்பது மரப்பெயராக இருக் கும் போது மெல்லெழுத்து மிகும் என்றும் விலங்

கைக் (பெற்றம்) குறிக்கும் போது இன் சாரியை பெறும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2. நன்னூலில் இது போன்ற பொருள் மாறுபாட்டிற்கேற்ப ஒரு ஈற்றிற்கே இரண்டு விதிகள் கூறுதல் இல்லை. தொல்காப்பியத்தில் இது போல் மரப்பெயர்க் கிளவி, நாள் பெயர், திங்கள் பெயர், மழை, பனி, வளி, வெயில், போன்றவற்றிற்கு எல்லாம் தனித் தனியாக விதிகள் உள்ளன.

3. நன்னூலில் சொல்லின் பொருள் பற்றித் தனி விதி கூறப்படவில்லை. தேங்காய் முதலிய ஒரு சில சொற்களுக்கே தனிவிதி கூறப்பட்டுள்ளது. இதுவும் பொருள் நோக்கியதல்ல. மற்ற விதிகளில் அடங்காமல் தனியே நிற்பதால் இதற்குத் தனி விதி கூறப்பட்டுள்ளது. மொழியில் நேர்ந்த மாற்றங்களைக் கருத்தில் கொண்டு செய்யப் பட்ட விதி என்றே இதைக் கொள்ள வேண்டும்.

எழுத்ததிகாரத்தைப் பொருத்தவரை தொல்காப்பியத்திற்கு அடுத்து நன்னூலே விரிவாகக் கூறியுள்ளது. புணரியல்களும் ஓரளவு தொல்காப்பியத்தை ஒத்துள்ளன. அல்வழி, வேற்றுமை முதலாகச் சந்தி இலக்கணத்தை நோக்கும் முறை கூட தொல்காப்பியத்திலிருந்து வேறுபட்டதல்ல. நேமிநாதத்தின் எழுத்ததிகாரம் எந்த உட்பிரிவும் இன்றி வீரசோழியத்தைப் போல அமைந்துள்ளமை முன்பே விளக்கப்பட்டது. இந்த நூல்களை எல்லாம் ஒரு நோக்கில் பார்க்கும் போது நன்னூல் மட்டுமே தமிழ் இலக்கண நெறிநின்று எழுத்ததிகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதை கவனிக்கலாம்.

# 3

# சொல்லிலக்கண மரபுகள்

(தமிழில் சொல் இலக்கணம் - தொல்காப்பியச் சொல்லதிகாரம் - சொல் இலக்கணத்தின் முக்கியத்துவம் - சொல் இலக்கண வகைப்பாடு - வீர சோழியம் - சொல் இலக்கணத்திற்கே முதன்மை கொடுத்தல் - வீரசோழிய சொல் இலக்கணப் பிரிவுகள் - தமிழ் இலக்கணமும் வடமொழி இலக்கணமும் - நேமிநாதம் - தொல்காப்பியமும் நேமிநாதமும் - நன்னூல் அமைப்பு - நன்னூலும் தொல்காப்பியமும்.)

இலக்கணத்தை மொழி இலக்கணம், இலக்கியத்தின் இலக்கணம் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். மொழி இலக்கணத்தில் எழுத்து, சொல் ஆகிய இரண்டு இலக்கணங்களும் அடங்கும். மற்ற மொழி இலக்கணங்களில் எல்லாம் சொல்லிலக்கணமே சிறப்பாகக் கருதப்பட்டது. தமிழிலும் சொல்லிலக்கணத்திற்கு மட்டுமே முதன்மை கொடுத்த இலக்கண நூல்களும் உள்ளன. தொல்காப்பியத்தில் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எச்சவியல் முதலியவற்றில் தொடரியல் செய்திகள் அடங்கியுள்ளன. சொல் இலக்கணத்தில் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு சொற்களும், சொற்கள் பொருள் உணர்த்தும் அடிப்படைகளான திணை, பால், எண், இடம், காலம் ஆகியனவும் தமிழில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இந்த இயலில் பின்வரும் நூல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

தொல். சொல்லதிகாரம் - இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் உரைகள்.

வீரசோழியம் - பெருந்தேவனார் உரை

நேமிநாதம் - உரை

நன்னூல் - மயிலைநாதர் உரை

தொல்காப்பியத்தில் சொல்லதிகாரம், எழுத்ததிகாரத்தைப் போலவே ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிளவி யாக்கம், வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயர் இயல், வினை இயல், இடை இயல், உரி இயல், எச்சவியல் என ஒன்பது இயல்களாகும். இவற்றில் முதல் நான்கு இயல்களும் பொது இலக்கணத்தையும் அடுத்த நான்கு இயல்களும் சிறப் பிலக்கணத்தையும் கடைசி இயல் பொது இலக்கணத்தையும் உணர்த்துகின்றன.

கிளவியாக்கத்தில் திணை, பால், இடம், எண், வழு, காலம் முதலியன விளக்கப்பட்டுள்ளன. கிளவிகள் பொருளை உணர்த் தும் முறை இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளதால் இது கிளவி யாக்கம் எனப் பெயர் பெற்றது என்பர் உரையாசிரியர்கள். வேற் றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு ஆகிய மூன்று இயல்களிலும் வேற்றுமையின் இலக்கணம் உணர்த்தப் பெற் றுள்ளது. பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு சொற்களின் இலக்கணமும் நான்கு இயல்களில் விளக்கப்பட்டுள்ளன. எச்ச வியலில் செய்யுள் ஆக்கச் சொற்கள், தமிழில் வந்து வழங்கும் முறையின் இலக்கணம் விளக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பொருள்கோள், சொல் அடுக்கி வருதல், ஆறு தொகைகள், பத்து எச்சங்கள், அவையல் கிளவி முதலியனவும் எச்சவியலில் விளக் கப்பட்டுள்ளன. ஈ, தா, கொடு, என்ற சொற்களுக்குரிய மரபும் இவ் வியலில் விளக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தையும் எழுத்து, பொருள் அதிகாரங்களைப் போலவே ஒன்பது இயல்களாகப் பிரித்துள் ளார். இயல்களைப் பிரித்துள்ள முறையிலும் அதிகாரத்தை விளக்கியுள்ள முறையிலும் தொல்காப்பியர் சொல்லதிகாரத் திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்று கூறுவதற் கில்லை. தமிழ் மரபுப்படி பொருளதிகாரத்திற்கே முக்கியத்து

வம் அளித்துள்ளார் என்று கருதும்படி உள்ளது. ‘எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட் டன்றே பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம்’ (இறையனார் களவியல் :10) என்று இறையனார் அகப்பொருள் உரையிலே இதனைக் காணலாம். ஆக தொல் காப்பியர் சொல்லதிகாரத்திற்கு முதன்மை கொடுத்துத் தம் நூலை இயற்றவில்லை.

சொல்லதிகாரத்திற்குத் தொல்காப்பியர் கொடுக்காத முக் கியத்துவத்தை உரையாசிரியர்கள் கொடுத்துள்ளனர். தொல் காப்பியத்தின் மற்ற அதிகாரங்களுக்கும் உரையெழுதிய இளம் பூரணர், நச்சினார்க்கினியர் இவர்களுடன் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே சிலர் உரையெழுதி உள்ளனர். சேனாவரையார் உரை, தெய்வச்சிலையார் உரை, கல்லாடனார் உரை, பெயரறியப்ப டாத உரை ஆகிய நான்கும் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உள்ள உரைகளாகும். இதனால் இவர்கள் தொல்காப்பியச் சொல்லதி காரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பது தெளிவாகிறது. தொல்காப்பியர் கொடுக்காத முக்கியத்துவத்தை சொல்லதிகாரத்திற்கு உரையாசிரியர்கள் கொடுத்துள்ளதன் காரணம் என்ன என்று நோக்கும் பொழுது, வடமொழி இலக் கணத்தின் செல்வாக்கே காரணம் என்று கூறலாம். வடமொழி யில் சொல் இலக்கணத்தையே வியாகரணம் என்று சிறப்பித்து இலக்கணம் கூறியுள்ளனர். அதனால் தமிழிலும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு முதன்மை கொடுத்தனர் என்று தெரிகிறது. உரையாசியர்களேயன்றி புத்த மித்திரர், குணவீர பண்டிதர் போன்ற நூலாசிரியர்களும் சொல்லதிகாரத்திற்கே முக்கியத்து வம் கொடுத்துள்ளனர்.

இங்கு எடுத்துக் கொண்ட காலப் பகுதியில் தோன்றிய இலக்கண நூல்களில் வீரசோழியம், நேமிநாதம் ஆகிய நூல் களும் உரைகளில் சேனாவரையர் உரையும் சொல்லதிகாரத்திற்கு முதன்மை அளித்துள்ளன. சேனாவரையர் உரையின் முகப்பில் உள்ள பாயிரச் செய்யுட்கள் விநாயகர், சிவன், கலைமகள்,

அகத்தியர் ஆகியோரைப் போற்றுவதால் இவரைச் சைவர் என்பர். இவரே 'தமிழ் இலக்கண உலகில் நுழைந்த முதல் சைவர்' என்று வேலுப்பிள்ளை *(1979:28)* கூறியுள்ளார். வடமொழி இலக்கணக் கொள்கைகளைத் தமிழிற் புகுத்தி இலக்கணம் கூறத் தொடங்கியவர் இவரே; இதற்கு அவர் சைவராக இருந்தமை காரணமாகலாம் என்றும் வேலுப்பிள்ளை கூறியுள்ளார். (மேற்படி:29)

> வடநூற் கடலை நிலைகண்டறிந்த சேனாவரையர் எழுத்ததிகாரத்திற்கு உரை செய்தாராயின் இன்னோரன்ன பொருள் அனைத்துந்தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர். அவர் சொல்லதிகாரம் போலப் பெரும்பயன் படாமை கருதி எழுத்திற்கு உரை செய்யாது ஒழிந்தமையின் (சிவஞான முனிவர்,1968:46)

என்று சிவஞான முனிவர் சேனாவரையரைப் பாராட்டிக் கூறும் பகுதியில் இருந்து இரண்டு செய்திகள் தெரிகின்றன. ஒன்று சேனாவரையரின் உரைச்சிறப்புக்குக் காரணம் அவரது வடமொழிப் புலமையே என்பது. இரண்டாவது, சொல்லதிகாரம் போல எழுத்ததிகாரம் பெரும்பயன்படாததால் அதற்கு உரையெழுதவில்லை என்பது. வடமொழியில் சொல்லிலக்கணத்திற்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் தமிழ் இலக்கண ஆசிரியர்களிடையே அது போன்றதொரு கருத்துத் தோன்ற காரணமாக அமைந்தது என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

'வடநூற் கடலை நிலை கண்டு அறிந்த சேனாவரையர்' என்ற கூற்றிற்கேற்ப சேனாவரையரும் பல இடங்களில் வடமொழிக் கருத்துகளை எடுத்துக் காட்டி, தமிழ் இலக்கணத்தை விளக்குகிறார். தமிழ் இலக்கணத்தை அறிந்து கொள்ள வடமொழி அறிவு தேவை என்றும் வடமொழி இலக்கண மாதிரியில் தமிழ் இலக்கணம் விளக்கப்படும் என்றும் கருத்துகள் தோன்ற சேனாவரையர் உரை தூண்டுகோலாக இருந்தது என்றும் கூறலாம்.

**வீரசோழியம்**

ஐந்து இலக்கணங்களையும் ஐந்து அதிகாரங்களில் விளக்கும் வீரசோழியத்தில், சொல் அதிகாரம், வேற்றுமைப் படலம், உபகாரகப் படலம், தொகைப் படலம், தத்திதப் படலம், தாதுப் படலம், கிரியாபதப் படலம் என ஆறு படலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இந்த அதிகாரம் விரிவாக ஐம்பத்து ஐந்து சூத்திரங்களில் விளக்கப்பட்டுள்ளது.

சொல்லதிகாரத்தை விளக்கும் வகையிலேயே இந்த இரு நூல்களுக்கும் இடையில் வேறுபாடு உள்ளது. தொல்காப்பியம் இத்தனை வகையில் சொல் இலக்கணத்தை ஆராய்கிறது என அதில் குறிப்பு இல்லை. வீரசோழியம் சொல்லதிகார உரை முடிவில்,

வேற்றுமை எட்டும் திணை இரண்டும் பால் ஐந்தும்
மாற்றுதற்கு ஒத்த வழு ஏழும் - ஆறு ஒட்டும்
ஏற்ற முக்காலம் இடம் மூன்றோடு இரண்டு இடத்தால்
தோற்ற உரைப்பதாம் சொல்.

இவ்வண்ணம் எட்டு வகையான் சொல் ஆராய்ந்தார் தொல் காப்பியனார் (வீர.:86) என்று காணப்படுகிறது. வீரசோழியம் வேற்றுமை, தொகை, தத்திதாந்தம், தாது, வினை என்பன வற்றை சொல்லதிகாரத்தில் விளக்கியுள்ளது. பிற அதிகாரங்களைப் போலவே சொல்லதிகாரத்திலும் வடமொழி இலக்கண நெறி யைப் பின்பற்றியே இலக்கணம் கூறுகிறது இந்நூல். இருப்பி னும் வடமொழியில் சொல் இலக்கணமே முதன்மை கொடுத்து ஆராயப்படுவதால், வீரசோழியம் சொல்லதிகாரத்தில் வடமொழி மரபை மிகுதியாகக் கையாள்கிறது. மேலே காட்டப்பட்டுள்ள வற்றில் வேற்றுமை, வினை ஆகிய இரண்டுமே தமிழ் நூல்களில் சொல்லதிகாரத்தில் சிறப்பாக ஆராயப்படுபவையாகும். தத்தி தம், தாது ஆகியவை தமிழ் மரபுடன் ஒவ்வாதவை. தொகை, வேற்றுமை, வினை முதலியனவற்றை ஆராயும் பகுதியிலும் வடமொழி இலக்கண மரபின் அடிப்படையிலேயே அவை பெரிதும் விளக்கப்பட்டுள்ளன.

கிளவியாக்கத்தில் தொல்காப்பியர், கிளவிகள் பொருளை விளக்கும் அடிப்படைகளை விளக்கியுள்ளார். அவையே திணை, பால், இடம், எண் முதலியவையாகும். சொல்லதிகாரத்தில் பெயர், வினை, இடை, உரி எனச் சொற்களை நான்காகப் பகுத்து ஆராயும் தொல்காப்பியர், அந்த இயல்களில் இலக்கணம் கூறுவதற்குத் தேவையான அடிப்படைகளைக் கிளவியாக்கத்தில் உருவாக்கிக் கொள்கின்றார். எடுத்துக்காட்டாக வினையியலில் ஆண்பால், பெண்பால் விகுதிகள் என்று இடம், திணை அடிப்படையில் வரும் விகுதிகளையும் தொல்காப்பியர் கூறுகிறார். அவ்வாறு கூறுவதற்குக் கிளவியாக்கத்தில் தோற்றுவாய் செய்து கொள்கிறார். இது பின்னர் சிறப்பிலக்கணம் கூறுமிடத்தில் அவருக்கு நன்கு கைகொடுக்கிறது.

வீரசோழியத்தில் கிளவியாக்கம் என்பதற்கு இணையான ஓர் படலம் இல்லை. அதில் சொல்லப்பட்ட செய்திகளும் பிற எந்தப் படத்திலும் விதந்து சொல்லப்படவில்லை. வேற்றுமைப் படலம், உபகாரகப் படலம் என்ற இரண்டு படலங்களிலும் வேற்றுமையின் இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. வேற்றுமைப் படலத்தில் தமிழ் வேற்றுமை இலக்கணமும் உபகாரகப் படலத்தில் வடமொழிக்காரக இலக்கணமும், கூறப்பட்டுள்ளது.

> எட்டாம் எழுவாய் முதல் பெயர் வேற்றுமை; ஆறுளவாம்
> கட்டார் கருத்தா முதல் காரகம் (1)

என்று வேற்றுமைப் படலத்தின் முதல் சூத்திரத்திலேயே தமிழ் வேற்றுமை எட்டு என்றும் வடமொழிக் காரகம் ஆறு எனவும் வேறுபடுத்திக் கூறியுள்ளார்.

வேற்றுமை உருபுகள் பெயர்ச்சொல்லுடன் மட்டுமே சேரும் என்பதால் பெயர்ச்சொற்களை முதலில் வகைப்படுத்துகிறார். அவை,

1. ஒருவனைக் கருதின சொல்
2. ஒருத்தியைக் கருதின சொல்

3. பலரைக் கருதின சொல்
4. ஒன்றைக் கருதின சொல்
5. பலவைக் கருதின சொல்
6. ஒருவனைச் சிறப்பித்த சொல்
7. ஒருத்தியைச் சிறப்பித்த சொல்
8. ஒன்றைச் சிறப்பித்த சொல்

என எட்டு வகைப்படும். இந்த எட்டு வகையான பெயர்ச் சொல் லின் பின்பும் எட்டு வேற்றுமையும் வந்து உறழ வேற்றுமைகள் மொத்தம் அறுபத்து நான்கு ஆகும் என்று கூறப்பட்டுள்ளது. வடமொழி காரக பதங்கள் ஆண், பெண், அலி என்ற மூன்று பாலின் பின்னும் ஏழு வேற்றுமைகளையும் உறழ இருபத்து ஒன்றாகும். வடமொழி மரபில், தமிழ் மரபில் உள்ளது போல ஒருமை, பன்மை என்று இல்லாமல் ஒருமை, இருமை, பன்மை என்ற அமைப்பு உள்ளது. இவை ஏக வசனம், துவி வசனம், பகு வசனம் எனப்படும். இந்த மூன்றையும் இருபத்தியொரு வேற் றுமைகளுடன் உறழ அறுபத்து மூன்று கரக பதம் வரும்.

மேலே தமிழில் வரும் என்று கூறிய எட்டு வகைப் பெயர் களும் வேற்றுமையை ஏற்கும் முன்பு பிரகிருதி எனப்படும். இந்த எட்டுப் பிரகிருதிகளின் பின்பும் வேற்றுமை உருபுகள் சேரும். முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை எனப்படும். எழுவாய் வேற் றுமையின் உருபுகள் சு, ஆர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் என்னும் ஏழும் ஆகும்.

இவற்றில் சு, அர் ஆகிய இரண்டும் ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால் ஆகிய மூன்றிற்கும் வரும். பலர் பாலுக்கு சு, கள் ஆகிய இரண்டும் வரும். ஒருவனைச் சிறப்பித்த சொல், ஒருத்தி யைச் சிறப்பித்த சொல், ஒன்றைச் சிறப்பித்த சொல் இவற்றின் பின் அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் ஆகிய ஆறு உருபுகளும் வரும். சு என்னும் உருபு எல்லா இடத்திலும் அழிந்தே வரும் என்று கூறப்பட்டுள்ளது. சு என்னும் உருபு அழிந்து வருவதற்குக் காரணம்,

> எல்லா இடத்தும் அழியுமாயின் வருவதற்குக் காரணம் என்னெனின் வடமொழியுடையான் வாரியென்னுஞ் சொல்லை வைத்து முதல் வேற்றுமை ஏக வசனத்தைப் பொருள் விளக்குதற் பொருட்டு எவ்வண்ணம் இட்டழித்தான், இவனும் அது போல ஆக்கி அழித்தாலல்லது பதமாகாதென்று இட்டழித்தான் என்க. *(வீர.:30)*

என்று உரையாசிரியர் விளக்கம் அளித்துள்ளார். எழுவாய் வேற்றுமைக்கு சுப்பிரத்தியம் உண்டென்பதும் அது எல்லா இடத்தும் அழிந்தே வரும் என்பதும் மற்ற அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் ஆகியவையும் எழுவாய் வேற்றுமை உருபுகளே என்பதும் தமிழ்மொழி அமைப்புக்குப் பொருந்தாதவை. தமிழில் எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை என்பதே வழக்கமாகும். அப்படி இருக்க இவர் சு என்பதையும் பிறவற்றையும் வேற்றுமை உருபுகளாகக் கூறுவதற்கு வடமொழி இலக்கண மரபே காரணம் என்பதும் முன் காட்டிய மேற்கோளால் விளங்கும். வடமொழியில் பெயரே எழுவாயாக நிற்காது; அது வெறும் பிரகிருதியாகவே நிற்கும். அதனுடன் எழுவாய் வேற்றுமை உருபு சேர்ந்தால் மட்டுமே அது எழுவாயாக நிற்கும்.

> சாத்தன் - கொற்றன் என ஒருவனைக் கருதின சொல்லின் பின்பும், சாத்தி - கொற்றி என ஒருத்தியைக் கருதின சொல்லின் பின்பும், யானை - குதிரை என ஒன்றைக் கருதின சொல்லின் பின்பும் சு என்னும் எழுவாய் வேற்றுமைப் பிரத்தியம் நிறுத்துக. நிறுத்தவே, சொல்லின் பொருண் மாத்திரம் விளக்கிற்றாம். சொல்லானது சாத்தனென்று உச்சரிக்கப்படா நின்ற சொல். அதன் பொருளாவது கர சரணாதி அவயங்களை உடையதொரு பிண்டமாய் ‘சாத்தனாவான் எவன்?’ என்று வினவினார்க்கு இவன் என நின்னால் சொல்லப்படுகின்றான் யாவன் அவன் எனக் கொள்க. *(வீர.: 30)*

என்ற பகுதியில் சுப்பிரத்தியம் பெறாத சொல் வெறுமனே பெயர்ப் பொருளை மட்டும் சுட்டுமேயன்றி எழுவாய் ஆகாது என்று விளக்கப்பட்டுள்ளது. இது வடமொழி மரபாகும்.

தமிழில் தொல்காப்பியர் எழுவாய் வேற்றுமைக்கு உருபு கூறவில்லை; பெயர் நிற்கும் நிலையே எழுவாய் ஆகும் என்று கூறியுள்ளார்.

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே. (வேற். 4)

என்ற நூற்பா இதனை உணர்த்தும். மேலும் இரண்டு முதல் ஏழு வரை உள்ள ஆறு வேற்றுமைகளே உருபு பெறும் என்பது தமிழ் மரபாகும். நன்னூலும்,

எழுவாய் உருபு திரிபு இல் பெயரே (நன்.-295)

என்று பெயர் திரிபு இல்லாமல் நிற்கும் - தோன்றியவாறே நிற்கும் - நிலையே எழுவாய் ஆகும் என்று கூறியுள்ளது. நேமி நாதத்திலும்,

பெயர் எழுவாய் வேற்றுமையாம். பின்பு அதுதான் ஆறு
பயனிலையும் ஏற்கப் படுதல் - கயல்விழியாய்
ஈற்றின் உருபானும் ஏற்றல் முக்காலமும்
தோற்றாமை நிற்றல் துணிபு. (நேமிநாதம்- 41)

என்று பெயரே எழுவாய் வேற்றுமையாகும் என்று கூறப்பட்டுள்ளது. வடமொழி மரபைப் பின்பற்றித் தமிழ் இலக்கணம் கூறுவதால், வீரசோழிய மரபில் வந்தது என்று கூறப்படும் பிரயோக விவேகத்திலும்,

தேற்றும் தமிழுக்கு எழுவாய் விபத்தி திரிபில் பெயர்
தோற்றும் பிற உருபு ஓர் ஆறும் வேற்றுமை தோன்றி நிற்கும் (8)

என்று திரிபு இல்லாத பெயரே தமிழில் எழுவாய் ஆகும் என்று கூறப்பட்டுள்ளது. ஏழாம் சூத்திர உரையில்,

வடமொழி அகண்ட பதத்திற்குப் பெயரும், மேல்
பிரதமாவிபத்தி என்னும் முதல் வேற்றுமை உருபு

> முதலிய உருபு பெறுமாறும் கூறுகின்றது. பெயர்ப் பகாப்பதம் பிராதிபதிகமாம். அது குறி பெற்று, ஏகவசனமும் துவி வசனமும் வெகு வசனமும் ஆகிய பிரதமா விபத்தியோடு சேர்ந்து கருத்தா என்னும் எழுவாயாம். (பிர.: 44)

என்று இதன் ஆசிரியரே வடமொழி காரகபதம் எழுவாய் ஆகும் விதத்தைக் குறித்துக் கூறிவிட்டு, 'தமிழுக்கு எழுவாய் வேற்றுமை ரூபபேதம் இன்றித் திரிபு இல் பெயராம்' (மேற்படி: 50) என்றும், 'பெயர்க்கு ரூபபேதம் காட்டும் வேற்றுமை உருபு வடமொழிக்கு அல்லது தமிழ்மொழிக்கு இல்லாமை கண்டு' (மேற்படி:50) என்றும் கூறியுள்ளார். இதுவுமன்றி 'தேற்றும் தமிழுக்கு' என்ற சூத்திரம், 'தம்துணிபு உரைத்தல்' என்றும் கூறியுள்ளார். எனவே வடமொழி இலக்கண மாதிரியில் தமிழுக்கு இலக்கணம் வகுக்கும் பிரயோக விவேகமும் தமிழ் இலக்கண மரபுக்கு முரண்படாத வகையில் எழுவாய் வேற்றுமையின் இலக்கணம் கூறியுள்ளது. வடமொழி இலக்கணத்தை மாதிரியாகக் கொண்டு தமிழுக்கு பிரயோக விவேகம் இலக்கணம் கூறினாலும் தமிழ் மொழியின் அமைப்புக்கு முதன்மை கொடுத்து வடமொழி மரபை இதில் புகுத்தாமல் இலக்கணம் வகுத்துள்ள முறை ஆழ்ந்து கவனித்தக்கது.

வடமொழி இலக்கணத்தை தமிழில் புகுத்தியது என்ற குற்றச் சாட்டுக்கு ஆளான இலக்கணக் கொத்து நூலில்,

> எழுவாய் வேற்றுமைக்கு உருபே இன்று [1]
> பெயரே [2] பயனிலை கொள்ளும் தன்மையே [3]
> பயனிலை தன்னைக் கொண்ட தன்மையே [4]
> வினைமுதல் ஆதலே [5] விகாரப் பெயரே [6]
> பெயர்ப்பின் விகுதி பெறுதலே [7] ஆயவன்
> ஆனவன் ஆவான் ஆகின்றவன் முதல்
> ஐம்பால் சொல்லும் பெயர்ப்பின் அடைதலே [8]
> உருபு என வெவ்வேறு உரைத்தார் பலரே (இலக்.-25)

என எட்டுவகையாக எழுவாய் வேற்றுமை பற்றிய விளக்கம் தமிழில் உள்ளது என்று கூறியுள்ளார். அந்த எட்டு விதிகள் பின் வருமாறு:

1. எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை
2. பெயரே எழுவாய்
3. பயனிலை கொள்ளும் தன்மை
4. பயனிலை தன்னைக் கொண்ட தன்மை
5. வினை முதல் ஆதல்
6. விகாரப் பெயர்
7. பெயருக்குப் பின் உருபு பெறுதல்
8. ஆயவன், ஆனவன், ஆவான், ஆகின்றவன் போல் ஐம்பால் சொற்களும் பெயருக்குப் பின் வருதல்.

என்று எட்டு விதிகள் தமிழில் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. இவற்றுக்கு உரையில் விளக்கம் அளிக்கப்பட்ட பின்,

> இவ்வெண் விதியோடு எழுந்த சூத்திரம் பிறர்
> மதம் கூறலேயாம்; தன் துணிபு உரைத்ததன்று.
> இவ்வெண்மரும் தம்முள் மறுப்பர் அவை விரிக்
> கின் பெருகும். (இலக்.: 140)

என்று தம் கருத்து அல்ல என்று தெளிவாகக் கூறிவிடுகிறார் சாமி நாததேசிகர். எனவே அவரும் வடமொழி மரபு பற்றி எழுவாய் வேற்றுமைக்கு இலக்கணம் கூறவில்லை. தமிழில் கிடைத்துள்ள இலக்கண நூல்களைக் கொண்டு பார்க்கும் போது வீரசோழி யம் ஒன்றே எழுவாய் வேற்றுமைக்கு வடமொழி மரபில் உருபு கூறிய நூல் என்று கூறலாம்.

வீரசோழியத்தில் இரண்டாம் வேற்றுமை உருபு - தொல் காப்பியத்தைப் போலவே - 'ஐ' என்று கூறப்பட்டுள்ளது. இது கருமத்தின் காரகம் என்றும் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமை உருபாக ஒடு என்பதை மட்டுமே கூறி

யிருக்க, வீரசோழியம் ஆல், ஒடு, ஓடு ஆகிய மூன்றையும் மூன்றாம் வேற்றுமை உருபாகக் கூறியுள்ளது. இப்படிக் கூறுவதற்கான நியாயப்பாட்டை எடுத்துக்காட்டுகள் மூலம் வலியுறுத்துவது மட்டுமின்றி,

> தொல்காப்பியனார் ஒடு என்னும் பிரத்திய மொன்றே மூன்றாம் வேற்றுமைக்கு உருபாகச் சொன்னார். ஆலும், ஆனும் மூன்றனுருபே என்றார் அவிநயனார். *(வீர.:32)*

என்று அவிநயனார் கருத்தும் இதுவே என்று உரையாசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். நான்காம் வேற்றுமை உருபுகளாக கு, பொருட்டு ஆகிய இரண்டும் கூறப்பட்டுள்ளது.

வீரசோழியத்தில் ஐந்தாம் வேற்றுமை உருபாக 'நின்று' என்று கூறப்பட்டுள்ளது. இந்த உருபு ஏழாம் வேற்றுமை உருபுகளுக்குப் பின்பே வரும் என்பதால் ஐந்து, ஆறு, ஏழாம் வேற்றுமை உருபுகளைக் கூறும் சூத்திரத்தில், (37) ஏழாம் வேற்றுமை உருபுகளை விளக்கிய பின்பே ஐந்தாம் வேற்றுமை உருபு கூறப்படுகிறது. தொல்காப்பியர் 'இன்' என்பதை ஐந்தாம் வேற்றுமை உருபாகக் கூறியுள்ளார். இதன்படி,

> இவனின் நெடியன்
> இதனிற் கரிது

என்பது போல வரும். வீரசோழியத்தின்படி,

> சாத்தனுழைநின்றும் தீமை அகன்றது
> பெரியோரிடைநின்றுஞ் சினம் நீங்கிற்று
> மலையினின்றும் அருவி விழுந்தது.

என வரும்.

வீரசோழியத்தில் உள்ளபடி காட்டிய தொடர்களில் உழை, இடை, இன் ஆகிய ஏழாம் வேற்றுமை உருபுகளின் பின் 'நின்று' என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு வந்துள்ளது.

ஆறாம் வேற்றுமை ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, இன என்னும் ஆறு சொற்களின் முன்பும் உடை என்பதைப் பெற்று வரும். உடையான், உடையாள், உடையார், உடையார்கள், உடையது, உடையின என்று இவை வரும். தொல்காப்பியம் ஆறாம் வேற்றுமை உருபாக அது என்பதைக் கூறுகிறது. இவ்வேற்றுமை இதனது இது என்று வரும். சாத்தனது வீடு, நீரது தன்மை, தீயது வெம்மை என்று இதைக் காட்டலாம்.

ஏழாம் வேற்றுமை உருபுகளாக கே, உழை, வயின், பக்கல், உழி, இல், கண் என்னும் ஏழும் வரும் என்று கூறப்பட்டுள்ளது. உரையில் இவற்றோடு இடம், இடை, முன், பின், கீழ், மேல், உள், புறம், வாய் முதலியனவும் சேர்க்கப்பட்டுள்ளன. தொல்காப்பியம் ஏழாம் வேற்றுமை உருபுகளாகக் கண், கால், அகம், புறம், உள், உழை, கீழ், மேல், பின், சார், அயல், புடை, தேவகை, முன், இடை, கடை, தலை, வலம், இடம் முதலியவற்றைக்கூறும். சேனாவரையர் இவற்றை ஏழாம் வேற்றுமைப்பொருள் பற்றி வரும் இடைச் சொற்கள் என்பார்.

ஆய், ஆள், ஈ, ஏ, அ, ஆ, ஆன், ஓல், ஓய், ஈர் ஆகியவையும் இவற்றின் அளபெடையும் காள் என்பதும் விளிவேற்றுமையின் உருபுகளாகும் என்று வீரசோழியம் கூறுகிறது. தொல்காப்பியத்தில் விளி வேற்றுமை கூறப்பட்டுள்ள போதும் அதற்கு உருபுகள் கூறப்படவில்லை. பெயர்கள் விளியேற்கும் போது ஈற்றில் நிற்கும் எழுத்துகளின் திரிபே விளிவேற்றுமை என்பது தொல்காப்பியக் கருத்து. வீரசோழியம் தவிர வேறு தமிழ் நூல்கள் விளி வேற்றுமைக்கு உருபு கூறவில்லை.

வேற்றுமைப் படலத்திற்குப் பின் உள்ள உபகாரகப் படலம் வடமொழியில் உள்ள காரக இலக்கணத்தைக் கூறுகிறது. அவை கருத்தாக் காரகம், கரணக் காரகம், கருமக் காரகம், அவதிக் காரகம், ஆதாரக் காரகம், கோளிக் காரகம் என்று ஆறு ஆகும். இவை விரிவகையில் இருபத்து மூன்றாகப் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

கருத்தாக் காரகம் (5)

காரணக் கருத்தா
தான் தெரி கருத்தா
தான் தெரியாக் கருத்தா
கருமக் கருத்தா
தலைமைக் கருத்தா

அவதிக் கராகம் (2)

சலம்
அசலம்

கரணக் காரகம் (2)

புறக் கரணம்
அகக் கரணம்

கோளிக் காரகம் (3)

ஆர்வக் கோளி
கிடப்புக் கோளி
இரப்புக் கோளி

கருமக் காரகம் (7)

பற்றுக் கருமம்
வீட்டுக் கருமம்
இருபுறக் கருமம்
தான் தெரி கருமம்
தான் தெரியாக் கருமம்
கருத்தாக் கருமம்
தீபகக் கருமம்

ஆதாரக் காரகம்(4)

சேர்வாதாரம்
கலப்பாதாரம்
புலனாதாரம்
அயலாதாரம்

இந்த வகைப்பாடுகளும், கலைச் சொற்களும் வடமொழி மரபைப் பின்பற்றியவை.

வீரசோழியம் வேற்றுமையின் இலக்கணத்தை இரண்டு படலங்களில் கூறியுள்ளது. அவை, வேற்றுமைப் படலம், உப காரகப் படலம் என்பன. உபகாரகப் படலம் என இரண்டாவது படலத்தை குறிப்பிடுவதை நோக்க, முதல் படலத்தை காரகப் படலம் என்றே குறிப்பிட இடமுண்டு. ஆனால் முதல் படலம் வேற்றுமைப் படலம் என தமிழ்ப் பெயரிட்டு அழைக்கப் பட்டுள்ளது. இதன் காரணம் வேற்றுமைப் படலத்தில் தமிழ் வேற்றுமையின் இலக்கணமும் உபகாரகப் படலத்தில் வடமொழி வேற்றுமையின் இலக்கணமும் உணர்த்தப்பட்டுள்ளமையே எனலாம்.

வேற்றுமைப் படலத்தில் தமிழ் வேற்றுமையின் இலக்கணம் உணர்த்தப்பட்டுள்ளதேனும் அதிலும் பல வடமொழி மரபுகள் புகுத்தப்பட்டுள்ளன. எழுவாய், விளி வேற்றுமைகளுக்கு உருபு கூறுதல், பெயர்ச் சொற்களை எட்டு வகையாகப் பிரித்து அவற்றை பிரகிருதிகள் எனல், ‘சு’ முதலிய எழுவாய் வேற்றுமை உருபுகள் பிற வேற்றுமை உருபுகளின் முன்பும் வரும் எனல் முதலியனவும் கரணம், கருத்தா, கோளி முதலிய வடமொழிக் கலைச்சொல் ஆட்சியும் வடமொழி இலக்கண மரபை வேற்றுமைப் படலத்தில் புகுத்தியதற்கு ஆதாரங்கள். இவை மட்டுமின்றி, தொல்காப்பியத்திலோ பிற நூல்களிலே கூறப்படாத பொருட்டு, நின்று, உடை முதலிய உருபுகளை கூறியுள்ளதன் அடிப்படையில் நோக்கும் பொழுதும் வீரசோழியம் தமிழ் மரபிலிலிருந்து வேறுபட்டுக் செல்வதைக் கவனிக்கலாம்.

உபகாரகப் படலம் முழுவதும் வடமொழிக் காரக இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியர் ஒவ்வொரு வேற்றுமையும் எந்த முறையில் வரும் என்றும் அவை தோன்றும் பொருள் இத்தனை என்றும் விரிவாகக் கூறிச் செல்கிறார். எடுத்துக்காட்டாக ஆறாம் வேற்றுமை ‘இதனது இது’ என்னும் வகையில் அமையும். இவ்வேற்றுமை இயற்கை, உடைமை, முறைமை, கிழமை, செயற்கை, முதுமை, வினை, கருவி, துணை, கலம், முதல், ஒருவழியுறுப்பு, குழு, தெரிந்து மொழிச்செய்தி, நிலை, வாழ்ச்சி, எனப் பதினாறு பொருளில் வரும். இவ்வாறே எல்லா வேற்றுமைக்கும் விரிவாக தொல்காப்பியர் இலக்கணம் கூறியுள்ளார்.

வீரசோழியம் வேற்றுமை என்ன பொருள் காட்டும் என்று கூறியுள்ளது. அவை,

இரண்டாம் வேற்றுமை -கருமத்தின் காரகம்
மூன்றாம் வேற்றுமை - கருத்தா, கரணம் (கருவி)
நான்காம் வேற்றுமை - கோளி

முதலியனவாகும். இவை தமிழ் வேற்றுமைக்கு நிகரான வடமொழிக் கலைச் சொற்களாக இருக்கும் அதே வேளையில் வேற்றுமையின் பொருளையும் விளக்குகின்றன. வீரசோழியத்தில் தொல்காப்பியத்தில் உள்ளது போல பொருள் எல்லாம் தொகுத்துக்காட்டடப்படவில்லை. மாறாக உபகாரகப் படலத்தில் வடமொழி மரபுப்படி ஆறு காரகமும் இருபத்து மூன்று வகையாக்ப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்தில் வேற்றுமைகள் மயங்கி வருதலைத் தனி ஒரு இயலில் - வேற்றுமை மயங்கியல் - விளக்கப்பட்டுள்ளது. விளி வேற்றுமை, விளி மரபு என்ற இயலில் விளக்கப்பட்டுள்ளது. வீரசோழியத்தில் இவற்றுக்கு இணையான படலங்கள் இல்லை. விளி வேற்றுமை, வேற்றுமைப் படலத்திலும், வேற்றுமை மயக்கம் உபகாரகப் படலத்தின் இறுதி இரண்டு காரிகைகளிலும் சொல்லப்பட்டுள்ளது.

வீரசோழியத்தின் மூன்றாவது படலம் தொகைப்படலம் ஆகும். இப்படலத்தில் எட்டுக் காரிகைகள் உள்ளன. இதில் முதல் காரிகை வேற்றுமைத் தொகையையும், அடுத்த ஐந்து காரிகைகள் வடமொழித் தொகை இலக்கணத்தையும், ஏழாவது காரிகை தமிழில் உள்ள ஆறு தொகைகளையும், இறுதிக் காரிகை அன்மொழித் தொகையில் இடையும் இறுதியும் கெடுதலையும் தொகையில் பொருள் சிறக்கும் இடத்தையும் கூறுகிறது. வடமொழித் தொகைகள்,

1. தற்புருட சமாசம்
2. பலநெல் சமாசம்
3. கன்மதாரய சமாசம்

4. துவிகு சமாசம்
5. துவந்துவ சமாசம்
6. அவ்விய பாவ சமாசம்

என்ற ஆறு ஆகும். இவற்றுள் தற்புருட சமாசம் என்பது ஏழு வேற்றுமைகளுடனும் நஞ்ஞோடும் கூடி எட்டு வகைப்படும். ஒருமை ஒப்பு. பன்மை ஒப்பு என துவிகு சமாசம் இரண்டு வகைப் படும். இவ்வாறே மற்ற சமாசங்களும் விளக்கப்பட்டுள் ளன. தமிழ்த் தொகைகளாக வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகை, அன் மொழித் தொகை என்று ஆறு தொகைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் பண்புத் தொகை,

அளவுப் பண்புத்தொகை
வடிவுப் பண்புத்தொகை
நிறப் பண்புத்தொகை
சுவைப் பண்புத்தொகை

என இவ்வாறு தொகும். உம்மைத் தொகை,

இரு பெயர்த்தொகை
பல பெயர்த்தொகை
அளவுப் பெயர்த்தொகை
நிறைப் பெயர்த்தொகை
எண்ணின் பெயர்த்தொகை
எண்ணியற் பெயர்த்தொகை

என்று தொகும். இவற்றில் முதலில் காட்டிய ஆறு தொகைகளுள் தொல்காப்பியம் முதலிய தமிழ் இலக்கணங்களில் கூறப்பட் டுள்ளன. பண்புத் தொகையின் வகைகளும் உம்மைத் தொகை யின்வகைகளும் அந்த நூல்களில் கூறப்படவில்லை. இவ்வாறு வடமொழி இலக்கணத்திற்கு முதன்மை கொடுத்துக் கூறுதல் வீரசோழிய நூலின் இயல்பு என்று இராசாராம் கூறியுள்ளார்.

> அநேகமாக வடமொழி இலக்கண மரபு சார்ந் தவை எனக் கருதப்படும் படலங்களில் வடமொழி

> இலக்கணத்தை முதலாவதாகக் கூறுவதைத் தம் நூலின் நோக்கமாக வீரசோழியர் கொண்டுள் ளார் எனலாம். *(1992:215)*

தொகைப் படலத்தில் உள்ள காரிகைகள், சமஸ்கிருதத்தில் வரருசியின் (காத்தியாயனர்) காரிகைகளின் மொழி பெயர்ப்பு போல் உள்ளன என்று சுப்பிரமணிய சாஸ்திரி கூறுகிறார். *(1934: 209)*

சொல்லதிகாரத்தின் நான்காவது படலம் தத்திதாந்தப் படலம் ஆகும். வீரசோழியம் தத்திதாந்தப் பதத்திற்கு இலக்கணம் கூறவில்லை. பிரயோக விவேகம் இதற்கு.

> துன்னும் தொடர்மொழி எல்லாம் ஒழித்து முன்சொல் தனைப்போய்
> மன்னும் பிரத்தியமே தத்திதாந்தம், வழாது அதனைப்
> பன்னும் பொழுது, வலையான் முயன்று உண்பவன் வலையன்
> என்னும் பகுபதப் பேராம் குறிப்பு முற்று என்று அறியே (29)

என்று இலக்கணம் கூறுகிறது. அதாவது முன்சொல் தன்னைத் துன்னும் தொடர்மொழி எல்லாம் ஒழித்து பிரத்தியத்தைச் சேரும் சொல் தத்திதாந்தச் சொல் ஆகும். காட்டாக, 'வலையினால் உண்பான் வலையன்' என்று வரும், "தத்திதாந்தம் என்பது வட மொழி வழக்கு. பிரகிருதி தாத்திதாந்தப் பிரத்தியங்கள் ஏற்றுத் தத்திதாந்தச் சொல்லாகும்". (இராசாரராம்:1992: 217) தமிழில் உள்ள குறிப்புவினையை விளக்க முனையும் வீரசோழிய நூலாசிரியர் அவற்றை பிரகிருதி + தத்திதாந்தப் பிரத்தியம் என்று அமைத்துக்கொண்டு இப்படலத்தில் விளக்குகிறார். தொல்காப்பியர் வினையைத் தெரிநிலைவினை என்றும் குறிப்புவினை என்றும் வகைப்படுத்துகிறார். தமிழில் குறிப்பு வினைமுற்று, தெரிநிலை வினைமுற்று என்ற பாகுபாடு காலம் காட்டுவதை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல.

> முற்றில் முதனிலை வினையாக இருந்தால் அது தெரிநிலை வினைமுற்றாம். முற்றில் முதனிலை,

> பெயராகவோ, பண்பாகவோ இருந்து தொழிலை
> மறைமுகமாகச் காட்டினால் அம்முற்று குறிப்பு
> வினை முற்றாகும் (மீனாட்சி சுந்தரம்,க.: 1974:49)

என்று தமிழில் வினைமுற்றுக்கு விளக்கம் தரப்படுகிறது. எனவே தமிழில் உள்ள குறிப்பு வினைமுற்று வேறு, வீரசோழியம் காட்டும் தத்திதாந்தம் என்பது வேறு ஆகும். வீரசோழியத்தில்,

> துன்னிய சீர்த் தத்திதத்தின் பிரத்தியம் சுவ்வென்பது
> மன்னும் மரபு பிழையாமல் எங்கும் வரப்பெறுமே (52)

என்பதால் சு என்னும் தத்திதப் பிரத்தியம், வேற்றுமைப் பிரத்தியம் சு போல எங்கும் தோன்றி அழிதல் வேண்டும். இதன்படி,

வலையினால் உண்பவன்
வலை + சு + அன்
சு அழிந்து வலையன் என நிற்கும்.

வடமொழி மரபுப்படியே தத்திதாந்தப் பிரத்தியங்கள் இவை என வீரசோழியம் பட்டியல் இடுகிறது. அன், இயன், ஈனன், இகன், ஏயன், வான், வதி, அம், இவன், உ, அ, ஆன், ஆளன், மான், அகன் முதலியவை தத்திதாந்தப் பிரத்தியங்களாம். (சூத். 53, 54) இவற்றுக்குக் காட்டப்பட்டுள்ள எடுத்துக் காட்டுகளும் பெரும்பான்மையும் வடமொழி சார்ந்தவையே.

அதிதி மகன் ஆதித்தியன்
திதி மகன் தைத்தியன்
விநதை மகன் வைநதேயன்
குரு வருக்கத்தான் கௌரவன்
புத்தனைத் தெய்வமாக உடையான் பௌத்தன்.

முதலியவை காட்டப்பட்டுள்ளன. இவ்வாறே குணக்குறிப்பும், பெயர்களும்(55) பெண்மையை விளக்கும் பிரத்தியங்களும் (56) கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் படலத்தில் உள்ள செய்திகள் பெரும்பாலும் வடமொழி சார்ந்தே வருவன. ஆதலால் இப் படலத்தின் மூன்று காரிகைகளில் வடசொற்கள் தமிழில் வந்து வழங்கும் விதம் பற்றி இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

ஐந்தாவது படலம் தாதுப்படலம் ஆகும். இதில் வடமொழித் தாது + பிரத்தியம் என்னும் வழக்கைப் போல தமிழிலும் இந்த வழக்கையே கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மன்னிய சீர் வடநூலில் சர பச என்று வந்து
துன்னிய தாதுக்களின் போலி போலத் தொகு தமிழ்க்கும்
பன்னிய தாதுக்களைப் படைத்துக் கொள்க முன்னிலையில் .
உன்னிய ஏவல் ஒருமைச் சொல் போன்று உலகிற்கு ஒக்கவே. (60)

என்பது இப்படலத்தின் முதல் சூத்திரம். வடமொழியில் முன்னிலை ஏவல் ஒருமைச் சொல் போன்று வருவனவாகிய சர, பச என்பது போல தமிழிலும் தாதுக்களை நட, அடு என்று உருவாக்கிக் கொள்க என்பதும் அப்படி உருவாக்கப்பட்ட தாதுக்கள் சுவ்வென்னும் பிரத்தியம் நின்று அழியுமுன் பொருட் போலியாகவே இருக்கும் என்பதும் இதன் பொருள். இந்த சூத்திரத்திலேயே வடமொழி இலக்கணத்தை தமிழில் பிரயோகிக்கும் நோக்கம் தெரிகிறது.

நட, அடு, செய், பண்ணு, நண்ணு, போ, சிந்தி, நவில், உண், இரு, கிட, விடு, கூறு, பெறு, மறு, கொள், அழை, வாழ், கிளை, வெல், கட, நடு, தங்கு, கசி, பொசி, பூசு, மிகு, புகு, செல், இடு, முடி, ஏந்து, கொல், என முப்பத்து மூன்று தாதுக்கள் இரண்டாம் சூத்திரத்தில் கொடுக்கப்பட்டு இது போலவே மற்றவற்றையும் தோற்றுவித்துக் கொள்க என்று கூறப்பட்டுள்ளது. மூன்றாம் சூத்திரத்துள் வான், உ, மை, அம், பு, கை, வல், இ, வு, தல், அல், அன், பான், அலை, கு, தான், வி, தி, வை, சி முதலியனவும் சுவும் பிரத்தியங்களாய் தாதுவின் பின் வினைக் குறிப்பிலும் வேற்றுமைப் பொருளிலும் வரும் என்று கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, போவான், நாற்று, மென்மை , ஆட்டம், கற்பு முதலிய சொற்கள் காட்டப்பட்டுள்ளன. தொடர்ந்து தாதுக்களோடு பிரத்தியங்கள் சேரும் முறையும் (64) காரிதத் தாதுக் களும் (65) காலம் காட்டும் பிரத்தியங்களும் (66) துமாந்த, (67) துவாந்தப் (68) பிரத்தியங்களும் கூறப்பட்டுள்ளன. தமிழ்த் தாதுக்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை,

கேவலத் தாது - ஆடு
காரிதத் தாது - ஆட்டு
காரிதக் காரிதத் தாது - ஆட்டுவி
கேவலக் கேவலக் கேவலத் தாது - ஆட்டுவிப்பி

என்பனவாம். காலம் காட்டும் பிரத்தியங்களில் த, ன, ய, ஆகிய மூன்றும் இறந்த காலத்தையும், கிற, சு, ஆநின்ற ஆகிய மூன்றும் நிகழ்காலத்தையும், கும், உம், ம் ஆகிய மூன்றும் எதிர்காலத்தையும் காட்டும் பிரத்தியங்களாம்.

இறந்த காலம் காட்டும் பிரத்தியங்கள்

த - பிறந்த பிள்ளை
ன - ஊட்டின தாய்
ய - சொல்லிய சாத்தன்

நிகழ் காலம் காட்டும் பிரத்தியங்கள்

ற - செய்கிற சாத்தன்
சு - செய் சாத்தன் (சு நின்று அழிந்தது)
ஆனின்ற - செய்யா நின்ற சாத்தன்

எதிர் காலம் காட்டும் பிரத்தியங்கள்

கும் - நிற்கும் சாத்தன்
உம் - அறியும் சாத்தன்
ம் - சாம் கிழவி

வீரசோழியத்தின் இந்த அணுகுமுறை தாது + பிரத்தியம் என்னும் முறை ஆகும். தொல்காப்பியத்தின் அணுகுமுறை வினை + கால இடைநிலை + திணை, பால், எண், இடம், காட்டும் விகுதி என்ற அடிப்படையாகும். ஆனால் இதைப் பொருட்படுத்தாமல் வீரசோழிய நூலாசிரியர் தாது + பிரத்தியம் என்ற அமைப்பையே எங்கும் பின்பற்றுகிறார். இதற்கு 'தமிழ்ச் சொல்லிற்கு எல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல் லாம் தமிழுக்கும் பெறும்' என்று உரையாசிரியர் காரணமும் கூறுகிறார். காலம் காட்டும் இடைநிலைகளைப் பற்றி இவர் கூறி

யுள்ள கருத்துகளை நன்னூலில் எழுத்ததிகாரத்தில் பதவியலில் வரும் கருத்துகளோடு பொருத்திப் பார்ப்பது பயனுள்ளதாகும்.

நன்னூலில் வரும் காலம் காட்டும் இடைநிலைகளையும் வீரசோழியத்தில் வரும் காலம் காட்டும் பிரத்தியங்களையும் ஒப்பிடும்போது ஒரு முக்கியமான விடயத்தை மறந்துவிடக் கூடாது. வீரசோழியத்தில் இவை விகுதிகளாகவே காட்டப்பட்டுள்ளன. நன்னூலில் இவை காலம் காட்டும் இடை நிலைகள் என்று இடைநிலையாகக் கூறப்பட்டுள்ளன. வீரசோழிய அமைப்பு முன்னிலை ஏவல் ஒருமையாக வரும் தாது + காலம் காட்டும் பிரத்தியம் என்று இருக்க, நன்னூலில் வினைப் பகுதி + கால இடைநிலை + திணை, பால், இடம், எண் காட்டும் விகுதி என்று அமைந்துள்ளது. நன்னூலில் பகுதி, விகுதி, இடை நிலை, சந்தி, சாரியை, விகாரம், ஆகிய ஆறும் பகுபத உறுப்புகளாகக் கூறப்பட்டுள்ளன.

| காலம் | வீரசோழியம் | நன்னூல் |
|---|---|---|
| இறந்த காலம் | த<br>ன<br>ய | த்<br>ட்<br>ற்<br>இன் |
| நிகழ்காலம் | கிற<br>சு<br>ஆநின்ற | கிறு<br>கின்று<br>ஆநின்று |
| எதிர்காலம் | கும்<br>உம்<br>ம் | ப்<br>வ் |

நன்னூலில் உள்ள வகைப்பாடு வீரசோழியத்தில் இருப்பதை விடத் தெளிவாகவும் தமிழ் மரபோடு பொருந்தி வருவதாகவும் உள்ளதைக் காணலாம்.

சொல்லதிகாரத்தின் இறுதிப்படலம் கிரியாபதப் படலம் ஆகும். கிரியாபதம் என்பது வினைச்சொல்லாகும். இந்தப் பட

லத்தில், ஒருவன், ஒருத்தி, சிறப்பு, பலர், ஒன்று, பல ஆகிய ஆறு பால்களின் பின்பும் மூன்று காலங்களிலும் மூன்று இடங்களிலும் வரும் பதங்கள் இத்தனை என்று கூறப்பட்டுள்ளது. இதன்படி மேற்கூறிய ஆறு சொற்களையும் வைத்து இவற்றுடன் படர்க்கையில் வரும் மூன்று காலத்தையும் வைத்து உறழப் பதினெட்டு கிரியா பதம் வரும். ஒருமை, சிறப்பு, பன்மை ஆகிய மூன்றனோடு, மூன்று காலத்தையும் தன்மை, முன்னிலை, ஆகிய இரண்டு இடங்களையும் வைத்து உறழப் பதினெட்டு கிரியா பதங்கள் கிடைக்கும். இந்த முப்பத்தாறு கிரியாபதமும் ஒன்றுக்கு இரண்டாகக் கூறப்பட்டுள்ள பிரத்தியங்களோடு பொருந்தி எழுபத் திரண்டாக வரும். இப்படலத்தின் பதினோராம் சூத்திரம் எழுத்துப் பிழைகள் வரக்கூடாது என்று விதிக்கிறது. இதன் உரையில்,

> நாளி, கோளி, மூளை, உளக்கு, வாளை, வளி எனவும்; விழக்கு, பழிங்கு, தழிகை, இழமை எனவும், பதினாறாம் உடலும் (ள) பதினைந்தாம் உடலும் (ழ) தம்முட்டேற்றக் கருநிலஞ் சுற்றின தேசத்துச் சிலர் வழங்குவர்.(வீர.: 86)

என்று உரையாசிரியர் எழுதியுள்ளார். இதேபோல் தமிழ் நாட்டில் வட்டார வாரியாகப் பிழையாக வழங்கும் சொல் வடிவங்களையும் காட்டியுள்ளார்.

**நேமிநாதம்**

நேமிநாதம் நூலின் சொல்லதிகாரம், தொல்காப்பியச் சொல்லதிகாரம் போலவே ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. இயல்களின் பெயரும் முறையும் தொல்காப்பியத்தை ஒட்டியே அமைந்துள்ளன.

| தொல்காப்பியம் | நேமிநாதம் |
|---|---|
| கிளவியாக்கம் | மொழியாக்க மரபு |
| வேற்றுமையியல் | வேற்றுமை மரபு |
| வேற்றுமை மயங்கியல் | உருபு மயங்கியல் |

| | |
|---|---|
| விளி மரபு | விளி மரபு |
| பெயரியல் | பெயர் மரபு |
| வினையியல் | வினை மரபு |
| இடையியல் | இடைச்சொல் மரபு |
| உரியியல் | உரிச்சொல் மரபு |
| எச்சவியல் | எச்சமரபு |

தொல்காப்பியத்தை ஒட்டியே நேமிநாதம் அமைந்திருப்பதை அதன் இயலமைப்பு முறையும் இயல்களுக்குப் பெயரிட்டுள்ள முறையும் காட்டுகின்றன. நேமிநாதம் நூலின் தோற்றத்திற்கான காரணத்தையும் நூலின் அளவினையும் உணர்த்தும் பாயிரத்தின் உரைப்பகுதியில்,

> இந்நூல் செய்ததற்குக் காரணம் யாதோ? எனின், விரிந்த நூல் உணரா மேதினியோர்க்குச் சுருங்கச் செய்தான். அந்நூல் தெரிவது காரணமாக என்பது... இந்நூல் எவ்வளவினதாகச் செய்யப் பட்டதோ எனின், தொகுத்துச் செய்தலும் விரித்துச் செய்தலும் தொகை விரிப்படுத்துச் செய்தலும் மொழிபெயர்த்துச் செய்தலும் என்பன. அவற்றுள் இந்நூல் தொகுத்து உரைக்கப்பட்டது.

என்று இந்த நூல் சுருக்கமாகவும் தொகுத்தும் செய்யப்பட்டுள்ளமை கூறப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் செய்யப்பட்டுள்ளது எனும் போதே ஏதேனும் ஒரு நூலை முதனூலாகக் கொண்டு இந்நூல் இதைச் சுருக்கி உரைத்திருக்க வேண்டும் என ஊகிப்பது எளிது. அப்படிப்பாக்கும்போது இயலமைப்பில் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துடன் இந்நூலுக்கு உள்ள ஒப்புமையால் இந்நூலின் சொல்லதிகாரம் தொல்காப்பியச் சொல்லதிகாரத் திற்கு வழி நூலாக, வழி நூல்களில் ஒருவகையாக தொகுத்துச் சொல்லும் நூலாக இயற்றப்பட்டதென்பது புலப்படும்.

நேமிநாதம் நூலில் பாயிரத்திற்கு முன்பு இரண்டு சிறப்புப் பாயிர வெண்பாக்கள் உள்ளன. இவை இரண்டும் முறையே

எழுத்து, சொல் அதிகாரங்களுக்கு உரியவை. சொல்லதிகாரத் திற்கு உரிய சிறப்புப் பாயிர வெண்பா,

தொல்காப்பிக் கடலின் சொல் தீபச் சுற்றளக்கப்
பல்காற் கொண்டோடும் படகு என்ப - பல்கோட்டுக்
கோமிகாமல் புலனை வெல்லும் குணவீர
நேமி நாதத்தின் நெறி.

தொல்காப்பியம் என்ற கடல் போல் விரிந்த நூலைக்கடக்கப் பயன்படும் படகு என்பது இதன் பொருள். நூல் அந்த நோக்கில் எழுதப்பட்டுள்ளது என்பதற்கு இந்த வெண்பா நல்ல சான்றா கும். நேமிநாதம் நூலின் சொல்லதிகார அமைப்பு தொல்காப்பி யத்தை ஒட்டி அமைந்துள்ளமை மேலே காட்டப்பட்டது. இயல் களில் இலக்கணம் கூறும் முறையில் நேமிநாதத்திற்கும் தொல் காப்பியத்திற்கும் உள்ள ஒற்றுமை ஆராயப்பட வேண்டும். இவ் வாறு ஆராயும் போது நேமிநாதத்தின் ஒன்பது இயல்களையும் தொல்காப்பியத்தின் ஒன்பது இயல்களோடும் சூத்திரத்துக்குச் சூத்திரம் ஒப்பிட்டு ஆராய வேண்டுவது அவசியம் எனினும் இங்கு, விரிவு கருதி அத்தகைய ஆய்வு மேற் கொள்ளப்படவில்லை. எனினும் இலக்கண மரபுகளை இனம் காணும் இந்த ஆய்வில் அத்தகைய நுட்பமான ஒப்பீட்டு முறையை முழுவதும் கைவிட்டு விட்டுச் செல்வதும் இயலாது. எனவே ஒரு இயலுடன் இயலை ஒப்பிடுவது என்ற அளவில் மட்டும் ஆய்வு செய்யப்படு கிறது.

தொல்காப்பியத்தில் உள்ள கிளவியாக்கம் அறுபத்திரண்டு நூற்பாக்களைக் கொண்டது. நேமிநாதத்தில் மொழியாக்க மரபு பதினைந்து வெண்பாக்களைக் கொண்டது. முதல் வெண்பா தற்சிறப்புப் பாயிரமாகவும் இரண்டாம் வெண்பா சொல்லதி காரம் எட்டுவகையில் ஆராயப்படும் என்றும் கூறுகின்றன. மூன்றாம் சூத்திரம் உயர்திணை, அஃறிணையையும், நான்காம் சூத்திரம் ஐம்பால்களையும், ஐந்தாம் சூத்திரம் ஐம்பால் ஈறு களையும் (வினை,வினைக்குறிப்பு) உணர்த்துகின்றன. இந்த மூன்று சூத்திரங்களிலும் கூறப்பட்டுள்ள இலக்கணம் கிளவியாக்கத் தில் முதல் ஒன்பது சூத்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

நேமிநாதம் ஆறாம் சூத்திரத்தில் பால், திணை, வினா, மரபு, காலம், செப்பு, இட வழுக்களும், ஏழாம் சூத்திரத்தில் வினா வெதிர் வினாதல், உற்றது உரைத்தல், உறுவது உரைத்தல், ஏவல் ஆகிய விடை வழுவமைதிகளும் கூறப்பட்டுள்ளன. தொல் காப் பியத்தில் 13, 14, 15 ஆகிய மூன்று சூத்திரங்களிலும் இவை இடம் பெற்றுள்ளன. எட்டாம் சூத்திரத்தில், திணை ஐயம் நேர்ந்த வழிச் சொல் நிகழும் மரபு கூறப்பட்டுள்ளது. இது தொல் காப் பியத்தில் 23, 24, 25 ஆகிய சூத்திரங்களில் உள்ளது. தொல் காப்பியம் 49ஆம் சூத்திரத்தில் கூறப்பட்ட ஒரு பெயர்ப் பொதுச் சொல்லின் இலக்கணமும் நேமிநாதத்தில் எட்டாம் சூத்திரத் திலேயே கூறப்பட்டுள்ளது.

நேமிநாதத்தில் ஒன்பதாம் சூத்திரம் உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டும் ஒன்றாக வரும்போது முடிக்கும் விதம் கூறப் பட்டுள்ளது. இது தொல்காப்பியத்தில் 43, 45, 51, 60 ஆகிய சூத் திரங்களில் உள்ளது. பதினோராவது சூத்திரம் திணை, பால் ஆகியவற்றின் வழுவமைதியைக் கூறுகிறது. இது தொல்காப்பியத் தில் 17, 55 ஆகிய சூத்திரங்களில் உள்ளது. பன்னிரண்டாம் சூத் திரத்தில் இத்தனை என்று எண்ணி வரையறுக்கப்பட்ட சொல் லைச் சொல்லும்போது - சினை, முதல், உம்மை கொடுத்துச் சொல்ல வேண்டும் என்று உள்ளது. இது தொல்காப்பியத்தில் 33 ஆம் சூத்திரத்தில் உள்ளது. பதின்மூன்றாம் சூத்திரத்தில் 'பொதுப்பிரி பால் எண் ஒருமைக்கண் அன்றிப்போகா' என்று உள்ளது. இது தொல்காப்பியத்தில் 44 ஆம் சூத்திரத்தில் உள்ளது. பதினான்காம் சூத்திரத்தில் பல பொருள் தரும் ஒரு சொல்லை வினையினாலும், இனத்தினாலும் சார்பினாலும் அறிய வேண்டும் என்று உள்ளது. இது தொல்காப்பியத்தில் 54ஆம் சூத்திரத்தில் உள்ளது. இதே சூத்திரத்தில் இயற்பெயரும் சிறப்புப்பெயரும் வரும்போது, சிறப்புப் பெயரை முன் வைத்துச் சொல்லுக என்று உள்ளது. இது தொல்காப்பியத்தில் 41 ஆவது சூத்திரத்தில் உள்ளது.

இறுதிச் சூத்திரத்தில் சொற்களுக்குப் பண்பு கொடுக்கும் போது செய்யுளுள் இனமின்றியும் வழக்கில் இனத்தோடும் வரும்

என்று உள்ளது. இது தொல்காப்பியத்தில் 18ஆம் சூத்திரத்தில் உள்ளது. இதே சூத்திரத்தில் வண்ணச் சினைச் சொல் வரும் விதம் கூறப்பட்டுள்ளது. இது தொல்காப்பியத்தில் 26ஆம் சூத்திரத்தில் உள்ளது. தொல்காப்பியம் கிளவியாக்கத்தில் உள்ள 62 சூத்திரங்களுக்குள், சிலவற்றிற்கு இணையான சூத்திரங்கள் நேமி நாதத்தில் இல்லை. ஏற்கெனவே கூறியபடி நேமிநாதம் சுருக்க நூல் என்பதால் இவ்வாறு உள்ளது. மேலும் சொல்லதிகார முதல் நூற்பாவில்,

> விரித்துரைத்த நூல்களினும் வேண்டுவன கொண்டு
>
> தெரிந்துரைப்பன் சொல்லின் திறம்

என்று கூறியிருப்பதால் வேண்டுவன மட்டும் கொண்டு மற்றவை விடப்பட்டுள்ளன. தொல்காப்பியம் சொல்லதிகாரத்தை 463 சூத்திரங்களில் (சேனாவரையர் உரைப்படி) விளக்கியிருக்க, நேமிநாதம் எழுபது சூத்திரங்களிலேயே சொல்லதிகாரத்தை அடக்கியுள்ளது.

**நன்னூல்**

நன்னூலில் சொல்லதிகாரம் ஐந்து இயல்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

1. பெயரியல்
2. வினையியல்
3. பொதுவியல்
4. இடையியல்
5. உரியியல்

இவற்றில், பொதுவியல் தவிரப் பிற நான்கு இயல்களும் தொல் காப்பித்தில் உள்ள இயல் பெயர்களையே கொண்டுள்ளன. தொல்காப்பியத்தில் உள்ள கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு ஆகிய இயல்கள் நன்னூலில் இல்லை. கிளவியாக்கத்தில் கூறப்பட்ட பொருள்களுள் சில பொதுவியலில் கூறப்பட்டுள்ளன. ஏனைய மூன்று இயல்களி லும் உள்ள செய்திகள் (வேற்றுமை பற்றிவை). பெயர் இயலி லேயே உள்ளன.

நன்னூலில் உள்ள பொதுவியல், தொல்காப்பியத்தில் கிளவி யாக்கத்திலும் எச்சவியலிலும் உள்ள செய்திகள் சிலவற்றைக் கொண்டுள்ளது. தொல்காப்பியம் கிளவியாக்கத்தில் சொற்கள் பொளண யான அணுகுமுறை இல்லை.

நன்னூலில், பொதுவியலில் 24 முதல் 59 வரை உள்ள சூத் திரங்களில் திணை, பால், இடம், காலம், வினா, விடை, மரபு களின் வழுவும் வழுவமைதியும் கூறப்பட்டுள்ளன. எச்சவியலில் உள்ள தொகை, பொருள்கோள் ஆகிய இலக்கணங்களும் பொது வியலில் உள்ளன. இவற்றை நோக்கப் பொதுவியல், தொடரியல் செய்திகளை உள்ளடக்கியது என்று கூறலாம். நன்னூல் இயல மைப்பை அடிப்படையாகக் கொண்டு அதைப்பின் வருமாறு வரை யறை செய்யலாம்.

| | |
|---|---|
| பெயரியல்<br>வினையியல் | சிறப்பிலக்கணம் |
| பொதுவியல் | பொதுவிலக்கணம் |
| இடையியல்<br>உரியியல் | சிறப்பிலக்கணம் |

நன்னூல் சிறப்பு - பொது - சிறப்பு என்று அமைந்து இலக் கணம் கூறுகிறது. தொல்காப்பியத்தில் கிளவியாக்கம் முதல் விளிமரபு வரை உள்ளவை பொது இலக்கணத்தையும் பெயரி யல் முதல் உரியியல் வரை உள்ள நான்கு இயல்கள் சிறப்பிலக்க ணத்தையும் இறுதியில் உள்ள எச்சவியல் பொதுவிலக்கணத்தை யும் கூறுகிறது என்று சண்முகம் குறிப்பிட்டுள்ளார். (1984:36)

தொல்காப்பியத்தின் அமைப்பு பொது - சிறப்பு - பொது என்று அமைந்து இலக்கணம் கூறுகிறது. வேற்றுமையியல், வேற் றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்று இயல்களில், கூறப் பட்டுள்ள வேற்றுமை இலக்கணம் பெயர் மட்டுமே வேற்றுமை ஏற்கும் என்பதால் - பெயர்ச் சொல்லுக்கே சிறப்பாக உரிய இலக் கணம், அது பொது இலக்கணம் அல்ல என்ற வாதத்தை முன் வைக்கலாம். எனினும் பெயர்ச்சொல் வேற்றுமை ஏற்கும் தன்மை கொண்டது; ஆனால் வேற்றுமை ஏற்றால் தான் அது பெயர் என்று

கூறமுடியாது. வேற்றுமை ஏற்கும் தன்மை இருந்தால் போதும். வேற்றுமை ஏற்காத போதும் அது பெயரே. ஆகவே, வேற்றுமை ஏற்பது பெயர்தான் எனினும் வேற்றுமை இலக்கணம் பெயருக்கு மட்டுமே சிறப்பான இலக்கணம் என்று கூறிவிட முடியாது. மேலும் வேற்றுமை ஏற்றபின் பெயரின் நிலை ஒரு தொடரில் என்னவாக இருக்கிறது என்பதைக் கொண்டே வேற்றுமை இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் வேற்றுமை இலக்கணம் கூறும்போது என்னென்ன பொருளில் வரும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆக வேற்றுமை இலக்கணம் தொடரியல் இலக்கணமாகும். எனவே தான், இலக்கண ஆசிரியர்கள் தொடர்களைப் பிரிக்கும்போதே, வேற்றுமைத் தொடர், அல்வழித் தொடர் என்று பிரிக்கின்றனர். ஆகவே வேற்றுமை இலக்கணம் பொது இலக்கணம் என்று கூறப்படுகிறது. தொல்காப்பியச் சொல்லதிகார அமைப்பையும் நன்னூல் சொல்லதிகார அமைப்பையும் கீழ்க்கண்டவாறு ஒப்பிடலாம்.

| | **தொல்காப்பியம்** | | **நன்னூல்** |
|---|---|---|---|
| *1 - 4.* | பொது இலக்கணம் | *1- 2* | சிறப்பு இலக்கணம் |
| *5 - 8* | சிறப்பு இலக்கணம் | *3* | பொது இலக்கணம் |
| *9* | பொது இலக்கணம் | *4 - 5* | சிறப்பு இலக்கணம் |

தொல்காப்பியத்தைப் போல முதலிலும் இறுதியிலும் பொது இலக்கணத்தை வைக்கமால் இடையில் வைத்ததற்குக் காரணம், கிளவிகள் பொருளை உணர்த்தும் விதத்திற்கு, தொல்காப்பியர் அளித்த முக்கியத்துவத்தை நன்னூலார் அளிக்காமையே எனலாம். நன்னூல் உரையாசிரியரான மயிலைநாதரும்,

> பெயர் வினை இடை உரி என்னும் நான்கு சொல்லின் இயல்பும் உணர்த்திற்றாதலால் பொதுவியல் என்னும் பெயர்த்து, மேலோத்தினோடு இதற்கு இயைபு என்னையோவெனின் கீழ்ப்போன பெயரையும் வினையையும் மேல்வரும் இடையையும் உரியையும் நோக்கி நிற்கும் சிங்க நோக்கெனக் கொள்க. (மயிலை.: 180)

என்று பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு சொற்களின் இலக்கணத்தையும் உணர்த்துவதே பொதுவியல் என்று கூறி யுள்ளார்.

தொல்காப்பியர் மூன்று இயல்களில் விளக்கிய வேற்றுமை இலக்கணத்தை, நன்னூலார் பெயரியலின் பின்பகுதியில் வைத் துள்ளார். வேற்றுமையின் தொடரியல் அணுகுமுறை தொல் காப்பியத்தில் உள்ளது போல நன்னூலில் இல்லை. பெயரியலில் 34 முதல் 62 வரையுள்ள 29 நூற்பாக்கள் வேற்றுமை இலக்க ணத்தைப் பேசுகின்றன. இவற்றில் முதல் ஏழு வேற்றுமைகளைப் பற்றி பன்னிரண்டு நூற்பாக்களும், விளி வேற்றுமை பற்றிப் பன் னிரண்டு நூற்பாக்களும், வேற்றுமை மயக்கம் பற்றி ஒரு நூற்பா வும், எஞ்சிய நான்கு நூற்பாக்கள் வேற்றுமையின் பொது இலக் கணமும் கூறுகின்றன. தொல்காப்பியத்தில், வேற்றுமை - வேற் றுமை மயக்கம் - விளி என்று உள்ளதைப் போல் அல்லாமல் நன் னூலில், வேற்றுமை - விளி - வேற்றுமை மயக்கம் என்ற அமைப்பு உள்ளது. தொல்காப்பியர் எட்டு வேற்றுமை என்று கூறினாராயி னும் முதல் வேற்றுமைக்கும் விளிவேற்றுமைக்கும் உருபு இல்லை என்பதாலும் பெயரது திரிபே விளி என்பதாலும் உருபு மயக்கம், விளி வேற்றுமைக்குப் பொருந்தாது என்பதாலும் விளி வேற்று மைக்கு முன், வேற்றுமை இயலை அடுத்து வேற்றுமை மயங்கி யலை வைத்தார்.

தொல்காப்பியரைப் போலவே நன்னூலாரும் எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை என்றும் பெயர் தோன்று நிலையே எழுவாய் என்றும் கூறியுள்ளார். தொல்காப்பியர் எழுவாய் வேற்றுமை, பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினை நிலை உரைத்தல், வினாவிற்கு ஏற்றல், பண்புகொள வருதல், பெயர் கொள வருதல் என்ற ஆறு பொருள்களில் வரும் என்று(5) கூறியுள்ளார். நன்னூல், 'வினை பெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே' (295) என்று வினை, பெயர், வினாக்கொள்ளல் என்று மூன்று பொருளையே தருகிறது. மயிலைநாதர் இச்சூத்திர உரையில்,

> வினைநிலை யுரைத்தலும் வினாவிற் கேற்றலும்
> பெயர்கொள வருதலும் பெயர்ப் பயனிலையே

என்ற அகத்திய நூற்பாவை மேற்கோள் காட்டியுள்ளார். இதன் படி நன்னூலார் இங்கு தொல்காப்பியத்தைப் பின்பற்றாமல் அகத்தியத்தைப் பின்பற்றியுள்ளார் எனலாம். இவ்வாறே மூன்றாம் வேற்றுமைக்கு ஆல், ஆன், ஒடு, ஓடு, என நான்கு உருபு கொண்டதற்கும் அகத்திய நூற்பாவையே மேற்கோள் காட்டியுள்ளார். சூத்திரம் பின்வருமாறு,

ஆலும் ஆனும் ஒடும் ஒடுவும்
சாலும் மூன்றாம் வேற்றுமைத் ததுவே
செய்வோன் காரணம் செயத்தகு கருவி
எய்திய தொழில்முதல் இயைபுடைத்ததன் பொருள். (மயிலை146)

ஆறாம் வேற்றுமை உருபு அது என்று தொல்காப்பியம் கூறும். நன்னூலில்,

ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபு ஆம்; பண்பு, உறுப்பு,
ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம்,
திரிபின் ஆக்கம் ஆம்; தற்கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே (300)

என்று ஆறாம் வேற்றுமை உருபுகள் அது, ஆது, என்பன ஒருமைக்கும் ‘அ’ பன்மைக்கும் வரும் என்றும் இதன் பொருள் ஐந்து தற்கிழமையும், பிறிதின் கிழமையும் ஆகும் என்றும் கூறுகிறது. இந்த நூற்பா உரையில் மயிலைநாதர்,

ஆறன் உருபே அது ஆது அவ்வும்
வேறொன் றுரியதைத் தனக்குரியதை என
இருபாற் கிழமையின் மருவுற வருமே
ஐம்பா லுரிமையும் அதன்தற் கிழமை(மயிலை.:150)

என்ற அகத்திய நூற்பாவை மேற்கோள் காட்டியுள்ளார். எனவே பொதுவாக நன்னூல் தொல்காப்பிய மரபில் இலக்கணம் கூறிச் சென்றாலும் பல இடங்களில் தொல்காப்பியத்திலிருந்து வேறுபடுகிறது என்பது தெளிவு.

விளிவேற்றுமை பன்னிரண்டு நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளது. இதன்பின் சினையும் முதலும் ஒரு தொடரில் நிற்கும்

போது உருபுகள் நிற்கும் முறை கூறப்படுகிறது. தொடர்ந்து வேற்றுமை மயக்கம் ஒரே ஒரு நூற்பாவில் கூறப்படுகிறது. அந்த நூற்பா,

> யாதன் உருபில் கூறிற்று ஆயினும்
> பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும் (23)

என்பதாகும். இது தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியலில் இரு பத்து மூன்றாவது நூற்பாவாகும். இதை அப்படியே எடுத்து தம் நூலில் பவணந்தி முனிவர் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

நன்னூலில் பெயரியல் மூன்று பிரிவாக அமைந்துள்ளது.

*2 - 17* சொல்லின் பொது இலக்கணம்
*18 - 33* பெயர்ச் சொல்லின் இலக்கணம்
*34 - 62* வேற்றுமை இலக்கணம்

கிளவியாக்கம் போன்றதொரு பகுதி நன்னூலில் இல்லாததால் பெயரியலின் முதல் பகுதியில் சொல்லின் பொது இலக்கணம் உணர்த்தப்பட்டுள்ளது. இதில் மூவகை மொழி (ஒரு மொழி, தொடர் மொழி, பொது மொழி) இருதிணை, ஐம்பால், மூவிடம், வழக்கு, செய்யுள், வெளிப்படை, குறிப்பு ஆகியன கூறப்பட்டுள் ளன. இங்கு சொல்லின் பொது இலக்கணம் கூறப்பட்டுள்ள போதிலும், காலம் பற்றிய இலக்கணத்தைப் பொதுவியலில் கூறியுள்ளார். இரண்டாவது பகுதியில் ஐந்து பாலுக்கும் உரிய பெயர்களும் இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்களும் தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களும் கூறப்பட்டுள் ளன. இப்பகுதியின் இறுதியில் ஆகுபெயர் பற்றிய சூத்திரம் உள் ளது. அதில் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், அளவை, சொல், தானி, கருவி, காரியம், கருத்தா முதலிய ஆகு பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இது தொல்காப்பியத்தில் வேற் றுமை மயங்கியலின் இறுதியில் உள்ளது.

வினையியலில் பவணந்தி முனிவர் வினையைத் தெரிநிலை, குறிப்பு என இரண்டாகப் பிரிக்கிறார். தெரிநிலைவினை, செய் பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறினை யும் காட்டுவது ஆகும். இவற்றுள் செய்பவன் என்பதை மட்டும்

காட்டுவது குறிப்பு வினையாகும். வினையை வேறொரு நோக்கில் முற்று, எச்சம் என இரண்டாகப் பிரிக்கின்றார். முற்று படர்க்கையில் ஐம்பால்களையும் காட்டும்; தன்மை, முன்னிலையில் ஒருமை, பன்மை ஆகிய எண்ணை மட்டும் காட்டும். இவை மூன்று காலங்களுக்கும் வரும். எச்சம் பெயரெச்சம், வினையெச்சம் என இரண்டாகும். இதுவே நன்னூலாரின் வினைச்சொல் பாகுபாட்டின் மையம் ஆகும்.

முற்று

| படர்க்கை (5) | தன்மை (2) | முன்னிலை (2) |
| --- | --- | --- |
| ஆண்பால் | ஒருமை | ஒருமை |
| பெண்பால் | பன்மை | பன்மை |
| பலர்பால் | | |
| ஒன்றன்பால் | | |
| பலவின்பால் | | |

எச்சம்

| பெயரெச்சம் (3) | வினையெச்சம் (12) |
| --- | --- |
| செய்த | செய்து |
| செய்கின்ற | செய்பு |
| செய்யும் | செய்யா |
| | செய்யூ |
| | செய்தென |
| | செய |
| | செயின் |
| | செய்யிய |
| | செய்யியர் |
| | வான் |
| | பான் |
| | பாக்கு |

இவற்றில் பெயரெச்சம் மூன்றும் முறையே மூன்று காலங்களையும் காட்டும். வினை எச்சத்தில் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென ஆகிய ஐந்தும் இறந்த காலத்தையும் செய என்பது நிகழ்காலத்தையும் மற்றவை எதிர்காலத்தையும் குறித்து வரும். எச்சங்களுக்கு வாய்பாடுகளையும் முற்றிற்கு விகுதிகளையும் (பால், எண், திணை) நன்னூலார் கூறியுள்ளார்.

நன்னூலில் பெயரெச்சம் வினையெச்சம் இவற்றுக்குக் கூறப் படும் இலக்கணம் குறித்து நோக்குதல் வேண்டும்.

செய்த, செய்கின்ற, செய்யும் என் பாட்டில்
காலமும் செயலும் தோன்றிப் பாலொடு
செய்வது ஆதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச்சம்மே. (நன்.- 340)

செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாட்டில் மூன்று காலத்தையும் தொழிலையும் காட்டிப், பால் காட்டாமல் செய் பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் எஞ்ச நிற்பது பெயர் எச்சமாகும். பெயர் எச்சத்திற்கு இவ்வாறு இலக்கணம் கூற, பவணந்தி முனிவர்க்குத் தூண்டுதலாக இருந்தது எது என்பதை நோக்கும் போது மயிலைநாதர் காட்டும் மேற்கோள் நூற்பா இதற்கு வழிகாட்டியிருக்கக் கூடும் எனத் தோன்றுகிறது. அந்த நூற்பா பின்வருமாறு,

காலமும் வினையும் தோன்றிப் பால் தோன்றாது
பெயர் கொள்ளும்மது பெயரெச்சம்மே. (மயிலை.: 172)

இந்த நூற்பா அகத்தியர் இயற்றியது என்பது மயிலைநாதர் கூற் றாகும். இந்த இரண்டு நூற்பாக்களையும் நோக்கும்போது இரண் டுக்கும் பொருளிலும் சொல்முறையிலும் ஒற்றுமை உள்ளதை எளிதில் அறியலாம். வினையெச்சம் பற்றி நன்னூலில் கூறும் இலக் கணத்திலும் இத்தகைய ஒற்றுமையைக் காண முடிகிறது.

தொழிலும் காலமும் தோன்றிப் பால், வினை
ஒழிய நிற்பது வினையெச்சம்மே. (நன்.-342)

என்பது நன்னூல் நூற்பா. தொழிலையும் காலத்தையும் காட்டிப் பால் காட்டாமல், வினை எஞ்ச நிற்பது வினையெச்சம் என்று இதற்குப் பொருள். இதன் உரையில் மயிலைநாதர்,

காலமும் வினையும் தோன்றிப்பால் தோன்றாது
வினைகொள் ளும்மது வினைஎச் சம்மே. (மேற்படி: 173)

என்ற அகத்திய நூற்பாவை மேற்கோள் காட்டுகிறார். இந்த இரண்டு நூற்பாக்களுக்கும் ஒற்றுமை உள்ளதையும் காணலாம்.

தொல்காப்பியத்தில் பெயர், வினை எச்சங்களைப் பற்றிக் கூறி இருப்பினும் அவற்றுக்கு இது போல இலக்கணம் கூறப்பட வில்லை. வேற்றுமை இலக்கணத்தில் அவிநய நெறியையும் எச்ச இலக்கணத்தில் அகத்திய நெறியையும் நன்னூலார் பின்பற்று கிறார்.

தொல்காப்பியத்தில் இடையியல் நாற்பத்தெட்டு சூத்திரங் கள் கொண்டது. நன்னூல் சுருக்கமாக இலக்கணம் கூறும் நூலாத லின், இடையியலும் ஓரளவு சுருக்கமாகவே உள்ளது. தொல்காப் பியர் இடைச்சொற்கள் ஏழு என்கிறார். அவை,

சாரியை
வினையில் காலம் காட்டும் இடைநிலை
வேற்றுமை உருபு
அசைநிலை
இசைநிறை
தத்தம் குறிப்பால் பொருள் உணர்த்துவன
உவமஉருபு

ஆகியன. இவற்றில் தத்தம் குறிப்பால் பொருள் செய்வதை தத்தம் பொருள் காட்டுவன, குறிப்பின் வருவன என இரண்டாகக் கொண்டு இடைச் சொற்கள் எட்டு வகைப்படும் என பவணந்தி முனிவர் கூறியுள்ளார். (வெள்ளைவாரணன்: 1971: 298)

குறிப்பால் பொருள் செய்வன, அசைநிலை, இசைநிறை, ஆகிய மூன்றையே தொல்காப்பியர் இடையியலில் கூறியுள்ளார். குறிப்பால் பொருள் செய்யும் சொற்களைக் கூறி அவற்றின் பொருளையும் கூறியுள்ளார். நன்னூலார் இடையியல் இரண் டாம் சூத்திரத்தில் இடைச்சொற்கள் தரும் பொருள் அனைத்தை யும் பட்டியல் இட்டுக் காட்டியுள்ளார். ஒ, ஓ, என, என்று, உம், முதலிய இடைச் சொற்களைக் கூறி தில், மன், கொல், முதலிய அசைநிலை, இசைநிறைகளைக் கூறியுள்ளார். அடுத்து வியங் கோள், முன்னிலை, எல்லா இடங்களிலும் வரும் அசைச்சொற் கள் ஆகியன காட்டப்பட்டுள்ளன.

உரியியலில் தொல்காப்பியர் முதல் சூத்திரத்தில் உரிச் சொற்களின் பொது இலக்கணம் கூறி, வெளிப்படையாகப் பொருள் காட்டும் சொற்களை விடுத்து வெளிப்படையாகப் பொருள் காட்டாத சொற்களுக்குப் பொருள் கூறுகிறார். இவ்வியலில் 100 சூத்திரங்கள் உள்ளன. நன்னூல் உரியியல் 21 சூத்திரங்களைக் கொண்டது. முதல் சூத்திரம் உரிச் சொல்லின் பொது இலக்கணம் கூறுகிறது. இரண்டாம் சூத்திரத்தில் பொருள்கள் உயிர் உள்ளன. உயிர் இல்லன என இருவகைப்படும் என்று கூறி, உயிர் உள்ளவற்றை ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை வகைப்படுத்துகிறார். தொடர்ந்து உயிர்ப் பொருள்களின் குணப் பண்பு, தொழிற் பண்பு, உயிரில்லாத பொருளின் குணப்பண்பு, இருபொருள் களுக்கும் பொதுவான பண்புகள் ஆகியன கூறப்பட்டுள்ளன.

உரிச்சொல்லின் இரண்டு வகையுள் ஒன்றான ஒரு குணம் தழுவிய உரிச் சொல்லுக்குக் காட்டாக, மிகுதி என்ற பொருளில் வரும் சால, உறு, தவ, நனி, கூர், கழி ஆகிய ஆறு சொற்கள் தரப் பட்டுள்ளன. அடுத்து பல குணம் தழுவிய உரிச்சொல்லுக்குக் காட்டாக கடி என்ற சொல் தரப்பட்டு, அது காட்டும் பதின் மூன்று பொருள்களும் தரப்பட்டுள்ளன. இதற்கு மேல் ஒரு குணம் தழுவிய உரிச்சொல் என்ற வகையில் சொல் (16), ஓசை (22) ஆகிய இரண்டு சொற்களும் விளக்கப்பட்டுள்ளன.

உரியியலின் புறனடை நூற்பாவில், இலக்கணம் உணர்த்துவற்கு வேண்டிய அளவிலேயே இங்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது என்றும், விரிவாக பிங்கலம் முதலிய நிகண்டுகளில் காணலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியர் காலத்தில் நிகண்டுகள் தோன்றவில்லை; நன்னூலார் காலத்தில் நிகண்டுகள் தோன்றிவிட்டன. அவர் காலத்தில் குறைந்தது இரண்டு நிகண்டுகளேனும் - திவாகரம், பிங்கலம் - தோன்றிவிட்டன. அவற்றில் சொற்பொருள் விரிவாகக் கூறப்பட்டுள்ளதால் நன்னூல் அதைக் கூறாமல் விட்டது. அதனால் தொல்காப்பிய அளவுக்கு நன்னூல் உரிச்சொல் பற்றிக் கூறவில்லை. நிகண்டுகள் தோன்றி நீண்ட காலம் வரையில் அவற்றுக்கு 'உரிச்சொல்' என்றே பெயர் வழங்கி வந்தது. திவாகரம், பிங்கலம், காயதரம் முதலியன உரிச் சொல் என்றே வழங்கி வந்தன. கி.பி. 14ஆம் நூற்றாண்டில் காங்

கேயர் இயற்றிய நூலுக்கு உரிச்சொல் என்றே பெயர் வழங்கியது. 16ஆம் நூற்றாண்டில் மண்டலபுருடர் தம் நூலுக்கு நிகண்டு சூடாமணி எனப் பெயரிட்டார். அதுவரை நிகண்டுகள் 'உரிச் சொல்' என்றே வழங்கப்பட்டன. இந்த நிகண்டுகளில் பொது வாக மூன்று பகுதிகள் இருக்கும்.

1. ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி
2. ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதி
3. பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி

இவற்றில், மூன்றாவதாக உள்ளது தொகை நிகண்டாகும். முதலில் கூறப்பட்டுள்ள ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதியில் ஒரு பொருளுக்கு உரிய பல பெயர்களும் கூறப்பட்டிருக்கும். இப்பகுதி பொதுவாக தெய்வப் பெயர், விலங்கின் பெயர், மரப் பெயர், இடப் பெயர், பல்பொருள் பெயர், செயற்கை வடிவப் பெயர், பண்பு பற்றிய பெயர், செயல் பற்றிய பெயர், ஒலி பற்றிய பெயர் எனப் பத்து வகையாக அமைந்திருக்கும். இரண்டாவதாக உள்ள, ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி, ஒரு சொல்லுக்கு உள்ள பல பொருளையும் தொகுத்துச் சொல்வதாகும். இதன் சிறப்பை நோக்கி, இதைப் பதினோராவது நிகண்டு எனத் தனியே முக்கியத்துவம் கொடுத்து மனப்பாடம் செய்து வருதல் மரபு.

இவற்றில் ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதியை நன்னூ லார் ஒரு குணம் தழுவிய உரிச்சொல் என்றும் ஒரு சொல் பல் பொருள் தொகுதியைப் பல குணம் தழுவிய உரிச்சொல் என்றும் வழங்குகின்றார். நிகண்டுகள் வளர்ச்சி பெற்றதால் நன்னூலில் இத்தகைய பாகுபாடு இடம் பெற்றுள்ளது. தொல்காப்பியத்தில் இத்தகைய தெளிவு காணப்படவில்லை. நன்னூல் உரியியலில், உயிர் உள்ளது, உயிர் இல்லது என்றும் அவற்றின் குணம் பற்றி யும் விரிவாகக் கூறப்பட்டுள்ளதையும் இந்த நோக்கில் புரிந்து கொள்ள வேண்டும்.

நன்னூல் பொதுவியல் சிறப்பிலக்கணம் கூறும் பெயர்,வினை - இடை, உரி இயல்களுக்கு இடையில் இருப்பதாலும் இது பொது இலக்கணம் கூறுகிறது என்பதாலும் பொதுவாக இந்த இயலில் தொடரியல் செய்திகள் அதிகம் பேசப்படுவதாலும்

இங்கே இறுதியில் வைத்து ஆராயப்படுகிறது. இவ்வியலில் முக்கியமாகக் கூறப்பட்டுள்ளவற்றை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. தொகை இலக்கணம்
2. வழூவும் வழுவமைதியும்
3. பொருள்கோள்

இவற்றுடன் பால் பொதுமை நீங்குதல், இடைப்பிறவரல், பத்து எச்சம் முதலியனவும் இதில் உள்ளன. வழு, வழுமைதி பால் பொதுமை முதலியன கிளவியாக்கத்திலும் மற்றவை எச்சவியலிலும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன.

தொல்காப்பியரைப் போலவே நன்னூலாரும் பத்து எச்சங்களையே குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் இவற்றைப் பன்னிரண்டு சூத்திரங்களில் விரிவாக விளக்கியுள்ளார். நன்னூலார் ஒரே சூத்திரத்தில் கூறியுள்ளார். இவற்றுக்கு விளக்கம் தருவதில் இரண்டு நெறிகள் இருப்பதை மயிலைநாதர் உரையால் அறிய முடிகிறது. மயிலைநாதர், இந்தப் பத்து எச்சங்களையும் எடுத்துக் காட்டுகளுடன் விளக்கி விட்டு,

> இந்தப் பத்தெச்சமும் புவிபுகழ் புலமை அவிநய
> நூலுள், தண்டலங் கிழவன் தகைவருநேமி எண்
> டிசை நிறைபெயர் இராசபவித்திரப் பல்லவ தரை
> யன் பகர்ச்சி என்று அறிக (மயிலை.:189)

என்று எழுதியுள்ளார். இந்தப் பத்து எச்சங்களில் பிரிநிலை எச்சத்தை விளக்கு என்றும் இசை எச்சத்தை சிலேடை என்றும் குறிப்பு எச்சத்தை நுவலா நுவற்சி என்றும் (அணிகளின் பெயர்கள்) வழங்குவர் என்றும் எழுதியுள்ளார். தொடர்ந்து தொல்காப்பிய உரையில் இளம்பூரணர் இந்த எச்சங்களை விளக்கியுள்ள முறையையும் கொடுத்துள்ளார். இரண்டும் வெவ்வேறு அடிப்படையில் உள்ளன.

தொகை இலக்கணம் தொல்காப்பியம் போலவே நன்னூலிலும் விரிவாக உள்ளது. ஆறு தொகைகளையும் தொகைகளில் பொருள் சிறக்கும் இடங்களையும் தொல்காப்பியத்தை ஒட்டியே சொல்கிறார். ‘எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய’ (24)

என்ற தொல்காப்பியரின் கருத்தை ஒட்டியே நன்னூலாரும் 'ஒரு மொழி போல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்' *(361)* என்று வழங்குகிறார்.

தொகை பற்றி இருவேறு கருத்துகள் உள்ளன. உருபு முதலியன இடையில் மறைந்து வருவதே தொகை என்றும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெயர்கள் கொண்ட தொடர், ஒரு சொல் நீர்மைத்தாக வருவதே தொகை என்றும் கூறப்படுகின்றன. முன்னதில் தொகு என்பது மறைதல் என்ற பொருளையும் பின்னதில் தொகு என்பது ஒரு சொல்லாக நடத்தலையும் குறிப்பிடுகின்றன (கோதாண்டராமன்: 1974:152)

தொல்காப்பியம் கிளவியாக்கத்தில் கூறப்பட்டுள்ள ஏழு வகை வழுக்களும் அவற்றின் வழுவமைதியும் நன்னூலில் பொது வியலில் கூறப்பட்டுள்ளன. திணை, பால், இடம், காலம், வினா, விடை, மரபு ஆகியவையே இவை. நன்னூலில் முப்பத்தாறு நூற் பாக்களில் வழு, வழுவமைதி விளக்கப்பட்டுள்ளது.

பொதுவியலின் இறுதிப் பகுதி பொருள்கோள் பற்றியது ஆகும். இதில், ஆற்று நீர், மொழி மாற்று, நிரல் நிறை, பூட்டுவில், தாப்பிசை, அளைமறி பாப்பு, கொண்டு கூட்டு, அடிமறி மாற்று என்ற எட்டுப் பொருள்கோள்கள் விளக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில், நிரல் நிறை, சுண்ணம், அடிமறி, மொழி மாற்று ஆகிய நான்கு பொருள் கோள்களே விளக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் எச்சவியலில் இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் ஆகிய நான்கும் விளக்கப்பட்டுள்ளன. இவை நன்னூலில் பெயரியலில் இடம்பெற்றுள்ளன.

எழுத்து, சொல் இலக்கணங்களைப் பொருத்தவரை நன்னூலுக்கும் தொல்காப்பியத்திற்கும் இடையே உள்ள தொடர்பை ஆராயும் போது இயல் அமைப்பும் இலக்கணத்தைப் பகுத்துப் பார்த்தலும் முதன்மையாக நிற்கின்றன. தொல்காப்பியத்தில் எழுத்திலக்கணத்தையோ, சொல்லிலக்கணத்தையோ இத்தனை வகையாகப் பிரித்து ஆராயப்படும் என்று கூறப்படவில்லை. நன்னூலில், எழுத்ததிகாரம் பன்னிரண்டு வகையில் ஆராயப்பட்

டுள்ளது என்று முதல் நூற்பா கூறுகிறது. நன்னூலில் மட்டுமல் லாமல் நேமிநாதத்திலும்கூட இத்தகைய அணுகுமுறை உள்ளது. நேமிநாதத்தில் ஏழு வகையாகப் பிரித்து எழுத்திலக்கணம் விளக் கப்பட்டுள்ளது. நேமிநாதத்திலும் நன்னூலிலும் இவ்வாறான பிரிப்பு முறைக்கு ஆதாரமாக அமைந்துள்ள நூல் எது என்று நோக்கும் போது அவிநயத்திலிருந்து இத்தகைய சிந்தனைகள் பெறப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகிறது. நன்னூலில் எழுத்ததிகார உரையில் மயிலைநாதர் மேற்கோள் காட்டியிருக் கும் அவிநயச் சூத்திரமும் இதை உறுதிப்படுத்துகிறது.

எழுத்ததிகாரத்தில் மட்டுமன்றிச் சொல்லதிகாரத்திலும் இப்படி வகைப்படுத்திப் பார்க்கும் முறை காணப்படுகிறது. வீர சோழியச் சொல்லதிகார உரை இறுதியில் இரண்டு வெண்பாக் கள் உள்ளன; அவற்றுக்கு உரையும் உள்ளது. இந்த இரண்டு வெண்பாக்களும் உரைச் சூத்திரங்கள் என்று கருத இடம் தரு கின்றன. இவற்றில் தொல்காப்பியம் எட்டு வகையாகவும் அவிந யம் பதின்மூன்று வகையாகவும் சொல்லை ஆராய்ந்தன என்று கூறப்பட்டிருக்கிறது. நேமிநாதத்திலும் எட்டுவகையாகச் சொல் இலக்கணம் பிரித்து ஆராயப்பட்டதாகக் குறிப்பு உள்ளது. இப் படி இத்தனை வகையாகப் பிரித்து இலக்கணத்தைக் கூறுதல் என்ற கருத்துக்கு வித்திட்டது அவிநயம் எனலாம். நேமிநாதம் நன்னூல் ஆகிய நூல்கள் அவிநயத்திலிருந்து இக்கருத்தைப் பெற் றன என்று கூறுவதற்குப் போதிய ஆதாரம் உள்ளது.

எழுத்துகளின் பிறப்பைக் குறித்துக் கூறும்போது, தொல் காப்பியம் உந்தியிலிருந்து எழும்காற்று பேச்சொலியாக மாறு கிறது என்று கூறுகிறது. நன்னூலும் நேமிநாதமும் பேச்சொலி தோன்றுவதற்குக் காரணமாக அணுத்திரள் ஒலியைக் கூறுகின் றன. இந்தக் கருத்தும் அவிநய நூலில் இருந்து பெறப்பட்டதை நேமிநாதம், நன்னூல் உரைகள் உறுதிப்படுத்துகின்றன.

சார்பெழுத்துகளின் எண்ணிக்கை மூன்று என்றே தொல் காப்பியம் கூறுகிறது. (குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்) நன்னூல் இவற்றுடன் உயிர்மெய், உயிரளபு, ஒற்றளபு, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்

கம் ஆகியவற்றையும் சேர்த்துப் பத்துச் சார்பெழுத்துகள் என்று கணக்கிடுகிறது. இதுவும் அவிநயத்திலிருந்து பெறப்பட்ட கருத்து என்று உரையாசிரியர் கூறியுள்ளார். மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் பற்றிய கருத்திலும் நன்னூல் அவிநய மரபை ஒட்டியே செல்கிறது. ங மொழி முதல் வரும் என்ற கருத்து அவிநயத்தைப் பின்பற்றியே நன்னூலில் கூறப்பட்டுள்ளது.

சொல்லதிகாரத்தில் மூன்றாம் வேற்றுமை உருபுகளாக ஆல், ஆன், ஒடு, ஓடு, ஆகிய நான்கையும் நன்னூலார் கூறியுள்ளார். ஒடு என்பது மட்டுமே தொல்காப்பியத்தில் உள்ளது. மற்றவை அவிநயத்தில் இருந்து பெறப்பட்டவை. எழுவாய் வேற்றுமை மூன்று பொருளில் வரும் என்று கூறுதல், ஆறாம் வேற்றுமை உருபுகளாக அது, ஆது, அ ஆகியவற்றைக் கூறுதல் முதலிய இடங்களிலும் அவிநய மரபையே நன்னூல் பின்பற்றுகின்றது. இவை அவிநயத்துடன் நன்னூலுக்கு உள்ள தொடர்புகளாகும். தொல்காப்பியத்திலிருந்து நன்னூல் வேறுபட்டுள்ள இடங்களை நோக்கும் போது, எழுத்ததிகாரத்தில் பதவியல் என ஒரு இயலை வைத்தல், தொல்காப்பியர் புணர்ச்சியில் குற்றியலுகர ஈறுகளுக்கு எனத் தனியாக ஒரு இயலை வைத்ததற்கு மாறாக, குற்றியலுகர ஈறுகளையும் உயிரீற்றுப் புணரியலிலேயே வைத்துக் கூறுதல் ஆகியன எழுத்ததிகாரத்தைப் பொருத்தவரை விதந்து கூறவேண்டியவையாகும்.

சொல் இலக்கணத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது தொல்காப்பியத்தில் சொற்கள் பொருள் ஏற்கும் போது கவனிக்கப்படவேண்டிய திணை, பால், இடம், காலம், வழு, எண் முதலியவை கிளவியாக்கம் எனத் தனியே ஒரு இயலில் கூறப்பட்டுள்ளது. இதற்கு இணையான ஒரு இயல் நன்னூலில் இல்லை. தொல்காப்பியர் இவற்றிற்குக் கொடுத்த முக்கியத்துவத்தை நன்னூலார் அளிக்கவில்லை. தவிரவும் தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் கூறியுள்ள தொடரியல் இலக்கணப் பகுதிகள் நன்னூலில் இடம்பெறவில்லை. வேற்றுமை இலக்கணம், தொல்காப்பியத்தில் வேற்றுமைஇயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்று இயல்களில் கூறப்பட்டிருக்க நன்னூலில் பெயரியல் என்ற ஒரு இயலின் ஒரு பகுதியாகவே வேற்றுமை இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

நன்னூலர் உயிர்களை ஐந்துவகையாகப் பிரித்துக் கூறியுள்ளார். நன்னூலாரின் இந்த வகைப்பாடு புலன்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. செவிப்புலன் என்ற ஒரு புலனைப் பெற்றுள்ள உயிர்களாக மக்கள், விலங்கு, பறவை, வானவர், நரகர் ஆகிய அனைத்தையும் ஒரே பிரிவில் அடக்கியுள்ளார். தொல்காப்பியர் விலங்கு முதலிய அஃறிணை உயிர்களை ஐந்தறிவு கொண்டவை என்றும் மக்கள் என்ற உயர்திணையைச் சார்ந்தவர்களே மனம் என்னும் அறிவினைப் பெற்ற ஆறறிவு உயிர் என்றும் வகைப்படுத்தியுள்ளார்.

இவற்றை எல்லாம் நோக்க நன்னூல், தொல்காப்பியத்தின் வழிநூல் என்று கூறப்படுவதை முழுமையாக ஏற்றுக் கொள்ள இயலவில்லை. மேலும் நன்னூல் தொல்காப்பியத்தை விட அவிநயத்தை அதிகமும் பின்பற்றுவதை மேற்கூறியவற்றிலிருந்து அறியலாம். இந்தக் கருத்தை மேலும் நிறுவுவதற்கு அவிநய நூல் முழுமையாகக் கிடைக்காத நிலையில் இந்த அளவு மட்டுமே கூற முடியும்.

நேமிநாதம் எழுத்ததிகாரத்தில் வீரசோழியத்தைப் பின்பற்றியே இலக்கணம் கூறுகிறது. உட்பிரிவுகள் எதுவும் இன்றி எழுத்ததிகாரத்தை அமைத்துள்ள முறையிலும் சந்தி விதிகளைக் கூறும் முறையிலும் நேமிநாதம் வீரசோழியத்தையே பின்பற்றுகிறது. சொல்லதிகாரத்தைப் பொருத்தவரை நேமிநாதம் தொல்காப்பியத்தின் வழிநூல் என்பது தெளிவாகிறது. இயல் வகைப்பாட்டிலும் இயல்களுக்குப் பெயரிடும் முறையிலும் நேமிநாதம் தொல்காப்பியத்தைப் பின்பற்றுகிறது. நேமிநாதம் சுருக்கமாகச் சொல்லிலக்கணம் கூறும் நூல் என்பதால் சொல்லிலக்கணத்தை எழுபது சூத்திரங்களில் கூறுகிறது. மற்றபடி நேமிநாதம், தொல்காப்பியத்தின் வழி நூல் என்று கூறத் தடையில்லை.

# பொருள் இலக்கண மரபுகள்

(பொருள் இலக்கணத்தின் முதன்மை - தொல்காப்பியப் பொருள் அதிகார அமைப்பு - பொருள் இலக்கணமும் யாப்பு இலக்கணமும் - பொருள் இலக்கணப் பிரிவுகள் - பன்னிருபடலம் - அகத்திணை - இறையனார் களவியல் - தமிழ்நெறி விளக்கம் - வீரசோழியம் - நம்பியகப் பொருள் விளக்கம் - களவியல் காரிகை - களவு - வரைவு - கற்பு - புறத்திணை - அகப்புறம் - புறப்புறம்.)

தமிழ்மொழி ஐந்திலக்கண மரபைக் கொண்டது என்றாலும் தொல்காப்பியர் காலத்தில் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றே முதன்மையாகக் கருதப்பட்டன. அவற்றுள்ளும் பொருளிலக்கணமே முக்கியமானதாகக் கருதப்பட்டது.

> எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது, பொருளதிகாரத்தின் பொருட்டன்றே, பொருளதிகாரம் பெறமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம். (இறையனார் களவியல்: 10)

என்ற மேற்கோள், பொருள் இலக்கணத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்தும். இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட காலப் பகுதியில் தோன்றிய நூல்களில் வீரசோழியம் ஒன்று மட்டுமே ஐந்திலக்கண நூல். மற்றபடி உள்ள நூல்கள் அக, புறப்பொருள் இலக்கணங்களை மட்டும் தனியே விளக்கும் நூல்கள் ஆகும். இங்கு எடுத்துக் கொண்ட காலப்பகுதிக்கு முன்பாகத் தோன்றிய

அவிநயமும் பொருள் இலக்கணத்தை உணர்த்தியது. யாப்பருங் கல விருத்தியில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள,

முற்செய் வினையது முறையா உண்மையின்
ஒத்த இருவரும் உள்ளகம் நெகிழ்ந்து
காட்சி, ஐயம், தெளிதல், தேற்றல் என
நான்கு இறந்து அவட்கு நாணும், மடனும்,
அச்சமும், பயிர்ப்பும் அவற்கும்
உயிர்த்தகந் தடக்கிய
அறிவும் நிறைவும் ஓர்ப்பும் தேற்றமும்
மறைய அவர்க்கு மாண்டதோர் இடத்தில்
மெய்யுறு வகையும் உற்றல்லது உடம்படாத்
தமிழியல் வழக்கமெனத் தன்னன்பு மிகைபெருகிய
களவு எனப்படுவது கந்தருவ மணமே. (யா.வி.: 576)

என்ற நூற்பாவால் இதை அறியலாம்.

அவிநயம் இன்று கிடைக் காததால் அதைப் பற்றி மேலும் கூற முடியவில்லை.

இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நூல்கள் பின்வரு மாறு:

1. தொல். பொருளதிகாரம் - இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் உரைகளுடன்
2. இறையனார் களவியல் உரையுடன்
3. தமிழ்நெறி விளக்கம் உரையுடன்
4. புறப்பொருள் வெண்பாமாலை உரையுடன்
5. வீரசோழியம் பெருந்தேவனார் உரையுடன்
6. நம்பியகப்பொருள் விளக்கம் உரையுடன்
7. களவியல் காரிகை உரையுடன்

# 1

## பொருள் இலக்கண நூல்கள்

தமிழ்நெறி விளக்கம் நூலின் ஆசிரியர் பெயரோ, உரையாசிரியர் பெயரோ புலப்படவில்லை. இரண்டையும் ஒருவரே இயற்றியிருக்கலாம் என்று சாமிநாதையர் (1937: 1) கூறியுள்ளார். கிடைக்கின்ற இந்நூலின் பகுதி, அகப்பொருளை விளக்கும் 25 சூத்திரங்களைக் கொண்டது. இதில் அகப்பொருள் பகுதி முழுவதும் விளக்கப்படுகிறது. புறப்பொருள் இலக்கணம் இல்லை. கிடைக்கும் இப்பகுதி, விரிந்த நூலின் ஒரு பகுதியாக இருக்கலாமோ என்ற ஐயம் உண்டாகிறது என்று சாமிநாதையர் (1937: 6) கூறியுள்ளார். மேலும் இதன் முதற் சூத்திர உரையில்,

> 'நிறுத்த முறையானே பொருளிலக்கணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று' என்றுகாணப்படும் வாக்கியமும் தமிழ்நெறி விளக்கம், பொருளியல் என்ற அதிகாரப் பெயரும் இதற்குமுன் எழுத்தியலும் மொழியியலுமாகிய இரண்டு பிரிவுகள் உண்டென்பதைப் புலப்படுத்துகின்றன. பொருளியலுக்குப் பின்பு யாப்பியலும் இருந்தது என்றும் கருத இடமுண்டு. இப்பொருளியலும் அகம் புறம், அகப்புற மென்னும் மூன்று பிரிவாக இருத்தல் வேண்டும். இக்கருத்தை முதற் சூத்திரம் தோற்றச் செய்கிறது. பொருளியலென்ற பொதுப் பெயரே இதன்கண் அகப்பொருள், புறப்பொருளென்னும் இரண்டு பகுதியேனும் இருக்க வேண்டுமென்று நினைக்க ஆதாரமாகின்றது. (மேற்படி:6)

என்று அவர் எழுதியிருப்பதையும் நோக்கும்போது இந்த எண்ணம் உறுதிப்படுகிறது. குறுந்தொகை முதலிய சங்க இலக்கியப் பாடல்கள் தவிர இடம் அறியமுடியாத 172 பாடல்கள் இதன் உரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இவற்றில் பல பாடல்களை மேற்கோள் காட்டும் களவியல் காரிகை, இப்பாடல்

களுக்குப் 'பொருளியல்' என்றே இடம் கூறுகிறது. இப் பாடல் கள் பெரும்பாலும் 3, 4 அடிகளில் அமைந்துள்ளன. குறிப் பிட்ட அகப்பொருள் பகுதியை விளக்குவதற்குப் போதுமான அளவே இவற்றில் செய்தி உள்ளது. இவற்றைப் பார்க்கும் போது, இப்பாடல்களும் இலக்கணம் இயற்றியவராலேயே இயற்றப் பட்டிருக்க வேண்டும் என ஊகிக்கலாம். இவ்வுரையில் 'சிற் றெட்டகம்' என்ற நூலைச் சேர்ந்த பாடல்களும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. ஆயிடைப் பிரிவை விளக்கும் சூத்திரத் தின் முதற் பகுதிவரை மட்டுமே உரை கிடைத்துள்ளது.

ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை, 12 புறத்திணைகளை 19 சூத்திரங்களில் விளக்குகிறது. இவற்றுக்கு உதாரணமாக 361 செய்யுள்கள் உள்ளன. இச்செய்யுள்கள் ஆசிரி யராலேயே இயற்றப்பட்டவை. இந்த நூலிற்கு சாமுண்டி தேவ நாயகர், (15ஆம் நூற்.) உரை எழுதியுள்ளார். கடைசிச் சூத்திரத் திற்கு மட்டும் உரையில்லை. இந்த நூலின் சிறப்புப் பாயிரம், இதன் முதல் நூல் பன்னிரு படலம் எனக் குறிப்பிடுகிறது. ஆகவே இது தொல்காப்பிய மரபு அல்ல என்பது பெறப்படுகிறது. இதைப் பற்றி விரிவாகப் பின்னர் ஆராயப்படும்.

நம்பி அகப் பொருள் விளக்கம் என்ற நூல் இன்று கிடைக் கும் அகம்பொருள் நூல்களில் மிகவும் விரிவானது. நாற்கவிராச நம்பி என்பவரால் இயற்றப்பட்டது. இதில்,

1. அகத்திணையியல்
2. களவியல்
3. வரைவியல்
4. கற்பியல்
5. ஒழிபியல்

என ஐந்து இயல்கள் உள்ளன. இதில் 252 நூற்பாக்கள் உள்ளன. இந்த நூலிற்கு இதன் ஆசிரியரான நாற்கவிராச நம்பியே உரை யும் இயற்றியுள்ளார். இதன் உரையில் சங்கப் பாடல்கள் உதா ரணச் செய்யுளாகக் காட்டப்பட்டுள்ளன. இந்த அகப் பொருள் நூலுக்கு இலக்கியமாக, தஞ்சைவாணன் கோவை இயற்றப்பட் டது என்று கூறுவர். தஞ்சைவாணன் கோவை காலத்தால் பிற

பட்டதாயினும் பின் வந்த ஆசிரியர்களில் யாரோ இக்கோவைச் செய்யுட்களை நம்பிஅகப்பொருள் உரையில் இணைத்துள்ளனர்.

வீரசோழியம், பொருளதிகாரத்தில் பொருட்படலம் ஒன்றையே கொண்டுள்ளது. இந்தப் படலத்தில் அகப்பொருள், புறப்பொருள் ஆகிய இரண்டினைப் பற்றிக் கூறியிருந்தாலும், படலத்தில் இந்தப் பாகுபாடு இல்லை. இருபத்தொரு காரிகைகளில் பொருள் இலக்கணம் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ் இலக்கண மரபு பொருள் இலக்கணத்தை விரிவாகவும் முக்கியப் படுத்தியும் கூறியிருக்க, வீரசோழியம் சுருக்கமாகக் கூறியுள்ளது. முதல் காரிகையிலேயே அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என பொருள் நான்கு வகைப்படும் என்று கூறியுள்ளார். முல்லை முதல் இருபத்தைந்து நிலங்களைக் கூறி இவற்றை மேற்கூறிய நான்கு வகைப் பொருளிலும் அடக்கிக் காட்டியுள்ளார். உரைகளின் பெயர்கள் மட்டுமே மூலத்தில் உள்ளன. அது பற்றிய விளக்கம் ஏதுமில்லை.

உரையாசிரியர் சூத்திரங்களுக்குப் பொழிப்புரை மட்டும் எழுதியுள்ளார். விளக்கவுரையோ, உதாரணமோ, பெரும்பாலும் இல்லை. மூலத்தில் பெயர் மட்டும் கூறிச் செல்வதால் அவற்றை விளக்கப் பல சூத்திரங்களை உரையாசிரியர், உரையில் பயன் படுத்தியுள்ளார். இவை எந்த நூலைச் சார்ந்தவை என்று குறிப் பிடவில்லை. மேலும் தமிழ்ப் பொருள் இலக்கண மரபில் அன்றி இவை வேறு மரபினைச் சார்ந்தவைகளாக இருப்பதால், இவை உரையாசிரியரே இயற்றிய உரைச் சூத்திரங்களோ என்று கருத இடமுள்ளது. இவ்வதிகாரத்தில் இறுதிச் சூத்திரத்திற்குப் பின் வேறு ஒரு மரபைச் சுட்டி அவர்கள் காட்டும்படி பொருள் இலக்கணத்தை உரையாசிரியர் விளக்கியுள்ளார். இந்த விளக்கத்தில் வடமொழிக் கருத்துகள் பல உள்ளன.

களவியல்காரிகை நூலின் ஆசிரியர் பெயரும் உரையாசிரியர் பெயரும் அறியமுடியவில்லை. இந்நூல் காரிகை யாப்பினால் அமைந்தது. இந்த நூலின் பெயரைக் கூட அறிய முடியாத நிலையில், ஏடு மிகவும் சிதைந்திருந்தது. இந்த ஏடுகளை இயன்றவரை சரிசெய்து வையாபுரிப்பிள்ளை பதிப்பித்து உள்ளார்.

இறையனார் களவியல் நூலை ஒட்டியே இந்த நூல் இயற்றப் பட்டுள்ளது. அதனாலும் காரிகையாப்பில் இயற்றப் பட்டுள்ள தாலும் யாப்பருங்காரிகையை நோக்கி களவியல் காரிகை என இந்நூலுக்குப் பெயரிடப்பட்டுள்ளது எனப் பதிப்பாசிரியர் கூறி யுள்ளார். (1931:3) இதில் களவு, கற்பு என்னும் இரண்டு கைகோள் பற்றியும் இலக்கணம் உள்ளது. முதல் 22 சூத்திரங்களில் பொது வான அகப்பொருள் செய்திகள் பேசப்பட்டிருகின்றன. முதல் பத்து சூத்திரங்கள் இல்லை. 11 முதல் 22 வரை உள்ளவை பெரி தும் சிதைந்துள்ளன. 23 முதல் 34 வரையுள்ள சூத்திரங்கள் ஓர ளவு சிதைந்துள்ளவேனும் கிடைத்துள்ளன. 35 முதல் 42 வரை யுள்ள சூத்திரங்கள் இல்லை. அவற்றின் உரைப்பகுதி கிடைத் துள்ளது. 43 முதல் 54 வரையுள்ள சூத்திரங்களும் உரையும் உள் ளன. அதன்பின் உள்ள பகுதிகள் கிடைக்கவில்லை.

இதன் உரை விரிவான உரையாகும். இறையனார் அகப் பொருள் உரையை ஒட்டியே இதன் உரையும் இயற்றப்பட்டுள் ளது. இந்த உரையின் மற்றோர் சிறப்பு, உதாரணம் காட்டும் செய்யுள்கள் எந்த நூலைச் சார்ந்தன என்று குறிப்பிடுவதாகும். இதனால் இன்று கிடைக்காமல்போன பல நூல்களை இந்த உரையின் மூலம் அறிய முடிகின்றது. அவ்வாறு அறிய இயலும் நூல்களில் ஒன்று இறையனார் களவியல் உரையில் உதாரணம் காட்டப்படும் பாண்டிக்கோவையாகும். இந்த உரையைக் கொண்டே அச்செய்யுள்கள் பாண்டிக்கோவையைச் சார்ந்தவை என்ற அறிய முடிகின்றது. இதைப் போல அறிய முடிகின்ற மற்ற நூல்கள், அகத்திணை, அரையர் கோவை, இன்னிசை மாலை, ஐந்திணை, கண்டணலங்காரம், கிளவித் தெளிவு, கிளவி மாலை, கிளவி விளக்கம், கோயில் அந்தாதி, சிற்றெட்டகம், நறையூர் அந் தாதி, பல்சந்த மாலை, மழவை எழுபது, வங்கர் கோவை, முதலி யனவாகும். களவியல் காரிகை காலத்தால் பழமை வாய்ந்ததாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இது பின்னர் விளக்கப்படும்.

தொல்காப்பியப் பொருளதிகார உரையாசிரியர்களில் இளம் பூரணர் உரை பொருளதிகாரம் முழுமைக்கும் உள்ளது. இவ் வுரை இன்று கிடைக்கும் உரைகளில் காலத்தால் பழமையான தாகும். இளம்பூரணர் காட்டும் வேறு உரைகள் வாய்மொழியாக

வழங்கி வந்திருக்கலாம். இந்த உரைகள் எழுதப்பட்டவையாகவே இருந்து பின் இறந்து போயிருக்கலாம் என்று கூறுவதற்கும் இடம் உண்டு. பேராசிரியர் உரை, மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என்ற நான்கு இயல்களுக்கே கிடைகின்றது. பேராசிரியர் உரை மிகவும் விரிவானது; பல்துறைக் கருத்துகளைக் கொண்டுள்ளது. நச்சினார்க்கினியர் உரை, அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல் என ஐந்து இயல்களுக்கும் செய்யுள் இயலுக்கும் கிடைத்துள்ளது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பல இடங்களில் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கொண்ட பாடம், இளம்பூரணர் கொண்ட பாடத்தில் இருந்து வேறுபட்டுள்ளது. அதனால் பொருள் கொண்ட விதமும் வேறுபட்டுள்ளது. இந்த வேறுபாட்டிற்கு இவ்வுரையாசிரியர்களின் காலம், வாழ்ந்த இடம், கல்வி கற்ற மரபு முதலியன காரணங்களாக இருக்கலாம். இந்த ஏழு பொருள் இலக்கண நூல், உரைகளில் இருந்தும் அறியலாகும், பொருள் இலக்கண மரபுகள் இந்த இயலில் ஆராயப்படும்.

### தொல்காப்பியப் பொருளதிகாரம்

தொல்காப்பிய எழுத்ததிகாரம் எழுத்து இலக்கணம் மட்டுமே விளக்குகிறது. சொல்லதிகாரம் சொல் இலக்கணம் மட்டுமே விளக்குகிறது. பொருளதிகாரம்,

அகத்திணையியல்
புறத்திணையியல்
களவியல்
கற்பியல்
பொருளியல்
மெய்ப்பாட்டியல்
உவமையியல்
செய்யுளியல்
மரபியல்

என்று ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஒன்பது இயல்களில் முதல் ஐந்து இயல்கள், பொருள் இலக்கணத்தையே விளக்குகின்றன. எஞ்சிய நான்கு இயல்களிலும் உவமை, மெய்ப்பாடு, செய்யுள் முதலியன விளக்கப்பட்டாலும், அவையும்

பொருள் இலக்கணத்தை மையமாக வைத்தே விளக்கப்பட்டுள்ளன. ஆகவே தொல்காப்பிய பொருளதிகாரம், பொருள் இலக்கணத்தையே மையமாக வைத்து இயங்குகிறது. பொருள் இலக்கணத்தில் ஒரு பகுதியாகவே - பொருள் இலக்கணத்தை விளக்குவதற்காகவே - மெய்ப்பாடு, உவமை, செய்யுள் முதலியன பொருளதிகாரத்தில் விளக்கப்படுகின்றன. இந்தக் கருத்தும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

தொல்காப்பியர் எண் வகை மெய்ப்பாடுகளையும் முதலில் கூறி, உடைமை, இன்புறல், முதலிய முப்பதிரண்டு மெய்ப்பாடுகளையும் கூறுகிறார். இவற்றைப் பற்றிப் பேராசிரியர் 'இவை முப்பத்திரண்டும் மேற்கூறிய முப்பத்திரண்டும் போல அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாக நிகழும் மெய்ப்பாடெனக் கொள்க (மெய்ப்பாட்டியல்: 93) என்று எழுதுகிறார். இதனால் மெய்ப்பாட்டியலில், மெய்ப்பாடு பற்றிப் பொதுவாகக் கூறியுள்ள இலக்கணம் எல்லாம் அகம், புறம் இரண்டிற்கும் பொதுவானவை என்பதை அறியலாம். இதன்பின் மெய்ப்பாட்டியலில் ஆறு அவத்தைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இங்கு,

> இதன் மேலெல்லாம் அகத்திணைக்கும்,புறத்திணைக்கும் பொதுவாகிவரும் மெய்ப்பாடு கூறினார். இனி, அகத்திணையுட் பெரும்பான்மையவாகி வரும் மெய்ப்பாடு கூறுவான் தொடங்கி அவற்றுள்ளும் களவிற்குச் சிறந்து வரும் மெய்ப்பாடு கூறுவான். ஒருவனும், ஒருத்தியும் எதிர்ப்பட்ட வழி அவ்வெதிர்ப்பாடு தொடங்கிப் புணர்ச்சியளவும் மூன்று பகுதியவாம் மெய்ப்பாடெனவும், புணர்ச்சிக்குப் பின்னர் களவு வெளிப் படுந்துணையும் மூன்று பகுதியவாம் அவையெனவும், அவையாறும் ஒரோவொன்று நந்நான்கு பகுதியாக ஒன்றன்பின்னொன்று பிறக்கு மெனவும் கூறுகின்றான் (மேற்படி: 105)

என்று பேராசிரியர் எழுதியுள்ளதை நோக்குமிடத்து இவை அகப்பொருளுடன் சிறப்பாகக் களவியலுடன் தொடர்புடையவை என்பதை அறியலாம். இவற்றின் பின் பெருந்திணைக்கண்

நிகழும் மெய்ப்பாடுகளும் அழிவில் கூட்டமும், அழிவில் கூட்டத்தின் பின் நிகழும் மெய்ப்பாடுகளும் கூறப்பட்டுள்ளன. இதன்பின் தலைமகனுக்கும், தலைமகளுக்கும் இருக்க வேண்டிய ஒப்புமைக் குணங்களாக பிறப்பு, ஆண்மை, ஆண்டு, உருவம், அன்பு, நிறை, அருள், குடிமை, அறிவு, செல்வம், ஆகிய பத்தும் கூறப்பட்டுள்ளன. இதன்பின் உள்ள நூற்பா தலைமக்களுக்கு இருக்கக் கூடாத குணங்களைக் கூறுகிறது. எனவே மெய்ப்பாட்டியலானது அகம், புறம் என்ற பொருள் பகுதிகளை விளக்கவே - அவற்றின் ஒரு பகுதியாகவே - அமைக்கப் பட்டுள்ளது என்பதை அறியலாம். உவமையியலில் பொருள் இலக்கணத்துடன் தொடர்புபடுத்தியே உவமை பேசப்படுகிறது.

உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்

தள்ளாது ஆகும் திணை உணர்வகையே (அகத். 49)

என்று அகத்திணையியலில் உவமையை உள்ளுறை உவமம் எனவும் ஏனை உவமம் எனவும் இரண்டாகப் பிரித்துள்ளார். தொல்காப்பியரால் அந்த இரண்டே உவமையியலில் விரித்துரைக்கப்படுகிறது என்பது பேராசிரியரின் கருத்தாகும்.

> மற்று அகம்புறம் என்பனவற்றுள் இஃது என்ன பொருள் எனப்படுமோவெனின்; அவ்விரண்டு மெனப்படும்... மற்றிவ்விருதிணைப் பொருளும், உவமம் பற்றி வழக்கினுள் அறியப்படுதலானும், உவமம் பற்றியும் பொருள் கூறுகின்றா னென்பது. மேல் அகத்திணையியலுள் உவமத் தினை இரண்டாக்கி ஓதினான்: உள்ளுறை யுவமம் ஏனையுவமமென. அவ்விரண்டையும் ஈண்டு விரித்துக் கூறுகின்றவாறு. (உவமையியல்: 3)

என்ற பகுதியில் பேராசிரியர் தமது கருத்தை விளக்கிக் கூறியுள்ளார். முப்பத்தெட்டு நூற்பா கொண்ட இந்த இயல் முதல் இருபத்திரண்டு நூற்பாக்களில் ஏனையுவமமும் இருபத்தி மூன்று முதல் முப்பத்து மூன்று வரையுள்ள நூற்பாக்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, முதலானோர் உவமை கூறற்குரிய மரபும் கூறப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது உவமையியல், பொருள் இலக்கணத்தின் ஒரு பகுதியாக - அதற்கு

விளக்கம் தரும் விதமாக - தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள் ளது என்பதை அறியலாம். உவமையியலில் நூற்பாக்கள் அமைந் துள்ள விதமும் இதையே உறுதிப்படுத்துகின்றது.

செய்யுளியலில் செய்யுளின் உறுப்புகள் எனத் தொல் காப் பியர் முப்பத்து நான்கினைக் குறிப்பிடுகிறார். அவை மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன ஆகும். இந்த முப்பத்து நான்கு உறுப்புகளில் திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை ஆகிய பன்னிரண்டும் பொருளிலக்கணம் கூறும் உறுப்புகளாம். இவற்றில் கைகோள், கூற்று, கோட்போர், மெய்ப்பாடு, முதலி யன சிறப்பாக அகப்பொருள் இலக்கணம் பற்றியே பேசுகின் றன. செய்யுளியலில் 177 முதல் 201 வரையுள்ள இருபத்தைந்து நூற்பாக்கள் இந்த உறுப்புகள் பற்றிப் பேசுகின்றன.

தொல்காப்பியச் செய்யுளியலும் பொருள் இலக்கணத்தின் அங்கமாகவே உள்ளது. மெய்ப்பாட்டியல், உவமையியல், செய் யுளியல் ஆகிய மூன்று இயல்களையும் பொருளதிகாரத்தில் வைத்துள்ளமையே, அவை பொருளிலக்கணத்தின் பகுதிகள் என்பதை விளக்கப்போதுமானதாகும். தொல்காப்பியரின் இலக் கணம் பற்றிய கோட்பாட்டை இது நன்கு விளக்கும். யாப்பிலக் கணம் ஒரு தனி இலக்கணம் அல்ல என்று அவர் கருதியுள்ளார் என்று தெரிகிறது.

யாப்பிலக்கணம் பொருளிலக்கணத்திலிருந்து தனியாகப் பிரிந்த போது யாப்பிலக்கணப் பகுதியில் இருந்த பொருள் இலக் கணக் கூறுகள் எல்லாம் பிரிந்து, பொருள் இலக்கண நூல்களி லேயே இடம்பெற்றன. இறையனார் களவியலில்,

திணையே, கைகோள், கூற்றே, கேட்போர்,
இடனே, காலம், எச்சம், மெய்ப்பாடு,
பயனே, கோள் என்று ஆங்கு அப்பத்தே
அகன் ஐந்திணையும் உரைத்தல் ஆறே (56)

என்ற சூத்திரத்தில் திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடம், காலம், எச்சம், மெய்ப்பாடு, பயன் என்ற ஒன்பது உறுப்புகளுடன் பொருள்கோள் என்ற ஒன்றையும் சேர்த்துப் பத்து உறுப்புகள் அகத்திணைக்கு உரியனவாகக் கூறப்பட்டுள்ளன. இந்த நூலின் உரையை ஆழ்ந்து நோக்கும்போது துறையை, கூற்று என்பதனுள் அடக்கிக் கூறியுள்ளமை தெரிகிறது. முன்னம், பொருள் ஆகியவை பற்றிய இலக்கணம் இறையனார் களவியல் நூலில் இல்லை.

இலக்கணப் பகுதிகள் தனித்தனியாகப் பிரிந்து வளர்ந்தது தொல்காப்பியத்திற்குப் பின்பேயாகும். அவ்வாறு பிரிந்து வளர்ந்த நூல்களில், அகப்பொருள் இலக்கண நூலாக இன்று கிடைப்பனவற்றுள் தொன்மையானது இறையனார் களவியல் நூலேயாகும். தொல்காப்பியச் செய்யுளியலில் செய்யுட்களின் உறுப்புகளாகக் கூறப்பட்ட திணை முதலிய பன்னிரண்டு உறுப்புகள் செய்யுளும், பொருளும் தனித்தனி இலக்கணங்களாகப் பிரிந்து தனி நூலாக வளர்ந்த காலத்தில், பொருளிலக்கண நூலில் இடம் பெற்றன. அதே காலத்தில் தனியாகப் பிரிந்த செய்யுள் இலக்கண நூல்களில் இத்தகைய பொருள் இலக்கணக் கூறுகள் இடம் பெறவில்லை.

யாப்பருங்கலமும் யாப்பருங்கலக் காரிகையும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா ஆகிய ஏழினையே செய்யுள்களின் உறுப்புகளாகக் கொண்டுள்ளன. முன் கூறிய திணை, கைகோள் போன்ற உறுப்புகள் இவற்றில் இல்லை. இந்த இரு யாப்பிலக்கண நூல்களேயல்லாமல், இவற்றில் மேற்கோள் காட்டப்படும் பிற யாப்பிலக்கண நூல்களிலும் (காக்கை பாடினியம் முதலியன) திணை முதலிய பொருள் இலக்கணக் கூறுகள் இருந்தமைக்கான சான்றுகள் இல்லை. எனவே இலக்கணப் பகுதிகள் தனித்தனியாகப் பிரிந்து தனி நூல்களாக இயங்கத் தொடங்கிய போதே தொல்காப்பியச் செய்யுளியலில் இருந்த பொருள் தொடர்பான இலக்கணப் பகுதிகள் யாப்பிலக்கண நூல்களில் இடம் பெறாமல், பொருள் இலக்கண நூல்களில் இடம் பெறத் தொடங்கின.

இந்த மாற்றமானது தற்செயலானதன்று. பொருள் தொடர் பான இலக்கணப் பகுதிகள் அனைத்தும் ஒரே நூலில் சொல்லப் படும் தொல்காப்பிய மரபிலிருந்து மாறி இலக்கணப்பகுதிகள் அனைத்தும் தனி நூல்களாக இயங்கும் இந்த மாற்றமானது தமிழ் இலக்கண வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்தாகும். யாப்பிலக்கண நூல்கள் வெறும் யாப்பு எனும் சட்டகம் பற்றி மட்டுமே இலக்கணம் இயற்றுதலுக்கு இதுவே வழி செய்தது. இதனால் பல யாப்பிலக்கண நூல்கள் தோன்றி யாப்புக்கு இலக் கணம் வகுத்தன. இந்த மரபு மாற்றத்தால் நேர்ந்தவை, பின்னர் விளக்கப்படும். அதற்கு முன் தொல்காப்பியர் தம் செய்யுளி யலைப் பொருள் இலக்கணத்தை ஒட்டியே இயற்றியுள்ளமை விளக்கப்படும். ஒவ்வொரு செய்யுள் வகையை விளக்கும் பொழு தும், தொல்காப்பியர் இந்த யாப்பு இந்தப் பொருளுக்கு உரியது என்று சுட்டிச் செல்கிறார்.

வாழ்த்துப் பொருளில் இயற்றப்படும் செய்யுள் நான்கு பாவிலும் பாடப்படலாம். (செய்.105) புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவை அடக்கியல், செவியறிவுறூஉ ஆகிய நான்கை யும் கலிப்பாவிலும் வஞ்சிப்பாவிலும் பாடக்கூடாது. (106,107) கைக்கிளைப் பொருளை மருட்பாவில் பாட வேண்டும். (115) பரி பாடல் அகப் பொருள்மேல் பாடப்படும். (117) ஒத்தாழிசைக் கலிப்பா இரண்டு வகைப்படும் (127) அவற்றில் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் ஆகியவற்றைப் பெற்ற அகநிலை ஒத்தாழி சைக் கலிப்பா அகப்பொருள் பற்றி வரும். தெய்வங்களை வழி படும் தேவபாணி, வண்ணகம், ஒருபோகு என இருவகைப்படும். (128,133) கலிவெண்பா ஒரு பொருளையே விளக்குவதாக இருக்க வேண்டும். (147) இவை செய்யுளியலில் கூறப்பட்ட கருத்துகள். அகத்திணையியலில் அகப்பொருள், கலிப்பாவிலும் பரிபாடலி லும் பாடப்படவேண்டும் (56) என்றும் கூறியுள்ளார். எனவே, தொல்காப்பியர் செய்யுளியலில் எந்தப் பொருளை எந்தச் செய் யுளில் பாடவேண்டும் என்று வரையறை செய்தே இயற்றியுள்ளார்.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை முதலான யாப் பிலக்கண நூல்கள், யாப்புக்கும் அந்த யாப்பில் பாடப்படும் செய்யுளுக்கும் எந்தத் தொடர்பையும் காட்டவில்லை. எனவே,

இந்த யாப்பிலக்கண நூல்கள், பொருளுடன் தொடர்பில்லாத ஒரு இலக்கணமாகவே யாப்பைக் கொண்டன என்று தெரிகிறது. ஆகவே இந்த நூல்கள் யாப்பு எனும் சட்டகத்திற்கு மட்டுமே இலக்கணம் கூறியுள்ளன. இந்தச் சட்டகத்தைக் கூறுவதிலும் தொல்காப்பியத்திற்கும் மற்ற யாப்பிலக்கண நூல்களுக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன.

தொல்காப்பியச் செய்யுளியலில் இருந்த பொருள் பற்றிய இலக்கணங்கள், இலக்கணப் பகுதிகள் தனியாகப் பிரிந்த காலத்தில் பொருள் இலக்கண நூல்களுக்கு வந்துவிட்டன என்பது இங்கே கூறப்பட்டது. அவ்வாறு வந்ததன் விளைவுகள் பலவாகும். அவற்றில் முதலாவது பொருளிலக்கணமும், யாப்பிலக்கணமும் தனித்தனியே பிரிந்தது போலவே பொருளிலக்கணத்தில் இருந்த அகப்பொருள், புறப்பொருள் இலக்கணங்களும் தனித் தனியே பிரிந்து விட்டன.

அவ்வாறு தோன்றிய நூல்களில் இறையனார் களவியல், நம்பியகப்பொருள், களவியல் காரிகை முதலியன அகப்பொருள் நூல்களாகும். பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலியன புறப்பொருள் நூல்களாகும். புறத்திரட்டில், இடம் பெற்றுள்ள ஆசிரியமாலை, பெரும்பொருள் விளக்கம் முதலிய நூல்களும் புறப்பொருள் நூல்களாக இருக்கலாம். இவை இன்று கிடைக்கவில்லை. இவ்வாறு, அக, புறப்பொருள் இலக்கணங்கள் தனித்தனியாகப் பிரிந்ததால் ஏழு அகத்திணைக்கு ஏழு புறத்திணை என்ற மரபிலிருந்து மாறி புறத்திணைகள் பன்னிரண்டு என்று இலக்கணம் உண்டானது.

இரண்டாவதாக அகம், புறம் என்ற பொருள் நிலையில் இருந்து மாறி குறிப்பிட்ட ஒரு திணையை மட்டும் விளக்கும் நூல்கள் தோன்றின. இவ்வாறு தோன்றிய நூல் கடிய நன்னியார் இயற்றிய 'கைக்கிளைச் சூத்திரம்' என்னும் நூலாகும். இந்த நூலின் பெயரே இது கைக்கிளைத் திணை ஒன்றை மட்டும் விளக்குவது என்பதைக்காட்டும். இப்படித் தனியொரு திணையை மட்டும் விளக்கும் நூல்கள் தோன்றவும் இந்த மரபு மாற்றம் காரணமாக அமைந்தது.

மூன்றாவதாக ஒரு திணையைப் பற்றிய நூல் தோன்றியது போல, பொருள் இலக்கணத்தில் ஒரு சிறு பிரிவுக்கு மட்டுமே இலக்கணம் கூறும் நூல்களும் தோன்றின. அவ்வாறு தோன்றியவை 'திணை நூல்', செம்பூட்சேயார் இயற்றிய 'கூற்றியல்' முதலிய பொருள் இலக்கணம் பற்றிய நூல்களும் 'திருப்பிரவாசிரியர் தூக்கியல்', 'அடிநூல்' முதலிய யாப்பு இலக்கணம் பற்றிய நூல்களும் ஆகும். இவ்வாறு இலக்கணத்தின் ஒரு சிறு பகுதியை எடுத்து நூல் இயற்றும் போக்கு தோன்றவும் இந்த மரபு மாற்றம் வழி செய்தது.

தொல்காப்பியத்தில் அகத்திணை ஏழு, புறத்திணை ஏழு, என்று இருந்தது. அகப் பொருள் இலக்கணமும், புறப்பொருள் இலக்கணமும், தனித்தனியாகப் பிரிந்தபின் அகத்திணைகளாக இருந்த கைக்கிளையும், பெருந்திணையும் புறத்திணைகளாகக் கருதப்பட்டுப் புறப்பொருள் இலக்கண நூல்களில் இடம் பெற்றன. இவற்றைப் புறப்பொருள் என்று ஏற்பதற்காக புறத்திணையில், அகப்புறம் என்ற பாகுபாடு தோன்றியது. இதனால் அகம், புறம், என்று இரண்டாக இருந்த பொருள் பாகுபாடு, அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நான்காகப் பிரிந்தது.

தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றை அகத்திணைகளாகச் சொல்லியிருந்தும், சங்க இலக்கியப் பாடல்கள் தொகுக்கப்பட்ட போது இவை புறப்பொருள் நூலான புறநானூற்றில் சேர்க்கப்பட்டன. இப்படித் தமிழ் இலக்கண உலகிலும், இலக்கிய உலகிலும் நிகழ்ந்த பல நிகழ்வுகளுக்கு இந்த மரபு மாற்றம் காரணமாக அமைந்துவிட்டது.

இறையனார் களவியலில் உள்ளது போல திணை, துறை முதலியவற்றை விளக்கும் பகுதி நம்பி அகப்பொருள் விளக்கம் நூலிலும் உள்ளது.

> திணையே, கைகோள், கூற்றே, கேட்போர்,
> இடனே, காலம், பயனே, முன்னம்,
> மெய்ப்பாடு, எச்சம், பொருள்வகை, துறை என்று
> அப்பால் ஆறு-இரண்டு அகப்பாட்டு உறுப்பே. (211)

என்ற நூற்பாவில் பன்னிரண்டு உறுப்புகள் கூறப்பட்டுள்ளன. 212 முதல் 236 வரையுள்ள இருபத்திநான்கு நூற்பாக்களில் பன்னிரண்டு உறுப்புகளின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தமிழ் நெறி விளக்கம், களவியல் காரிகை ஆகிய இரண்டிலும் அகப் பாட்டு உறுப்புகளின் இலக்கணம் கூறும் பகுதி கிடைக்கவில்லை.

தொல்காப்பியத்தில் அகம், புறம் என இரண்டு பிரிவுகளே சொல்லி இருக்க சில இலக்கண நூல்கள் அகம், புறம், அகப் புறம், புறப்புறம் என நான்காகப் பொருளைப் பிரித்துக் கொண்டதற் கான காரணத்தை ஆராயவேண்டும். இவ்வாறு ஆராயும் பொழுது இத்தகைய பிரிவு தோன்றிய காலம் எது? எந்த நூலில் முதலில் இதுபோன்ற பிரிவு தொடங்கியது? என்பதிலிருந்தே ஆராய்ச்சி தொடங்கும். இங்கு எடுத்துக் கொண்ட நூல்களில் வீரசோழி யம் ஒன்றே இந்த நான்கு பிரிவையும் காட்டும் நூல். ஏனையவை அகம் அல்லது புறம் என ஒன்றினையே விளக்குவதால் இந்த நான்கு பொருளையும் ஒரே நூலில் விளக்கவழி இல்லாமல் போயிற்று. வீரசோழியம், பிற பொருள் இலக்கண நூல்களில் காணப்பாடத பல பொருள்களையும் கொண்டுள்ளது.

புறப்பொருள் வெண்பாமாலையில், புறம், புறப்புறம், அகப் புறம் ஆகிய மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன. ஆனால் இந்தப் பிரிவு இதன் முதல் நூலான பன்னிருபடலத்தில் இருந்து பெறப் பட்டது என்று தெரிகிறது. பன்னிருபடலத்தில் இந்த மூன்றும் கூறப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க இடம் உண்டு. யாப்பருங் கல விருத்தி இந்த மூன்று வகைப் பொருட்பகுப்பையும் காட்டிப் பன்னிருபடலச் சூத்திரங்கள் சிலவற்றையும் மேற்கோள் காட்டு வதால் இவ்வாறு ஊகிக்க இடமிருக்கிறது. இவ் விருத்தியிலேயே,

> இனி ஒரு சாரார் அகத்திணை, புறத்திணை, அகப்
> புறத்திணை என மூன்றாய் அடங்கும் என்ப,
> ஆமாறு அவிநயத்துட் காண்க. (யா.வி.: 573)

என்று எழுதியிருப்பதால் அவிநயனார் இந்த மூன்று பகுப்பையே கொண்டவர் என்று தெரிகிறது. அவிநயம், பன்னிரு படலம் ஆகிய இரண்டிலும் இத்தகைய பகுப்பு காணப்படினும் இவற் றின் காலத்தை அறுதியிட வழியில்லை. இத்தகைய பகுப்பு முறை

இந்த நூல்களில் தான் உள்ளனவா? இவற்றுக்கு முந்திய நூல் களிலும் உள்ளனவா? என்றும் அறிய இயலவில்லை. இறந்து போன இந்த நூல்கள் தவிர இன்று கிடைக்கும் நூல்களில் யாப் பருங்கல விருத்தியுரையே மேற்கண்ட பகுப்பைக் கூறும் முதல் நூலாகும்.

யாப்பருங்கலத்தின் ஒழிபியலில் உள்ள 'மாலை மாற்றே' என்று தொடங்கும் நூற்பாவில் வரும் 'எண்ணிய திணையும்' என்ற பகுதிக்கு எழுதிய உரையில் இந்த நான்கு வகைப் பகுப்பும் காணப்படுகின்றன. இவற்றில் அகத்திணை, களவு, கற்பு என இருவகைப்படும் என்று எழுதியுள்ளார்.

அகப்புறம் என்பன,

| | |
|---|---|
| 1. காந்தள் | 2. வள்ளி |
| 3. சுரநடை | 4. முதுபாலை |
| 5. தாபதம் | 6. தபுதாரம் |
| 7. குற்றிசை | 8. குறுங்கலி |
| 9. பாசறை முல்லை | 10. இல்லாண் முல்லை |
| 11. கைக்கிளை | 12. பெருந்திணை |

ஆகிய பன்னிரண்டாகும் எனக் கூறி இதன்பின் 'ஆய்ந்த அகப் புறம்', 'கைக்கிளை' என்று தொடங்கும் இரண்டு நூற்பாக்களைக் காட்டி 'இவை பன்னிருபடலம்' என்று எழுதியிருப் பதால் பன் னிருபடலம் நூலின் கருத்துப்படி அகப்புறம் என்பன இவை என்று அறியலாம். பின், வெட்சி முதல் தும்பை வரையுள்ள ஏழும் புறத் திணைகள் என்றும், வாகை, பாடாண் பாட்டு, பொதுவியல் திணை ஆகிய மூன்றும் புறப்புறம் என்றும் எழுதப்பட்டுள் ளது. (யா.வி.: 569 -571) இவற்றின் கீழ் இவை 'ஆமாறு வெண்பா மாலையுள்ளும் பன்னிரு படலத்துள்ளும் காண்க' (மேற்படி: 571) என்று எழுதியிருப்பதால் இவை பன்னி ருபடலத்தின்படி இவ்வுரையில் தரப்பட்டுள்ளன என்பதை அறியலாம்.

மேலே காட்டிய பகுப்புகளில் ஒவ்வொன்றிலும் பொருளி லக்கண நூல்களில் காணப்படும் மரபுகள் இங்கு ஆராயப்படும். தொல்காப்பியத்தில் முதல் ஐந்து இயல்கள் பொருள் இலக்க ணத்தை விளக்குகின்றன. மெய்ப்பாட்டியல், உவமையியல்,

செய்யுளியல் ஆகிய மூன்று இயல்கள் பொருள் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் கூறுகின்றன. முன் ஐந்து இயல்களில் புறத்திணையியல் தவிரப் மற்ற நான்கு இயல் களிலும் அகப்பொருளே விளக்கப்படுகிறது.

மெய்ப்பாட்டியல், உவமையியல் ஆகியவற்றில் அக, புற பொருள்களுக்குப் பொதுவான இலக்கணம் கூறப்பட்டிருப்பி னும் இவற்றில் சிறப்பாக அகப்பொருள், இலக்கணமே இடம் பெற்றுள்ளது. செய்யுளியலில் பொருள் இலக்கணம் தொடர் பாக உள்ள திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், மெய்ப்பாடு, முன்னம், எச்சம், பயன், பொருள், துறை ஆகிய பன்னிரண்டும் சிறப்பாக அகப்பொருளையே விளக்குகின்றன. எனவே தொல்காப்பியர் அகப்பொருளுக்கே சிறப்பிடம் கொடுத் துத்தம் நூலை இயற்றியுள்ளார்.

### அகப்பொருள்

அகப்பொருளின் பொது இலக்கணங்களை அகப்பொருள் இயலிலும், களவு, கற்பு என்னும் பகுதிகளின் இலக்கணங்களைக் களவியல், கற்பியல் எனத் தனித்தனி இயல்களிலும் இவற்றில் சொல்லாமல் எஞ்சிய இலக்கணங்களைப் பொருளியலிலும் வைத்துத் தொல்காப்பியர் கூறியுள்ளார். அகத்திணையியலில் கைக்கிளை முதல் பெருந்திணை ஈறாக ஏழு திணைகள் அகப் பொருளுக்கு உரியவை என்று கூறுகிறார். இவற்றுள் கைக்கிளை யும், பெருந்திணையும் முதல் கரு, உரிப்பொருள் முதலியவற்றைப் பெறுவதில்லை. பாலைக்கு நிலம் மட்டும் இல்லை. ஆனால் கருப்பொருளும் உரிப்பொருளும் உண்டு. செய்யுள் வழக்கில் அமையும் பொருள் இலக்கணத்தில், ஐந்து திணைகளுக்கும் உரிய முதல், கரு, உரிப்பொருள்களை விளக்கிய பின், திணை மயக்கம் பற்றிக் கூறுகிறார். உரிப்பொருள் தவிர பிறவெல்லாம் மயங்கிவருதலில் தடையில்லை என்பது தொல்காப்பியர் கருத்து.

அகப்பொருளில் வரும் பிரிவுகள் பற்றி இவ்வியலில் விளக் கப்பட்டுள்ளது. கல்வி, தூது, பகை ஆகிய மூன்றின் காரணமாக வும் பொருள் காரணமாகவும் பிரிவு நேரும். அப்படிப் பிரிந்து போகும் போது கடல் கடந்து தலைவியுடன் செல்லுதல் இல்லை

என்றும் கூறப்பட்டுள்ளது. செவிலி, நற்றாய் ஆகிய இருவரும் உடன் போக்கின்பின் தலைவியைத் தேடிச் செல்லுதல் முதலியன கூறப்பட்டுள்ளன. கைக்கிளை, பெருந்திணை, ஆகியவற்றின் இலக்கணம் அகத்திணையியலிலேயே கூறப்பட்டுள்ளது. கைக்கிளை இத்தனை பகுதி உடையது என்று கூறப்படவில்லை. பெருந்திணை நான்கு பகுதியுடையது என்று கூறப்பட்டுள்ளது.

இறையனார் களவியல் நூல் அகப்பொருள் இலக்கணம் மட்டும் கூறும் 60 சூத்திரங்களையுடைய நூலாகும். இதனுள் களவு, கற்பு என இருபகுதிகளில் அகப்பொருள் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. களவுக்கு முன்பு அகப்பொருள் இலக்கணத்தின் பொதுப்பகுதிகள் சொல்லும் நூற்பாக்கள் இல்லை. முதல் நூற்பாவிலேயே,

> அன்பின் ஐந்திணைக் களவு எனப்படுவது
>
> அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்
>
> கந்தருவ வழக்கம் என்மனார் புலவர் (1)

என்று களவு ஒழுக்கம் கந்தர்வ வழக்கத்துடன் ஒக்கும் என்று கூறி நூல் தொடங்குகிறது. உரையாசிரியர்,

> ஐந்திணை என்றதல்லது அவற்றதுபெயரும் முறையும் இலக்கணமும் அறியச் சொல்லிற்றிலரோ எனின் இது சுருக்க நூலாகிற் சொல்லிற்றிலர்; அவை முடிந்த நூலிற் கொண்டு உரைக்கப்படும்.
> (இறையனார் களவியல் :22)

என்று இறையனார் களவியல் நூலில் அகத்திணைப் பொது இலக்கணம் சொல்லப்படாததற்குக் காரணம் கூறி, உரையில் இலக்கணம் கூறுகிறார். இங்கு தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பாக்களை மேற்கோள் காட்டி அதன்படியே முதல், உரி, கருப்பொருள்களை விளக்குகிறார். இதைத் தவிரப் பிரிவு முதலியன இங்கு விளக்கப்படவில்லை.

தமிழ்நெறி விளக்கம் சுருக்கமாக இருபத்தைந்து நூற்பாக்களில் அகப்பொருள் இலக்கணம் முழுவதையும் கூறுகிறது. இந்த நூலில், களவு, கற்பு என்ற இருபிரிவுகளின் இலக்கணமும் கூறப்

படினும் இயல் பிரிவுகள் இல்லை. இந்த நூலும் பொருளை அகம், புறம், அகப்புறம் என மூன்று வகையாகப் பிரிக்கிறது. கிடைத்துள்ள நூற்பகுதி கற்பில் ஆயிடைப்பிரிவு வரையே உள்ளது. இந்த நூலில் புறப்பொருளும் அகப்புறப் பொருளும் கூறும் பகுதிகள் இருந்திருக்கலாம் என்று ஊகிக்க முதற் சூத்திரமும் அதன் உரையும் இடம் தருகின்றன. நூல் சுருக்கமாக இருப்பினும் இரண்டு முதல் பதின்மூன்று வரையுள்ள பன்னிரண்டு நூற்பாக்கள் அகப் பொருள் பொது இலக்கணத்தை உணர்த்து கின்றன. இவற்றில் முதல், கரு, உரிப்பொருள் மட்டும் பேசப் பட்டுள்ளன. பிரிவு முதலியன பற்றிய வேறு இலக்கணங்கள் இல்லை.

வீரசோழியம் அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என்று நான்காகப் பொருளைப் பகுக்கிறது. என்று முன்பே கூறப்பட்டது. ஆனால் பொருளதிகாரம் பொருட்படலம் என ஒரே படலத்தைக் கொண்டுள்ளது. இந்த நான்கு பொருளுக்கும் தனித்தனியே நான்கு படலங்கள் இல்லை. இதில் நான்காவது சூத்திரம் முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்று அகப்பொருள் ஐந்து வகைப்படும் என்று கூறி, இவற்றின் 'உரை' இருபத்தேழு வகைப் படும் என்கிறது. அடுத்துவரும் ஐந்து, ஆறு ஆகிய இரண்டு சூத் திரங்களும் இருபத்தேழு உரைகளையும், தொகுத்துரைக்கின்றன. அவை,

| | |
|---|---|
| 1. சட்டகம் | 2. திணை |
| 3. கைகோள் | 4. நடை |
| 5. சுட்டு | 6. இடம் |
| 7. கிளவி | 8. கேள்வி |
| 9. மொழி | 10.கோள் |
| 11. உட்பெறுபொருள் | 12. சொற்பொருள் |
| 13. எச்சம் | 14. இறைச்சி |
| 15. பயன் | 16. குறிப்பு |
| 17. மெய்ப்பாடு | 18. காரணம் |
| 19. காலம் | 20. கருத்து |
| 21. இயல்பு | 22. விளைவு |
| 23. உவமை | 24. இலக்கணம் |
| 25. புடையுரை | 26. மொழிசேர்தன்மை |
| 27. பொருளடைவு | |

ஆகியனவாம். இரண்டாவது உரையாக வரும் 'திணை' என்பது பற்றி விளக்கும் போது குறிஞ்சி முதல் உள்ள ஐந்து திணைக்கும் முதல், உரி, கருப்பொருள்கள் ஐந்து காரிகைகளில் (90 -94) விளக்கப்பட்டுள்ளன.

ஆனால் இந்தச் சூத்திரங்களுக்கு உரை எழுதப்படவில்லை. உரையாசிரியர் இவற்றால் இன்ன திணையென்றறிக என்ற சொல்லிவிட்டு அடுத்த உரைக்குச் சென்று விடுகிறார். இங்கு சொல்லிய இருபத்தேழு உரைகளுள் திணை, கைகோள், இடம், கிளவி(கூற்று) கேள்வி (கேட்போர்), எச்சம், பயன், மெய்ப்பாடு, காலம் ஆகிய ஒன்பதும் தொல்காப்பிய செய்யுளியலில் பொருள் இலக்கணம் உணர்த்தும் பகுதியில் வருவன. நடை என்று சுட்டப் பெறும் உறுப்பு துறையாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்று கிறது. இதற்கு உரையாசிரியர் காட்டும் மேற்கோள் சூத்திரம் துணையாக அமையும்.

நற்றாய் செவிலி யென்றிவர் நன்னுதற்கு
உற்றதை யறியாது நற்றிறம் படர்தலும்
கட்டுரை கூட்டலும் கேட்டவள் கூற்றும்
ஒட்டி வெறி அயர்தலும் ஒண்ணுதல் அழுங்கலும்
இவ்வியல் அன்னைக்கு உணர்த்துக வென்றலும்
அவ்வியல் ஒட்டாள் மொழிதலும் ஆயிடைப்
பூத்தரு புணர்ச்சியும், புனல்தரு புணர்ச்சியும்
தாய்தரு புணர்ச்சியும்
கூறிய தாயது குறிப்புவழி மொழிதலும்,
வரைந்து நனி புகுதலும் வரைவு அவர் மறுத்தலும்
எதிர்கொளல் மொழிதலும் ஏற்று மகள் மொழிதலும்
நிரவிய இயற்கையோடு இன்னவை பொருளே.

என்ற குறிஞ்சி நடையியல் சூத்திரத்தின் ஒரு பகுதியால் இதை உணரலாம். இச்சூத்திரத்தில் வரும் பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி முதலியன துறைகளேயாகும். மேலே கூறியவற்றுடன் நடையென்ற ஒன்றையும் சேர்த்தால் பத்து வகையான இலக்கணங் கள் தொல்காப்பியத்தில் உள்ளவற்றில் அடங்கும். இறையனார்

களவியலில் கூறப்படும் பொருள்கோளும் இந்த இருபத்தேழில் அடங்கியுள்ளது. மற்றவற்றில் உவமை, இறைச்சி முதலியன அகப் பொருள் இலக்கணப் பகுதியில் தொல்காப்பியம், முதலியவற்றில் சுட்டப்பட்டுள்ளன.

நம்பியகப் பொருள் நூலில் இயல்கள் பின்வருமாறு அமைந் துள்ளன.

1. அகத்திணையியல்
2. களவியல்
3. வரைவியல்
4. கற்பியல்
5. ஒழிபியல்

நம்பியகப் பொருள் கிளவிகளை காலவரிசைப்பட அமைத் துக்கோவை என்னும் பிரபந்தத்துக்கு இலக்கணம் கூறுவது போல் அமைந்துள்ளதால் களவியல், கற்பியல், வரைவியல் ஆகிய மூன்று இயல்களிலும் கிளவிகளே தொகுத்துச் சொல்லப்பட் டுள்ளன. இதனால் இந்தக் கிளவிகளுக்குள் அடங்காத பிற இலக் கணப் பகுதியெல்லாம் அகத்திணையியலில் கூறப்பட்டுள்ளன.

நம்பியகப் பொருள், ஐந்து இயல்களாகப் பிரிக்கப்பட்டுள் ளமையும், கிளவிகளை வரிசைப்படுத்தி அமைத்துள்ளமையும் அது கோவைக்கு இலக்கணம் போல் அமைந்துள்ளமையும் பின் னர் ஆராயப்படும். இங்கு நம்பியகப் பொருள் நூலில் அகத்திணை இயலில் கூறப்பட்டுள்ளவை மட்டும் ஆராயப்படும். இருநூற்று ஐம்பத்திரண்டு நூற்பாக்களைக் கொண்ட இந்த நூலில் முதல் நூற்றுப் பதினாறு நூற்பாக்கள் அகத்திணை இயலில் உள்ளன. தொல்காப்பியத்தை ஒட்டியே அகப்பொருள் ஏழுதிணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில், கைக்கிளை,பெருந்திணை இவற் றின் இலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன. ஐந்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்கள் தொடர்ந்து நீண்ட சூத்திரங்களால் கூறப்பட்டுள்ளன. இயற்கைப் புணர்ச்சியின் வகை, பகற்குறி, இரவுக்குறி, இவற்றின் இலக்கணம், அறத்தொடு நிற்றலின் இலக் கணம், கற்பில் புணர்ச்சி வகையும் பிரிவின் வகையும், ஊடல், வாயில்களின் செயல் முதலிய பலவும் அகத்திணை இயலில்

சொல்லப்பட்டுள்ளன. இவற்றில் பலவும் களவு, வரைவு, கற்பு இயல்களில் சொல்லுதற்குரியன. அவ்வியல்களில் கிளவித் தொகைகளைக் கூறுவதால் இந்த இலக்கணங்களை எல்லாம் அகத்திணையிலுள் கூறியுள்ளார் ஆசிரியர்.

களவியல் காரிகையில் முதல் இருபத்திரண்டு சூத்திரங்களும் உரையும் பெரும்பாலும் சிதைந்து போயுள்ளன. இடையிடையே கிடைக்கும் ஓரிரு தொடர்களின் மூலம் முதல் 12 காரிகைகளில் முதல், கரு, உரிப்பொருள்கள் சொல்லப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. 11 முதல் 22 வரையுள்ள 12 காரிகைகளில் அகப்பொருள் பற்றிய பிற செய்திகள் உணர்த்தப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் இந்த நூலும் கிளவிகளைத் தொகுத்து உரைப்பதேயாம். களவியல் காரிகையில் இயல் பிரிவு எவ்வாறு இருந்தது என்று அறிய முடியவில்லை. இன்று உள்ள நிலையில் களவு, கற்பு என இரு பகுதிகள் இருந்தன என்று கூற முடியும். வரைவு என ஒரு பகுதி இல்லை என்று தோன்றுகிறது.

அகம், புறம், அகப்புறம், புறப்புறம் எனும் நான்கு பகுதியில் அகம் எனும் பகுதியை எடுத்து ஆராயும்போது பொருளிலக்கண நூல்களில் அகப்பொருள் பொது இலக்கணம் எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பதே இதுவரை ஆராயப்பட்டது. இனி, அகப்பொருள் இலக்கணப்பகுதி எவ்வாறு பகுத்து விளக்கப்பட்டுள்ளது என்பது ஆராயப்படும்.

### களவு

தொல்காப்பியர் அகப்பொருளை களவு, கற்பு என இரண்டாகப் பிரித்து இலக்கணம் வகுத்துள்ளார். வரைதல் என்பதனை களவியல் இறுதியில் இரண்டு நூற்பாக்களிலும் (50,51) கற்பியல் தொடக்கத்தில் நான்கு நூற்பாக்களிலும் (1-4) கூறியுள்ளார். இவற்றைவிட விரிவாகப் பொருளியலில் வரைதல் பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். வரைதலைத் தனியாக ஒரு இயலாக வைத்துள்ள நம்பியகப் பொருள் நூலாசிரியர், வரைவியலில் வரைவு மலிதல், அறத்தொடுநிலை என்று இரண்டை வைத்துள்ளார். வரைதல் என்பதைப் பொருளியலுள் வைத்துள்ள தொல்காப்பியர் அறத்தொடு நிற்றல் பற்றிய நூற்பாக்களையும் பொருளிய

லிலேயே வைத்துள்ளார். தொல்காப்பியர் கருத்துப்படி வரைவு என்பது ஒரு தனி இயல் அல்ல என்பது தெளிவாகிறது.

களவியலின் அமைப்பைப் பார்க்கும்போது, தொல்காப் பியர் முதலில் காட்சி முதல் உள்ள கைக்கிளைக் குறிப்புகளைச் சுட்டுகிறார். களவுக்கால நிகழ்ச்சிகளை வேட்கை முதல், தெளிவு அகப்படுத்தல் வரை இரண்டு நூற்பாக்களில் சுட்டுகிறார். (9,10) தொடர்ந்து தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று செவிலி கூற்று முதலிய கூற்றுகளும், இக்கூற்றுகளுக்குரிய மர பும் கூறப்பட்டுள்ளன. களவியலில் பெரும் பகுதி இக்கூற்றுகள் கூறும் பகுதியே ஆகும். தொல்காப்பியர் களவியலில் தலைவனுக்கு அல்லது தலைவிக்கு நிகழும் கூற்றுவகைகளைத் தொகுத்துக் கூறுகின்றாரேயன்றி, களவின் பகுதிகள் இத்தனை என்ற பாகு பாடும், அவற்றில் கிளவிகளின் விவரமும் இல்லை. தலைவன் கூற்றுகளைக் கூறும் நூற்பாவின் பின் இளம்பூரணர் ‘களவிற் கூட்டம் நான்கினிடத்தும் தலைவன் கூற்று நிகழுமாறும் காதல் மிக்கு ஆற்றாமை கையிருப்பின் தலைவனாம் இயலும் கூறுதல்’ (களவியல்: 54) என்று கூறியுள்ளார்.

களவிற் கூட்டம் நான்கினிடத்தும் என்பது, இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட் டம், என்ற நான்கையும் ஆகும். களவின் இலக்கணம் இவையே ஆகும். இவற்றுடன் வரைவுகடாதல், உடன்போக்கு ஆகிய இரண்டையும் களவில் அமைப்பர். ஆனால் தொல்காப்பியர் மேலே காட்டிய நான்கும் களவு இலக்கணம் என்று கூறவில்லை. இளம்பூரணர் கருத்தை ஒட்டியே நச்சினார்க்கினியரும் எழுதி யுள்ளார். (மேற்படி: 64) தொல்காப்பிய உரையாசிரியர்கள் இரு வரும் இப்படிக் கூறக்காரணம் என்ன என்பது பின்னர் விளக்கப் படும். ஆனால் தொல்காப்பிய நூற்பாக்களில் இந்தப் பாகுபாடு காணப்படவில்லை. தலைவன் கூற்று கூறும் இந்த நூற்பாவே யன்றித் தலைவிகூற்று, தோழிகூற்று, முதலிய பிற நூற்பாக்களி லும், தொல்காப்பியர் இத்தகைய பாகுபாடுகளைக் கூறவில்லை. தொல்காப்பிய இலக்கண அமைப்பு, கூற்றுகளைத் தொகுத்துக் கூறுவதும், கூற்றுகளுக்கு உண்டான மரபுகளைக் கூறுவதும் என அமைந்துள்ளது. கூற்றுகளுக்குப் பின் களவில், தலைவன்,

தலைவி, தோழி ஆகியோர் இயல்பு கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து, பகற்குறி, இரவுக்குறி ஆகியவற்றின் இலக்கணமும் இயல்பும் உரைக்கப்பட்டுள்ளன. இறுதியில் உள்ள இரண்டு நூற்பாக்கள் வரைவு பற்றியவை.

தொல்காப்பிய நூற்பாக்கள் இவ்வாறு அமைந்திருக்க தொல் காப்பிய உரையாசிரியர்கள், தொல்காப்பியர் கூறாத பிரிவுகளை யும், பொருள்களையும் அந்த நூற்பாக்களின் மேலேற்றி கூறியுள் ளனர். தொல்காப்பியர் இவ்வாறு கூறும் கூற்றுகளைத் 'துறை' என்ற பெயரால் எங்கும் வழங்கவில்லை. மேலும் துறைகளை முறையாகச் சொல்லி விளங்க வைத்தலும் தொல்காப்பியரின் நோக்கமில்லை. துறைகளை வைத்து முறைப்படி சொல்லிச் செல் லும் போது நிகழ்ச்சிகளாக அவற்றை அறுதியிட்டுக்களவு முதலிய அகப்பொருள் இலக்கணத்தின் அடிப்படையில், கால வரிசைப் படி அமைக்க வேண்டும். ஆனால் தொல்காப்பியர் மரபோ இத் தகைய வரிசை முறை எதையும் நோக்காமல் கூற்றுகளை மட்டும் (கூற்று நிகழும் சந்தர்ப்பங்களை மட்டும்) தொகுத்துச் சொல்வ தாகும். இந்த மரபில் கால வரிசையோ நிகழ்ச்சி ஒழுங்கோ அமையாது.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் தோன்றிய காலத்தில் - குறிப்பாக இளம்பூரணர் தோன்றிய காலத்தில் - அவர்களுக்கு முன் எழுந்த சில பொருள் இலக்கண நூல்கள் இருந்தன. அவை, இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம் ஆகியன. இவற்றுடன் அவிநயமும் இருந்திருக்க வேண்டும் என்று முன்பு கூறப்பட்டது. முன் சொன்ன இரண்டு நூல்களும் அவற்றின் உரை களும் இளம்பூரணருக்கு முன்பு தோன்றியவை என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. நச்சினார்க்கினியர் காலத்திற்குள், வீரசோழி யம், நம்பியகப்பொருள் விளக்கம், களவியல் காரிகை, ஆகிய மூன்று நூல்களும், அவற்றின் உரைகளும் தோன்றிவிட்டன. இந்த இலக்கண நூல்களைக் கற்ற இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தம் உரையில் இந்தக் கருத்துகளை ஏற்றி உரையியற்றினர். அத னாலேயே இந்தப் பாகுபாடு இவர்களது உரைகளில் காணப்படு கின்றன. களவில் தலைவன் கூற்றுகளைக் கூறும் சூத்திர உரையில் (10) இளம்பூரணர் ,

> மெய்யுறு புணர்ச்சியினைப் பால் கூட்டும் நெறி வழிப்பட்டுப் பெற்றார்க்கு மெய்தொட்டுப் பயி றல் முதல் அறுதுறையே இன்றியமையாத் துறை யாக, ஏனைய இரண்டும் இடந்தலைப் பாட்டிற் கும் சேர்ந்த துறையாகலின், பொதுப்பட இரண் டிற்கும் நடுவே வைத்துச் செப்பம் ஆக்கினா ரென்க. (களவியல்: 56)

என்று எழுதியுள்ளார். இப்பகுதியில் மெய்தொட்டுப் பயிறல் முதலியவற்றை இளம்பூரணர் துறை என்ற பெயரால் அழைப் பதை உதாரணமாகக் காட்டலாம்.

இறையனார் அகப்பொருள் நூல் களவு, கற்பு என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் களவு, முப்பத்தி மூன்று நூற்பாக்களால் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இதில், இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கி யிற் கூட்டம் ஆகிய நான்கு வகைகளும் உள்ளன. இவற்றில் தோழி யிற் கூட்டத்தில் மதியுடம்படுதல், முன்னுறவுணர்தல், குறையுற உணர்தல், இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் முதலியன கூறப்பட்டுள்ளன. இவற்றுள் முன்னுற உணர்தல் கிளவிகள் விரித்துக் கூறப்பட்டுள்ளன. அடுத்து அறத்தொடு நிற்றல், களவி னுள் இடையீடு, பகற்குறி, இரவுக்குறி, அலர், வரைவுகடாதல் முதலியன சொல்லப்பட்டுள்ளன. இந்த முப்பத்து மூன்று நூற் பாக்களில் இப்பொருள்கள் அனைத்தும் சொல்லப்பட்டுள்ள தால் கிளவிகள் எல்லாம் விளக்கமாக இல்லை. இது சுருக்க நூலாகலின் விளக்கமாக இல்லை, என்று முன்பே உரையாசிரி யர் சுட்டியதை இங்கும் ஏற்றுக்கொள்ளலாம். அதனால் உரை யாசிரியர் தம் உரையில் இந்தக் கிளவிகளை எல்லாம் விரிவாக விரித்துரைக்கின்றார். கிளைகளை எல்லாம் இந்த அளவு விரித் துரைக்கும் அகப்பொருள் உரை வேறெதுவும் இல்லை. உரை யில் மாற்றுக் கருத்துகளை எடுத்துத்தந்து அவற்றை தருக்கரீதியில் மறுக்கிறார். நூலையும் உரையையும் நோக்கும்போது கிளவி களை வரிசைப்பட அமைத்தல் என்னும் நெறியில் இது தொல் காப்பியக் களவியலில் இருந்து மாறுபட்டுள்ளது என்பதை நோக்குதல் வேண்டும். தொல்காப்பியத்தில் முற்பகுதியில் கூற்று

களைத் தொகுத்துக் கூறுதலும், பிற்பகுதியில் கூற்று நிகழ்த்து தலின் மரபு முதலிய பிற இலக்கணமும் அமைய நூல் இயற்றியது போல் அல்லாமல், இந்நூலிலேயே அவற்றுக்கு விளக்கமும், மரபும் முதலிய பிற இலக்கணங்களும் சொல்லப்பட்டுள்ளன. உரையாசிரியரும் இவற்றை நன்கு பொருந்த வைத்து இயையுபடுத்தி உரையெழுதியுள்ளார்.

தொல்காப்பிய நூல் அமைப்புடன் இந்த நூலின் அமைப்பை ஒப்பிடும்போது கூற்று முறையிலிருந்து மாறி வரிசையாக நிகழ்ச்சிகளை அடுக்கும் போக்கில் இறையனார் களவியல் செல்வதைக் கவனிக்கலாம். ஆனால் இந்த முயற்சி மூலத்தில் முற்று முழுதாக நிறைவு செய்யப்படவில்லை, என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மற்ற நூல்கள் இதே அமைப்பை முன்னெடுத்துச் செல்வதை நோக்கும்போது, இதற்கான அடிப்படையை இட்டுக் கொடுக்கும் முதல் நூல் இறையனார் களவியலே என்ற கூற்று மிகையானதாக இருக்க முடியாது. தொல்காப்பியத்திற்குப்பின் தோன்றி, இன்று இல்லாமல் மறைந்து போன இலக்கண நூல் களைத் தவிர்த்துப் பார்க்கும் போது மேற்கூறிய முடிவு பிழைபட்டதாகாது.

தமிழ்நெறி விளக்கத்தில், அகப்பொருள் இலக்கணம் முழுதும் சொல்லப்பட்டிருப்பினும் களவு, கற்பு என்ற இயல் பாகுபாடு இல்லை. எனினும் களவுப்பகுதி முடிந்த பின் கற்பு தொடங்குகிறது. இந்த இரண்டின் தொடக்கத்திலும் இவற்றை வரையறுக்கும் நூற்பாக்கள் உள்ளன. இந்த நூல் மிகவும் சுருக்கமாக அகப் பொருளை உணர்த்துவது என்பது முன்பே கூறப்பட்டது. 25 நூற்பாக்களில் களவின் இலக்கணத்தைக் கூறும் நூற்பாக்கள் ஏழு. முதல் நூற்பா (14) களவின் இலக்கணம் கந்தர்வத்தை ஒத்தது என்று கூறுகிறது. அடுத்த நூற்பா (15) இயற்கைப் புணர்ச்சியின் நிகழ்ச்சிகளைக் கூறுகின்றது. அவை, 1. நயப்புணர்தல், 2. தெளித்தல், 3. பிரிவச்சம், 4. வன்பொறை, 5. எய்துதலருமை, 6. உயிரெனக் கூறல், 7. ஆற்றிப் பெயர்தல் ஆகியனவாகும். அடுத்த நூற்பா (16) பாங்கற் கூட்டம் கூறுகிறது. இதில் பன்னிரண்டு நிகழ்வுகள் கூறப்படுகின்றன. தோழியிற் கூட்டம், பகற்குறி (17), இரவுக்குறி (18), என்று இரண்டு நூற்பாக்களில் சொல்லப்பட்டுள்ளது.

வரைவு கடாதலும் (19) உடன்போக்கு வலித்தலும் (20) ஒவ்வொரு நூற்பாக்களில் சொல்லப்பட்டுள்ளன. இங்கு கூறப்பட்ட ஒவ் வொரு பொருள் குறித்தும் வரும் நிகழ்வுகள் அனைத்தும் வரிசை முறைப்பட சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளன. உரையில் இவற்றுக்கு விளக்கம் என்று பெரிதாக இல்லை. ஒவ்வொரு கிளவியையும் எடுத்து, அவற்றுக்கு உதாரணம் தரப்பட்டுள்ளது. ஆனால் மூலத் திலேயே கிளவியின் பெயர் வரிசைப்பட அமைந்துள்ளது.

இதை இறையனார் அகப்பொருள் உரையுடன் ஒப்பிட்டு நோக்கும்போது, அந்த நூலில் உரையாசிரியர் எழுதியுள்ள விளக்கமெல்லாம் இங்கு மூலத்தில் மட்டும் உள்ளன; உரையில் இல்லை. எனினும் நிகழ்வுகள் வரிசைமுறையில் அமைக்கப் பட் டுள்ளதை நோக்கும் போது இறையனார் களவியல் நூலிலிருந்து இந்த நூல் மாறுபட்டுள்ளது. இந்த நூலில் களவுக்காலத்தில் தலை வன், தலைவி, தோழி இவர்களின் இயல்புகளோ, பிற இலக்கணங் களோ உணர்த்தப்படவில்லை; உரையிலும் சொல்லப்படவில்லை. மேலும் உரையில் கிளவிகளின் பொருள் விளக்கப்படாததால், இவற்றின் வரிசை முறையைத் தெளிவாக உணர வழியில்லாமல் போயிற்று.

வீரசோழியம் அகப்பொருளைக் களவு, கற்பு எனப் பிரிக்க வில்லை என்றும், அகப்பொருள் ‘உரை’கள் என்று இருபத் தேழினைக் கூறியுள்ளது என்றும் முன்பு கூறப்பட்டுள்ளது. இரு பத்தேழு ‘உரை’களும் முன்பு காட்டப்பட்டன. அவற்றில் கைகோள் என்ற ‘உரை’யில் களவு, கற்பு என இரண்டு காட்டப் பட்டுள்ளதே தவிர வேறு எந்த விளக்கமும் இல்லை. நடை என்ற ‘உரை’யை விளக்குமிடத்து, குறிஞ்சி, நெய்தல், பாலை, மருதம், முல்லை ஆகிய திணைகளின் நடையியலை விளக்கும் சூத்திரங் கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றை உரைச் சூத்திரம் என்பதை விட வேறு ஒரு நூலில் இருந்து மேற்கோள் காட்டப்பட்ட சூத் திரம் என்று கூறுவது சரியாகும். இந்த நடையில் வரும் பகுதிகள் துறை (கிளவி) என்பதனோடு ஒக்கும் என்பதும் முன்பே கூறப்பட் டது. திணைகளை இந்த முறையில் வைத்துள்ளதற்குக் காரணம், இவற்றின் இறுதியில் உள்ள சில நூற்பாக்களில் உள்ளது.

குடவரைக் குறிஞ்சியும் குணகடல் நெய்தலும்
கடவதாகும். களவிற் குரித்தே.

நன்னில மருதமும் தொன்றில முல்லையும்
துன்னருங் கற்பொடு தோன்றுந் தொடர்ந்தே.

இடைநிலைப் பாலை இருபாற்கு முரித்தே
படர்கொடி முல்லையின் பாற்படு மியற்றே. (வீர: 98)

இச் சூத்திரங்களில் குறிஞ்சியும் நெய்தலும் களவு, மருதமும் முல்லையும் கற்பு, பாலை இரண்டிற்கும் உரியது என்று ஐந்து திணைகளும் களவு, கற்பு எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றை நோக்கும் போது திணை அடிப்படையில் அகப் பொருளை வகுக்கும் போக்குத் தெரிகிறது. ஐந்து திணைகளை யும் களவு, கற்பு எனப் பிரிக்கும் போக்கும் தெரிகிறது. தமிழில் இன்று கிடைத்துள்ள வேறு எந்த இலக்கண நூலிலும் இத் தகைய பாகுபாடு காணப்படவில்லை. தொல்காப்பியம், தமிழ் நெறி விளக்கம் முதலியன ஐந்து திணைகளுக்கும் இலக்கணம் சொல்லியிருப்பினும் அகப்பொருள் இலக்கணத்தையே ஐந்து திணைகளாகப் பிரிக்கும் போக்கோ அல்லது ஐந்து திணைகளை யும் களவு கற்பு எனப்பிரிக்கும் போக்கோ காணப்படவில்லை.

வீரசோழிய உரையில் காட்டப்பட்டுள்ள நூற்பாக்களை நோக்கும்போது அவை வேறு இலக்கண நூல்களிலிருந்து மேற் கோள் காட்டப்பட்டிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. மேலே காட்டிய நூற்பாக்களில் 'குடவரைக்குறிஞ்சியும்', 'இடை நிலைப்பாலை' என்ற இரண்டு நூற்பாக்களும் களவியல் காரிகை உரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. அகப்புறத்தின் வகை களைக் கூறும் 'ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டும் ஆயுங்கால்' என்ற நூற்பா பன்னிருபடலம் என்ற நூல் சூத்திரமாகும். (யா. வி.:570) மேலும் பொருட் படலத்தின் இறுதியில் உள்ள சூத்திரங்களில் பலவும் வேறு நூலைச் சேர்ந்த நூற்பாக்களே. அவற்றில் 'களவும் கற்பும்' என்ற நூற்பாவும்; 'வெட்சி முதலாத் தும்பையீறா', 'வாகை பாடண்' என்ற நூற்பாக்களும் யாப்பருங்கல விருத்தியில் மேற் கோள் காட்டப்பட்டுள்ளன. (மேற்படி: 570,71) 'வெட்சி,கரந்தை' என்ற நூற்பாவும் 'வாகை பாடாண்' என்ற நூற்பாவும் புறப் பொருள் வெண்பாமாலையில் உள்ளன.(19) எனவே வீரசோழிய

பொருட்படல உரையில் காட்டப்பட்டுள்ள நூற்பாக்கள் மேற்கோள் நூற்பாக்களே என்று அறியலாம்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது ஒவ்வொரு திணைக்கும் நடை என்ற பெயரில் விளக்கம் கூறி அதையே அகப்பொருள் இலக்கணத்தின் பகுப்பாகக் கொண்ட நூல் ஒன்றிலிருந்து இந்த சூத்திரங்கள் மேற்கோள் காட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது எந்த நூல் என்று அறிய முடியவில்லை. பொருள் இலக்கணத்தைப் பொருத்தவரை வீரசோழியம் தொல்காப்பியத்திற்கு மாறானதொரு இலக்கண மரபைப் பின்பற்றுகிறது.

நம்பியகப் பொருள் நூலின் இரண்டாவது இயல் களவியல் ஆகும். இந்த நூல் கிளவிகளைத் தொகை, வகை, விரி என மூன்று வகையிலும் கூறியுள்ளது. முதலில் களவிற்கு உரிய பதினேழு கிளவித் தொகைகள் கூறப்பட்டுள்ளன. களவியலில் நிகழும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் உரிய கிளவிகள் இந்த பதினேழுக்குள் அடங்கி விடும். பின்பு இவை ஒவ்வொன்றிலும் வகையும் கிளவிகளினது விரிவும் கூறப்படும். சான்றாக வன்புறை என்பதன் தொகை இரண்டு வகைப்படும். இதன் விரி ஆறு வகைப்படும். இந்த முறையிலேயே எல்லாத் தொகைகளுக்கும் வகையும் விரியும் கூறப்பட்டுள்ளன. இதுவே நம்பி அகப்பொருள் விளக்கம் நூலின் நோக்கமும் முறையும் ஆகும். நம்பி அகப்பொருள் களவியலில், தொகை -17, வகை -80, விரி -279 என அமைந்துள்ளன.

களவியல் காரிகை நூலில் களவு, கற்பு என இருபகுதிகள் உள்ளன. இவை களவொழுக்கம், கற்பொழுக்கம் என்று பெயரிடப்பட்டுள்ளன. இருபத்து மூன்று முதல் நாற்பத்திரண்டு வரையுள்ள இருபது சூத்திரங்கள் களவு இலக்கணத்தை உணர்த்துகின்றன. இவற்றில் தோழியால் ஆகும் கூட்டத்தை உணர்த்தும் 31 முதல் 42 வரையுள்ள சூத்திரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் உரைப்பகுதி கிடைத்துள்ளது. இந்த நூல் தமிழ்நெறி விளக்கம் போலவே, களவினை ஆறு வகையாகப் பிரிக்கிறது. இந்த ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய கிளவிகள் இத்தனை என்று மூலத்தில் கூறப்பட்டுள்ளன. உரையில் அவற்றுக்கு விளக்கமும் எடுத்துக் காட்டும் தரப்பட்டுள்ளன. களவியலைப் பிரித்திருப்பதிலும் கிளவிகளைக் கூறுதலும் ஆகிய இரண்டு அடிப்படையிலும்

பார்த்தால் களவியற்காரிகை தமிழ்நெறி விளக்கத்தையே அடியொட்டிச் செல்வதைக் காணலாம்.

| | |
|---|---|
| இயற்கைப் புணர்ச்சி | 7 |
| பாங்கனாலாய கூட்டம் | 18 |
| மதியுடம் படுத்தல் | 5 |
| தோழியாலாய கூட்டம் பகற்குறி | 53 |
| தோழியாலாய கூட்டம் இரவுக்குறி | 10 |
| வரைதல் வேட்கை | 12 |
| உடன்போக்கு வலித்தல் | 7 |

என்ற முறையில் களவியல் காரிகையில் கிளவிகள் அமைந்துள்ளன. இவற்றில் வரைதல் வேட்கையும் உடன்போக்கு வலித்தலும், தோழியாலாய கூட்டம் என்னும் பகுதிக்குள் அடக்கப்பட்டுள்ளன.

களவியற்காரிகை நூல் முழுமையாகக் கிட்டாமையால் இந் நூல் பற்றி ஆராய்வதில் தடையுண்டாகிறது. இயற்கைப் புணர்ச் சிக்கு முன் காட்சி, ஐயம், தெளிதல் என்ற கைக்கிளைக் குறிப்பு கூறப்பட்டுள்ளது. இறையனார் களவியல் நூலின் இரண்டாவது நூற்பா உரையில் வரும் 'காமப்புணர்ச்சி' என்பதற்குச் சொல்லப் பட்ட உரையை எடுத்து களவியற் காரிகை உரையாசிரியரும் இந்தச் சூத்திர உரையில் அமைத்துக் கொண்டுள்ளார். இந்த இடம் தவிர வேறு இடங்களில் சூத்திரத்தின் கருத்தை விளக்கும் அளவுக்கே உரையெழுதிச் செல்கின்றார்.

வரைவு

இங்கு எடுத்துக் கொண்ட நூல்களில் நம்பியகப் பொருள் விளக்கம் ஒன்றே களவு, கற்பியல்களுக்கு இடையில் வரைவியல் என ஒரு இயலை வைத்துள்ளது. இதற்கு அடுத்து, 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய மாறன் அகப்பொருள் நூல் இதைப் போல் களவியல், வரைவியல், கற்பியல் என மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. வேறு நூல்களில் இந்தப் பாகுபாட்டைக் காண முடியவில்லை. வரைவிற்குரிய கிளவித்தொகை இரண்டு. அவை, வரைவு மலிதல், அறத்தொடு நிற்றல் என்பனவாம். இவற்றில் வரைவு மலிதலின் வகை நான்கு, விரி ஏழு ஆகும். அறத்தொடு நிற்

றலில் தலைவி அறத்தொடு நிற்றல், தோழி அறத்தொடு நிற்றல், செவிலி அறத்தொடு நிற்றல் என மூன்று வகைகளில் 13 கிளவி கள் விரியாகும். இவை மட்டுமேயல்லாமல் களவு வெளிப்பாடு உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி என்ற மூன்று தொகைகளை உடையது. இவற்றை அடுத்து, தன்மனை வரைதல், உடன்போக்கு இடையீடு, வரைதல் ஆகியனவும் வரைவியலில் உள்ளன. இவற்றின் வகை 36 ஆகும். கிளவிகளின் எண்ணிக்கை 80 அகும். வரைதல் தொடர்பான பகுதிகள் இந்த இயலில் கூறப்பட் டுள்ளன. இந்த இயலில் உள்ள பொருள்கள் மற்ற நூல்களில் எந்த இடத்தில் சொல்லப்பட்டுள்ளன என்று ஆராய்தல் வேண்டும்.

தொல்காப்பியத்தில் உடன்போக்கு, அகத்திணை இயலிலும் அறத்தொடு நிற்றல் பொருளியலிலும் வரைதல் கற்பியலிலும் வைக்கப்பட்டுள்ளன. களவு வெளிப்பாடு மட்டும் கற்பியலில் உள்ளது. மீட்சி முதலியன தொல்காப்பியத்தில் இல்லை. இறை யனார் களவியலில் அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, களவு வெளிப்படல், வரைவு கடாதல் முதலியன எல்லாம் களவியலி லேயே உள்ளன. தமிழ்நெறி விளக்கத்தில் வரைவு கடாதலும் உடன்போக்கைத் தோழி தூண்டுதலும் களவியலிலும், அறத் தொடு நிற்றல், உடன் போக்கு ஆகியவை கற்பியலிலும், உள்ளன. களவியல் காரிகையிலும் தமிழ்நெறி விளக்கத்தில் உள்ளது போலவே வரைதல் வேட்கையும் உடன்போக்கு வலித்தலும் கள வியலுள்ளும் அறத்தொடு நிற்றல், உடன்போக்கு ஆகியன கற் பியலுள்ளும் உள்ளன.

பிற நூல்களில் இவ்வாறு இருக்க நம்பியகப் பொருளில் மட்டும் வரைவியல் என ஒரு தனி இயல் அமைக்கப்பட்டுள்ளது ஏன் என்ற கேள்வி எழுகிறது. இவ்வாறு ஒரு இயலை அமைத்துக் கொண்டதற்கான காரணம் நூலில் கூறப்படவில்லை. தஞ்சை வாணன் கோவை உரையாசிரியரான சொக்கப்ப நாவலர், இதற்குக் காரணத்தைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

> ஆயின் இதனைக் கற்பின் பாற்படுத்துக் கூறாது, வரைவியல் என வேறாகக் கூறியது என்னை யெனின் வரைவு மலிவு முதலாக உடன்போக் கிடையீடு ஈறாகப் பலவகைப்பட்டு, ஒவ்வொரு வகைக் கிளவிகளும் பலவாக அதிகாரப்பட்டு

நடத்தலின், விளக்குதற்கு வரைவியல் என வேறு கூறப்படும் (தஞ்சைவாணன் கோவை: 239)

என்ற பகுதியில் இவற்றைத் தனியியலாக வைத்தலுக்குக் காரணம் 'இங்கு கூறப்பட்ட பொருள்கள் களவியலிலோ, கற்பியலிலோ பொருந்தாமல் இருப்பதுதான்' என்று கூறியுள்ளார். வரைவியல் என்ற ஒன்றை வகுத்ததற்குக் காரணம் ஆசிரியர் கூறாதபோது தஞ்சைவாணன் கோவை உரையாசிரியர் இவ்வாறு கூறியுருத்தல் ஏற்புடையதே.

**கற்பு**

கற்பியல் பற்றி ஆராயும்போது தொல்காப்பியர் மண நிகழ்ச்சியிலிருந்து தொடங்குகிறார். சுற்றத்தார் கொடுக்கத் தலைவன் மணத்தல், உடன் போக்குத் திருமணம் செய்தல் ஆகியவற்றைச் சொல்லி, கற்பில் தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி, காமக்கிழத்தியர், வாயில்கள் ஆகியோர் கூற்றும் அவற்றின் இயல்பும் உரைக்கின்றார். கற்பில் தலைவன், தலைவி முதலியோர்க்குரிய பிற இலக்கணங்களும் இதில் உணர்த்தப்பட்டுள்ளன.

இறையனார் களவியலில், கற்பு எனும் பகுதியில் இருபத்தேழு நூற்பாக்கள் உள்ளன. பிரிவு பற்றி முதலில் பேசப்படுகிறது. பிரிவின் வகைகள், ஓதல், பகை, காவல், வேந்தர்க்கு உதவி, பொருள், பரத்தையர் ஆகியனவாகும். இந்தப் பிரிவுகளில் நான்கு வருணத்தார்க்கும் உரியவை இன்ன என்பதும் பிரிவுகளின் காலம், நிலம் கடந்து செல்லல் ஆகியனவும் சொல்லப்படுகின்றன. பின்பு ஊடலின் போது நிகழ்பவற்றின் இலக்கணம் வாயில்கள் பற்றிய இலக்கணம் முதலியன கூறப்பட்டுள்ளன. இறையனார் களவியலில், கற்பியலில் பெரும்பகுதி பிரிவுபற்றியும், மற்ற பகுதி ஊடல், வாயில்கள் பற்றியும் உள்ளமையைக் காணலாம். ஆகவே இறையனார் களவியல் நூலாசிரியர் கற்பில் பிரிவுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றார் எனலாம். உரையாசிரியரும் களவில் கூறியது போல கிளவிகளை அதிகம் வரிசைப்படுத்திக் கூறவில்லை.

தமிழ்நெறி விளக்கத்தில் கற்புப் பகுதியைக் கூறுவது ஐந்து நூற்பாக்களாகும். முதலாவது முக்கட் கூட்டம் முதலிய நான்கும் கற்பு என்று கூறுகிறது. அடுத்து வரும் நூற்பாக்கள் முறையே, அறத்தொடு நிற்றல்(22), உடன் செலவு(23), சேயிடைப் பிரிவு

(24), ஆயிடைப் பிரிவு(25) ஆகியவற்றைக் கூறுகின்றன. அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, பிரிவு இவை மட்டுமே கற்பு என்பது இந்த நூலின் கருத்து என்பது புலனாகிறது. உரையில் இந்த ஒவ்வொரு துறைக்கும் எடுத்துக்காட்டு தரப்பட்டுள்ளது. இந்த நூலில் வாயில்கள் பற்றியோ, இன்ன வருணத்தார்க்கு இந்த பிரிவு உடையது என்றோ, பிரிவுகளின் வகையோ விளக்கப்படவில்லை. ஊடல் என்ற பகுதியும் இதில் இல்லை.

நம்பியகப்பொருள் நூலில் கற்பியலில் ஏழு கிளவித் தொகைகள் உள்ளன. இவற்றில் களவியலில் கூறியது போலவே வகைகளும் விரியும் இடம் பெற்றுள்ளன. கற்பியலில் தலைவன், தலைவி இல்லறம் பற்றிய பகுதி இதுவாகும். இந்த நிகழ்வுகளைக் கண்ட தோழியும் செவிலியும் மகிழ்தலும் இதனுள் வைக்கப்பட்டுள்ளது. பரத்தையர் பிரிவின் வகைகள், வாயில் வேண்டல், வாயில் மறுத்தல், வாயில் நேர்வித்தல், வாயில் நேர்தல், என்னும் நான்காகும். இதன் விரி, உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவி என்றும், உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவி என்றும் பகுத்துச் சொல்லப்பட்டுள்ளன. பரத்தையிற் பிரிவாகிய இதனுள் ஊடல் பற்றிய இலக்கணங்களையும், ஊடல் தவிர்க்கும் வாயில் பற்றிய இலக்கணங்களையும், அமைத்துள்ளார் பிரிவு பற்றிய இலக்கணப் பகுதிகள் இதனுள் இல்லை. பரத்தையிற் பிரிவு தவிர ஏனைய ஐந்து பிரிவுகளுக்கும் உரிய கிளவி வகைகளை ஒன்பதாக வகுத்து ஒரே நூற்பாவில் கூறுகிறார். நம்பியகப்பொருள் நூலில் கற்பில் பதினேழு வகையும், விரியாக முப்பத்தொன்பது கிளவியும் சொல்லப்பட்டுள்ளன. இந்நூல் ஊடல், வாயில், பிரிவு ஆகியவற்றுக்குக் கற்பில் முக்கியத்துவம் கொடுத்து இலக்கணம் வரைந்துள்ளது.

களவியல் காரிகை நாற்பத்து மூன்று முதல் ஐம்பத்து நான்கு வரையுள்ள பன்னிரண்டு சூத்திரங்களில் கற்பு இலக்கணம் கூறுகிறது. கற்பொழுக்கம் வெளிப்படை நிலை, வரைபொருட் கேகல், உடனிலைச் செலவு என்ற மூன்று பகுதிகளில் 49 கிளவித் தொகையுடன் கற்பு உள்ளது. ஐம்பத்து நான்காம் சூத்திரம் வரை மட்டுமே உள்ளதால் கற்புப் பகுதி முழுமையாகக் கிடைக்கவில்லை. வெளிப்படை நிலை அறத்தொடு நிற்றல் பற்றியும், வரை பொருட் கேகல் வரை விடை வைத்துப் பொருள்வயின் பிரிதலையும், உடனிலைச் செலவு உடன்போக்கு பற்றியும் கூறியுள்ளது. களவியல் காரிகை

நூல் அமைப்பில் பெரும்பாலும் தமிழ்நெறி விளக்கத்தைப் பின் பற்றுவதால் அதில் உள்ள சேயிடைப் பிரிவு, ஆயிடைப் பிரிவு ஆகியன இதிலும் இருந்திருக்க வேண்டும். அந்தப் பகுதி கிடைக் காததால் கிடைத்த பகுதியை மட்டும் வைத்துக் கொண்டு ஆராயப்படுகிறது. தமிழ்நெறி விளக்கம் போலவே, களவியற் காரிகையும் அறத்தொடு நிற்றல், உடன் போக்கு ஆகியவற்றைக் கற்பில் வைத்து விளக்குகின்றது. இதனுள் கிளவிகள் விரித்துக் கூறப்பட்டுள்ளன. கற்பு ஒன்பது வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முன்பு கூறிய மூன்றுடன், கல்விப் பிரிவு, காவலிற் பிரிவு, பகைதணி வினைப் பிரிவு, வேந்தர்க்குற்றுழிப் (உதவி) பிரிவு, பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற் பிரிவு, என்ற ஆறு பிரிவுகளும் சேர்ந்து ஒன்ப தாம். இவற்றை நோக்கும் போது கல்வி முதல், பொருள் வரையுள்ள ஐந்தினுள்ளும் பிரிவு பற்றிய இலக்கணமும் பரத்தையிற் பிரிவில் ஊடல், வாயில்கள் பற்றிய இலக் கணமும் சொல்லப்பட்டிருக்க லாம் என்று ஊகிக்கப்படுகின்றது. களவியற் காரிகையிலும், கற்புப் பகுதி விரிவாகவும், பிரிவு ஊடல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தும் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

பொதுவாக, அகப்பொருள் இலக்கணம் கூறும் நூல்கள் எல்லாம் (வீரசோழியம் தவிர) கற்பின் இலக்கணம் கூறும் பகுதி யில், களவின் இலக்கணம் கூறும் முறையை ஒத்துள்ளன. இலக் கணம் கூறும் முறையில் களவு, கற்பு ஆகிய இரண்டிற்கும் இடையே பெரிய வேறுபாடு இல்லை. இங்கு எடுத்துக் கொண்ட நூல்களில் எல்லாம் கற்பின் இலக்கணம் கூறும் முறை பற்றி நோக்கும் போது, பொதுவாக கற்பில் பிரிவிற்கு முதன்மை கொடுக்கும் நூல்களும் அதில் உடன்போக்கு, அறத்தொடு நிற்றல் முதலியவற்றைக் கூறும் நூல்களும் என இரு வேறு மரபுகள் காணப்படுகின்றன.

### புறப்பொருள்

பொருள் இலக்கணத்தின் அடுத்த கூறான, புறப்பொருள் இலக்கணம் தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, வீரசோழியம் ஆகிய மூன்று நூல்களிலும் சொல்லப்பட்டுள்ளது. தொல்காப்பியமும் வீரசோழியமும் பொருள் இலக்கணத்தின் ஒரு பகுதியாகவே புறப்பொருள் இலக்கணத்தை விளக்கியுள் ளன. புறப்பொருள் வெண்பாமாலையில் புறப்பொருள் இடம்

பெற்றுள்ளது. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அகத்திணை இயலுக்கு இணையாகப் புறத்திணை இயலை வைத்துள்ளார். வீரசோழிய நூலாசிரியர், அகப்பொருள், புறப்பொருளுக்கென்று தனித்தனி இயல்களை வகுக்கவில்லை. பொருட்படலத்திலேயே புறப்பொருள் இலக்கணம் விளக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியப் புறத்திணையியல் அகத்திணை இயலோடு தொடர்புடையது. அகத்தில் ஏழு திணைகளைச் சொன்ன தொல் காப்பியர் புறத்திலும் எழு திணைகளைக் கூறியுள்ளார். மேலும் அகத்திணையையும் புறத்திணையையும் இணைத்தே தொல்காப் பியர் கூறுகிறார்.

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே (1)

என்று அகத்திணையுடன் இணைத்துப் புறத்திணை இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இந்த நூற்பாவில் வெட்சி என்ற புறத்திணை, குறிஞ்சி என்ற அகத்திணைக்குப் புறனாகும் என்று கூறியுள்ளார்.

வஞ்சி தானே முல்லையது புறனே (6)

உழிஞை தானே மருதத்துப் புறனே (8)

தும்பை தானே நெய்தலது புறனே (12)

வாகை தானே பாலையது புறனே (15)

காஞ்சி தானே பெருந்திணைப் புறனே (18)

பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே (20)

என்று எல்லாப் புறத்திணைகளும் அகத்திணையோடு தொடர்பு படுத்திச் சொல்லப்பட்டுள்ளன. ஒவ்வொரு புறத்திணையும் இந்த அகத்திணையின் புறமாகும் என்று விளக்கிய பின்னர் அந்தத் திணையின் பொருளை விளக்குகிறார்.

எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்தன்றே (6)

என்பது வஞ்சித் திணையின் விளக்கமாகும். அகப்பொருள் போல கூற்றுகளைத் தொகுத்துக் கூறாமல் இங்கு துறைகளைக் கூறுகிறார். புறத்திணையியலில் திணைவாரியாக இருக்கணம் கூறப்பட்டுள்ளது. புறத்திணைக்கு உரிய துறைகள் தனித்தனி நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளன. வெட்சித் திணைக்கு மட்டும் இரண்டு நூற்பாக்களில் துறைகளைக் கூறியுள்ளார். இதில் முதலாவது நூற்பாவில் உள்ளவை வெட்சி என்றும் இரண்டாவது நூற்பாவில் உள்ளவை கரந்தை என்றும் இளம்பூரணர் கொள்கிறார். (புறத்திணையியல்: 51) ஆனால் தொல்காப்பியர் கரந்தையைத் தனியாகக் கூறவில்லை. புறப்பொருளுக்கு உரிய பொதுவான இலக்கணங்களை கூறிய பின்பு 'தாவின் நல்லிசை' (30) என்ற சூத்திரத்தில் துயிலெடை நிலை, ஆற்றுப்படை முதலியவற்றிற்கு இலக்கணம் கூறியுள்ளார். இவ்வாறு பொது இலக்கணமும் சிறப்பு இலக்கணமும் உரைக்கிறது தொல்காப்பியப் புறத்திணையியல்.

புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணைகள் பன்னிரண்டு என்று கூறுகிறது. இந்தப் பன்னிரண்டையும், புறம், அகப்புறம், புறப்புறம் என மூன்றாகப் பிரிக்கிறது. இவை பின்வருமாறு அமைந்துள்ளன.

| புறம் | புறப்புறம் | அகப்புறம் |
|---|---|---|
| வெட்சி | வாகை | கைக்கிளை |
| கரந்தை | பாடாண் | பெருந்திணை |
| வஞ்சி | பொதுவியல் | |
| காஞ்சி | | |
| உழிஞை | | |
| நொச்சி | | |
| தும்பை | | |

தொல்காப்பியத்திற்குப் பின்னரும், புறப்பொருள் வெண்பாமாலை, தோன்றுவதற்கு முன்னரும் பன்னிருபடலம் தோன்றியது. இந்த நூலே புறப்பொருள் வெண்பாமாலைக்கு முதல் நூல் ஆகும். இதை 'பன்னிரு படலம் முதல் நூலாக வழி நூல் செய்த வெண்பாமாலை ஐயனாரிதனார்' (மரபியல்: 146) என்று வரும் பேராசிரியர் உரையாலும் அறியலாம்.

தொல்காப்பியத்தில் புறத்திணைகள் ஏழு என்று இருக்கும் போது, இந்த நூலில் பன்னிரு திணைகள் கூறப்பட்டிருப்பதை ஆராய வேண்டும். தொல்காப்பியர் கூறியுள்ள திணைகளுக்கு மேலாக புறப்பொருள் வெண்பாமாலையில் கூறப்பட்டுள்ள திணைகள் கரந்தை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை, பெருந் திணை ஆகிய ஐந்தும் ஆகும். கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டையும் தொல்காப்பியர் அகத்திணை என்று கொண்டார். கரந்தை, நொச்சி, பொதுவியல் ஆகியவற்றைத் தொல்காப்பியர் தனித்தனியாகக் கூறவில்லை. இவற்றில் கரந்தைப்பகுதியை மட்டும் புறத்திணையியல் ஐந்தாம் நூற்பாவில் தொல்காப்பியர் கூறியுள் ளார். இப்படி அதிகப்படியாகத் திணைகளைக் கூறிய காரணத்தை ஆராயப் புகுமுன் புறப்பொருள் வெண்பா மாலை திணைகளை அமைந்துள்ள முறையை அறிதல் வேண்டும். திணைகள் பின்வரு மாறு அமைந்துள்ளன.

| | |
|---|---|
| நிரை கவர்தல் | வெட்சி |
| நிரை மீட்டல் | கரந்தை |
| படை மேற்செல்லல் | வஞ்சி |
| எதிரெழுதல் | காஞ்சி |
| மதில் வளைத்தல் | உழிஞை |
| மதில் காத்தல் | நொச்சி |

என்று இணை இணையாகத் திணைகள் அமைந்துள்ளன. ஆகவே இவற்றில் இல்லாததை நிறைவு செய்ய கரந்தையும் நொச்சியும் சேர்ந்து கொண்டன. இது மட்டுமன்றித் தொல்காப்பியத்தில் திணைகளைச் சொன்ன வரிசை முறையில் இருந்து இந்த வரிசை முறை மாறுபட்டுள்ளது. தொல்காப்பியத்தில் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்று அமைந்துள் ளது. இவற்றில் காஞ்சித்திணை வஞ்சிக்கு இணையாக வெண்பா மாலையில் சொல்லப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் வாகைத் திணைக்குப்பின் அமைக்கப்பட்டுள்ளது. இவை இரண்டின் பொருளையும் நோக்கும் போது தொல்காப்பியக் காஞ்சித் திணை,

> பாங்கு அருஞ்சிறப்பின் பல்லாற் றானும்,
> நில்லா உலகம் புல்லிய நெறித்தே (18)

என்று நிலையாமையைக் கூறும் திணை என்று விளக்கம் கூறப் பட்டுள்ளது. புறப்பொருள் வெண்பாமாலையில்,

> வெவ்விய சினத்தையுடைய வேற்று மன்னன் வந்து
> விட அரசன் காஞ்சியென்னும் பூவை மலைந்து
> காவலிடத்தைக் காக்க நினைத்தது (புறப்.: 31)

என்று காஞ்சித் திணைக்குக் காவலிடத்தைக் காக்கும் போர் நிகழ்ச்சி என்றும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. தொல்காப் பியத்தில் காஞ்சித் திணைக்குக் கூறப்பட்டுள்ள முதுபாலை, தபு தார நிலை, தாபதநிலை, பாலைநிலை, பேய்ப்பக்கம், தொடாக் காஞ்சி முதலிய துறைகள் போரினால் நேர்ந்த இழிவுகளையே பெரும்பாலும் கூறி, அதனால் நிலையாமையை உணர்த்து வன வாகும். வெண்பா மாலையில் கூறப்பட்டுள்ள இருபத்திரண்டு துறைகளில் ஆஞ்சிக் காஞ்சி, மன்னைக் காஞ்சி முதலியன புண் பட்ட வீரர்களில் நிலையைக் கூறுவன எனினும், காஞ்சியெதிர்வு, படைவழக்கு, பெருங்காஞ்சி, வாள்செலவு, குடை செலவு, வஞ் சினக் காஞ்சி, பூக்கோள் நிலை, தலைக்காஞ்சி, முதலிய போர் நிகழ்ச்சிகளைக் கூறும் துறைகளே மிகுதி. இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தொல்காப்பியத்தில் நிலையாமைப் பொருளை உணர்த்திய காஞ்சி, புறப்பொருள் வெண்புாமாலை நூல் அமைப் பினால் (இணை இணையாகக் கூறுதல்) போர் நிகழ்ச்சி கூறும் திணையாக மாற்றம் பெற்றமை புலனாகும். இதற்குக் காரணம் போர் நிகழ்ச்சிகளை நிரலே அமைக்க நினைத்த இவ்வாசிரி யரின் கருத்தே எனலாம். இந்த மாற்றம் பன்னிரு படலத்திலேயே நேர்ந்திருக்கவும் வாய்ப்பு உண்டு.

பொதுவியல் திணை என்ற ஒன்று தொல்காப்பியத்தில் இல்லை. புறப்பொருள் வெண்பாமாலையில் இது அமைந்துள் ளது. பொதுவியல், சிறப்பிற் பொதுவியல், காஞ்சிப் பொதுவியல், முல்லைப் பொதுவியல் என நான்கு சூத்திரங்களில் (10 -13) சொல் லப்பட்டுள்ளன. இதில் பொதுவியலில் உள்ளவை மூவேந்தரின் பூவைப் பாடுவதும், உன்ன நிலை, ஏழக நிலை, கழல் நிலை ஆகி யனவும் கற்காண்டல், கற்கோள், நீர்ப்படுத்தல், கல்நடுதல் முதலிய நடுகல் நிகழ்ச்சிகளுமாகும். இவை எல்லாம் தொல்காப்பியத்தில் கரந்தைப் பகுதியைச் சொல்லும் நூற்பா வில் (5) உள்ளன. சிறப்பிற் பொதுவியலில் உள்ள முதுபாலை, சுரநடை, தபுதார நிலை, தாபத நிலை, தலைப்பெயல் நிலை, பூசல் மயக்கு, மாலை நிலை (தொல்

காப்பியத்தில் பாலை நிலை) மூதானந்தம், ஆனந்தப்பையுள், கையறு நிலை ஆகியன தொல்காப் பியத்தில் காஞ்சித்திணைச் சூத்திரத்தின் பிற்பகுதியில் உள்ளன. காஞ்சிப் பொதுவியலில் உள்ள முதுமொழிக் காஞ்சி, பெருங் காஞ்சி, பொருண்மொழிக் காஞ்சி, முதுகாஞ்சி ஆகியன நிலையாமையைக் குறிப்பன. முல் லைப் பொதுவியலில் கார் முல்லை, தேர் முல்லை, நாண் முல்லை, இல்லாண் முல்லை, பகட்டு முல்லை, கற்பு முல்லை ஆகிய துறை களுள்ளன. இவை தலைவி ஆற்றி இருக்கும் முல்லைத்திணை உரிப் பொருளுடன் தொடர்புடைய துறைகளாகும். இறுதி இரண்டும் தொல்காப் பியத்தில் காணப்படவில்லை. முன்னர் கூறியவை தொல்காப் பியத்தில் எங்கெங்குள்ளன என்று காட்டப்பட்டன. ஆகவே தொல்காப்பியத்தில், கரந்தைப் பகுதியிலும், காஞ்சித் திணையிலும் உள்ள சிலவற்றையும் வேறு சிலவற்றையும் சேர்த்துப் பொதுவியல் திணை அமைக்கப்பட்டுள்ளது.

புறப்பொருள் வெண்பாமாலை நூலின் அமைப்பினை நோக்கும்போது, இதில் பன்னிரண்டு திணையும் பன்னிரண்டு படலங்களாக அமைந்துள்ளன. வெட்சி முதல் பாடாண்திணை வரையுள்ள ஒன்பது படலங்களில் ஒன்பது நூற்பாக்களும் பொது வியல் படலத்தில் நான்கு பிரிவுகளைக் குறிக்கும் நான்கு நூற்பாக் களும், கைக்கிளைப் படலத்தில் ஆண்பால் கூற்று, பெண் பால் கூற்று என இரு நூற்பாக்களையும், பெருந்திணைப் படலத்தில் பெண்பாற்கூற்று, இருபால் பெருந்திணை என இரண்டு நூற்பாக் களும் ஒழிபியலில் ஒரு நூற்பாவும் இறுதியில் புறம், புறப்புறம் ஆகியவற்றை விளக்கும் ஒரு நூற்பாவும் ஆக பத்தொன்பது நூற் பாக்கள் உள்ளன. ஒழிபியல் நூற்பாவில் பாடாண் திணைக்குரிய கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும். வாகைத் திணைக் குரிய வாணிக வென்றி, மல்வென்றி, உழவன், ஏறு, கோழி, தகர், யானை, பூழ், சிவல், கிளி, பூவை, குதிரை, தேர், யாழ், சூது, ஆடல், பாடல், பிடி ஆகிய பதினெட்டு வெற்றிகளும் சொல்லப்பட்டுள் ளன. இந்தச் சூத்திரங்களில் துறைகள் மட்டுமே தொகுத்துச் சொல் லப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைக்கும் தனியே கொளுவும் எடுத் துக்காட்டுப் பாடலும் உள்ளன. இந்த மூன்றுக்கும் உரை உள்ளது.

புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிருபடலத்தின் வழி நூல் என்று சொல்லப்பட்டது. பன்னிருபடலம் முழுவதும்

கிடைக்கவில்லை. எனினும் உரைகளில் மேற்கோள்களாகச் சில சூத்திரங்கள் கிடைக்கின்றன. அவற்றின் மூலம் பன்னிருபடலம் அமைந்திருந்த முறையை ஓரளவு அறிய இயலும். யாப்பருங்கல விருத்தியில்,

> அகப்புறமாவன, காந்தள், வள்ளி, சுரநடை, முது
> பாலை, தாபதம், தபுதாரம், குற்றிசை, குறுங்கலி,
> பாசறைமுல்லை, இல்லாண்முல்லை என்ற இவை
> பத்தும், கைக்கிளை, பெருந்திணை என்ற இவை
> இரண்டும் என்க.
>
> ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டும் ஆயுங்கால்
> காந்தள் .... .... ....
> அமர்ந்த வீரைந்தும் அகத்தின் புறமே
> கைக்கிளை யென்றா பெருந்திணை யென்றாங்
> கத்திணை இரண்டும் அகத்திணைப் புறனே.
>
> இவை பன்னிருபடலம் (யா.வி.: 569, 70)

என்று எழுதப்பட்டுள்ளது. இவற்றில் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டே அகப்புறம் என்று புறப்பொருள் வெண்பா மாலையில் சொல்லப்பட்டுள்ளது. எஞ்சிய பத்தும் அகப்புறம் என்ற பகுதியில் இல்லை. இவற்றில் சுரநடை, முதுபாலை, தபுதாரம், தாபதம் ஆகிய நான்கும் சிறப்பிற் பொதுவியலிலும், இல்லாண் முல்லை, முல்லைப் பொதுவியலிலும், குற்றிசை, குறுங்கலி ஆகிய இரண்டும் இருபாற் பெருந்திணையிலும் காந்தள், உழிஞைத் திணையிலும், வள்ளி பாடாண் திணையிலும், பாசறை முல்லை (பாசறை நிலை) வஞ்சித் திணையிலும் உள்ளன. இவற்றை நோக்கும் போது குற்றிசை, குறுங்கலி ஆகிய இரண்டு மட்டுமே அகப்புறம் எனப்படும் பெருந்திணையில் உள்ளன. மற்றவை அகப்புறம் என புறப்பொருள் வெண்பா மாலையில் காணப்பட வில்லை. வெண்பா மாலையில் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டு மட்டுமே அகப்புறம் என்று கூறப்பட்டுள்ளன. இதை நோக்கும் பொது, பன்னிருபடலத்தின் வழி நூலாகத் தம் நூலை இயற்றியிருப்பினும், ஐயனாரிதனார், சில மாற்றங்களை மேற் கொண்டே நூலை இயற்றியுள்ளார். புறத்திணையும், புறப்புறத்

திணையும், புறப்பொருள் வெண்பாமாலையில் உள்ளபடியே பன்னிருபடலத்திலும் உள்ளன. (யா.வி. : 571)

வீரசோழியத்தில் புறமும், புறப்புறமும் புறப்பொருள் வெண்பா மாலையில் உள்ளபடியே கூறப்பட்டுள்ளன. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை ஆகிய ஐந்து புறத்திணை களுக்கே துறைகள் கூறப்பட்டுள்ளன. நொச்சி, தும்பை ஆகிய இரண்டிற்கும் துறை விளக்கம் கூறப்படவில்லை. துறைகளும் புறப்பொருள் வெண்பா மாலையில் உள்ள அளவுக்கு இல்லாமல் அளவில் குறைவாக உள்ளன. இவற்றிற்கு விளக்கம் உரையில் மட்டுமே உள்ளது. எடுத்துக்காட்டாக வஞ்சித்திணையின் துறை கள், அரவம், எடுத்தல், வயங்கியல், ஈகை, விலக்கருமை, தனிச் சேவகம், வென்றி கூறல், வென்றார் விளக்கம், நிரவும் வழிகை, கொற்றவர் மெலிவு, பரவு தழிஞ்சி, சோற்று நிலை எனப் பன் னிரண்டாகும். இவற்றைப் புறப்பொருள் வெண்பா மாலையில் வஞ்சிப் படலத்தில் வரும் துறைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். புறப்பொருள் வெண்பாமாலையில்,

| | |
|---|---|
| வஞ்சி | முதுமொழி வஞ்சி |
| வஞ்சியரவம் | உழபுல வஞ்சி |
| குடைநிலை | மழபுல வஞ்சி |
| வாள் நிலை | கொடை வஞ்சி |
| கொற்றவை நிலை | குறுவஞ்சி |
| கொற்றவஞ்சி | ஒரு தனிநிலை |
| கொற்றவள்ளை | தழிஞ்சி |
| பேராண் வஞ்சி | பாசறை நிலை |
| மாராய வஞ்சி | பெருவஞ்சி |
| நெடுமொழி வஞ்சி | பெருஞ்சோற்று நிலை |
| | நல்லிசைவஞ்சி |

என இருபத்தொரு துறைகள் உள்ளன. இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இரண்டு நூல்களுக்கும் உள்ள வேறுபாடு புலப்படும். எனவே இவை இரண்டும் வெவ்வேறு மரபுகளில் வந்த நூல்களாகும். இவ்வாறே பிற புறத்திணைகளிலும் துறை

வேற்றுமைகள் உள்ளன. மேலும் இரண்டு திணைகளுக்கு விளக்கம் கூறப்படவில்லை. வீரசோழியம் சுருக்கமாகவே பொருள் இலக்கணத்தை உணர்த்தும் நூல்.

## அகப்புறப்பொருள்

அகப்புறம் பற்றிய இலக்கணத்தை ஆராயும்போது, தொல்காப்பியம், இறையனார் களவியல், தமிழ்நெறி விளக்கம், களவியல் காரிகை ஆகியவற்றில் அகப்புறம் பற்றிய இலக்கணம் இல்லை. பன்னிரு படலத்தில் அகப்புறம் கூறப்பட்ட முறையும் அது புறப்பொருள் வெண்பாமாலையில் அமைந்துள்ள விதமும் முன்பு காட்டப்பட்டது. புறப்பொருள் வெண்பா மாலையில் கைக்கிளை, பெருந்திணை ஆகிய அகப்புறத் திணைகள் உள்ளன. இவற்றில் கைக்கிளை ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகைப் படும். இவை எல்லாம் கொளுக்களால் விளக்கப்பட்டுள்ளன. இவற்றில் எடுத்துக்காட்டாக இருபத்தொரு செய்யுள்கள் உள்ளன. கைக்கிளையை மருட்பாவால் பாட வேண்டும் என்ற நியதிக்கேற்ப இங்குள்ள இருபத்தொரு உதாரணச் செய்யுளும் மருட்பாவிலேயே அமைந்துள்ளன. பெருந்திணைப் படலத்தில் பெண்பால் கூற்று, இருபால் பெருந்திணை என இரண்டு நூற்பாக்கள் உள்ளன. இவற்றில் முறையே பத்தொன்பதும், பதினேழுமாக முப்பத்தாறு துறைகள் உள்ளன.

நம்பியகப் பொருள் ஒழிபியலில் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டின் இலக்கணம் பேசப்பட்டுள்ளது.

> காமஞ் சாலா இளமையோள்வயின்
> குறிப்பறிவுறாது குறுகி ஆங்கு அவளோடு
> இறப்பக் கூறுவது அகப்புறக் கைக்கிளையே (நம்பி. 241)

என்று கைக்கிளையை அகப்புறம் என்று கூறியுள்ளார். அடுத்து கைகிளைக்கு உரியர் இழிகுலத்தோர் என்று கூறுகிறார். பெருந்திணையை, அகப்பொருள் பெருந்திணை எனவும், அகப்புறப் பெருந்திணை எனவும் இரண்டாகப் பகுத்துள்ளார். அவற்றுள் அகப்பொருள் பெருந்திணை,

> அகன்றுழிக் கலங்கலும் புகன்ற மடல் கூற்றும்
> குறியிடையீடும் தெளிவிடை விலங்கலும்

வெறிகோள் வகையும் விழைந்துடன் போக்கும்
பூப்பியல் உரைத்தலும் பொய்ச் சூளுரையும்
தீர்ப்பில் ஊடலும் போக்கு அழுங்கு இயல்பும்
பாசறைப் புலம்பலும் பருவம் மாறுபடுதலும்
வன்புறை எதிர்ந்து மொழிதலும் அன்புறு
மனைவியும் தானும் வனமடைந்து நோற்றலும்
பிறவும் அகப்பொருள் பெருந்திணைக்கு உரிய (நம்பி. 243)

என்ற சூத்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது. உரையில் இதற்கு விளக்கம் இல்லை. அகப்புறப் பெருந்திணை, மடலேறுதல், விடை தழுவல், குற்றிசை, குறுங்கலி, சுரநடை, முதுபாலை, தாபத நிலை, தபுதாரநிலை என்ற எட்டும் கொண்டது. இவற்றுள் விடை தழுவல் தவிர பிற எல்லாம் புறப்பொருள் வெண்பா மாலையில் உள்ளன. அவற்றில் மடலேறுதல், குற்றிசை, குறுங்கலி ஆகிய மூன்றும் பெருந்திணைப் படலத்தில் உள்ளன. சுர நடை, முது பாலை, தாபதநிலை, தபுதாரநிலை ஆகிய நான்கும் சிறப்பிற் பொதுவியல் சூத்திரத்தில் உள்ளன. அகப்புறப் பெருந்திணைச் சூத்திர உரையில் இங்குச் சொல்லப்பட்ட எட்டும், இயற்பெயர் சுட்டாத போது அகப்புறப் பெருந்திணை என்றும், இயற்பெயர் சுட்டினால் புறப்புறப் பெருந்திணை என்றும் கூறப்பட்டுள்ளது. (நம்பி: 286) எனவே நம்பியகப் பொருளின் கருத்துப்படி பெருந்திணை, அகப்பொருள் பெருந்திணை, அகப்புறப் பெருந்திணை, புறப்புறப் பெருந்திணை என மூன்று வகைப்படும். இந்தப் பாகுபாடு வேறு நூல்களில் காணப்படாததாகும்.

வீரசோழியத்தில் அகப்புறம் என்ற பிரிவில் வருவனவற்றைப் பன்னிரண்டாவது சூத்திரம் விளக்குகிறது. அதில் முது பாலை, பாசறைமுல்லை, வள்ளி, சுரநடை, இல்லாண் முல்லை, காந்தள், குறுங்கலி, தாபதம், குற்றிசை, கைக்கிளை, பெருந் திணை, தபுதாரம் ஆகியன அகப்புறம் என்று கூறப்பட்டுள்ளது. உரையில் விளக்கம் எதுவுமில்லை. "இவற்றால் அகப்புறம் அறிக" என்று கூறிவிட்டு 'ஆய்ந்த அகப்புறம்' என்ற18 அடி கொண்ட பன்னிருபடல நூற்பாவை மேற்கோள் காட்டிச் செல்கிறார். இதில் கைக்கிளை, பெருந்திணை தவிர மற்ற பத்துக்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

## புறப்புறப்பொருள்

புறப்புறத்தில் வாகை, பாடாண், பொதுவியல் ஆகிய மூன்று திணைகள் உள்ளன. இவற்றில் பொதுவியல் திணை தொல்காப்பியத்தில் இல்லாதது என்றும் அதில் கூறப்பட்டுள்ள பொருள்கள் தொல்காப்பியத்தில் அமைந்துள்ள விதம் குறித்தும் முன்பே கூறப்பட்டது. புறப்பொருள் வெண்பாமாலையில் உள்ள வாகைத் திணையில் முப்பத்துமூன்று துறைகள் உள்ளன. தொல்காப்பியத்தில் வாகைத்திணையின் வகை ஏழு எனவும் துறை பதினெட்டு என்று விரியும் கூறப்பட்டுள்ளன. புறப்பொருள் வெண்பாமாலையில், தொல்காப்பியத்தில் சொல்லப்படாத பல துறைகளும் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் கூதிர்ப்பாசறை, வேனிற்பாசறை என சொல்லப்பட்டிருப்பினும் புறப்பொருள் வெண்பாமாலையில் கூதிர்ப்பாசறை, வாடைப் பாசறை என்று சொல்லப்பட்டுள்ளது. இதுபோல பல வேறுபாடுகள் உள்ளன.

தொல்காப்பியத்தில் பாடாண் திணையின் வகையும் விரியும் இருபத்தொன்று முதல் முப்பது வரையுள்ள பத்து நூற்பாக்களில் சொல்லப்பட்டுள்ளன. புறப்பொருள் வெண்பாமாலையில் பாடாண் படலத்தில், பாடாண் திணை நாற்பத்தெட்டுத் துறைகளை உடையது என்று கூறப்பட்டுள்ளது. புறப்பொருள் வெண்பாமாலை துறைகளை வரிசைபடச் சொல்வதாலும் தொல்காப்பியம் வகைப்படுத்திச் சொல்வதாலும் இரண்டிற்கும் வேறுபாடுகள் உள்ளன.

வீரசோழியத்தில் புறப்புறத் திணைகளாக வாகை, பாடாண், பொதுவியல் ஆகியன சொல்லப்பட்டிருப்பினும் அவற்றுள் வாகை, பாடாண் என்னும் இரண்டிற்கும் மட்டும் துறை விளக்கம் உள்ளது. வாகைத் திணையில்,நாற்குலப் பக்கம், மேன்மை, முக் காலம், பொருள், களவழி, காவல், குரவை, துறவு, ஆற்றல், கொடை, வல்லாண்பக்கம், படையாளர் பக்கம், வேட்கையார் பக்கம், ஒற்றுமை, ஆகிய பதினான்கும் கூறப்பட்டுள்ளன. பாடாண் திணை புகட்சி, பரவல், குறிப்பு, கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற ஆறும் ஆகும். இவை மட்டுமே வீரசோழியத்தில் விளக்கப் பட்டுள்ளன.

○ ○ ○

பொருள் இலக்கணத்தை நான்கு பிரிவுகளில் விளக்கும் இந்த நூல்களை ஆராய்ந்த பின்பு, சில கருத்துகள் தோன்றுகின் றன. தொல்காப்பியம் அகம், புறம் எனப்பகுத்து, அகத்தைக்களவு, கற்பு எனப் பிரித்து, இவற்றில் அடங்காதவற்றை பொருளியலில் கூறுகிறது. இவையே அன்றிப் பொருள் இலக்கணத்தின் பகுதி கள், உவமவியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் ஆகிய இயல் களிலும் பரவிக் கிடக்கின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரத் தில் செய்யுள், மெய்ப்பாடு, உவமை இவற்றின் இலக்கணம் கூறும் இயல்கள் இருப்பினும் அவற்றிலும் பொருள் இலக்கணம் கூறப் பட்டிருப்பதால் தொல்காப்பியர், செய்யுள் முதலியவற்றைத் தனி இலக்கணமாகக் கருதவில்லை என்று தெரிகிறது. அகப் பொருள் இலக்கணத்தில் (களவியல், கற்பியல்) நிகழ்ச்சி முறை யாக இலக்கணத்தை கூறிச் செல்லாமல் கூற்றுகளுக்கே முதன்மை கொடுத்து இலக்கணம் இயம்பியுள்ளார். ஆனால் புறத்திணையி யலில் திணைவாரியாக இலக்கணத்தைத் தொகுத்துத் துறைகளாக அமைத்துள்ளார். இது தொல்காப்பிய அமைப்பின் முக்கிய பகுதியாகும்.

இறையனார் அகப்பொருள், களவியல், கற்பியல் என இரண்டே இயல்களில்களில் அகப்பொருள் இலக்கணம் கூறுவ தால் பொதுவான இலக்கணம் எல்லாம் உரையிலேயே கொள்ளப் பட்டுள்ளன. இந்த நூலில் தொல்காப்பியத்தில் உள்ளபடிக் கூற்று வகை அமைப்பு இல்லை, எனினும் நம்பியகப்பொருள் முதலியன போலக் கிளவிகளைத் தொகுத்துக் கூறும் முறையும் முற்று முழு தாகப் பின்பற்றப்படவில்லை. தொல்காப்பிய முறைக்கும், நம்பி யகப் பொருள் முறைக்கும் இடைப்பட்ட நூலாக இறையானார் களவியல் விளங்குகிறது.

தமிழ்நெறி விளக்கம், சுருக்கமாக அகப்பொருள் இலக் கணம் விளக்கும் சிறிய நூலானாலும் கிளவிளைத் தொகுத்து விளக்கும் நூல்களில் முதலாவதாக அமைகிறது. சூத்திரங்களின் அமைப்பு முறையிலும் கிளவிகளை வரிசைப்படுத்துவதிலும் வரிசை முறையைப் பின்பற்றியுள்ளது. இறையனார் அகப்பொருள் போலப் பிரிவு பற்றி மட்டும் கற்பியலுள் கூறாமல் அறத்தொடு நிற்றல், உடன்போக்கு ஆகியவற்றையும் கற்பியலில் அமைத்துள்

ளது. கிளவிகளை விளக்க எளிய எடுத்துக்காட்டுகளுடன் அமைந் திருப்பது இந்த நூலின் தனித்தன்மை. சுருக்கமான நூலாக இருந் தாலும் அகப்பொருள், களவு, கற்பு எனும் பகுதியனைத்தும் நிரம் பிய நூல் இதுவாகும்.

வீரசோழியம் தமிழில் இன்று உள்ள பிற எந்த இலக்கண நூலையும் போல் அல்லாமல் திணைவாரியாக அகப்பொருள் இலக்கணத்தை உணர்த்துகிறது. ஆனால் இலக்கணம் இந்த நூலில் மூலத்திலோ உரையிலோ அல்லாமல் மேற்கோள் சூத்திரங்கள் வழியாகவே பெரும்பாலும், உணர்த்தப்படுகிறது. அகப்பொருள் இலக்கணத்தை இருபத்தேழு உரைகளால் உணர்த்த இந்த நூல் முற்படுகிறது.

நம்பியகப் பொருள் நூல் அகப்பொருள் இலக்கண உலகில் அது தோன்றிய காலம் முதல் இன்றுவரை மிகவும் ஆட்சி பெற் றுள்ளது. இதற்குக் காரணம் அந்த நூல் அமைந்துள்ள விதம். அகப்பொருள் இலக்கணத்தை முழுமையாகவும், விரிவாகவும் இந்த நூல் கூறியுள்ளது. கிளவித்தொகை, வகை, விரி ஆகிய மூன்று வகையிலும் இந்த நூல் பொருள் இலக்கணத்தை விரிக்கின்றது. கிளவிகளை வரிசைப்படுத்தி அமைப்பதில் தமிழ்நெறி விளக்கம் இதற்கு முந்திய நூல் என்றாலும், இந்த நூலில்தான் கிளவிகள் நன்கு வரிசைப்பட விளக்கப்பட்டுள்ளன. பாயிரப் பகுதியில் நூல் தோன்றியதற்கான காரணத்தைச் சொல்லும் போது "கிளவிகளை அடைவுறக் கோத்தல்" என்று உரையில் சொல்லப்பட்டுள்ளது. இப்படிக் கிளவிகளை தொடர் நிகழ்ச்சி போல அடைவுறக் கோத்து அமைத்துள்ள வகையில் இந்த நூலே விரிவாக அமைந் துள்ளது. இதனுடைய வளர்ச்சி ஒவ்வொரு நாளும் இன்ன கிளவி கள் நடந்தேறின என்று கூறுமளவிற்குச் சென்றது.

> காட்சி முதலாகக் கண்படை பெறாது கங்குல் நோதல் ஈறாகக் கூறிய கிளவி முப்பத்து மூன்றும் முதல் நாள் நிகழ்ந்ததெனக் கொள்க (தஞ்சை வாணன்கோவை: *1972: 50)*

என்று சொக்கப்ப நாவலர், தஞ்சைவாணன் கோவை உரையில் எழுதியுள்ளார்.

இவ்வாறே பதினாறு நாள் களவு எனவும் பதினேழாம் நாள் முதல் ஐம்பத்தொன்றாம் நாள் வரை உள்ள காலம் வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் என்றும் மற்ற நிகழ்ச்சிகள் ஐம்பத்து ஆறாம் நாள் வரை உள்ளன என்றும் இந்த உரையில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு காலவரையறையில் நிகழ்ச்சிகளை அடைவுற அமைத்த விதத்தில் நம்பியகப் பொருள் தொல்காப் பியத்தில் இருந்து மாறுபட்டு வேறுமரபில் செல்கிறது. மேலும் களவியல், கற்பியல்களுக்கிடையே வரைவியல் என ஒன்றை வைத்தமையும் இந்த நூலின் மரபு தொல்காப்பிய மரபிலிருந்து மாறுபட்டது என்பதை வலியுறுத்துகிறது.

களவியற்காரிகை பெரும் பகுதி சிதைந்து போன நிலையில் உள்ளது. இருப்பினும் இருக்கும் நிலையில், கிளவிகளை அடை வுற அமைத்த விதத்திலும் மேற்கோள் நூல்களின் பெயரையும் உரையில் அமைத்துள்ள காரணத்தினாலும் இந்த நூல் முக்கிய மானதாகிறது. கிளவித் தொகைகளும் பொருள் பகுப்பும் தமிழ் நெறி விளக்கத்தை ஒட்டியே அமைந்துள்ளன. உரையில் ஓரிடத் தில் மட்டும் இறையனார் களவியல் உரையை எடுத்து அமைத்துக் கொண்டுள்ளது. மற்றபடி பார்த்தால் இந்த நூல் தமிழ்நெறி விளக் கத்தின் மரபில் செல்கிறது என்றே கூற வேண்டும். காரணம், இறையனார் களவியல் போல அல்லாமல், களவியற் காரிகை கிளவிகளைத் தொகுத்து அமைத்து இலக்கணம் சொல்லுகிறது. இதன் அமைப்பும் தமிழ்நெறி விளக்கத்தை ஒட்டியேயுள்ளது.

இந்த நூல்களை வரிசைப்படி அமைக்கும் போது இறை யனார் களவியல், தமிழ்நெறி விளக்கம், களவியல் காரிகை, நம்பி அகப்பொருள் என்று வரும். ஆனால் களவியல் காரிகை நூலின் காலத்தை அறுதியிட்ட அதன் பதிப்பாசிரியர் வையாபுரிப்பிள்ளை அதை 14ஆம் நூற்றாண்டு நூல் என்ற முடிவுக்கு வருகிறார். கள வியல் காரிகை, இறையனார் களவியல் நூலைவிடத் தமிழ்நெறி விளக்கத்தையே பெரிதும் பின்பற்றுகிறது. களவு, கற்பு ஆகிய இலக்கணப் பகுதிகளை அமைத்துள்ள முறையிலும் எடுத்துக் காட்டுப் பாடல்கள் பலவற்றைத் தமிழ்நெறி விளக்கத்தில் இருந்தே எடுத்துள்ளதாலும் இதை முடிவு செய்யலாம். நம்பி அகப்பொருளில் களவியல், கற்பியல்களுக்கிடையில் வரை வியல் என ஒரு இயல் வைக்கப்பட்டிருக்கிறது. களவியல் காரிகை

நம்பி அகப்பொருள் நூலுக்குப் பின்பு தோன்றியிருக்குமாயின், அதில் இந்தச் சிந்தனை இடம் பெற்றிருக்க வேண்டும். களவியல் காரிகை உரையாசிரியரும் தமிழ்நெறி விளக்கத்திலிருந்து மேற் கோள் காட்டுகிறாரே தவிர நம்பி அகப்பொருள் பற்றிய குறிப் பேதும் உரையில் இல்லை. இவற்றை எல்லாம் நோக்கும் போது களவியல் காரிகையை, தமிழ்நெறி விளக்கதின் மரபில் தோன்றிய நூல் என்றே கருத வேண்டியுள்ளது.

புறப்பொருள் நூல்களில் புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணைகள் பன்னிரண்டு என்று வரையறுக்கும் நூலாகும். மேலும் அகப்புறம், புறம், புறப்புறம் என்ற பாகுபாட்டைத் தெளி வாக வரையறுத்த நூலும் இதுவே. இதன் முதல் நூலாகக் கருதப் படும் பன்னிருபடலத்தில் இந்தப் பாகுபாடு உள்ளது. ஆனால் அந்த நூல் இன்று கிடைக்கவில்லை. அகப்புறம் என்று பிரிக்கும் பகுதியில் பன்னிருபடலத்திற்கும் அதன் வழிநூலான புறப் பொருள் வெண்பா மாலைக்கும் உள்ள வேறுபாடுகளை ஆராய முடியாததால் இவற்றைப் பற்றி அதிகம் சொல்ல இயலவில்லை. சூத்திரம், கொளு, உதாரணப் பாடல் ஆகிய மூன்றையும் உள் ளடக்கி இருப்பது இதன் சிறப்பாகும்.

வீரசோழியம் பொருள் பாகுபாடுகள் நான்கையும் தன்ன கத்தே கொண்டது. பொருள் இலக்கணப் பகுதி முழுமையும் கூற எடுத்துக் கொண்டாலும் உட்பிரிவுகள் இன்றிச் சுருக்கமாக இலக் கணத்தை விளக்குகிறது. அகப்புறம் பகுதியில் திணைகளின் பெயர்களைக் கூறி பன்னிருபடல நூற்பாவை மேற்கோள் காட்டி விட்டுவிடுகிறார் உரையாசிரியர். நூலிலோ, உரையிலோ விளக்க மில்லை. புறத்திணைகளிலும் எல்லாத் திணைகளையும் இந்த நூல் கூறவில்லை. கூறியுள்ள வரையிலும் இதில் உள்ள துறை யமைப்பு தொல்காப்பியத்திலோ, புறப்பொருள் வெண்பா மாலை யிலோ உள்ளபடியில்லை. அகப்புறத்திற்குப் பன்னிரு படலத்தைப் பின்பற்றியதைப் போலப் புறப்பொருளுக்கும் பின் பற்றி இருக் கலாம்.

பெருந்திணையில் அகப்பொருள் பெருந்திணை, அகப் புறப் பெருந்திணை, புறப்பொருள் பெருந்திணை என்று மூன்று வகை யாகக் காட்டிய நூல் நம்பியகப்பொருள் விளக்கம் ஒன்று மட்டுமே ஆகும்.

# 5

# யாப்பிலக்கண மரபுகள்

(யாப்பிலக்கண நூல்களின் அமைப்பு - செய்யுளுக்கு உறுப்பாகும் எழுத்துகள் - குற்றியலுகரம் - அசை - சீர் - தளை - அடி - எழுபது வகை வழு - 625 வகை அடி - தொடை - பா - பாவினம் - இசைப்பாடல் யாப்பு - வீர சோழியம் கூறும் யாப்பு)

யாப்பிலக்கண மரபுகளை ஆராயும்போது தோன்றும் பிரச் சினைகள் தனிப்பட்டவை. யாப்பிலக்கணம் பற்றிப் பேசும் நூலாக இன்று கிடைப்பனவற்றுள் பழமையானது தொல்காப்பியமே. பொருளதிகாரத்தில் ஒரு பகுதியாகவே, யாப்பிலக்கணம் கூறும் செய்யுளியல் வைக்கப்பட்டுள்ளது. செய்யுளியல் அமைந்துள்ள விதத்திலும் அவ்வியலில் செய்யுள் இலக்கணம் கூறப்பட்டுள்ள முறையிலும் செய்யுளியலின் உறுப்புகள் இன்னின்ன என்று கூறப்பட்டுள்ள முறையிலும் செய்யுளியலானது பொருளதிகாரத் தோடு தொடர்புடைய ஒன்று; செய்யுளியலைப் பொருளதிகா ரத்திலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது என்பதே தொல்காப்பி யரின் கருத்து.

தொல்காப்பியச் செய்யுளியலுக்கு இளம்பூரணர், பேராசிரி யர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவர் எழுதிய உரைகள் உள்ளன. யாப்பருங்கலம், அதன் விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகை, அதற்கு குணசாகரர் எழுதிய உரை, வீரசோழியம் பெருந்தேவ னார் உரை ஆகியவை யாப்பிலக்கணம் குறித்துப் பேசுகின்றன. இவற்றோடு சிறுகாக்கை பாடினியம், சங்க யாப்பு செய்யுளியல், ஆகிய யாப்பிலக்கண நூல்களும் இங்கு எடுத்துக் கொண்ட காலப் பகுதிக்குள் தோன்றின என்று அருணாசலம் எழுதியுள்ளார்.

(1975: 300 - 309) இந்த நூல்கள் யாவும் இன்று முழுமையாகக் கிடைக்கவில்லை. இவற்றுள் சிறுகாக்கை பாடினியத்தைச் சேர்த்த 31 சூத்திரங்கள் யாப்பருங்கல விருத்தியில் மேற்கோள் காட்டப் பட்டுள்ளன. சிறுகாக்கை பாடினியத்தின் பாயிரத்திலிருந்து,

வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்றிசை உள்ளிட்டு எஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த
நாட்டியல் வழக்கம் நான்மையின் கடைக்கண்
யாப்பினது இலக்கணம் அறைகுவன் முறையே.

என்ற அடிகளைக் காட்டி, சிறுகாக்கை பாடினியார் தொல்காப் பியரின் உடன் காலத்தவர் அல்லர் என்று பேராசிரியர் எழுதியுள் ளார். (செய்.:11) இவை தவிர இந்நூலைப் பற்றி அறிந்து கொள்ள வேறு குறிப்புகள் கிடைக்கவில்லை. சங்க யாப்பு என்ற யாப் பிலக்கண நூலில் இருந்து 24 நூற்பாக்கள் யாப்பருங்கல விருத்தி யில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இந்நூல் குறித்த வேறு செய்தி எதையும் அறிய வழி இல்லை. செய்யுளியல் என்ற பெயர் சுட்டி, ஒரு சூத்திரத்தை யாப்பருங்கல விருத்தி, மேற்கோள் காட்டுகிறது. இரண்டு இடங்களில் செய்யுளியலுடையார் கருத்து என்று உரைநடையிலேயே எழுதிச் சென்றுள்ளார் யாப்பருங்கல விருத்தியாசிரியர்: வேறு சில இடங்களில் சில பாட்டுகளைக் காட்டி இவை செய்யுளியலுடையார் காட்டிய பாட்டு என்று விருத்தியுரையாசிரியர் எழுதியுள்ளார். இவற்றில் மேற்கோளாகக் காட்டியுள்ள சூத்திரம் தொல்காப்பியச் செய்யுளியலில் 119 ஆம் சூத்திரமாக உள்ளது.

இருவகை உரமோடு இயைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் ஆகும் என்ப (செய். 4)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தைக் காட்டியுள்ளார். இதன்பின்

நேர்க்கீழ் குற்றியலுகரம் வரினும் முற்றியலுகரம் வரினும் நேர்பு அசையாம்; நிரைக்கீழ் குற்றிய லுகரம் வரினும் முற்றியலுகரம் வரினும் நிரைபு அசையாம் என்றார் செய்யுளியலுடையார். (யா. கா.: 92)

என்று எழுதியுள்ளார். இது தொல்காப்பியர் கருத்தாகும். ஆனால் பெயர் குறிப்பிடவில்லை. இவற்றையெல்லாம் நோக்க தொல் காப்பியச் செய்யுளியலையே கருத்தில் கொண்டு தொல்காப் பியரைச் செய்யுளியல் உடையார் என்று குறிப்பிட்டார் என்பது தெளிவாகிறது. யாப்பருங்கலக் காரிகை உரையில்,

> செய்யுளியலுடையார் நாற்சீரடி தன்னையே நான்
> கெழுத்து முதலா ஆறெழுத்தின்காறும் உயர்ந்த
> மூன்றடியுங் குறளடி என்றும் ஏழெழுத்து முதலா
> ஒன்பதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியுஞ்
> சிந்தடி என்றும் பத்தெழுத்து முதலா பதினான்
> கெழுத்தின் காறும் உயர்ந்த ஐந்தடியும் அளவடி
> என்றும் பதினைந்தெழுத்து முதலா பதினேழெ
> ழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் நெடிலடி
> என்றும் பதினெட்டெழுத்து முதலா இருபதெ
> ழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் கழிநெடி
> லடி என்றும் (யா.கா.: 184)

என்ற இடத்தில் செய்யுளியலுடையார் என்ற குறிப்பு காணப் படுகிறது. இதன் பின்னர் இவற்றை விளக்கும் தொல்காப்பியச் சூத்திரங்கள் (35 - 39) ஐந்து காட்டப்பட்டுள்ளன. இங்கு காட்டப் பட்ட முறையில் அடியை வகைப்படுத்துவது தொல்காப்பிய மாகும். ஆகவே இங்கும் செய்யுளியலுடையார் என்ற தொடர் தொல்காப்பியரையே குறிக்கும். செய்யுளியல் என்பது தனி நூல் என்றும் அந்த நூலின் கருத்துகள் இவையென்றும் மேற்காட்டிய மூன்றையும் குறிப்பிட்டு மயிலை சீனி. வேங்கட சாமியும் (1967:287-290) மு. அருணாசலமும் (1975: 300-303 குறிப்பிட்டுள்ளனர்.

சிறுகாக்கை பாடினியமும் சங்க யாப்பும் முழு நூல்களாகக் கிடைக்கவில்லை; யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியரால் பிர மாணமாகக் காட்டப்படும் நூல்கள் என்பதால் இங்கு ஆராய்ச் சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் இவை முதன் மைத் தரவாக எடுத்துக் கொள்ளப்படாமல் கருத்துகளை உறுதிப் படுத்தவே பெரும்பாலும் இவ்வியலில் பயன்படுத்தப்படும்.

தமிழ்மொழி நெறி, வடமொழி நெறி என்று யாப்பிலக்கண மரபை பாகுபடுத்திப் பார்க்க இயலவில்லை. இன்று பெரிதும்

ஆட்சியில் உள்ள யாப்பிலக்கண நூல்கள் தமிழ்நெறியைப் பின் பற்றியே யாப்பிலக்கணம் கூறியுள்ளன. வடமொழி யாப்பிலக்கண நெறியைப் பின்பற்றி எழுந்த யாப்பிலக்கண நூல்கள் வழக்கில் இல்லை. இதனால் யாப்பிலக்கணத்தில் வடமொழி நெறி புக வில்லை என்பது பொருளாகிவிடாது. தமிழ்மொழி நெறி, வட மொழி நெறி என்ற அடிப்படை, யாப்பிலக்கண மரபுகளைப் புரிந்து கொள்ளச் சரியான அடிப்படை அல்ல என்பதே கருத் தாகும்.

தமிழ் யாப்பிலக்கணத்திலும் வடமொழி நெறி புகுந்துள்ளது. யாப்பருங்கல விருத்தி இதை இரண்டு இடங்களில் (யா.வி.: 48, 487) குறிப்பிட்டுள்ளது. வடமொழி நெறியைத் தமிழ் இலக்கணத் தில் புகுத்தியுள்ளவர்களை 'வடநூல்வழித் தமிழாசிரியர்' என்றே இரண்டு இடங்களிலும் வழங்குகிறார் விருத்தியுரை ஆசிரியர். 'ஒரு சார் வடநூல்வழித் தமிழாசிரியர், நேர், நிரை, நேர்பு, நிரைபு, அசைகள் ர, ட, ரு, டு வடிவாக இடுவாரும் உளர்' (யா.வி.: 48) என்றும் 'ஒரு சார் வடநூல்வழித் தமிழாசிரியர் (சந்தம், தாண்ட கம் ஆகியவற்றை) ஒரு புடை ஒப்புமை நோக்கி இனமெனப்படா; மூவகைப்பட்ட விருத்தங்களுள்ளும், சந்தத் தாண்டகங்களுள் ளுமே பட்டு அடங்கும்' (மேற்படி : 487) என்றும் குறிப்பிடுகிறார். ஆனால், யாப்பருங்கல விருத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தக் கருத்துகள் இடம்பெறும் நூல்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் இதே நெறியில் யாப்பருங்கல விருத்திக்குப் பின்பு தோன் றிய வீரசோழியம் ஒன்றே வடமொழிச் செய்யுள்களான சந்தம், தாண்டகம் முதலியன பற்றிய இலக்கணத்தைக் கூறுகிறது.

இங்கு எடுத்துக்கொண்ட நூல்களின் அமைப்பு முறையை ஆராய்வதற்கு முன் இத்துறையில் விளங்கிய பண்டைய இலக் கணமாகிய தொல்காப்பியச் செய்யுளியலின் அமைப்பை ஆராய் வது அவசியம், தொல்காப்பியச் செய்யுளியல், மூன்றாவது அதி காரமாகிய பொருளதிகாரத்தில் எட்டாவது இயலாக இருக் கிறது. இவ்வியலில் அமைந்துள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை யில் உரையாசிரியர்களிடையே வேறுபாடு காணப்படுகிறது. இளம்பூரணர் 235 நூற்பாக்கள் என்றும் பேராசிரியரும் நச்சி னார்க்கினியரும் 243 நூற்பாக்கள் என்றும் எண்ணிக்கை காட்டு

கின்றனர். இளம்பூரணரை விடப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எட்டுச் சூத்திரங்களை அதிகமாகக் கூறியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இளம்பூரணர் ஒரு சூத்திரமாகக் கொண்ட சிலவற்றைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இரு சூத்திரங்களாகக் கொண்டமையே ஆகும்.

செய்யுளியலில் செய்யுள் உறுப்புகளாக 34 உறுப்புகள் கூறப்பட்டுள்ளன. அவை:

| | | |
|---|---|---|
| 1. மாத்திரை | 12. அளவியல் | 23. பொருள் |
| 2. எழுத்து | 13. திணை | 24. துறை |
| 3. அசை | 14. கைகோள் | 25 மாட்டு |
| 4. சீர் | 15. கூற்று | 26. வண்ணம் |
| 5. அடி | 16. கேட்போர் | 27. அம்மை |
| 6. யாப்பு | 17. களன் | 28. அழகு |
| 7. மரபு | 18. காலம் | 29. தொன்மை |
| 8. தூக்கு | 19. பயன் | 30 தோல் |
| 9. தொடை | 20. மெய்ப்பாடு | 31. விருந்து |
| 10. நோக்கு | 21. எச்சம் | 32. இயைபு |
| 11. பா | 22. முன்னம் | 33. புலன் |
| | | 34. இழைபு |

இந்த 34 உறுப்புகளில் இறுதியில் நிற்கும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகிய எட்டும் வனப்பு என்று கூறப்படும்.

> வனப்பென்பது பெரும்பான்மையும் பல உறுப்புத் திரண்ட வழி பெறுவதோர் அழகாகலின் அவ்வாறு கோடும். அதனால் பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர் நிலையதே வனப்பென்னும் பெயர்ப்பகுதி வகையான் ஏற்பது.
> (செய்.:1014)

என்ற பேராசிரியர் உரைப்பகுதியால் இவை தொடர்நிலைச் செய்யுளுக்கு உரியவை என்று தெரிகிறது.

திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், மெய்ப்பாடு, பொருள், துறை ஆகிய ஒன்பதும் பொருள் இலக்கணத்

துடன் குறிப்பாக அகப்பொருள் இலக்கணத்துடன் தொடர்புடையவை. இது முன்னரே குறிப்பிடப்பட்டது. மாத்திரை, யாப்பு, மரபு, தூக்கு, நோக்கு, அளவியல், பயன், எச்சம், முன்னம், மாட்டு, வண்ணம் ஆகிய பதினொன்றும் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய நூல்களில் சொல்லப்படாதவை. எழுத்து, அசை, சீர், அடி, தொடை, பா ஆகிய ஆறு உறுப்புகளே யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய நூல்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் பொதுவாக உள்ள உறுப்புகளாகும்.

அமிதசாகரர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய இரண்டு யாப்பிலக்கண நூல்களை இயற்றியுள்ளார். இவற்றில் யாப்பருங்கலம் விரிவானது. உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று இயல்களைக் கொண்டது. இவற்றில் உறுப்பியல் மட்டும், எழுத்தோத்து, அசையோத்து, சீரோத்து, தளையோத்து, அடியோத்து, தொடையோத்து, என ஆறு உட்பிரிவுகளைக் கொண்டது. யாப்பருங்கலத்தில் உள்ள சூத்திரங்களின் எண்ணிக்கை 96. சூத்திரங்கள் நூற்பா யாப்பில் இயன்றுள்ளன. யாப்பருங்கலக் காரிகை, காரிகை யாப்பில் இயற்றப்பட்டது. இந்த நூல் யாப்பருங்கலத்தை விட சுருக்கமானது; 44 காரிகைகளால் இயன்றது. இந்நூல் யாப்பருங்கலத்திற்குப் புறனடை என்றும் கூறப்படும். யாப்பருங்கலம் போலவே இந்நூலும் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று இயல்களைக் கொண்டது. ஆனால், இயல்களுள் உட்பிரிவுகள் இல்லை. யாப்பருங்கலமும் யாப்பருங்கலக் காரிகையும் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்டவை என்றாலும், இவற்றுக்கிடையே சிற்சில வேறுபாடுகள் உள்ளன.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய இரண்டு நூல்களை இயற்றிய ஆசிரியர், அவற்றை வழிநூல்களாகத்தான் இயற்றினார். யாப்பருங்கலப் பாயிர உரையில் 'இது சார்பு நூல்' என்று கூறப்பட்டுள்ளது. இதன் உரையில் பல நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டப்பெற்றிருப்பினும் காக்கை பாடினியம் முதன்மை கொடுத்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. காக்கை பாடினியத்திலிருந்து அதிகமாக 68 சூத்திரங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. மேலும் யாப்பருங்கலம், காக்கை பாடினி

யத்தைப் பின்பற்றி இயற்றப்பட்டது என்பதற்குச் சான்றாக யாப் பருங்கல விருத்தியுரையாசிரியர் பல இடங்களில் கூறியுள்ளார். (58,101, 487)

யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய இந்த இரண்டு நூல்களும், யாப்பிலக்கணத்தை மட்டும் விளக்குகின் றன. தொல்காப்பியம் யாப்பிலக்கணத்தைப் பொருள் இலக்கணத் தின் ஒரு பகுதியாக விளக்குகின்றது. அதிலிருந்து மாறி இந்த நூல்கள் யாப்பிலக்கணத்தை மட்டுமே விளக்குவதிலிருந்து யாப் பிலக்கணம் பொருள் இலக்கணத்தின் அங்கம் அல்ல; அது தனித்து இயங்கவல்லது என்பத இந்த நூல்களின் கொள்கையாகும். இத் தகைய சிந்தனையில் தோன்றியவை இந்த இரண்டு நூல்கள் மட் டுமே என்று கொள்ள முடியாது. இதற்கு முன்பே யாப்பை மட்டும் தனியே விளக்கும் பல நூல்கள் தோன்றியுள்ளன. சில நூல்களின் பெயரை மட்டும் பார்க்கும் போது அவை யாப்பை மட்டும் ஆராய் வன என்று கூறலாம். அவை, அவிநயனார் யாப்பு, மயேச்சுரர் யாப்பு, சங்க யாப்பு, நக்கீரர் அடிநூல் முதலியவையாகும். இவை தவிர யாப்பிலக்கணம் மட்டுமே விளக்கும் நூல்கள் பல இருந்தன. என்பதை யாப்பருங்கல விருத்தியால் அறிய முடிகிறது. தொல் காப்பிய மரபை விட்டு வேறு மரபில் இந்த நூல்கள் தோன்றிய போதிலும் இவை முற்றுமாகத் தொல்காப்பிய மரபைப் புறக் கணித்து விடவில்லை.

தொல்காப்பியரின் யாப்பிலக்கணக் கோட்பாடுகள், சில நூல்களில் ஓரளவு காணப்படுகின்றன. முக்கியமாக, அவிநயனார் தொல்காப்பியரைப் பின்பற்றி அசைகளை நான்கு வகையாகக் கூறியுள்ளார். (யா.வி.: 47) வீரசோழியத்தில் தொல்காப்பியர் கூறும் வண்ணங்களைப் பின்பற்றி இருபது வண்ணங்களை அதன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இவை எல்லாவற்றையும் விட, நமக்கு நன்கு தெரிந்தது யாப்பருங்கல விருத்தியுரையில் வரும் தொல்காப்பிய மேற் கோள்களாகும். யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் யாப்பருங் கல உரையில் பல தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டுகிறார். ஒத்த கருத்தைக் காட்டும் இடத்திலும் பல மரபு கள் நிலவுவதைக் காட்டும் இடத்திலும் தொல்காப்பிய நூற்பாக்

களை மேற்கோள் காட்டுகிறார். இது மட்டுமன்றி யாப்பருங் கலத்தில் சொல்லப்படாத கருத்துகளை விளக்கும் பொருட்டுப் பல தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள்காட்டி, உரை யெழுதி, எடுத்துக்காட்டும் தந்தள்ளார். அவற்றை விளக்கும் இடத்தில் உரைச்சூத்திரங்கள் பலவற்றையும் காட்டிச் செல்கிறார். அப்படி மேற்கோள் காட்டி உரையெழுதும் இடங்கள், அசை, சீர், தொடை எண்ணிக்கை, எழுபது தளைவழு, அறுநூற்று இரு பத்தைந்து அடி, வனப்பு, வண்ணம் முதலியன ஆகும். இந்த இடங் களில் மூல நூலுக்கு உரையெழுதுவது போலவே தொல்காப் பியச் சூத்திரங்களுக்கும் உரையெழுதியுள்ளதை நோக்கும் போது, தொல்காப்பிய மரபின் முக்கியத்துவத்தை உணர முடிகிறது. தொல்காப்பியப் பயிற்சி அற்றுப் போகவில்லை என்பதற்கு இது வும் ஒரு சான்று ஆகும்.

புதிய இலக்கண நூல்கள் பல தோன்றி, புதிய மரபுகளில் இலக்கணம் படைக்கக் காரணமாக இருந்தவை, தொல்காப் பியருக்குப் பின்னும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னும் தமிழில் தோன்றிய இலக்கியங்களே எனலாம். ஏறத்தாழ ஆயிரம் ஆண்டு கால இலக்கிய வரலாற்றில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகளை முற் றும் அறியக்கூடவில்லை. அதற்கு முக்கிய காரணம், இக்காலப் பகுதியில் தோன்றிய இலக்கண, இலக்கிய நூல்களில் பெரும்பா லானவை இறந்துவிட்டன. கிடைக்காத பிற தரவுகள் போக யாப்பருங்கல விருத்தி, களவியல் காரிகை, தமிழ்நெறி விளக்கம் முதலியவற்றின் உரைகளிலும் புறத்திரட்டிலும் காணப்படும் பல நூல்கள் இன்று இல்லை. இதுபோலவே யாப்பருங்கல விருத்தி யில் மேற்கோள் காட்டப்படும் இலக்கண நூல்களும், அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டும் பல இலக்கண நூல்களும் - குறிப் பாக இசை, நாடக நூல்கள் - இன்று இல்லை. ஆகவே, தொல்காப் பியர் காலத்திற்குப் பின்னும் 9 ஆம் நூற்றாண்டிற்கு முன்னும் உள்ள காலத்தில் தோன்றிய இலக்கணங்களைப் பற்றி முழுமை யாக அறிய வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

இக்காலத்திற்குரியதாக இன்று கிடைப்பவை பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, பன்னிரு திருமுறை (இதில் ஒரு சில காலத்தால் பிற்பட்டவை), நாலாயிர திவ்விய

பிரபந்தம் முதலிய தொகை நூல்களும் சிலப்பதிகாரம், மணிமே கலை, பெருங்கதை முதலிய சில காவியங்களும் நந்திக் கலம்பகம், பாண்டிக் கோவை போன்ற சில பிரபந்தங்களுமே ஆகும். (இதில் பாண்டிக் கோவை தனி நூலாகக் கிடைக்கவில்லை. உரைகளில் மேற்கோளாகக் காட்டப்பட்ட பாடல்களின் தொகுப்பே இப் போது உள்ளது.) இவற்றில் பெரும்பாலானவை தொகை நூல் களாகும். தொகுப்பில் அடங்கியவை தவிர, பிற நூல்களின் பெரும் பகுதி மறைந்து விட்டன. இன்று கிடைக்கும் சில நூல்களேனும் இது வரை வாழ்வதற்கு அவை தொகுப்பில் அடைபட்டதே கார ணம் எனலாம்.

கிடைத்திருக்கும் இலக்கியப் பகுதியைக் கொண்டு பார்க்கும் போது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் வெண்பா யாப்பு சிறப் பிடம் பெற்றதும், தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், சிலப்பதிகாரம் (வரிப்பாடல்கள்) ஆகியவை இசைப் பாடல்களாகத் தோன்றியதும் இங்கு முக்கியமாகக் கருத வேண்டி இருக்கின்றன. பெரும்பகுதி இசைப் பாடலாக இருப்பதால், இந்த இசைப் பாடல்கள் பாடப்படும் யாப்பைப் பற்றி இலக்கணம் கூற வேண்டிய அவசியம் பிற்கால இலக்கண ஆசிரியர்களுக்கு உண்டானது. தாழிசை, துறை, விருத்தம் ஆகிய பாவினங்கள் இசைப் பாடல்களே ஆகும் என்னும் கருத்து நிலவுகிறது.

அடுத்ததாக, அகப்பொருள், புறப்பொருள் செய்யுள் மரபு அழிந்து விட்டது என்றே கூறலாம். பதினெண் கீழ்க்கணக்கில் சில அகப்பொருள் நூல்கள் இருந்தாலும் அதற்குப் பின் வேறு அகப்பொருள் நூல்கள் தோன்றவில்லை. மாறாக, பாண்டிக் கோவை, திருக்கோவையார் போன்ற கோவை நூல்கள் தோன் றின. இவற்றில் வழங்கும் கட்டளைக் கலித்துறை போன்ற யாப்பு வகைகளையும் விளக்க வேண்டிய அவசியம் எழுந்தது. அகப், புறப்பொருள் பாடல் மரபு அழிந்தது போலவே, பொருள் இலக் கணத்துடன் தொடர்புபடுத்தி யாப்பிலக்கணத்தை இயற்றும் மரபும் அழிந்து போனது; யாப்பிலக்கணம் தனியே வளரலா யிற்று. இறையனார் களவியல் உரையில் வரும்,

> எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொரு
> ளதிகாரத்தின் பொருட்டன்றே, பொருளதிகாரம்

பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம்
(இறையனார் களவியல்: 10)

என்ற பகுதியை, யாப்பிலக்கணம் தனிப்பட வழங்கியதற்கு உதாரணமாகக் காட்டலாம். மேலும் சிறுகாக்கை பாடினிய பாயிரத்தையும் இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்றிசை உள்ளிட்டு எஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த
நாட்டியல் வழக்கம் நான்மையின் கடைக்கண்
யாப்பினது இலக்கணம் அறைகுவன் முறையே.

தொல்காப்பிய மரபு மாறிப் புதிய மரபு தோன்றிய பிறகும் தொல்காப்பியம் வழக்கில் இருந்தது. தொல்காப்பியத்திற்குத் தோன்றிய உரைகளும், தொல்காப்பிய நூற்பாக்களைப் பிற உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டுவதிலிருந்தும் இதை அறியலாம். சமூகத்தில் தொல்காப்பியப் பயிற்சி நிலவியது என்பது ஒரே காலத்தில் பல இலக்கண மரபுகள் சமூகத்தில் இருந்தன என்பதற்குச் சான்றாகிறது.

வீரசோழியம் தமிழில் இன்று கிடைக்கும் ஐந்திலக்கண நூல்களில் தொன்மையானது. இதில் யாப்பதிகாரம் யாப்புப் படலம் என்ற ஒரே படலத்தைக் கொண்டுள்ளது. இப்படலம் 36 சூத்திரங்களில் சுருக்கமாக யாப்பிலக்கணத்தை விளக்குகிறது. பொதுவாகத் தமிழில் இருக்கும் யாப்பிலக்கண நூல்கள் செய்யுளின் உறுப்புகள் இன்னின்ன என்று கூறும். ஆனால், வீரசோழியம் அப்படிக் கூறவில்லை. அசை, சீர், அடி, தொடை (மோனை எதுகை மட்டும்), பா ஆகிய உறுப்புகள் மட்டும் கூறப்பட்டுள்ளன. செய்யுளைப் பத்தியம், கத்தியம் என்று வடமொழி மரபில் இரண்டாகப் பிரித்து விளக்குகிறார். முதல் பகுதியில் நான்கு பா, பாவினம் ஆகியவை கூறப்பட்டுள்ளன. இதன்பின் உரையாசிரியர் இதுவரை கூறப்பட்டவை ‘பிறர் மதம் கூறுதல்’ என்று கூறி, அதற்குச் சில குற்றங்கள் கூறுகிறார். அதன்பின் குறள், சிந்து, வெண்பா முதலிய ஏழு செய்யுள் வகைகளைக் கூறுகிறார். இவை ஆசிரியர் தன்மதம் கூறுதல் என்று உரையாசிரியர் எழுதுகிறார்.

இதன் பின்பு வடமொழி இலக்கண மரபைப் பின்பற்றி குரு, லகு ஆகியனவும் சந்தம், தாண்டகம் ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன. நால்வகைப் பாவும் பாவினமும் பிறர்மதம் கூறல் என்னும் உரையாசிரியரது கூற்றை ஏற்றுக் கொண்டால், நூலாசிரியரும் உரையாசிரியரும் தமிழ் யாப்பிலக்கண மரபை விடுத்து வடமொழி மரபையே புகுத்துகின்றனர் எனலாம்.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம் ஆகிய இலக்கண நூல்களும் இவற்றின் உரைகளும் தோன்றிய பின்னர், தொல்காப்பியத்திற்குப் புதிய உரைகள் தோன்றுகின்றன. இன்று கிடைப்பவற்றுள் முந்தியது இளம்பூரணர் உரையாகும். இவ்வுரை பொருளதிகாரம் முழுமைக்கும் உள்ளது. செய்யுளியல் உரையில் பல இடங்களில் இளம்பூரணர் உரை, யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு எழுதிய உரையுடன் ஒத்துள்ளது. இளம்பூரணருக்குப் பின் பேராசிரியர் உரை தோன்றியது. இவ்வுரை தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உள்ள சிறந்த உரையாகும். இந்த உரை, இளம்பூரணர் உரைப் போக்குடன் ஒட்டாமல் தனித்துப் போகிறது. தொடை வகைகளை விளக்கும் பகுதியில் இவர் காட்டும் உரைச் சூத்திரங்களால் பொருளதிகாரத்திற்கு உரை காணும் இந்த மரபும் மிகவும் பழமையானது என்பதை அறிய முடிகிறது.

நச்சினார்க்கினியர் உரை பெரும்பாலும் பேராசிரியர் உரையை ஒட்டியே உள்ளது. எனினும், தொடை எண்ணிக்கை, தொடை வகை முதலியன கூறும் பகுதிகளில் உரை வேறுபடுகிறது. இவரும் தமது உரையில் பல உரைச் சூத்திரங்களைக் காட்டுகிறார். ஆகவே, இந்த உரை மரபையும் பழமையான ஒன்றாகவே கொள்ள வேண்டும்.

## 1

எழுத்து, செய்யுளின் முதல் உறுப்பாகும். செய்யுளுக்கு உறுப்பாகும் எழுத்துகளின் எண்ணிக்கையைக் கூறுவதில் இலக்கண நூல்களுக்கிடையே வேறுபாடுகள் உள்ளன. யாப்பருங்கலத்தில் செய்யுளுக்கு உறுப்பாகும் எழுத்துகள் என,

உயிரே, மெய்யே, உயிர்மெய் என்றா,
குறிலே, நெடிலே, அளபெடை என்றா,
வன்மை, மென்மை, இடைமை என்றா,
சார்பில் தோன்றும் தன்மைய என்றா
ஐ, ஔ, மகரக் குறுக்கம் என்றாங்கு
ஐம் மூ எழுத்தும் ஆம் அசைக்கு உறுப்பே (2)

ஆகிய பதினைந்து எழுத்துகள் கூறப்பட்டுள்ளன. யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் எழுத்து எண்ணிக்கையில் மாறுபடும் சில இலக்கண நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார்.

குறில், நெடில், அளபெடை, உயிருறுப்பு, உயிர்மெய்,
வலிய, மெலிய, இடைமையொடு, ஆய்தம்,
இ, உ, ஐ என் மூன்றன் குறுக்கமொடு
அப்பதின் மூன்றும் அசைக்கு உறுப்பாகும்.

என்று காக்கை பாடினியார் 13 எழுத்துகளை அசைக்கு உறுப்பாகக் கொண்டார். அவிநயம் 11 எழுத்துகளையும், நாலடி நாற்பது 12 எழுத்துகளையும், சிறுகாக்கை பாடினியம்12 எழுத்துகளையும் பெரியபம்மம் 15 எழுத்துகளையும் கூறுகிறது. (யா.வி.: 30,31) தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுளுக்கு உறுப்பாகும் எழுத்துகள் இவை என்று கூறாமல்,

மாத்திரை வகையும், எழுத்தியல் வகையும்
மேற்கிளந்தனவே என்மனார் புலவர் (நூற்பா - 2)

என்று எழுத்ததிகாரத்தில் கூறப்பட்ட எழுத்துகளே செய்யுளுக்கு உறுப்பாகும் எழுத்துகள் என்று கூறுகிறார். பேராசிரியர். 'மேற்கிளந்தன்ன' என்று பாடம் கொண்டு,

எழுத்தோத்தினுள், குறிலும் நெடிலும் உயிரும்
மெய்யும் இன மூன்றும் சார்பெழுத்து மூன்று
மெனப் பத்தும் ஆண்டுப்படுத்தோதினான் உயிர்
மெய்யும் உயிரளபெடையும் தத்தம் வகையாற்
கூடுமாறும் ஐகாரம் ஔகாரம் போலி வகையாற்
கூடுமாறும் யாழ் நூலகத்து ஒற்றிசை நீளுமாறும்
ஆண்டுத் தோற்றுவாய் செய்தான் (செய்.: 22)

என்று பதினைந்து எழுத்துகளைச் செய்யுள் உறுப்பாகத் தொல்காப்பியர் கொண்டதாக எழுதியுள்ளார். எழுத்ததிகாரத்தில் தொல்காப்பியர் முதலெழுத்து முப்பது என்றும் சார்பெழுத்து மூன்று என்றும் கூறினாரே தவிர பேராசிரியர் கருதுமாறு பதினைந்து எழுத்துகள் கூறினார் என்று கொள்ள இடமில்லை. யாப்பருங்கலம் முதலிய நூல்களின் மரபு நோக்கியே பேராசிரியர் பதினைந்து எழுத்துகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டதாக எழுதியுள்ளார்.

## 1அ

எழுத்துகளில் குற்றியலுகரத்தை வகைப்படுத்துவதிலும் யாப்பிலக்கண நூல்களுக்கிடையே வேறுபாடுகள் உள்ளன. தொல்காப்பியர் ஒரு மொழியில் அமையும் எழுத்துகளில், குற்றியலுகரத்திற்கு முன்வரும் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு குற்றியலுகரத்தை வகைப்படுத்துகிறார். குற்றியலுகரத்திற்குக் கூறப்பட்ட இலக்கணத்தோடு பொருத்திப் பார்க்கும்போது தொல்காப்பியரின் பாகுபாட்டைப் புரிந்து கொள்வது எளிது. தொல்காப்பியர் காட்டும் வகைப் பாட்டைப் பின்வருமாறு காட்டலாம்:

| குற்றியலுகர வகையின் பெயர் | உதாரணம் |
|---|---|
| 1. ஈரெழுத்து ஒரு மொழிக் குற்றியலுகரம் | ஆடு |
| 2. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | படகு |
| 3. இடைத்தொடர்க் குற்றியலுகரம் | எய்து |
| 4. வன்றொடர்க் குற்றியலுகரம் | மொட்டு |
| 5. மென்றொடர்க் குற்றியலுகரம் | பாம்பு |
| 6. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் | எஃகு |

நன்னூலிலும் தொல்காப்பியத்தைப் போலவே மேலே காட்டிய முறையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. யாப்பருங்கல விருத்தியில் குற்றியலுகரத்தை வகைப்படுத்தும் முறை வேறுபட்டுள்ளது. யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர்,

எழுவகை இடத்தும் குற்றியலுகரம்
வழுவின்றி வரூஉம் வல் ஆறு ஊர்ந்தே.

என்ற பல்காய நூற்பாவைக் காட்டி ஏழுவகை இடங்களையும் பின்வருமாறு தருகிறார்.

எழுவகை இடமாவன நெடிற்கீழும் நெடிலொற்
றின் கீழும் குறிலிணைக் கீழும் குறிலிணை ஒற்றின்
கீழும் குறில் நெடில் கீழும் குறில் நெடில் ஒற்றின்
கீழும் குற்றொற்றின் கீழும் என இவை. *(யா.வி: 24)*

இவ்வகைப் பாகுபாடு யாப்பிலக்கண நோக்கில் அசைகளை அடிப்படையாக வைத்து வகைப்படுத்தப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் காட்டப்பட்ட வகைப்பாடு சந்தி இலக்கணம் முதலியவற்றிற்குக் கருவியாக அமைகிறது. ஆனால் யாப்பருங்கல விருத்தியில் காட்டப்பட்ட வகைப்பாடு யாப்பிலக்கணத்திற்கு மட்டும் பயன்படுவதாகும். இந்த வகைப்பாட்டைப் பின்வருமாறு காட்டலாம்.

**குற்றியலுகர வகையின் பெயர்**

உதாரணம்

| | | |
|---|---|---|
| 1. | நெடில் கீழ் குற்றியலுகரம் | காது |
| 2. | நெடில் ஒற்றின் கீழ் குற்றியலுகரம் | காட்டு |
| 3. | குறிலிணைக் கீழ் குற்றியலுகரம் | மருது |
| 4. | குறிலிணை ஒற்றின் கீழ் குற்றியலுகரம் | பொருப்பு |
| 5. | குறில் நெடில் கீழ் குற்றியலுகரம் | அசோகு |
| 6. | குறில்நெடில் ஒற்றின்கீழ் குற்றியலுகரம் | பனாட்டு |
| 7. | குறிலொற்றின் கீழ் குற்றியலுகரம் | கட்டு |

தனிக்குறிலின் கீழ் வரும் எழுத்து குற்றியலுகரம் ஆகாது; முற்றியலுகரமாகும் என்பதால் தனிக்குறில் ஆகிய நேரசையின் கீழ் வரும் எழுத்தைத் தவிர்த்துப் பிறவற்றின் கீழ்வரும் எழுத்துகள் மேலே காட்டியவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்பாட்டை மயிலைநாதர் மறுத்துள்ளார். (மயிலை.33) சிவஞான முனிவர், போவது, வருவது, ஒன்பது முதலிய சொற்களைமேலே காட்டிய வகைப்பாட்டில் அடக்க முடியாது என்று மறுத்துக் கூறியுள்ளார். *(1968: 54)*

## 2

தொல்காப்பியர் நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கு அசைகளைக் கூறியுள்ளார். நேர், நிரை அசைகளுக்குப் பின் குற்றியலுகரமோ முற்றியலுகரமோ வந்தால் நேர்பு, நிரைபு அசைகளாகும். அவை,

| இயலசை | | உரியசை | |
|---|---|---|---|
| நேர் | நிரை | நேர்பு | நிரைபு |
| க | பல | --- | கதவு |
| கல் | பழம் | கன்று | பரப்பு |
| கா | பலா | காது | உலாவு |
| கால் | புகார் | காற்று | மலாட்டு |

எனவரும். யாப்பருங்கலம் நேர், நிரை என இரண்டு அசைகளையே கூறுகிறது.

## 2 அ

சீரைப் பொருத்தவரை தொல்காப்பியர் ஓரசைச் சீர், ஈரசைச் சீர், மூவசைச் சீர் ஆகியவற்றைக் கூறுகிறார்.

ஓரசைச் சீர்: 4   நாள், மலர், காசு, பிறப்பு

ஈரசைச் சீர்:16

| | | | |
|---|---|---|---|
| நேர் நேர் | நேர் நேர்பு | நேர்பு நேர் | நேர்பு நேர்பு |
| நிரை நேர் | நிரை நேர்பு | நிரைபு நேர் | நிரைபு நேர்பு |
| நிரை நிரை | நேர் நிரைபு | நேர்பு நிரை | நிரைபு நிரைபு |
| நேர் நிரை | நிரை நிரைபு | நிரைபு நிரை | நேர்பு நிரைபு |

மூவசைச் சீர்களில், இயலசை மயங்கி வரும், நேரீற்று மூவசைச் சீர் நான்கும் வெண்பா உரிச்சீராகும். அவை:

நேர் நேர் நேர்
நிரை நேர் நேர்
நிரை நிரை நேர்
நேர் நிரை நேர்

என வரும். நேர், நிரை, நேர்பு நிரைபு ஆகிய நான்கு அசைகளும் முதலும் இடையும் இறுதியும் மயங்கி வரும் அறுபது சீர்களும் வஞ்சியுரிச் சீர்களாகும். ஆக எண்பத்து நான்கு சீர்களை (4+16+ 64 = 84) தொல்காப்பியர் கூறுகிறார்.

அமிதசாகரர் ஓரசைச்சீர் இரண்டு, ஈரசைச்சீர் நான்கு, மூவசைச்சீர் எட்டு, நாலசைச்சீர் பதினாறு ஆக 30 சீர்களைக் கூறு கிறார். மூவசைச் சீர் எட்டின் பின்னும் நேர் சேர்க்க எட்டும் நிரை சேர்க்க எட்டும் ஆக பதினாறு நாலசைச் சீர் வரும். அசைகளை யும் சீர்களையும் வகைப்படுத்துவதில் இந்த இரண்டு மரபுகளைத் தவிர வேறு சில மரபுகளும் காணப்படுகின்றன. இதை,

> நேரசையும், நிரையசையும், நேர்பசையும், நிரைபு அசையும் என நான்கு அசையும் வேண்டினர் தொல்காப்பியர் முதலிய ஒரு சாராசிரியர்; நேர்பு அசை, நிரைபு அசை வேண்டாது நேரசை, நிரை யசை வேண்டி நாலசைப் பொதுச் சீர் வேண்டி னார் காக்கை பாடினியார் முதலிய ஒரு சார் ஆசிரியர்; நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நாலசையும் நாலசைப் பொதுச் சீரும் வேண்டி னார் பல்காயனார் முதலிய ஒரு சார் ஆசிரியர். (யா.வி.: 58)

என்று எழுதியுள்ளார். இதிலிருந்து அசைகளையும் சீர்களையும் வகைப்படுத்துவதில் மூன்று மரபுகள் உண்டென்று தெரிகிறது. வீரசோழியம் ஈரசைச்சீர், மூவசைச் சீர்களுக்குப் பின் வருமாறு பெயரிடுகிறது.

| | | |
|---|---|---|
| ஈரசைச்சீர் | - | முதற்சீர் |
| வெண்சீர் | - | இடைச்சீர் |
| வஞ்சிச்சீர் | - | கடைச்சீர் |

சீர்களுக்குக் கூறும் வாய்பாடுகளிலும் உரையாசிரியர்களுக் கிடையே வேறுபாடு உள்ளது. நேர், நிரை உறழ்ந்த ஈரசைச் சீர் களுக்கு இளம்பூரணரும் யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரி யரும் தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்றும், பேராசிரி யரும் நச்சினார்க்கினியரும் தேமா, புளிமா, கணவிரி, பாதிரி

எனவும் வாய்பாடு கூறுகின்றனர். நேர்பு, நிரைபு, ஆகியவற்றை உறழ்ந்த ஈரசைச் சீர்களுக்கு இளம்பூரணர் ஆற்றுநோக்கு, ஆற்று வரவு, வரகுசோறு, வரகுதவிடு எனவும் பேராசிரியர் வீடுபேறு, வரகுசோறு, தடவுமருது, பாறுகுருகு எனவும் வாய்பாடு கூறு கின்றனர். நேர்புநிரை, நிரைபுநிரை ஆகியவற்றிற்கு இளம்பூர ணர் யாற்றுமடை, குளத்துமடை எனவும் பேராசிரியர் நீடுகொடி, குளிறுபுலி எனவும் வாய்பாடு கூறுகின்றார். நேர்புநேர், நிரைபு நேர் ஆகியவற்றுக்கு இளம்பூரணர் ஆற்றுக்கால், குளத்துக்கால் எனவும் பேராசிரியர் சேற்றுக்கால், வேணுக்கோல் என்றும் வாய் பாடு கூறுகின்றனர். நேர் நேர்பு, நிரை நேர்பு, நேர் நிரைபு, நிரை நிரைபு ஆகியவற்றுக்கு இளம்பூரணர் மாங்காடு, களங்காடு, பாய்குரங்கு, கடிகுரங்கு எனவும் பேராசிரியர் போரேறு, பூ ருது, கடியாறு, மழகளிறு எனவும் வாய்பாடு கூறியுள்ளார். இதை இவ் வாறு விரித்துக் கூறியதற்குக் காரணம், இவற்றை அடிப்படை யாக வைத்தே அடி, தொடை, தளை வகைகளைக் கணக்கிடும் போது உரையெழுதுகின்றனர். இந்த இடங்களில் உரையாசிரி யர்கள் காட்டும் உரைச் சூத்திரங்களும் வாய்பாடுகளை வைத்தே இலக்கணம் கூறுகின்றன.

மின்னு வரகு வலியது மேவுசீர்
நன்னாணு பாதிரி பூமருதே யாறுதீ
மன்னாத மாசெல்வாய் தேமா வெனப் பதினோ
ரென்னாகு மெட்டாதி யேழ்.

என்ற உரைச் சூத்திரத்தில் மேலே கூறப்பட்ட வாய்பாடுகளைப் பயன்படுத்தி இலக்கணம் கூறப்பட்டுள்ளமையைக் காணலாம். *(செய்.: 234)*

உரையாசிரியர்களே அன்றி வேறு பலரும் சீர்களின் வாய் பாடுகளைச் சுட்டியே சீர்களைக் குறிப்பிடுகின்றனர்.

தேமாங்காய் இந்திரகணம் புளிமாங்
காய் சந்திரகணம் கருவிள மென்கனி
நிலக்கணம் கூவிளங்கனி நீர்க்கணம் இவை
ஆகும் கருவிளங்காய் அந்தரகணம்

கூவிளங்காய் இரவிக்கணம் தேமாங்

கனி கால்கணம் புளிமாங்கனி தீக்கணம் (வெண்.: 22)

என்று பாட்டியல் நூல்களில் சீர் வாய்பாடுகள் சீர்களைக் குறிக்கப் பயன்படுகின்றன.

சீர்மாங்கனி கூவிளம் கூவிளம் சொற்ற தேமா

நேர்மா இரண்டில் தனியே குறில் நிற்கும் என்றால்

ஓர் மா புளியொடு உறும் மா புளிமாங்கனிச் சீர்

சேர் மா இரண்டு மதனக்கொடி தேர்குவாயே (விருத்தப்பாவியல்: 13)

என்று இலக்கண நூலிலும் வாய்பாடுகளாலேயே சீர் வழங்கப் படுகிறது. இவற்றால் வாய்பாடுகளின் முக்கியத்துவம் புலப்படும். இன்று வழங்கும் சீர் வாய்பாடுகள் யாப்பருங்கலக் காரிகையில் 4, 5 ஆகிய சூத்திரங்களில் சொல்லப்பட்ட வாய்பாடுகளே ஆகும். சீர்களுக்கு எத்தனையோ வாய்பாடுகள் சொல்லப்பட்டிருப் பினும் இந்த வாய்ப்பாடுகளே இன்று வழக்கில் உள்ளன.

யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் யாப்பருங்கல நூற்பாக் களுக்கு உரையெழுதும் போது, தேமா, புளிமா, கூவிளம், கரு விளம், காய், கனி, பூ, நிழல் ஆகிய வாய்பாடுகளையே பயன் படுத்துகிறார். (இவர் கூறும் மற்ற வாய்பாடுகள் பிறர் கருத்தைக் கூறுவன.) தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு உரை எழுதும் போது, தேமா, புளிமா, பாதிரி, கணவிரி, போதுபூ, விறகுதீ, போரேறு, பூமருது, கடியாறு, மழகளிறு, மாசெல்வாய், மாபடுவாய், புலி செல்வாய், புலிபடுவாய் என்று வேறு வாய்பாடுகளைக் கூறியுள் ளார். உரைச் சூத்திரங்களில் கூட இதே வாய்பாட்டைப் பயன் படுத்தியுள்ளார்.

திரி ஏறு பூ மாசேர்வாயாத் திரிந்து

மருதுகொடி மாவருவாய் ஆறு - விரிதிப்

புலிசேர ஆகும் புலி களிறு வந்து

புலி வருவாயாம் கலியுள் புக்கு. (யா.வி.: 470)

என்ற அடிவகைகளைக் கூறுமிடத்துக் காட்டும் உரைச் சூத்திரத் திலும் இந்த வாய்பாடுகளே இடம்பெற்றுள்ளன.

## 3

தளையை உறுப்பாக் கொள்வதும், கொள்ளாததும், என இரண்டு மரபுகள் தமிழ் இலக்கணத்தில் உள்ளன. தொல்காப்பியம், வீரசோழியம் ஆகியவை தளையை உறுப்பாகக் கொள்ளாத நூல்கள். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, காக்கை பாடினியம், சிறுகாக்கை பாடினியம், அவிநயம், மயேச்சுரர் யாப்பு, நாலடி நாற்பது ஆகியவை தளையை உறுப்பாகக்கொண்ட நூல்கள். தளை கொள்வது அடிகளை வகைப்படுத்துவதற்காகவே ஆகும். தொல்காப்பியர் கட்டளை வகை அடியைக் கொள்வதால் தளையைச் செய்யுளின் உறுப்பாகக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. யாப்பருங்கலம் முதலிய நூல்கள் சீர் வகை அடியைக் கொண்டதால் தளையை ஓர் உறுப்பாகக் கொண்டன. தொல்காப்பியர் தளை பற்றிச் சில நூற்பாக்களில் *(52, 53, 55, 58, 60, 61)* கூறி இருப்பினும் அதைச் செய்யுளின் உறுப்பாகக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 4

அடி பற்றிப் பார்க்கும் போது இரண்டு மரபுகளைக் காண முடிகிறது. அடி, சீர்வகை அடி என்றும் கட்டளைவகை அடி என்றும் இரண்டு வகைப்படும். சீர்வகை அடி யாப்பருங்கல மரபிலும், கட்டளை வகை அடி தொல்காப்பிய மரபிலும் உள்ளன. தொல்காப்பியர் கருத்துப்படி அடி என்பது நாற்சீர் கொண்டது. நாற்சீரடி தான் தளை, தொடை முதலியவற்றைக் கொள்ளும். இருசீரடி, முச்சீரடி, ஐந்துசீரடி, அறுசீரடி, எழுசீரடி ஆகியவற்றைத் தொல்காப்பியர் உடன்பட்டாலும், நாற்சீர் அடியையே சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே 31

அடி உள்ளனவே தளையொடு தொடையே 32

அடி இறந்து வருதல் இல்லென மொழிப 33

அடியின் சிறப்பே பாட்டு எனப்படுமே 34

ஆகிய நான்கு நூற்பாக்களில் நாற்சீர் அடியின் சிறப்பைக் கூறு வதால் தொல்காப்பியரின் கருத்தைப் புரிந்து கொள்ளலாம். நாற்சீர் அடியைத் தொல்காப்பியர் பின்வருமாறு வகைப்படுத்தி யுள்ளார்.

குறளடி 4,5,6 எழுத்துகள் கொண்டது.

சிந்தடி 7,8,9 எழுத்துகள் கொண்டது.

அளவடி 10,11,12,13,14 எழுத்துகள் கொண்டது.

நெடிலடி 15,16,17 எழுத்துகள் கொண்டது.

கழிநெடிலடி 18,19,20 எழுத்துகள் கொண்டது.

தொல்காப்பியர் கருத்துப்படி நாற்சீர் அடி 20 எழுத்துக்கு மேல் வராது. நான்கு முதல் இருபது வரையுள்ள பதினேழு நிலத் திலும் வரும் அடிகளில், நான்கு பாக்களுக்கும் உரிய அடிகளைத் தொல்காப்பியர் வரையறுக்கிறார். ஆசிரிய அடி - 17 நிலத்திலும் வரும். வெண்பா அடி - 7,8,9,10,11,12,13,14 ஆகிய எட்டு நிலத் திலும் வரும். கலியடி 13,14,15,16,17,18,19,20 ஆகிய எட்டு நிலத்திலும் வரும். அடியில் வரும் ஒவ்வொரு எழுத்தையும் நிலம் என்ற கலைச் சொல்லால் வழங்கியுள்ளார். யாப்பருங்கலத்தில் அடி பின் வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

| சீர் | அடியின் பெயர் |
|---|---|
| இருசீர் | குறளடி |
| முச்சீர் | சிந்தடி |
| நாற்சீர் | அளவடி |
| ஐந்துசீர் | நெடிலடி |
| அறுசீர் | கழிநெடிலடி |

சீர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அடியை வகைப்படுத்துவதால் இது சீர்வகை அடி எனப்படும். தொல்காப்பியர் ஆண்ட கலைச் சொற்களே இங்கும் ஆளப்படி னும் கலைச் சொல்லை ஆளும்முறை வேறாக இருக்கிறது. பாக் களுக்குரிய அடிகளைக் கூறும்போது இருசீர் அடி, முச்சீர் அடி வஞ்சிப்பாவுக்கும், நாற்சீரடி பிற பாக்களுக்கும் உரியன என்று யாப்பருங்கலம் கூறும்.

தொல்காப்பியர் மேற்கூறிய 17 நிலங்களிலும் வரும் நாற்சீர் அடிகளின் எண்ணிக்கை பற்றிப் பின்வரும் நூற்பாவில் கூறு கிறார்.

ஐவகை அடியும் விரிக்கும் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில ஆகி
அறுநூற்று இருபத்து ஐந்தாகும்மே. (செய். 48)

இந்த நூற்பாவில் எழுபது வகை வழு, அறுநூற்று இரு பத்தைந்து அடி ஆகியன கூறப்பட்டுள்ளன. இந்த இரண்டு கருத்துகள் பற்றியும் உரையாசிரியர்களுக்கிடையே வேறுபாடு கள் உள்ளன. தொல்காப்பியம் என்ற ஒரே இலக்கண நூலுக்குப் பல மரபுகளில் தோன்றிய உரைகளை ஒப்பிட்டு ஆராய இந்த வாய்ப்புப் பயன்படும்.

## 4 அ

எழுபது வகை வழுக்களைப்பற்றி யாப்பருங்கல விருத்தி யுரை ஆசிரியர் பின்வருமாறு உரையெழுதி விளக்கியுள்ளார்.

> ஆசிரிய நிலம் பதினேழுள்ளும் வெண்டளை தட்டப் பதினேழும் கலித்தளை தட்டப் பதினேழு மாய், ஆசிரியப்பாவிற்கு முப்பத்து நான்கு தளை வழுவாம். வெள்ளை நிலம் பத்தினுள்ளும் ஆசிரி யத்தளை தட்டப் பத்தும் கலித்தளை தட்டப் பத்துமாய் வெண்பாவிற்கு இருபது தளை வழு வாம். கலிநிலம் எட்டினுள்ளும் வெண்டளை தட்ப எட்டும் ஆசிரியத்தளை தட்ப எட்டுமாய் கலிப்பாவிற்கு பதினாறு தளை வழுவாம்.
> (யா .வி.: 455,56)

என்று எழுபது தளை வழுக்கள் காட்டப்படுகின்றன. இளம் பூரணர் பின்வருமாறு எழுபது வகை வழுக்களைக் காட்டு கிறார்.

> இயற்சீரான் வருவதனை இயற்சீரடி, எனவும், ஆசிரிய உரிச்சீரான் வருவதனை ஆசிரியவுரிச்

> சீரடி எனவும், இயற்சீர் விகற்பித்து வருவதனை இயற்சீர் வெள்ளடி எனவும், வெண்சீரான் வரு வதனை வெண்சீரடி எனவும், நிரை ஈற்று வஞ்சிச் சீரான் வருவதனை நிரை ஈற்று வஞ்சியடி என வும், உரியசையான் வருவதனை உரியசை ஈற்று வஞ்சியடி எனவும் ஓரசைச்சீரான் வருவதனை அசைச்சீரடி எனவும் வழங்கப்படும். அவற்றுள், இயற்சீரடி நேரீற்று இயற் சீரடி எனவும் நிரை யீற்று இயற்சீரடி எனவும் இருவகைப்படும். நேரீற்று இயற் சீரடியாவது நேரீறு நேர் முத லாகிய இயற்சீர் வருதலும் நேர்பு முதலாசிரிய வுரிச்சீர் வருதலும் நேர் முதல் வெண்பா உரிச்சீர் வருதலும் நேர் முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும் நேர் முதல் ஓரசைச் சீர் வருவதும் என ஐந்து வகைப்படும் நிரை ஈற்று இயற் சீரும் இவ்வாறே நிரை முதலாகிய ஐந்து சீரோடும் உறழ ஐந்து வகைப்படும். (செய்.: 219)

இவ்வாறே ஆசிரிய உரிச்சீரடி பத்து வகையாகவும், இயற்சீர் வெள்ளடி பத்து வகையாகவும் வெண்சீரடி பத்து வகையாகவும் நிரை ஈற்று வஞ்சியடி பத்து வகையாகவும், உரியசை ஈற்று வஞ்சி யடி பத்து வகையாகவும், அசைச்சீரடி பத்து வகையாகவும் வரும் என்று இளம்பூரணர் கூறுகிறார். இளம்பூரணர் கூறுவதைப் பின் வருமாறு விளக்கலாம்.

நேர் + நேர் + நேர் நிரை (நேர் முதல் இயற்சீர்)
+ நேர்பு நேர்பு (ஆசிரிய உரிச்சீர்)
+ நேர் நேர் நேர் (நேர் முதல் வெண்பா உரிச்சீர்)
+ நேர் நேர்பு நேர்பு (நேர் முதல் வஞ்சியுரிச்சீர்
+ நேர் (நேர் முதல் ஓரசைச்சீர்)

இவ்வாறு இயற்சீர், நேர் இறுதியாக நின்று ஐந்து அடி களையும் நிரையிறுதியாக நின்று ஐந்து அடிகளையும் தோற்று விக்க முடியும். பேராசிரியர் எழுபது வகை வழுக்களை,

ஆசிரியத்துள் இயற்சீர் பத்தொன்பதும், ஆசிரிய உரிச்சீர் நான்கும், அசைச்சீர் நான்குமென இரு பத்தேழாகி வரும். வெண்பாவினுள் ஆசிரிய உரிச் சீர் நான்கும் ஓரசைச்சீர் நான்கும் ஒழித்து ஒழிந்த சீர் இருபத்து மூன்றும் வெண்சீர் நான்கினோடு தலைப்பெய்ய அவையும் அவ்வாறு இருபத்தே ழாம். கலிப்பாவிற்கு நேரீற்று இயற்சீர் மூன் றொழித்து ஒழிந்த இயற்சீர் பதினாறும், ஆசிரிய உரிச்சீர் நான்கும், வெண்சீர் நான்கும் என இரு பத்து நான்காம். இவை மூன்று பகுதியும் தொகுப்ப எழுபத்து எட்டாயின. அவற்றுள், ஆசிரியத்துள் வந்த அசைச்சீர் நான்கினையும் வெண்பாவினுள் வந்த அசைச்சீர் நான்கினையும் ஈண்டுத்தளை கொள்ளுங்கால் இயற்சீர் பாற்படுத்து அடக்குக வென்று ஆண்டுக்(28) கூறினமையின் ஈண்டு அவற்றை இயற்சீர் பாற்படுத்தடக்கின் எழுப தாகக் கொள்ளப்படும். அங்ஙனங் கொள்ளப் பட்ட சீர் ஒவ்வொன்றோடு தட்குங்கால் அவ் வெழுபது வகையானு மன்றித் தட்குமாறில்லை. *(செய்.: 229, 230)*

என்று விளக்குகிறார். ஆசிரியம், வெண்பா, கலிப்பா ஆகிய மூன்று பாக்களிலும் பயின்று வரும் சீர்களின் எண்ணிக்கையை அடிப் படையாக வைத்து அந்தச் சீர்கள் தளை கொள்ளும் போது தோன்றும் வழுக்களை எழுபது வழு எனக் கணக்கிடுகிறார். யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் ஒவ்வொரு பாவிலும் அயல்தளை வரும்போது அவ்வப் பாக்களுக்குச் சொல்லப் பட்ட நிலத்தைக் கணக்கில் கொண்டு (17+10+8 = 35x2 = 70) தளைவழு எழுபது என கணக்கிடுகிறார். இளம்பூரணர் அடியில் பயிலும் சீர்களை வைத்து அடிகளை வகைப்படுத்துகிறார்.

எழுபது வகை வழு என்ற தொல்காப்பியக் கருத்தில் மூன்று உரையாசிரியர்களும் தத்தமது மரபின்படி உரை இயற்றுவதால் வேறுபடுகின்றனர். தொல்காப்பிப் பயிற்சி சமூகத்தில் தொடர்ந்து இருந்து வந்தது என்பதும் தொல்காப்பிய நூற்பாக்களுக்குப்

பொருள் கொள்வதில் பல மரபுகள் நிலவிவந்தது என்பதும் இதிலிருந்து தெரிகிறது. யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் அந்நூலுக்கு விருத்தியுரை எழுதியிருப்பதிலிருந்து யாப்பருங் கல மரபைச் சார்ந்தவர்; அந்த மரபை ஏற்றுக் கொண்டார் என துணியலாம். இவர் யாப்பருங்கல மரபிலும் அதனை ஒட்டிய மரபுகளைச் சேர்ந்ததுமான பல இலக்கண நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவதன் மூலம் அந்த மரபுகளில் இவர் ஆழ மான பயிற்சி உடையவர் என்பது விளங்கும்.

யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் தொல்காப்பியச் சூத் திரங்கள் பலவற்றை மேற்கோள் காட்டுவதிலிருந்தும் தொல் காப்பியச் சூத்திரங்கள் பலவற்றிற்கு உரையெழுதுவதிலிருந்தும் இவருக்குத் தொல்காப்பியத்திலும் சிறந்த பயிற்சி உண்டு என்று தெரிகிறது. இங்கு எடுத்து விளக்கப்படும் பல கருத்துகள் மூல மாகத் தொல்காப்பிப் பயிற்சி சமூகத்தில் பரவிக் கிடந்தமை நன்கு புலப்படும்.

## 4 ஆ

'ஐவகை அடியும்' (செய்.48) என்ற தொல்காப்பிய நூற் பாவில் வரும் 'அறுநூற்று இருபத்தைந்து' (அடி) என்னும் தொட ருக்குப் பொருள் கொள்வதிலும் மூன்று மரபுகள் காணப்படு கின்றன. இந்த மூன்று மரபுகள் தாம் நிலவின என்று வரையறுத்துக் கூறிவிட முடியாது. இன்று கிடைத்துள்ள உரைகளின்படி நமக்குத் தெளிவாக விளங்குவது இந்த மூன்று மரபுகளே. இதற் கும் மேல் இருந்திருக்கலாம்; அவை இன்று கிடைக்கவில்லை. அறுநூற்று இருபத்து ஐந்து அடிகளைக் காட்டும்போது இளம்பூரணர்,

> அசைச்சீர், இயற்சீர், ஆசிரிய உரிச்சீர், வெண்சீர், வஞ்சியுரிச்சீர் என்னும் ஐந்திணையும் நிறுத்தி, இவ்வைந்து சீரும் வருஞ்சீராக உறழும் வழி இரு பத்தைந்து விகற்பமாம். அவ்விருபத்தைந்தின் கண்ணும் மூன்றாவது ஐந்து சீரையும் உறழ நூற் றிருபத்தைந்து விகற்பமாகும். நூற்றிருபத்தைந் தின் கண்ணும் நான்காவது ஐந்து சீரையும் உறழ அறுநூற்றிருபத்தைந்தாம். (செய்.: 221)

என்று வரையறுக்கிறார். நாற்சீர் அடிகளில் வரும் அறுநூற்று இருபத்தைந்து அடிகளை எளிதான முறையில் இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர்,

> தளை சிதையா அடி அறுநூற்றிருபத்தைந்தும் மூன்று பாவிற்கும் உரிய பகுதியவாம். யாங்ஙனம்? ஆசிரியவடி முந்நூற்று இருபத்து நான்கும் வெண்பா அடி நூற்று எண்பத்து ஒன்றும் கலியடி நூற்றிருபதுமென அநுநூற்று இருபத்து ஐந்தாம்
>
> ஓரெழுத்துச்சீர் இரண்டும் ஈரெழுத்துச் சீர் ஆறும் மூவெழுத்துச்சீர் பத்தும் நாலெழுத்துச் சீர் ஏழும் ஐயெழுத்துச் சீர் இரண்டுமாகச் சீர் இருபத் தேழினையும் பன்னிரண்டிற் பெருக்கிப் பெற்ற ஆசிரிய அடி முந்நூற்று இருபத்து நான்கும்
>
> வெண்பாஅடி நூற்று எண்பத்தொன்றும் உறழுங் கால் ஏழெழுத்தடியும் எட்டெழுத்தடியும் ஒன்ப தெழுத்தடியும் பத்தெழுத்தடியும் முதலாய் நிற்ப. பதினான்கெழுத் தடியளவும் ஏறி ஓரோசீர் எட் டடி பெறுவனவும் ஏழடி பெறுவனவும் ஆறடி பெறுவனவும் ஐந்தடி பெறுவனவுமாகிய முறை யானே வருமென்பது
>
> கலிக்குரிய சீர் இருபத்து நான்கும் ஓரோவொன்று ஐந்தடி உறழ அதன் அடித்தொகை நூற்றிரு பதாம். (செய்.: 230 - 237)

என்று அறுநூற்று இருபத்து ஐந்து அடி வரும் விதத்தைக் கூறு கிறார். யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர்,

> ஆசிரியப்பாவிற்கு உரிய இருநூற்று அறுபத் தோரடியும் ஆமாறு சொல்லுமிடத்து ஆசிரியப் பாவிற்கு உரிய சீர் பதினாறாம். இயற்சீர், பத்தும் தன்சீர் ஆறும் என அவற்றுள் தன்சீர் ஆறும் தளை வகுக்கப் படாமையின் தளை கொள்ளப்படா....
>
> பத்து இயற்சீருள்ளும் ஈரெழுத்துச் சீராய் ஐம் பதும் மூவெழுத்துச்சீராய் எண்பத்தெட்டும்

நாலெழுத்துச் சீராய் அறுபத்தொன்றும் ஐந் தெழுத்துச் சீராய் பன்னிரண்டும் தலைப்பெய்ய நான்கு நிலைமையானும் ஆயின அடித்தொகை இரு நூற்று ஒருபத்தொன்று...

வெண்பாவிற்குரிய இருநூற்று முப்பத்திரண்ட டியும் ஆமாறு சொல்லுமிடத்து இயற்சீர் பத்தும் தன்சீர் நான்குமாய் வெண்பாவிற்குப் பதினான்கு சீருமாம்... வெண்பாவிற் குரிய சீரால் ஆம் அடித் தொகை நூற்றுத் தொண்ணூற்றாறு. வெண்பா வினுள் நான்கு அசையும் அசைச் சீராய் நின்று ஆக்கின அடித்தொகை முப்பத் தாறாம்... இவை எல்லாம் தலைப்பெய்து எண்ண வெண்பா அடித் தொகை இருநூற்று முப்பத் திரண்டு... பதினான்கு சீரும் கலிக்குரியவாம்... கலியடியெல்லாம் கூட்டி எண்ண நூற்று முப்பத்திரண்டு அடியாம்... ஆசி ரிய அடி இருநூற்று அறுபத் தொன்று, வெண்பா அடி இருநூற்று முப்பத்திரண்டு, கலியடி நூற்று முப்பத்திரண்டு ஆக அறுநூற்று இருபத்து ஐந்து அடியாம். (யா.வி.: 457 - 475)

அடிகளை வகைப்படுத்துவதில் இளம்பூரணர், பேராசிரியர், யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் ஆகிய மூவரும் கொண்ட கருத்து மேலே காட்டப்பட்டது. இப்பகுதியில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. முதலாவதாக பேராசிரியரும் யாப் பருங்கல விருத்தியுரை ஆசிரியரும் 625 அடிகளை ஆசிரியம், வெண்பா, கலிப்பா ஆகிய மூன்று பாக்களுக்கும் உரிய அடிகள் இத்தனை என்று பிரித்துள்ளார்.

| | ஆசிரியம் | வெண்பா | கலிப்பா |
|---|---|---|---|
| பேராசிரியர் | 324 | 181 | 120 |
| யா. வி. | 261 | 232 | 132 |

என்ற முறையில் இருவரும் பிரித்துள்ளனர். இளம்பூரணர் இந்தப் பாவுக்கு இத்தனை அடிகள் என்று பாகுபாடு செய்யவில்லை.

இரண்டாவதாக அடிகளைப் பகுக்கும் அடிப்படை முக்கியமானதாகும். இளம்பூரணர் ஐந்து சீர்களையும் வைத்துக் கொண்டு மாற்றி மாற்றிப் பெருக்க 625 அடியும் வரும் என்கிறார். பேராசிரியரும் யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியரும் ஓரெழுத்து முதல் ஐந்து எழுத்து வரை உள்ள (எழுத்து அடிப் படையிலான) சீர்கள் உண்டாக்கும் அடிகளையே கணக்கிட்டாலும், அடிகளை உருவாக்குவதிலும் அடிகளின் எண்ணிக் கையிலும் தமக்குள் வேறுபடுகின்றனர்.

## 5

தொல்காப்பியர் மோனை, பொழிப்பு, எதுகை, ஒரூஉ, முரண், செந்தொடை, இயைபு, இரட்டை, அளபெடை, நிரல் நிறை எனப் பத்துத் தொடைகளைக் கூறுகிறார். யாப்பருங்கல விருத்தியில் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்ற ஐந்து தொடைகளையும் அவற்றின் விகற்பமாக அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகிய எட்டுத் தொடைகளையும் கூறியுள்ளார். மேலும் செந் தொடை, இரட்டைத் தொடை, அந்தாதி ஆகிய மூன்று தொடை களையும் கூறுகிறார். இதிலும் இரண்டு நூல்களுக்கும் வேறு பாடு உள்ளது. அடி, இணை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், கூழை, முற்று ஆகியவற்றைத் தொல்காப்பியர் கூறவில்லை. இரட்டையை, அமிதசாகரர் தொர்டையாகக் கொள்ளவில்லை. தொடையின் எண்ணிக்கையைக் கூறும்,

> மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
> ஐ ஈர் ஆயிரத்து ஆறு ஐஞ் ஞூற்றொடு
> தொண்டு தலை யிட்ட பத்துக்குறை எழுநூற்று
> ஒன்பஃது என்ப உணர்ந்திசினோரே. (செய். 97)

என்ற நூற்பாவுக்கு விளக்கம் எழுதும் போது உரையாசிரியர் கள் வெவ்வேறு வகையில் பொருள் கொண்டு விளக்கியுள்ளனர்.

> தொண்டுதலை இட்ட பத்துக்குறை எழுநூறு
> ஒன்றும் என்ப உணர்ந்திசினோரே

> என்பதே இச்சூத்திரத்திற்கு இளம்பூரணர் கொண்ட பாடம் என்பதும் 'தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற் றொன்பஃதென்ப' என்பது பேராசிரியர் கொண்ட பாடம் என்பதும், அஃது ஏடெழுதுவோரால் இளம்பூரணர் உரையில் தவறாகச் சேர்க்கப்பட்ட தென்பதும் இவ்விருவர் உரையினையும் ஒப்பு நோக்கி ஆராய் வார்க்கு இனிது விளங்கும் (செய்: 456 அடிக் குறிப்பு)

என்று வெள்ளைவாரணன் குறிப்பிடுவதும் இங்கு நோக்கத் தக்கது. இளம்பூரணரும் யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியரும் 13,699 என்றும், பேராசிரியர் 13,708 என்றும், நச்சினார்க் கினியர் 19,291 என்றும் தொடையின் எண்ணிக்கை காட்டி யுள்ளார். இளம்பூரணர் பின்வருமாறு காட்டுகிறார்.

> மொழி முதலாகிய எழுத்து உயிர் பன்னிரண்டு. இதன் கிளையெழுத்து ஒரோ ஒன்றிற்குப் பதி னொன்றுளவாகலின் அவற்றை உறழ நூற்று முப் பத்திரண்டாம். க,த,ந,ம,ப என்பவற்றை உயிர் பன்னிரண்டோடுறழ அறுபதாம். அவ்வறுபதை யும் முதற்றொடையாக்கி கிளையெழுத்தோடுறழ அறுநூற்றறுபதாம். சகரத்தின் முதலா கெழுத்து ஒன்பது; அவற்றைக் கிளையெழுத்தோடுறழ எழுபத்திரண்டாம். வகரத்தின் முதலா கெழுத்து எட்டு; அவற்றைக் கிளை யெழுத்தோடு உறழ ஐம்பத்து ஆறாம் யகரத்தின் முதலாகெழுத்து ஒன்று; கிளை யெழுத்தில்லை. ஞகரத்தின் முதலா கெழுத்து மூன்று; அவற்றைக் கிளை எழுத்தோ டுறழ ஆறாம். இவ்வகையினான் முதலெழுத்துத் தொண்ணூற்று மூன்றும் கிளையெழுத்துத்தொள் ளாயிரத்திருபத்தாறும் ஆக மோனைத் தொடை ஆயிரத்தொருபத் தொன்பதாம். (செய்.: 456, 457)

இவ்வாறே எதுகை 2473; சொல்முரண், பொருள் முரண் என முரண் தொடை இரண்டு; இயைபுத் தொடை 182; அளபெடைத்

தொடை 159; இவை ஓரடித் தொடை. மோனைப் பொழிப்பு 93; எதுகைப் பொழிப்பு 229; முரண் பொழிப்பு 2; இயைபுப் பொழிப்பு 182; உயிரளபெடைப் பொழிப்பு 148; ஆகப் பொழிப்பு 654. இதே போல ஒரூஉவும் 654. இவை ஈரடித் தொடை. செந் தொடையில் மொழி முதலாகும் எழுத்துத் தொண்ணூற்று மூன் றும் இரண்டாவது அடியிலும் வரும் போது மோனைத் தொடை யாகும் என்பதால் அதை விடுத்து மற்ற தொண்ணூற்று இரண்டு எழுத்துகளோடு பெருக்க (93 ஓ 92) 8556 வரும். இவை எல்லாம் கூட்ட 13, 699 வரும். இப்படி எழுத்துகளைத் துல்லியமாகக் கணக்கிட்டு காட்டுகிறது இளம்பூரணர் உரை.

பேராசிரியர் இச்சூத்திரத்திற்குப் பொருள் எழுதும் போது 13,699 என்று கொண்டவர்களது பாடம் தவறானது என்றும் தாம் கொண்ட பாடத்தின்படி 13, 708 என்று கொள்ளுதலே சரி என்றும் அதுவே பழம்பாடம் என்றும் எழுதுகிறார். (செய்.: 453) இவர் தாம் கொண்டபடி 13,708 தொடை எண்ணிக்கையை 'மெய்பெறு மரபின்' என்ற சூத்திர உரையில் விளக்கவில்லை. மோனை முதல் செந்தொடை வரை உள்ள தொடை இலக் கணம் கூறும் ஒன்பது நூற்பாக்களின் (88 - 96) உரைகளில், அந் நூற்பாக்களுக்கு உரையெழுதும் போது அவற்றின் தொகையை யும் உடன் கூறிச்செல்கிறார். ஆகவே தொடை பற்றிய பேராசிரி யரின் கருத்துகளை இந்த ஒன்பது நூற்பாக்களின் உரைகளி லிருந்தும் தொகுக்க வேண்டும்.

> அறு நூற்று இருபத்தைந்து அடிக்கும் மோனைத் தொடை ஒவ்வொன்றாகச் சென்று பெருகி அறு நூற்று இருபத்து ஐந்து தொடையாமென்பது. மோனைத் தொடை வருங்கால் மூன்று பாவிற் கும் ஓதிய எழுபத்து எட்டு சீரினும் வரப்பெறும். அவ்வாறு வருங்கால் 'அடியுள்ளனவே தளை யொடு தொடையே' என்ற தளையிலக்கணமும் 'அடியிறந்து வருதலில்' எனப்படுமாதலின் அவ் வடி இரண்டன் கூட்டத்துத் தளை வழுக்கன்ளயல் வேண்டும். களையுங்கால் ஆசிரி யத்து நாற்பத்து ஒன்றும், வெள்ளையடியுள் பதினெட்டும் ஆக

> ஐம்பத்து ஒன்பது நிலம் களையப்படும். கலிப் பாவிற்கு அவ்வாறு களைய வேண்டுவதில்லை யென்பது... இவ்வாற்றான் அறுநூற்றிருபத்தைந் தடியுள் ஐம்பத்தொன்பது நிலம் களைந்து ஒழிந்த அடி ஐஞ்ஞூற் றறுபத் தாறானும் பெற்ற மோனைத் தொடை ஐஞ்ஞூற்றறுபத் தாறெனப்படும். இவ் வாறே தலையாகெதுகை, அடியெதுகை, எழுத் தடி இயைபு, சொல்லடி இயைபு என்னும் நான்கு தொடைக்கும் களைவன களைந்து தொகை கூட்டிக் கொள்க. (செய்.: 399 - 402)

பேராசிரியர் தொடைகளின் எண்ணிக்கையைக் கணக் கிடும் முறை இதுவாகும். இவ்வாறே வருக்க மோனை 549, அனு மோனை 549, உயிரெதுகை 549, ஐவகை முரண் 2475, அள பெடை 378, பொழிப்பு, கிளைப் பொழிப்பு, முற்று, கிளை முற்று, ஒரூஉ, கிளை ஒரூஉ ஆகிய ஆறு ஈரடித் தொடை 2521, அசை யந்தாதி, சீரந்தாதி, விட்டிசை, குறிப்பு விட்டிசை ஆகிய நான்கு தொடையும் 815, செந்தொடை 459, இரண்டடி எதுகை 2, இடை யீடு 1 ஆகத்தொடை எண்ணிக்கை 13, 708 என்று தொடையின் விரிவை எல்லாம் எடுத்துக் காட்டுகிறார். பேராசிரியர் தொடை யின் வகைகளை 33 என்று கணக்கிட்டு, அவற்றை அறுநூற்று இரு பத்து ஐந்து அடியோடும் உறழ்ந்து, அதில் தொடையாகப் பெறா தனவற்றையும் தளை வழுவானவற்றையும் களைந்து தொடை எண்ணிக்கை 13, 708 என்று காட்டுகிறார்.

நச்சினார்க்கினியர் 'தொண்டு தலையிட்ட' என்ற தொட ருக்கு 'ஒன்பதாலே பெருக்கின' எனவும் 'பத்துக் குறை எழு நூற்று ஒன்பது' என்ற தொடருக்கு அறநூற்று தொண்ணூற்று ஒன்பது எனவும் பொருள் கொண்டு இவற்றைப் பெருக்கி (699 ஓ 9 = 6291) அதைப் பதின்மூவாயிரத்தோடும் கூட்டி 19, 291 என்று தொடை எண்ணிக்கையைக் கணக்கிட்டார்.

> அடிமோனைத் தொடை மூன்று பாவினும் எழு பத்தெட்டுச் சீரானும் வருங்கால், ஈரடிக் கூட் டத்துத் தளை வழுக்களைய வேண்டும். அவ்வழி அகவற்கு நாற்பத்தொன்றும் வெள்ளைக்குப்

> பதினெட்டுமாகக் களையப்படும். நுந்தை மொழி முதற்குற்றுகரமாதலின் இதற்கொத்த மொழி முதற் குற்றுகரமின்மையின் கட்டளைக்குத் தொடை கோடல் சிறப்பின்று. நுந்தைக்கு இருப தடி கழித்து அறுநூற்று ஐந்தடியுள் ஐம்பத்தாறு தளை வழுக்களைந்து ஒழிந்த அடி ஐஞ்ஞூற்று நாற்பத்து ஒன்பதனைப் பெற்ற அடி மோனைத் தொடை ஐஞ்ஞூற்று நாற்பத்து ஒன்பது. (செய்.: 467, 468)

இது நச்சினார்க்கினியர் காட்டும் முறையாகும். இவ்வாறே பிற தொடைகளையும் காட்டுகிறார். யாப்பருங்கல விருத்தியில் தொடை எண்ணிக்கை பின்வருமாறு கூறப்படுகிறது.

> நான்கு பாவும் பெற்ற ஐம்பத்தோரு நிலத்தவாகி விரிந்த அறுநூற்று இருபத்து ஐந்து அடியும் அவற்று ஒரோ அடி இருபத்திரண்டு தொடையும் பெறப் பதின்மூவாயிரத்து எழுநூற்றைம்பதாய் வரும். அவற்றுள் ஐம்பத்தோரு நிலமும் களையப் பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது தொடையாம். (யா .வி.: 185)

என்று தொடை எண்ணிக்கை கூறப்பட்டது. ஐம்பத்தொரு நிலம் என்று இதில் கூறப்பட்டது ஆசிரியப்பாவுக்கு 17 நிலம், வெண்பாவிற்கு 10 நிலம், கலிப்பாவிற்கு 8 நிலம், வஞ்சிப்பா விற்கு 10 நிலம், இருசீரடி 1, முச்சீரடி 1, ஐந்துசீர் அடி 1, அறுசீர் அடி 1, எழுசீர் அடி 1 ஆகியவை ஆகும்.

தொடையைப் பொருத்தவரை எண்ணிக்கையிலேயே உரை யாசிரியர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு உள்ளது. எண் ணிக்கையில் வேறுபடுவதற்குக் காரணம் 'மெய்பெறு மரபின்' என்ற நூற்பாவிற்கு அவர்கள் கொண்ட பாடமும் அப்பாடத் திற்குப் பொருள் கொண்ட விதமும் ஆகும். இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பொருள் கொண்ட விதம் முன்பு காட்டப் பட்டுள்ளது. தொண்டு தலையிட்ட - ஒன்பது சேர்ந்த, பத்துக் குறை - பத்து குறைந்த, எழுநூற்று ஒன்பது (709 + 9 =718 - 10 = 708) என்பது பேராசிரியர் பொருள் கொண்ட விதமாகும்.

தொல்காப்பிய உரையாசிரியர்களிலேயே காலத்தால் பிற்பட்டவர் நச்சினார்க்கினியர். அவர், தம் காலத்திலும் தமக்கு முற்பட்டும் இருந்தவர்கள் இந்நூற்பாவிற்கு கொண்ட பாடங்களைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்.

> இச்சூத்திரத்திற்கு "தொண்டு தலையிட்ட பத்துக் குறை எழுநூறொன்று மென்ப" என்று பாடமோதிப் பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூறென்பாரும் இனி "பத்துக் குறை எழுநூற்றொன்று மென்ப" என்று பாடமோதித் தொண்டு தலையிட்ட பத்தென்பாரும் இனித் "தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற் றொன்று மென்ப" என்று பாட மோதிப் பதின் மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றொன்ப தென் பாரும், இனிப் 'பத்துக் குறைய எழு நூற்றொன் பஃதென்ப' என்று பாடமோதி யிதனை மிகவு நலிந்து பொருள் கொண்டு, பதின்மூவாயிரத் தெழுநூற் றெட்டென்பாரு மெனப் பல பகுதி யராசிரியர். (செய்.: 499)

இதனால் இச்சூத்திரத்திற்கு வழங்கப்பட்ட பல பாடங்களும் அவற்றுக்குப் பொருள் கொண்ட விதமும் வேறுபட்டிருந்தன என்பது புலனாகிறது. இளம்பூரணரும் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் 13, 699 என்றே எண்ணிக்கையைக் கொள்ளுகின்றனர். யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர்,

> முந்திய மோனை எதுகை அளபெடை
> அந்தமில் முரணே செந்தொடை இயைபே
> பொழிப்பே ஒரூஉவே இரட்டை என்றும்
> இயற்படு தொடைகள் இவை முதலாக
> பதின்மூ வாயிரத் தறுநூ றன்றியும்
> தொண்ணூற்று ஒன்பது என்று எண்ணினர் புலவர்

என்ற சங்க யாப்பு நூலின் நூற்பாவையும் மேற்கோளாகக் காட்டி 13,699 என்ற எண்ணிக்கையைத் தெளிவாக விளக்குகிறார். தமக்கு முன்பும் இந்த எண்ணிக்கையில் உடன்பாடு கொண்ட

வர் உள்ளனர் என்று அவர் ஆதாரம் காட்டுகிறார். விருத்தியுரை ஆசிரியர் கருத்துப்படி 625 அடிகளையும் 22 தொடை யால் பெருக்கி வரும் 13, 750 இல் 51 நிலமும் களைய 13, 699 என்று எண்ணிக்கை கொள்வதாகும் (625 ஓ 22 =13,750 -51=13,699)

இளம்பூரணர் கொண்ட பாடம் பற்றி முன்பு கூறப்பட்டது. இளம்பூரணர் காட்டும் முறை, வேறு எந்த உரையையும் சாராமல் தனித்துக் காணப்படுகிறது. அதனால் இதையும் பழமையான தொருமுறை என்றே கொள்ள வேண்டும். இளம் பூரணர் அடி, தளை முதலிய அடிப்படைகளை விட தொடை யாக அமையும் எழுத்துக்களின் அடிப்படையில் தொடை எண் ணிக்கையைக் கணக்கிடுகிறார். அதனாலேயே அவர், பிறர் ஐந்து என்று கொண்ட முரண் தொடையை, தொல்காப்பிய நூற்பா வில் உள்ளபடி சொல்முரண், பொருள்முரண் என இரண்டா கவே கொள்கிறார். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் வேறு பாடம் கொண்டு தொடை எண்ணிக்கையைக் காட்டினர். கட் டளை அடிகளுக்கே இங்கு கூறப்பட்ட தொடை வகைகள் பொருந்தும் என்று கொண்டு அதற்கேற்பவே எண்ணிக்கை காட்டினர். அவ்வடிகளிலும் அவற்றுக்கு உரியதெனக் கூறப் பட்ட நிலங்களில் இரட்டித்து வரும் போது தளை வழுக் கொள் ளும் அடிகளை விலக்கி எண்ணினர். ஆசிரியம் 324, வெண்பா 181, கலிப்பா 120 என்று 625 நாற்சீரடிகளைப் பிரித்தது போலவே, ஒவ்வொரு தொடைக்கும் அகவலுக்கு இத்தனை, வெண்பா வுக்கு இத்தனை கலிப்பாவுக்கு இத்தனை என்று கணக்கிட்டனர். அடிகளின் அடிப்படையில் கணக்கிடும் இவர்களின் முறைக்கும் தொடையாக அமையும் எழுத்துகளின் அடிப்படையில் கணக் கிடும் இளம்பூரணரின் முறைக்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

நச்சினார்க்கினியார் பேராசிரியரை ஒட்டியே அடிகளின் அடிப்படையில் தொடைகளின் கணக்கைக் கூறினாலும் தொடை களின் எண்ணிக்கையிலும் தொடையைக் கொள்ளும் முறை யிலும் மிகுதியும் வேறுபடுகிறார். பேராசிரியர் ஈரடித் தொடை களையும் ஓரடித் தொடைகளையும் உறழவில்லை. நச்சினார்க் கினியர் பொழிப்பு மோனை, இணை மோனை, ஒரூஉ மோனை என்றெல்லாம் இரண்டையும் உறழ்ந்து எண்ணிக்கை காட்டு கிறார்.

இளம்பூரணர் ஒருவரைத் தவிர பிற உரையாசிரியர்கள் அனைவரும் இந்த நூற்பாவுக்கு எழுதும் உரையில் பல உரைச் சூத்திரங்களைப் பயன்படுத்தியுள்ளார். யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் 51 நிலம் 22 தொடை முதலியவற்றை விளக்க உரைச்சூத்திரங்களைப் பயன்படுத்தியுள்ளார். இவை வெண்பா யாப்பில் உள்ளன. இதே போல விருத்தியுரை முழுவதிலும் பல உரைச் சூத்திரங்களைப் பயன்படுத்தியுள்ளார். இவை பெரும் பாலும் வெண்பாவிலும் சிறு பகுதி பிற யாப்பிலும் ஆனவை. யாப்பருங்கல விருத்தியில் காணப்படும் உரைச் சூத்திரங்கள் உரையாசிரியராலேயே இயற்றிச் சேர்க்கப்பட்டவை ஆகும். (இளங்குமரன் : 1973 முன்னுரை: 31)

பேராசிரியர் தொடை எண்ணிக்கையைக் கூறும் இப்பகுதியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உரைச் சூத்திரங்களைக் காட்டியுள்ளார் இவை உரைச் சூத்திரம் என்றும் அவரே எழுதியுள்ளார். இச்சூத்திரங்கள் வெண்பா (குறள், சிந்தியல், அளவியல்) யாப்பினால் ஆனவை. நச்சினார்க்கினியரும் இப்பகுதியில் பல உரைச் சூத்திரங்களைப் பயன்படுத்தியுள்ளார். இவை நூற்பாக்கள். இப்படி உரை.ச் சூத்திரங்களை உரையில் பயன்படுத்துதல் யாப்பருங்கல விருத்தியின் இயல்பு. ஆனால் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இவ்வாறு உரைச் சூத்திரம் காட்டுவது அரிது. ஒரு சில இடங்களிலேயே உரைச் சூத்திரங்களைப் பயன் படுத்தியுள்ளனர்.

பேராசிரியர் உரையிலும் நச்சினார்க்கினியர் உரையிலும் காணப்படும் உரைச் சூத்திரங்கள் இவர்களால் செய்யப்பட்டவதாமா என்பது ஐயத்திற்கு இடமாக உள்ளது. நச்சினார்க்கினியர் 'மெய்பெறு மரபின்' என்ற நூற்பாவில் காணப்படும் பாட பேதங்களைக் காட்டியுள்ளதை நோக்கும் போது பல காலமாக இந்நூற்பாவுக்கு இப்படிப் பல விதமாகப் பல ஆசிரியர்கள் பொருள் கொண்டு வந்தனர் என்று தெரிகிறது. அப்படிப் பொருள் கூறி வந்த ஆசிரியர்கள் தாம் பொருள் கூறும் முறை மாணவர்கள் நினைவில் நிற்கும் பொருட்டு அக்கருத்துகளைச் சூத்திரங்களாகச் செய்து வைத்தனர். வழிவழியாக அம்மரபுகளில் வந்த அச்சூத்திரங்களைப் பேராசிரியரும் நச்சினார்க்கினி

யரும் தம் உரைகளில் பயன்படுத்திக் கொண்டனர் என்று கருத லாம். அல்லது வழிவழியாக வந்த கருத்துகளைச் சூத்திரங் களாக்கியும் இருக்கலாம். எப்படியும் கருத்துகள் பழமை யானவை என்பது உறுதி.

> பேராசிரியர் காட்டும் உரைச் சூத்திரங்களைக் கூர்ந்து நோக்குங்கால் இச்சூத்திரத்திற்கு இளம் பூரணர் முதலியோர் கொண்ட பாடம் போன்று பேராசிரியர் கொண்ட பாடமும் அவர்க்கு முன் நெடுங்காலமாக வழங்கி வரும் பழைய பாடமே என்பதும் அப்பாடத்தை அடிப்படையாகக் கொண்டே பேராசியர் இங்கு வகுத்துக் காட் டிய தொடை வகை பற்றிய விளக்கமும் பழமை யுடையதே யென்பதும் நன்கு புலனாகும். (செய்.: 461 அடிக்குறிப்பு)

என்ற வெள்ளைவாரணன் கருத்தையும் நோக்குதல் வேண்டும். தொடை வகைகளைக் கூறுவதிலும் உரையாசிரியர்களுக் கிடையே வேறுபாடு உள்ளது. இளம்பூரணர் மோனை, எதுகை, முரண் இரண்டு, இயைபு, அளபெடை, பொழிப்பு, ஒரூஉ, செந் தொடை ஆகிய தொடைகளையே கூறுகிறார். தொல்காப்பியர் மூலநூலில் கூறியவற்றை மட்டுமே கொண்டு தாமாக எந்த விகற் பங்களையும் சேர்க்காமல் உரையெழுதியுள்ளார்.

யாப்பருங்கல விருத்தியாசிரியர் மோனை 2, எதுகை 8, முரண் 5, இயைபு, பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, இரட்டை, அந்தாதி, நிரல் நிறை, ஆகிய 22 தொடைகளைக் கூறியுள்ளார். பேராசிரியர் இன்னும் சிலவற்றைச் சேர்த்து 33 என்று வகைப் படுத்தியுள்ளார். நச்சினார்க்கினியர் 25 ஈரடித் தொடைகளை யும் பொழிப்பு, ஒரூஉ, முதலியவற்றை உறழ்ந்து பொழிப்பு மோனை, பொழிப்பு எதுகை, பொழிப்பு முரண், பொழிப்பு இயைபு, பொழிப்பு அளபெடை எனப் பலவாறாகக் காட்டியுள் ளார். இவை மாறுபட்ட சிந்தனைகளைக் காட்டுகின்றன என் பது மட்டுமின்றி இத்தகைய மாறுபட்ட சிந்தனை மரபுகள் பல காலமாகவே வழக்கில் இருந்தன என்பதும் தெளிவாகிறது.

## 6

பா எனும் உறுப்பைப் பொறுத்தவரை தொல்காப்பியர் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா, மருட்பா, பரிபாடல், ஆகியவற்றைக் கூறுகிறார். யாப்பருங்கலத்தில் பா, பாவினம் என இரண்டு கூறாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தாழிசை, துறை, விருத்தம் ஆகிய மூன்றும் பாவினம் என்று கூறப்பட்டுள்ளது. நான்கு பாவொடும் மூன்று பாவினங்களையும் உறழ 12 ஆகும். தொல்காப்பியர் பாவினம் என்பதைக் கொள்ளவில்ல. தொல்காப்பியர் கொண்ட மருட்பா, பரிபாடல் ஆகியவற்றை அமித சாகரர் கொள்ளவில்லை. பாக்களின் வைப்பு முறையிலும் மாற்றம் தெரிகிறது.

| | தொல்காப்பியம் | யாப்பருங்கலம் |
|---|---|---|
| 1 | ஆசிரியப்பா | வெண்பா |
| 2. | வஞ்சிப்பா | ஆசிரியப்பா |
| 3. | வெண்பா | கலிப்பா |
| 4. | கலிப்பா | வஞ்சிப்பா |

என்று வேறு முறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் தற்செயலாக நிகழ்ந்ததன்று. ஆசிரியப்பா பெற்றிருந்த முதலிடத்தை வெண்பா பெற்றதும் வஞ்சிப்பா இறுதிக்குத் தள்ளப்பட்டதும் அதன் ஆசிரியர்களின் இலக்கண மரபைக் காட்டுகின்றன. பாக்களின் உட்பிரிவுகளிலும் இரண்டு நூல்களுக்கும் இடையே வேறுபாடு உள்ளது. தொல்காப்பியத்தில்,

1. ஆசிரியப்பாவில் உட்பிரிவுகள் இல்லை
2. வெண்பா

    நெடுவெண்பாட்டு

    குறுவெண்பாட்டு

    கைக்கிளை

    பரிபாடல்

    அங்கதம்

3. கலிப்பா

(அ) ஒத்தாழிசைக் கலி

அகநிலை ஒத்தாழிசைக் கலி

தேவபாணி

வண்ணகம்

ஒருபோகு

கொச்சக ஒருபோகு

அம்போதரங்க ஒருபோகு

(ஆ) கலிவெண்பாட்டு

(இ) கொச்சகக் கலிப்பா

(ஈ) உறழ் கலிப்பா

4. வஞ்சிப்பாவில் உட்பிரிவுகள் இல்லை

யாப்பருங்கலத்தில்,

1. வெண்பா

குறள் வெண்பா

சிந்தியல் வெண்பா

நேரிசை வெண்பா

இன்னிசை வெண்பா

பஃறொடை வெண்பா

2. ஆசிரியப்பா

நேரிசை ஆசிரியப்பா

நிலை மண்டில் ஆசிரியப்பா

அடிமறி மண்டில் ஆசிரியப்பா

இணைக்குறள் ஆசிரியப்பா

3. கலிப்பா

(அ) ஒத்தாழிசைக் கலிப்பா

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

(ஆ) கலிவெண்பா

(இ) கொச்சகக் கலிப்பா

எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் தாழிசை, துறை, விருத்தம் ஆகிய மூன்று பாவினங்களையும் நான்கு பாக்களுடன் சேர்த்து

| | | |
|---|---|---|
| வெண்டாழிசை | வெண்டுறை | வெளிவிருத்தம் |
| ஆசிரியத்தாழிசை | ஆசிரியத்துறை | ஆசிரியவிருத்தம் |
| கலித்தாழிசை | கலித்துறை | கலிவிருத்தம் |
| வஞ்சித்தாழிசை | வஞ்சித்துறை | வஞ்சிவிருத்தம் |

என்று பன்னிரண்டு பாவினங்களைத் தருகிறது. இவற்றுடன் வெண்பாவின் இனம் என்று வெண்செந்துறை, குறள் தாழிசை ஆகிய இரண்டினையும் கூறுகிறது.

## 6 அ

பாவினத்தைப் பற்றியும் உரையாசிரியர்களுக்கிடையே கருத்து வேற்றுமை உள்ளது. இளம்பூரணர் இவற்றைப் பண்ணத்தி என்று கொண்டு,

> இத்துணையும் பாவும் பாவின்றி வழங்குவனவும் எடுத்தோதினார் இனி பிற நூலாசிரிர் விரித்துக் கூறின இசை நூலின் பாவினமாமாறு உணர்த்து தலின்... பண்ணைத் தோற்றுவித்தலாற் பண்ணத்தி என்றார். அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன... ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி எனச் சொல்லப் பட்ட நான்கு பாவினோடும் தாழிசை, துறை, விருத்தம் என்ற மூன்றினத்தையும் உறழப் பன்னிரண்டாம். (செய்: 888)

என்று கூறி தாழிசை, துறை, விருத்தம் ஆகிய மூன்றும் இசைப் பாடலுக்குரியன என்பதை விளக்குகிறார்.

பேராசிரியர் பண்ணத்தியே பாவினம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. என்றாலும் வெண்செந்துறைக்கு யாப் பருங்கல விருத்தியில் உதாரணமாகக் காட்டப்பட்ட,

கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

என்ற பாடலைக் காட்டி 'என்பது கந்திருவ மார்க்கமாதலின் ஈண்டை இலக்கணமெல்லாம் பெறுதல் சிறுபான்மை எனக் கொள்க' (செய்.:720) என்று எழுதுகிறார்.

யாப்பருங்கலத்தில் பாவினமாகக் காட்டப்பட்டவை எல்லாம் இசைப்பாடல்கள் என்பதும் அவற்றை இயற்றமிழில் வழங்கும் மரபு உண்டென்றும் அறிய முடிகிறது. இசைத் தமிழில் மட்டுமின்றி நாடகத் தமிழிலும் வழங்கி வந்த யாப்பு மரபுகள் இயல் தமிழ் நூல்களிலும் தழுவிக் கொள்ளப்பட்டன.

## 7

இயல் இலக்கணத்தில் இலக்கியம் ஆக்கப்படும் யாப்பு குறித்துப் பேசப்படுவது போல இசையின் இலக்கணம் சொல்லும் நூலில் அந்த இசைப் பாடல் யாப்பும் பேசப்பட்டுள்ளது. இசை இலக்கணம் கூறும் நூல்களில் அவற்றுக்கு வரையறுக்கப்பட்ட யாப்பும் செய்யுள் இலக்கணம் கூறும் நூல்களில் அவற்றுக்கு வரையறுக்கப்பட்ட யாப்பும் ஒரே மாதிரியாக இல்லை; அப்படி இருக்கவும் முடியாது. காலப் போக்கில் இசைப் பாடல்களுக்குச் சொல்லப்பட்ட இலக்கணத்தில் செய்யுள் இயற்றி, இயல் பகுதியிலும் வழங்கினர். அதாவது இலக்கியம் படைக்கும் யாப்புகளில் ஒன்றாக இசைப்பாடலுக்குரிய யாப்பும் ஆகிவிட்டது. இதற்குச் சிலப்பதிகாரம் நல்ல எடுத்துக்காட்டாகும். வரி, குரவை, அம்மானை முதலிய இசைப்பாடல்கள் இடையிடையே வருகின்றன. காப்பியத்தில் மற்ற பகுதி ஆசிரியப்பாவால் ஆனது. இடையே வரும் இசைப்பாடல் பகுதிகளுக்கு இலக்கணம் இசை நூல்களுள் கூறப்பட்டதேயாகும்.

இசை இலக்கண நூல்களில் இசைப்பாடல்களுக்கான யாப்பிலக்கணம் கூறப்பட்டுள்ளது என்பதற்கு,

அன்றி இசைப்பா, இசை அளவுபா என்னும் இரு
பகுதியுள் இஃது இசைப்பாவின் பகுதி என்ப.

அது பத்து வகைப்படும். செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி , கானல்வரி, விரி முரண், தலைபோகு மண்டிலம் என என்னை?

செந்துறை. வெண்டுறை தேவபாணிய் யிரண்டும்
வந்தன முத்தகமே வண்ணமே - கந்தருவத்
தாற்றுவரி கானல் விரிமுரண் மண்டிலமாத்
தோற்று மிசைப்பாச் சுட்டு.

என்றார் இசை நுணுக்கமுடைய சிகண்டியார் என்க. *(சிலப்பதிகாரம்: 188)*

என்ற அடியார்க்கு நல்லார் கூற்று நல்ல எடுத்துக்காட்டாகும். இதில் இசைப் பாடல்களுக்கு உரிய பத்து வகை யாப்புகள் கூறப் பட்டுள்ளன.

கலிப்பாவின் உறுப்புகளைப் பற்றிக் கூறும் போது பேரா சிரியர், 'இனி இசை நூலாரும் இத்தரவு முதலியனவற்றை முகம், நிலை, கொச்சகம், முரி என வேண்டுப' (செய்.: 639) என்று எழுது கின்றார். இதனோடு அடியார்க்கு நல்லார் கூறும் பின்வரும் கருத் தும் நோக்கத்தக்கது.

முகத்திற்படும் தரவினை முகநிலை எனவும் இடை நிற்பனவற்றை இடைநிலை எனவும் இறுதியினிற் பனவற்றை முரிநிலை எனவும் பரவுதற் பொருண் மையாற் பெயர் கொடுத்தார் செய்யுளியலின் கண் ணும், இனி இசைத் தமிழில் வருங்கால் முகம் நிலை, கொச்சகம், முரி என்ப ஒரு சார் ஆசிரியர். *(சிலப்பதிகாரம்: 188)*

இயல் யாப்பில் உள்ளது போலவே இசை யாப்பிலும் கலி என்னும் பாடல் வகை ஒன்று இருந்தது என்று அதற்கு மேற் கூறப்பட்ட உறுப்புகள் இருந்தன என்றும் அவற்றுக்கு இலக் கணம் இசை நூல்களில் கூறப்பட்டன என்பது தெளிவாகின் றது. இதனால் இசைப்பாட்டல்களின் யாப்பு முறைகள் சில இயல்

யாப்புக்கு வருவதற்கும் இயல் தமிழ் யாப்பு இசைத் தமிழிற்குச் செல்வதற்கும் உள்ள வாய்ப்புகள் தெளிவாகின்றன.

ந.வீ. செயராமன் அவர்கள் யாப்பிலக்கணத்தில் மூன்று கொள்கைகள் நிலவின என்று கூறியுள்ளார்.

> தொல்காப்பியர் காலத்தில் தொல்காப்பியரின் யாப்பியல் இலக்கணங்கள் ஒரு கொள்கையாக வும், காக்கை பாடினியாரின் யாப்பியல் இலக் கணங்கள் பிறிதொரு கொள்கையாகவும் வழங் கின. காக்கை பாடினியாரின் யாப்பியற் கொள்கை கள் பிற்காலத்தில் பல்வேறு யாப்பியலாரால் பெரிதும் பின்பற்றப்பட்டன. நற்றத்தனார் போன்ற யாப்பிலக்கணிகள் இவ்விரு கொள்கை யினின்றும் வேறுபட்டுப் புதியதொரு கொள்கை யையும் வகுத்தனர். இங்ஙனம் யாப்பியல் வரலாற் றில் மூவேறு கொள்கைகள் கிளைத்தெழுந்து வளர்ந்த பான்மையை யாப்பியல் நூல்களின் அமைப்பால் அறிய முடிகிறது. (1980;16)

இந்தப் பகுதியில் சில சிக்கல்கள் உள்ளன. முதலில் இவர் காக்கை பாடினியாரை, தொல்காப்பியரின் உடன்பயின்ற ஒரு சாலை மாணவர் என்று எண்ணுகிறார். (மேற்படி;10) காக்கை பாடினியார் இலக்கணத்தையும் தொல்காப்பியரின் இலக்கணத் தையும் ஒப்பு நோக்கினால் இக்கருத்து தவறு என்பது விளங்கும் என்கிறார் இளங்குமரன் (1988: 16) நற்றத்தனார் மூன்றாவது நெறியை வகுத்தவர் என்று கூறியுள்ளார். இந்த மூன்றாவது நெறி யின் பண்புகளை விளக்கவில்லை. உரைகளில் மேற்கோளாக இன்று கிடைக்கும் இந்நூலின் நூற்பாக்கள் 25. இவற்றை வைத்துக் கொண்டு இப்படி ஒரு முடிவுக்கு வருவது எவ்வளவு தூரம் சரி யானது என்ற கேள்வி எழுகிறது.

தொல்காப்பிய மரபிலிருந்து மாறுபட்ட பல யாப்பிலக்கண மரபுகள் நிலவின; அவை இயல் தமிழில் இசை, நாடகத் தமிழ் யாப்பு இலக்கணங்களையும் தழுவி இலக்கணம் அமைத்துக் கொண்டன. இதன் விளைவே தாழிசை, துறை, விருத்தம் ஆகிய

பாவினங்களாகும். யாப்பருங்கலம் மூல நூலில் கூறப்படாத வண்ணம், வனப்பு முதலியவற்றை விளக்க யாப்பருங்கல விருத்தி யுரை ஆசிரியர் தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டி அவற்றுக்கு உரையும் எழுதியுள்ளார். இது நூலை நிறைவு செய்வதன் பொருட்டு எழுதப்பட்டதாகும்.

தொல்காப்பியர் யாப்பின் உறுப்பாகக் கூறிய, யாப்பு, மரபு, தூக்கு, நோக்கு, பயன், எச்சம் முன்னம், மாட்டு ஆகியவற்றிற்கு யாப்பருங்கல மூலநூலாசிரியரோ விருத்தியுரை ஆசிரியரோ இலக்கணம் கூறவில்லை. இவற்றுள் 'தூக்கு' என்னும் உறுப்பு பற்றி,

> தூக்கு எனினும், பாட்டு என்னும், ஒக்கும். என்னை,
>
> தூக்கும் பாட்டும் பாவும் ஒன்றெனை
> நோக்கிற்றென்ப நுணங்கியோரே
>
> என்றார் பல்காயனார். (யா.வி. 17)

என்று எழுதியிருப்பதால் தூக்கு, பா என்று தொல்காப்பியர் இரண்டு உறுப்பாகக் கூறியவற்றை ஒரே உறுப்பின் இரண்டு பெயராகக் கொள்ளும் மரபும் உண்டு என்று தெரிகிறது. மேற் கூறிய உறுப்புகளை யாப்பருங்கல ஆசிரியர், உரையாசிரியர் ஆகியோர் செய்யுளின் உறுப்புகளாகக் கொள்ளவில்லை.

## 8

வீரசோழியத்தைப் பற்றி ஆராயும் போது அந்த மரபு இது வரை கூறப்பட்ட மரபுகளில் அடங்காமல் நிற்பதை அறிய முடி கிறது. வீரசோழிய நூலில் நான்காவது அதிகாரமாக உள்ள யாப்பதிகாரம், யாப்புப்படலம் என்ற படலத்தைக் கொண்டுள் ளது. தொல்காப்பியம், யாப்பருங்கலம் முதலிய நூல்களில் உள் ளதைப் போல இத்தனை உறுப்புகள் நூலில் கூறப்பட்டுள்ளன என்று குறிப்பு இல்லை. வீரசோழியம் 36 சூத்திரங்களில் யாப் பிலக்கணத்தை விளக்கியுள்ளது.

இந்நூலில் அசை, சீர், அடி, தொடை (மோனை, எதுகை) பா ஆகிய ஐந்து உறுப்புகள் மட்டுமே விளக்கப்பட்டுள்ளன

தளையை உறுப்பாகக் கொள்ளவில்லை என்பதைப் பொறுத்த வரை இந்நூல் தொல்காப்பிய மரபைப் பின்பற்றினாலும் மற்ற இடங்களில் (வண்ணம் தவிர) தொல்காப்பிய மரபிற்கும் வீர சோழியத்திற்கும் தொடர்பில்லை. ஈரசைச்சீர், வெண்சீர், வஞ்சி உரிச்சீர் ஆகியவற்றை முறையே முதற்சீர், இடைச்சீர், கடைச்சீர் என பெயரிட்டு வழங்குகிறது. தொடைகளில் மோனைத் தொடை யும் எதுகைத் தொடையும் மட்டுமே பேசப்பட்டுள்ளன. இதி லும் எதுகைத் தொடையே சிறப்பிடம் பெறுகிறது. எதுகைத் தொடையை அடிப்படையாக வைத்தே வீரசோழியம் அடிகளைப் பிரிக்கிறது. அடிகளை வீரசோழியம் வகைப்படுத்தி பெயரிடும் முறை வேறுபடுகிறது.

| | |
|---|---|
| இருசீர் அடி | அந்தரம் |
| முச்சீர் அடி | கால் |
| நாற்சீர் அடி | தீ |
| ஐந்துசீர் அடி | புனல் |
| ஆறுசீர் அடி | மண் |

செய்யுளை பத்தியம், கத்தியம் என இரண்டாகப் பிரிக்கிறது இந்நூல்,

> பத்தியம் கத்தியம் என்று இரண்டாம் செய்யுள் பத்தியம்மேல்
> எத்திய பாதங்களால் வந்து இயலும் என மொழிந்த
> கத்தியம் கட்டுரை செய்யுளின் போலிக் கலந்து அவற்றோடு
> ஒத்து இயல்கின்றமையால் ஒன்று தாமும் உரைத்தனரே (வீர.110)

பத்தியம் என்பது அடிகளால் நடைபெறுவது என்றும் கத்தியம் செய்யுள், கட்டுரை இவற்றின் போலி எனவும் இலக்கணம் கூறப் பட்டுள்ளது. இது வடமொழி மரபாகும்.

பதின்மூன்று சூத்திரங்களில் (7 - 19) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பாக்களும் தாழிசை, துறை, விருத் தம் ஆகிய பாவினங்களும் - வெண்செந்துறை குறள் தாழிசை உள்பட - முறைப்படி கூறப்பட்டுள்ளன. இவற்றில் சொல்லப் பட்ட இலக்கணங்கள் யாப்பருங்கலத்தை ஒட்டி அமைந்துள் ளன. வெண்பாவின் வகைகளைக் கூறும் சூத்திரத்தில் (8) குறள், சிந்தியல், நேரிசை, இன்னிசை, பஃறொடை ஆகியவற்றைக்

கூறும்போது கலிவெண்பாவும் கூறப்பட்டுள்ளது. பதினோராம் சூத்திரத்தில் வெண்கலிப்பாவின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. 'நேரிசை வெண்பா போன்று அதனின் நீண்டு வருவது கலிவெண் பாவாம்' என்று (வீர.:133) கலிவெண்பாவின் இலக்கணம் கூறப் பட்டுள்ளது. இதற்கு எடுத்துக் காட்டாக 'சுடர்த்தொடிஇ கேளாய்' என்ற கலித்தொகைப் பாடல் (51) காட்டப்பட்டுள் ளது. 'ஈற்றடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் வருவது வெண் கலிப்பாவாம்' என்று வெண்கலிப்பாவின் இலக்கணம் கூறி 'ஏர் மலர் நறுங்கோதை' என்ற நாலடிப்பாட்டு உதாரணம் காட்டப் பட்டுள்ளது. இந்தப் பாட்டில் ஆசிரியத்தளை, கலித்தளையும் முன்பு காட்டிய பாட்டில் வெண்டளையும் பயின்று வந்துள்ளன.

யாப்பருங்கலத்தில் கலிப்பாவின் வகைகளைக் கூறும் இடத்தில்,

> தன்தளை ஓசை தழீஇ நின்று ஈற்று அடி
> வெண்பா இயலது கலிவெண்பாவே (34)

என்று இலக்கணம் கூறட்பட்டுள்ளது. உரையாசிரியர் 'வெண் கலிப்பா எனினும் கலிவெண்பா எனினும் ஒக்கும்' (யா.வி.: 325) என்று எழுதியுள்ளார். வெண்பாவின் இனம் பற்றிப் பேசும் இடத்தில் இதைப் பற்றிக் குறிப்பு இல்லை.

> ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்
> திரிபின்றி முடிவது கலிவெண்பா பாட்டே. (செய். 153)

என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. இளம்பூரணர் 'கலிவெண் பாட்டு எனினும் வெண்கலிப்பா எனினும் ஒக்கும்' என்று எழுதிவிட்டு 'மரையா மரல்கவர' என்ற செய்யுளை வெண் டளையான் வந்த வெண்கலிப்பா என்றும், 'தீம்பால் கறந்த' என்ற செய்யுளை அயற்றளையான் வந்த கலிவெண்பா என்றும் எழுதியுள்ளார் (செய்.: 752, 753). குணசாகரரும் இதே பொருள் பட எழுதியுள்ளார். (யா.கா.:111, 112) ஆனால் எல்லா இலக்கண ஆசிரியரும் இதைக் கலிப்பாவின் இனமாகவே கொண்டுள்ளனர். வீரசோழியத்தில் மட்டும் தான் கலிவெண்பாவை வெண்பா வின் இனமாகவும் வெண்கலிப்பாவை கலிப்பாவின் இனமாக வும் ஆசிரியர் காட்டியுள்ளார்.

19ஆம் சூத்திர உரைக்குப்பின் இதுவரை சொல்லப்பட்ட இலக்கணங்கள் எல்லாம் 'ஒரு சார் ஆசிரியர் மதம் எனக் கொண்டு இவையிற்றுக்கு குற்றங் காட்டுவதற்கு எடுத்தோதினான் என்க' என்று உரையாசிரியர் எழுதுகிறார். (வீர: 167) இருபது முதல் இரு பத்து நான்கு வரையுள்ள ஐந்து சூத்திரங்களில் குறள், சிந்து, திரி பாதி, வெண்பா, திலதம், விருத்தம், சவலை என்ற ஏழு பத்திய வகைகளைக் கூறுகிறார். இவையே நூலாசிரியரின் கருத்துப்படி, செய்யுள் வடிவங்களாம்.இப்படிச் செய்யுளை வகைப்படுத்தும் மரபு மற்ற நூல்களில் காணப்படவில்லை. வீரசோழியத்தில் மட்டும் காணப்படும் மரபாகும்.

பதினொரு சூத்திரங்களில் (25 - 35) விருத்தம், லகு, குரு, பிரத் தாரம் முதலிய ஆறு தெளிவுகளும் சந்தத்தின் தொகை, அளவு முதலியனவும் தாண்டகத்தின் விளக்கமும் சொல்லப்பட்டுள்ளன. இந்தப் பகுதி முழுவதும் வடமொழி மரபிலேயே இலக்கணம் விளக்கப்பட்டுள்ளது. இங்கு விளக்கப்பட்டுள்ள விருத்தங்களின் வகையும் தமிழ் மரபில் அல்லாமல் வடமொழி மரபில் விளக்கப் பட்டுள்ளன.

இவற்றைத் தொகுத்துப் பார்க்கும் போது வீரசோழியத் திற்கு முன் பல யாப்பிலக்கண மரபுகள் தமிழ் இலக்கண உலகில் நிலவிய போதும் அவற்றைப் புறக்கணித்துத், தன் போக்கில் குறள், சிந்து முதலிய ஏழு செய்யுள் வகைகளை விளக்கியும் வடமொழி மரபைப் பின்பற்றி சந்தம், தாண்டகம் ஆகியவற்றின் இலக்கணங் களையும் விளக்கியுள்ளார். வீரசோழிய ஆசிரியரைப் பொருத்தவரை எழுத்து, சொல் முதலிய இலக்கணங்களில் கூறி யது போலவே யாப்பு இலக்கணத்திலும் வடமொழி இலக்கண மரபைப் புகுத்தி, இலக்கணம் இயற்றியுள்ளார். யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் குறிப்பிடுவது போல் 'வடநூல் வழித் தமிழாசிரியர்' என்று புத்தமித்திரரையும் பெருந்தேவனாரையும் கூறலாம்.

யாப்பிலக்கணத்தைப் பொருத்தவரை இங்கு எடுத்துக் கொண்ட காலப் பகுதியில் தொல்காப்பிய மரபு, யாப்பருங்கல மரபு என இரண்டு முக்கிய மரபுகளும் இவற்றோடு தொடர்பில் லாத வடமொழி மரபைப் போற்றும் வீரசோழிய மரபும் திகழ்ந்

தன. யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாகக் காட்டப்படும் அவிநயம், மயேச்சுரர் யாப்பு, சங்க யாப்பு, சிறுகாக்கை பாடினியம், காக்கை பாடினியம் முதலிய இலக்கண நூல்கள் இன்று முழுமையாகக் கிடைக்காததால் இவற்றின் மரபு இது என்று காட்ட முடியவில்லை. எனினும் இவற்றில் சில யாப்பருங்கல மரபில் அதற்கு முந்தித் தோன்றிய நூல்கள் என்று கூறலாம். முக்கியமாக காக்கை பாடினியமும் சிறுகாக்கை பாடினியமும் யாப்பருங்கல மரபில் தோன்றிய நூல்கள். இதைவிட யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகியவை இந்த நூல்களின் மரபில் தோன்றின என்று கூறுவது சரியானது. யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் தமது உரையில் பல இடங்களில் இதைக் கூறியுள்ளார்.

> இந்நூலாசிரியரும் நேர்பு அசையும் நிரைபு அசையும் வேண்டாது நாலசைப் பொதுச்சீரும் வேண்டாமே நடப்பதோர் உபாயம் கண்டாரேனும் முதல் நூலின் வழி நில்லாது தமது மதம் படுத்துச் சொன்னார் என்னும் பாதுகாவல் நோக்கியும் ....காக்கைபாடினியார் முதலிய தொல்லாசிரியர் தம் மதம் பற்றி ஈண்டு நாலசைச்சீர் எடுத்தோதினார் (யா.வி.58)

என்று எழுதியுள்ளார். இவ்வாறே பல இடங்களிலும் காக்கை பாடினிய மரபைப் போற்றி எழுதப்பட்டுள்ளது.

> நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் பிற தளையும் வெண்பாவினுள் அருகி வரும் என்பர் உளராயினும் அவ்வாறு வரின் வெண்பா அழியும் செப்பலோசை தழுவி நில்லாது ஆகலின் என்று மறுத்தார் காக்கைபாடினியார் முதலிய மாப்பெரும் புலவர், அவரது துணிபே இந்நூலுள்ளும் துணிபு (யா.வி.101)

என்று தெளிவாகவே எழுதுகிறார். மேலும் உரையில் மேற்கோள் காட்டும்போதும் காக்கை பாடினியத்திற்கே சிறப்பிடம் கொடுத்து காட்டுகிறார். இதனால் யாப்பருங்கலமும் யாப்பருங்கலக் காரிகையும் காக்கை பாடினிய மரபில் வந்தவை என்று அறியலாம்.

இதில் உறுப்புகளின் எண்ணிக்கை, அசை, சீர், இவற்றைக் கொள்ளும் விதம், அடியில் சீர்வகை அடி, கட்டளை அடி என இரண்டு, பாக்களின் வைப்பு முறை, பாவினம், தொடை முதலிய வற்றில் இரண்டு நூல்களும் வேறுபட்டுள்ளமை காட்டப்பட்டது. இத்தகைய வேறுபாடுகளால் இரண்டும் தனித்தனி மரபுகள் என்பது தெளிவாகிறது.

யாப்பருங்கலம் முதலிய நூல்கள் தோன்றிய பின்னும் தொல் காப்பியம் மக்களிடையே தொடர்ந்து பயிற்சியில் இருந்தது என்பது அதற்குத் தோன்றிய பல உரைகளால் தெரிகிறது. இந்த உரைகளும் தம்முள் வேறுபாடுகள் கொண்டுள்ளன. யாப்பருங் கல மரபில் தோன்றி, அம்மரபை ஏற்றுக் கொண்டு அதற்கு உரை இயற்றியவர், தொல்காப்பியத்தில் ஆழமான பயிற்சி உள்ளவராக இருக்கிறார். தம் உரையில் பிற நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவது போலவே தொல்காப்பியத்திலிருந்தும் பல சூத்திரங் களை மேற்கோள் காட்டுகிறார். யாப்பருங்கல நெறிக்கு மாறாக உள்ள, அசை, சீர், அடி, தொடை, வண்ணம், வனப்பு முதலிய வற்றின் இலக்கணம் கூறும் நூற்பாக்களை எடுத்துக்காட்டி அவற் றுக்கு உரையும் எழுதியுள்ளார். இதிலிருந்து இவர் தொல்காப் பியம் கற்ற மரபு இன்னதென்று விளங்கிக் கொள்ள முடிகிறது.

இளம்பூரணர், தொல்காப்பிய உரையாசிரியர்களில் முதலா மவர் என்பதாலும் முக்கிய இடங்களில் பிற உரையாசிரியர்களிட மிருந்து மாறுபட்டு உரையெழுதிச் செல்வதாலும் இவருடைய மரபு முக்கியமானதாகின்றது. இவருடைய உரை ஒரு சில இடங் களில் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் தொல்காப்பிய நூற் பாக்களுக்கு எழுதிய உரையுடன் ஒத்துச் செல்கிறது இவரும் சமணர் என்பதால் அத்தகைய போக்கு இருக்க வாய்ப்புண்டு. எனினும் இளம்பூரணர் உரை தனித்த போக்குடையது என்பதால் அதைத் தொல்காப்பிய உரைகளின் தனி மரபு என்றே கொள்ள வேண்டும்.

பேராசிரியர் உரை தொல்காப்பியச் செய்யுளிலுக்குக் கிடைத்த விரிவான உரையாகும் இந்த உரையில் இவர் எழுதிச் செல்லும் போக்கு யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர், இளம் பூரணர் ஆகியோரது மரபிலிருந்து வேறுபட்டுள்ளது. தளை

பற்றிய கருத்து, சீர், சீர் வாய்பாடு, எழுபது வகை வழு, அறு நூற்று இருபத்து ஐந்து அடி, தொடை ஆகியவற்றைக் கூறும் இடங்களில் இவர் உரை மரபின் தனித்த இயல்பைக் காண முடியும். இவற்றை விளக்க இவர் காட்டியுள்ள உரைச் சூத்திரங்கள் இவரது மரபின் பழமைக்குச் சான்றாகின்றன. தொல்காப்பிய மரபைப் பிற இலக் கண மரபுகளில் இருந்து பிரித்துத் தனித்த அதன் பழமையைக் காப்பாற்றும் மரபு பேராசிரியரின் மரபு என்று கூறலாம்.

நச்சினார்க்கினியரின் செய்யுளியல் உரை ஓரளவு சிதைந்துள்ளது. கிடைக்கின்ற பகுதிவரை பெரும்பாலும் இவர் உரை பேராசிரியர் உரையைத் தழுவியே செல்கிறது. எனினும் தொடையின் வகைகளை விளக்கும் இடத்தில் இவரது உரை பிற உரைகளில் இருந்து பெரிதும் மாறுபட்டுள்ளதால் இவர் மரபையும் தனித்ததொரு மரபாகவே கொள்ள வேண்டும். இதற்குச் சான்று கூறுவது போல் இவர் காட்டும் உரைச் சூத்திரங்கள் அமைந்துள்ளன. இவர் பேராசிரியரைப் போலவே வைதிக சமயத்தவர் என்பதால் அவரைப்பின்பற்றி உரை எழுதியிருக்க வாய்ப்புகள் உண்டு.

தொல்காப்பியத்திற்குத் தோன்றியுள்ள உரைகள் அனைத்தும் தொல்காப்பியம் பல மரபுகளில் பயிலப்பட்டு வந்தததன் காரணமாகவே எழுந்தன என்று கொள்ளலாம். இந்த உரைகள் தனியொரு ஆசிரியர் கருத்துகள் என்பதை விட இவ்வொவ்வொன்றும் ஒரு பாரம்பரியம் கொண்டவை என்று கொள்வது பொருத்தமுடையது. அந்தந்த மரபில் வந்தவர்கள் தாம் பயின்றதை ஏட்டில் எழுதி வைத்தனர். அப்படி எழுதும்போது உரையாசிரியரின் தனித்தன்மைகள் சிலவும் (நடை, நுட்பம், மேற்கோள்) சேர்ந்தன எனினும் அவர்கள் பொருள் கொண்ட விதம் அவர்களது சொந்த கருத்தாக இல்லாமல் ஒரு மரபைச் சார்ந்தது என்று கூறுவதே சரியானது.

# 6

# பாட்டியல் இலக்கண மரபுகள்

(பாட்டியல் நூல்களின் தோற்றுவாய் - மறைந்த பாட்டியல் நூல்கள் - இருநெறிகள் - பாட்டியலின் மூன்று பகுதிகள் - பொருத்தங்கள் - சிதம்பரநாதன் செட்டியார் கருத்து - இசை, நாடக நூல்கள் - ஆனந்தக்குற்றம் - சிற்ப நூல்கள் - பிரபந்தங்களின் தோற்றுவாய் - பொருத்தம் பற்றிய கருத்துகளின் நோக்கம் - பன்னிரு பாட்டியல்.)

பாட்டியல் நூல்களின் தோற்றமும் அதற்காக காரணமும் இன்னும் தெளிவு செய்யப்படவில்லை. இவை தோன்றிய காலமும் இதுவரை ஊகமாகக் கூறப்பட்டுள்ளதேயன்றி ஆதாரங்களுடன் தெளிவாக்கப்படவில்லை. இதற்கு முக்கியக் காரணம் தொடக்கக் காலத்திய பாட்டியல் நூல்கள் எவையும் இன்று கிடைக்காமையே எனலாம். இன்று கிடைக்கக் கூடிய பாட்டியல் நூல்களில் பழமையானது பன்னிருபாட்டியல். இதன் காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு. (அருணாசலம்:1972: 233) இதில் பல பாட்டியல் இலக்கண நூல்களில் இருந்து பல நூற்பாக்கள் எடுத்து ஆளப்பட்டுள்ளன. நவநீதப் பாட்டியல் உரை, யாப்பருங்கல விருத்தியுரை ஆகியவற்றிலிருந்து பாட்டியல் நூல்கள் சிலவற்றின் பெயர்களும் சில சூத்திரங்களும் தெரிய வருகின்றன. இதுவேயன்றி இந்த உரைகளால் அறியப்படும் நூல்களில் எதுவும் இன்று முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆகவே பாட்டியல் நூல்கள் தோன்றிய காலத்தையும் காரணத்தையும் வரையறுக்கக் கூடவில்லை. பாட்டியல் நூல்களின் தொடக்க காலமாக 8 - 9 ஆம் நூற்றாண்டை அருணாசலமும் (1972 : 213) அரங்கராசனும் (1983 : 77) கூறியுள்ளனர்.

**பன்னிருபாட்டியல் காட்டும் பாட்டியல் நூலாசிரியர்**

1. அகத்தியர், 2. அவிநயனார், 3. இந்திரகாளியார், 4. கபிலர், 5. கல்லாடர், 6. கோவூர்கிழார், 7. சீத்தலையார், 8. செயிற்றியனார், 9. சேந்தம் பூதனார், 10. நத்தத்தனார், 11. பரணர், 12. பல்காயனார், 13. பெருங்குன்றூர் கிழார், 14. பொய்கையார், 15. மாப்பூதனார்

**நவநீத பாட்டியல் உரையால் தெரிய வரும் பாட்டியல்கள்.**

செய்யுள் வகைமை, தொல்காப்பியர் பாட்டியல், மாமூலம், முள்ளியார் கவித்தொகை.

**யாப்பருங்கல விருத்தியால் தெரிய வரும் பாட்டியல்கள்.**

பாட்டியல் மரபு, பெரிய முப்பழம்.

இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட காலப்பகுதியில் தோன்றிய பாட்டியல் நூல்கள் , பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், வரையறுத்த பாட்டியல், நவநீதப் பாட்டியல் ஆகியனவாகும். இவை பாட்டியல் இலக்கணம் கூறும் தனி நூல்கள். இவற்றோடு திவாகரம், பிங்கலம் ஆகிய நிகண்டுகளில் உள்ள பாட்டியல் தொடர்பான செய்திகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. திவாகரத்தில் ஒலி பற்றிய பெயர்த் தொகுதியிலும் பிங்கல நிகண்டில் அநுபோகவகை என்ற இயலில் இயல்வகை என்ற உட்பிரிவிலும் பாட்டியல் தொடர்பான கருத்துகள் அமைந்துள்ளன. இவையும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். பாட்டியல் நூல்களில் இரண்டு மரபுகள் உள்ளன. எனினும் பின் வரும் கருத்து நோக்கத்தக்கது.

> வெண்பாப்பாட்டியலானது இந்திரகாளிய நெறியைப் பின்பற்றி இயற்றப்பட்ட தென்பது அதற்கமைந்த உரையால் அறியப்படும். நவநீதப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், பிரபந்த மரபியல் என்பன அகத்தியர் மரபைப் பின்பற்றியன. இவ்வகையில் பாட்டியல் நூல்கள் அனைத்தும் பகுக்கக் கூடுமேயாயின் அதுவொரு பயனுள்ள பகுப்பாக அமையும். ஆயின் அகத்தியர் மற்றும் இந்திரகாளியர் தம் நெறிகட்கிடையே மிகுதியான தெளிவான வேறுபாடுகள் எவையும் இப்

பொழுது அறியக் கூடவில்லை. எனவே இவ்விரு நெறிகளின் அடிப்படையில் பாட்டியல் நூல்கள் அனைத்தையும் பகுத்து வரலாறு எழுதுதல் என்பது கூடுவதாய்த் தோன்றவில்லை. (அரங்க ராசன்: 1983 :72)

தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம் முதலிய பக்தி இலக்கியங்களில் காணப்படும் பிரபந்தங்களே பாட்டியல் நூல்களின் தோற்றத்திற்குக் காரணம் என்று அரங்கராசன் குறிப்பிடுகிறார்.(1983 :56) இவர் பிரபந்தங்களின் அடிப்படையில் இதைக் கூறியுள்ளார். ஆனால் பாட்டியல் நூல்களில் பிரபந்தங்களின் இலக்கணம் மட்டுமல்லாமல் பொருத்தங்களைப் பற்றிக் கூறும் பகுதியும் உள்ளது என்பதை மனதில் கொண்டு பார்த்தால், பொருத்தங்களை இலக்கணத்தில் ஏற்கும் இசை, நாடக இலக்கண நூல்களின் தோற்றத்தை ஒட்டிப் பாட்டியல் நூல்களும் தோன்றியிருக்கலாம் என்று கூற இடம் உள்ளது. மேலும் சிற்ப நூல்களில் உள்ள பொருத்தம் பற்றிய பகுதிகளுக்கும் பாட்டியல்களில் உள்ள பொருத்தங்களுக்கும் மிகுதியாகத் தொடர்பு உள்ளது என்பதால் சிற்ப நூல்களின் தோற்றத்தை ஒட்டிப் பாட்டியல் நூல்கள் தோன்றியிருக்கலாம். மேலும் பாட்டியல் நூல்களில் வரும் பொருத்தங்களைக் கூறும் பகுதி தனியாகவும், பிரபந்தங்களின் இலக்கணம் கூறும் பகுதி தனியாகவும் வளர்ந்திருக்கலாம் என்று எண்ணவும் இடம் உண்டு. வரையறுத்த பாட்டியல், பொருத்தங்களை மட்டுமே கூறுகிறது. பிரபந்த மரபியல் பிரபந்தங்களின் இலக்கணம் மட்டுமே கூறுகிறது என்பதும் மேற்கூறிய கருத்துக்கு வலுச் சேர்க்கும் சான்றுகள்.

பாட்டியல்கள் குறித்த ஆராய்ச்சிக்குப் பாட்டியல் நூல்கள் தோன்றிய காலச் சூழ்நிலை, தோன்றுவதற்கான காரணங்கள், பொருத்தம் குறித்த கருத்துகள் பற்றிய ஆய்வு தேவை. எனினும் ‘இலக்கண மரபுகள்’ என்ற இந்த ஆய்வு இக்கேள்விகளுக்கான விடையைப் முன்னிலைப்படுத்துவது அல்ல.

பாட்டியல் நூல்கள் தோன்றி ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் இவற்றைப் பண்டைய தமிழ் அறிஞர் இலக்கணப் பிரிவுகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவில்லை. ஐந்திலக்கணம்

என்ற தொகுப்பில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திணை மட்டுமே சேர்த்துக் கொண்டனர். இந்த நிலை ஆராய வேண்டியதாகும். அகத்தியர், (பிற்காலத்திய அகத்திய ராயினும் கூட) அவிநயனார், இந்திரகாளியார் முதலிய பிரபல மான ஆசிரியர்களின் பெயர்களில் பாட்டியல் நூல்கள் இருந் தும் கூடப் பாட்டியலை, இலக்கணப் பிரிவுகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவில்லை.

## I

பொதுவாகப் பாட்டியல் நூல்கள் மூன்று பிரிவுகளாக அமைந்திருக்கும்.

1. பொருத்தங்களை விளக்கும் பகுதி
2. பிரபந்தங்களை விளக்கும் பகுதி
3. ஒழிபியல் பகுதி

இந்த மூன்று பகுதிகளில் வரும் செய்திகள் தமிழ் நூல்களில் எங் கெங்கு உள்ளன என்று காண்பதன் மூலம் பாட்டியல் நூல்களின் தோற்றத்தை எங்கிருந்து தொடங்க வேண்டும் என்று அறியலாம். மேலும் பாட்டியல் நூல் வகையின் வேர் எங்கிருந்து தொடங்கு கிறது என்பமை அறியவும் இது வழி செய்யும்.

பொருத்தங்களை விளக்கும் பகுதியில் மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் ஆகிய பத்துப் பொருத்தங்களும் சொல்லப்பட்டிருக்கும். இரண் டாம் பகுதியில் பிள்ளைத்தமிழ், ஆற்றுப்படை முதலிய பிரபந் தங்கள் விளக்கப்படும். பிரபந்தங்களின் எண்ணிக்கையில் நூல் கள் வேறுபடுகின்றன. ஒழிபியல் பகுதியில் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நால்வகைக் கவிகளின் இயல்பும் அரங்கேற்றம் முதலியனவும் கூறப்படும்.

பாட்டியல் நூல்கள் தோன்றுவதற்கான ஆதாரம் தொல் காப்பியத்தில் உள்ளதா என்று நோக்கும் போது அதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. பொருத்தங்கள் பற்றிய கருத்துகள் தொல்காப்பியத்தில் இல்லை. ஒழிபியலில் உள்ள

நால்வகைக் கவிகள், நால்வருணம் சார்ந்து பாடல் இயற்றுதல் முதலியனவும் தொல்காப்பியத்தில் இல்லை. பிரபந்தங்களை விளக்கும் பகுதியில் ஆற்றுப்படை முதலிய சில பிரபந்தங்களே தொல்காப்பியத்தில் இருந்து தோன்றியிருக்க வாய்ப்பு உள்ளது.

இது போன்ற கருத்துகள் வேறு எங்கேனும் தமிழ் நூல் களில் உள்ளனவா எனக் காணுதல் வேண்டும். முதலில் பின்வரும் சிதம்பரநாத செட்டியாரின் கருத்து கவனிக்கத்தக்கது.

> வடமொழிக் கருத்தாகிய இது (பொருத்தப் பகுதி)
> கி.பி.7 முதல் கி.பி.10 ஆம் நூற்றாண்டு வரையுள்ள
> காலத்தில் சமண பௌத்த மதங்களின் வாயிலா
> கத் தமிழ் இலக்கியத்தில் நுழைந்தது. (1977:137,138)

என்று இவர் எழுதியுள்ளார். இதில் இரண்டு கருத்துகள் அடங்கி யுள்ளன. 1. பொருத்தம் பற்றிய கருத்துகள் வடமொழிக்கு உரி யவை. (இக்கருத்து சிறப்பாக எழுத்துகளை ஆண், பெண், அலி என்று மூன்றாகப் பகுக்கும் நெறியைச் சுட்டுகின்றது) 2. தமி ழுக்குப் புறம்பான இந்தக்கருத்து வடமொழியிலிருந்து சமண, பௌத்த சமயங்களின் வாயிலாக இங்கு வந்திருக்க வேண்டும் என்று கூறிய இவர் அதற்கு எந்தக் காரணத்தையும் காட்ட வில்லை. இன்று கிடைக்கும் சான்றுகளின்படி பொருத்தம் பற்றிய கருத்துகள் இசை, நாடக, சிற்ப நூல்களிலிருந்து வந்திருக்க வேண் டும் என்பது உறுதிப்படுகிறது. இது பின்னர் விளக்கப்படும்.

## 2

வாய்ப்பியம் என்பது ஒரு இசை இலக்கண நூலாகும். இதி லிருந்து சில சூத்திரங்களை யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். இந்த மேற்கோள் நூற்பாக்களைத் தவிர முழுநூலாக இது கிடைக்கவில்லை. நான்கு பாவும் இன் னின்ன வருணத்திற்குரியது என இந்த நூலில் கூறப்பட்டுள்ளது.

> வெண்பா முதலா நால்வகைப் பாவும்
> எஞ்சா நாற்பால் வருணக்குரிய

பாவினத்து இயற்கையும் அதனோரற்றே
மன்னவன் என்பது ஆசிரியம்மே (யா.வி.: 219, 358)

என்ற நூற்பாக்கள் யாப்பருங்கல விருத்தியில் காட்டப்பட்டுள்ளன. இதிலிருந்து வெண்பா அந்தணர்க்கும், ஆசிரியம் மன்னவர்க்கும், கலிப்பா வணிகர்க்கும், வஞ்சிப்பா சூத்திரர்க்கும் உரியது என்பது புலனாகிறது. பாவினங்களும் அப்படியே அந்தந்த வருணத்திற்கு உரியதாகிறது. இப்படிப் பாக்களை வருணத்தோடு தொடர்புபடுத்தி உரைக்கும் தன்மை இசை இலக்கண நூல்களுக்கு உரியது என்பது இதன் மூலம் புலனாகிறது.

பாட்டியல் நூல்கள் அனைத்தும் (பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப் பாட்டியல்) இந்தக் கருத்தை அப்படியே ஏற்று, நான்கு பாக்களையும் வருணத்தோடு தொடர்பு படுத்தி உரைக்கின்றன. இந்தக் கருத்து வாய்ப்பியம் போன்ற நூல்களிலிருந்து பெறப்பட்டதாதல் வேண்டும். செயிற்றியம் என்ற நாடக இலக்கண நூல் அறம், பொருள், இன்பம் முதலிய நூலில் அமையும் உறுதிப் பொருள்களையும் கூட நால்வருணத் தோடு சார்த்திக் கூறியுள்ளது.

அறம்பொருள் இன்பம் அரசர் சாதி
அறம்பொருள் வணிகர் சாதியென் றறைப
அறமேற் சூத்திரர் அங்க மாகும் (சிலப்.: 82)

என்ற பகுதியில் இக்கருத்தைக் காணலாம். இப்படிப் பாக்களில் மட்டுமின்றிப் பொருளிலும் வருண்ங்களைச் சார்த்தி உரைக்கும் நெறி நாடக நூலில் காணப்படுகிறது.

இந்திரகாளியம் என்னும் இசை இலக்கண நூலும் இதே போன்ற கருத்தைக் கூறியுள்ளது. பாட்டியல் நூல்களில் காணப் படும் பொருத்தங்களில் ஒன்றான தானப் பொருத்தம் பற்றி இந்திரகாளிய நூற்பா கூறியுள்ளது.

மூப்பும் மரணமும் மொழிந்த காலை
நிலையிற் குலைதல் செல்வம் நீங்கல்
கொலையிற் பிணியிற் கூட்டுதல் ஆகும் (நவநீத.161)

என்ற சூத்திரத்தில் மூப்பு, மரணம் ஆகிய தானங்கள் செய்யும் தீமையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்திரகாளியத்தில் கணப் பொருத்தம் பற்றிக் கூறும்,

எண்வகைக் குறியியலுமச் சீர்களுள்
வருணற் குரிய நாளே சதையம்
இயமானற் குரிய நாளே பரணி
சந்திரன் தேவிநாள் கேட்டை யாகும்
எஞ்சிய சீரி ரண்டி னுள்ளும்
வஞ்சமில் மாருத நாளே சோதி
எரிநாள் கார்த்திகை யந்தர மதனுக்
குரிய நாளே ஓண மாகும்
சூரியன் நாளே புணர்பூ சம்மே. (நவநீத. 120)

என்ற நூற்பா காணப்படுகிறது. இதில் எட்டு கணங்களுக்கும் உரிய நாள்கள் கூறப்பட்டுள்ளன. இத்தகைய பொருத்தம் பற்றிய செய்திகள் நாடக இலக்கண நூலான இந்திரகாளியத்தில் காணப் படுவது சிந்திக்கத்தக்கது. பாட்டியல்களில் காணப்படும் இத் தகைய பொருத்தச் செய்திகளே அன்றி இது போன்றே பிற இடங் களிலும் வருணம் சார்த்தி உரைக்கும் நெறி இந்திரகாளியம் நூலில் உள்ளது என்பதைப் பின்வரும் ஓலையின் இலக்கணம் பற்றிய அதன் சூத்திரத்தால் அறியலாம்.

ஓலைய திலக்கணம் உரைக்கும் காலை
நாலாறு விரற்றானம் நான்மறை யோர்க்குப்
பார்த்திபர் தமக்குப் பதிற்றி ரட்டிவிரலே
வணிகர்க் கெண்ணிரு விரலே
சூத்திரர்க் கீராறு விரலே
இப்பரி சேபாட் டெழுதவும் படுமே (நவநீத.83)

இந்த நூற்பாவின்படி அந்தணர்க்கு 24 விரல் நீளமும், அரசர்க்கு 20 விரல் நீளமும், வணிகர்க்கு 16 விரல் நீளமும், சூத்திரர்க்கு 12 விரல் நீளமும் உள்ள ஓலையைப் பயன்படுத்திப் பாட்டெழுத வேண்டும். இப்படிச் செய்யுள் எழுதப் பயன்படும் ஓலையிலும் வருணம் பற்றிய சிந்தனைகளைப் புகுத்தி நூல் எழுதுதல் நாடக இலக்கண நூலில் உள்ள நெறி எனலாம். ஆகவே இத்தகைய

பொருத்தம் பற்றிய கருத்துகள் இசை, நாடக இலக்கண நூல்களிலிருந்து பாட்டியல் நூல்களில் நுழைந்திருக்க வேண்டும் என்பது விளங்குகிறது. இவை வடமொழிச் சார்புடைய கருத்துகளே ஆயினும், இசை, நாடக இலக்கண நூல்களின் வழியே தமிழ் இலக்கியத்திற்குள் வந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இசை, நாடக இலக்கண நூல்கள், அடியார்க்கு நல்லார் உரையில் பெயரளவில் அறியப்படும் அளவே பெரும்பான்மையும் உள்ளன. தவிர இளம்பூரணர் உரை, யாப்பருங்கல விருத்தியுரை முதலிய உரைகளில் காணப்படும் சில மேற்கோள் நூற்பாக்களே ஒரு சில நூல்களுக்கு அகப்படுகின்றன. ஆகையால் அவற்றில் பொருத்தம் பற்றிய செய்திகள் சொல்லப்படும் இடம், காரணம் முதலியவற்றை அறிய வழி இல்லை. மேலும் அவற்றில் எத்தனைப் பொருத்தங்கள் காணப்படுகின்றன என்பதையும் அறியமுடியவில்லை. ஆனால் கிடைக்கும் ஒரு சில நூற்பாக்களைக் கொண்டு இசை, நாடக இலக்கண நூல்களில் பொருத்தம் தொடர்பான கருத்துகள் இருந்தன என்று உறுதியாகக் கூறலாம்.

## 3

இயற்றமிழ் நூல்களில் இத்தகைய கருத்துகள் எங்கேனும் உள்ளனவா என்று நோக்கும் போது, யாப்பருங்கல விருத்தியில் இது தொடர்பான சில கருத்துகள் காணப்படுகின்றன. இந்நூலில் எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தம் என ஆறு குற்றங்கள் கூறப்பட்டுள்ளன. (யா.வி. :557) இவற்றோடு ஆனந்தப்பையுள் (563) இசையானந்தம் (564) ஆகியனவும் கூறப்பட்டுள்ளன. இவற்றில் இசையானந்தம் என்பது அவலமுற்றோர் இசையான பஞ்சமம், குறிஞ்சி, பியந்தை, பாலையாழ், காந்தார பஞ்சமம், பியந்தையாழ் முதலியவற்றைத் தலைவனைப் புகழும் பாடாண்திணையில் பாடுவது ஆகும்.(யா.வி.564) தூக்கானந்தம் என்பது தலைவன் பெயரை ஒட்டி உயர்த்திப் பாடுவதும் இறுகப் பாடுவதும் பெயரைச் சிதைத்துப் பாடுவதும் பெயர் புரியாதபடி பாடுவ

தும் ஆகும்(யா.வி.562). இவை இரண்டும் இசை பற்றியன. யாப்பானந்தம் முன்பின் அமையும் தொடர்களை நோக்கியது. பொருளானந்தம் பலவகைப்படும். (அவற்றில் ஒன்று மங்கலம் அழியப் பாடுவது) இவற்றை விளக்கும் யாப்பருங்கல விருத்திப் பகுதியில் அகத்தியர் ஆனந்த ஒத்து என்ற நூலில் இருந்து பல சூத்திரங்கள் மேற்கொள் காட்டப்பட்டுள்ளன. மற்ற எழுத்தானந்தம், சொல்லானந்தம், தொடையானந்தம், பொருளானந்தத்தில் மங்கலம் பற்றிய பகுதி முதலியவை இங்குச் சுட்டத்தகுவன.

> எழுத்தானந்தமாவது படைப்படுவோன் பெயரைச் சார்த்தி அளபெழப் பாடுவது...
>
> ஆழி யிழைப்பப் பகல்போம்: இரவரின்
> தோழி துணையாத் துயர்தீரும்;- வாழி
> நறுமாலை தாராய் திரையவோஒ வென்னும்
> செறுமாலை சென்றடையும் போது
>
> இதனுள் திரையவோஒ என்புழி இயற்பெயர் சார்த்தி எழுத்தளபெழுந்தமையின் எழுத்தானந்தம்(யா. வி: 558)

இயற்பெயர் மருங்கில் மங்கலம் அல்லாத வினையைப் பெய்து செய்யுள் இயற்றுவது சொல்லானந்தம் ஆகும்.

> என்னிற் பொலிந்த திவன்முகம் என்றெண்ணித்
> தன்னிற் குறைபடுப்பான் தன்மதியம் -மின்னி
> விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல் விசயன்
> எரிந்திலங்கு வேலின் எழும் (மேற்படி 565)

என்னும் செய்யுளில் விசயன் என்ற இயற்பெயரைச் சார்ந்து எரிந்து என்று வினை (விசயன் எரிந்து என) நின்றமையால் இது சொல்லானந்தம்.

> கனங்கொள் தோகையின் கதுப்பிகுத் தசைஇ
> விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத்
> திலங்குவளை விறலியர் நின்புறம் சுற்ற (மலைபடுகடாம் 44 -46)

இப்பகுதியில் மயில் தோகையை விரித்திருப்பது போல வழி நடந்த வருத்தத்தால் பெண்கள் கூந்தலை முடியாமல் விரித் திருப்பர் என்று கூறப்பட்டுள்ளது. பெண்கள் கூந்தலை விரித் திருப்பது அமங்கலமான செயலாதலால் இது மங்கலம் அழிந்த தைப் பாட்டில் வைத்த பொருளானந்தமாகும். தொடையானந்த மாவது அளபெடைத்தொடை அமைந்த பாட்டில் பாட்டுடைத் தலைவன் பெயரைச் சார்த்தி அளபெழப் பாடுவதாகும். அள பெடைக்குப் பின் அடை சேர்ந்தோ, சேராமலோ பாட்டுடைத் தலைவன் பெயர் அமையப்பாடுவதாகும்.

இந்தக் கருத்துகளே பாட்டியல் நூல்களில் காணப்படுகின் றன. இவை அப்படியே பாட்டியல் நூல்களில் உள்ளன என்று கூறிவிடுவதற்கில்லை. இவற்றை ஒத்த கருத்துகளே உள்ளன என்று கூறலாம். யாப்பருங்கல விருத்தியில் இந்த ஆனந்தப் பகுதிகளை விளக்க மேற்கோள் காட்டப்பட்ட அதே நூற்பாக்களை நவநீதப் பாட்டியல் உரையாசிரியர் காட்டி 'அகத்தியனார் அனந்த வோத்து' என்று நூல் பெயரும் கூறுகிறார். இதுவும் பன்னிரு பாட்டியலில் காட்டப்படும் அகத்தியர் பாட்டியலும் ஒன்றா என்பது தெரியவில்லை.

தீயினன்ன ஒண்செங் காந்தள் (மலைபடுகடாம் -145)

என்ற அடிக்கு உரையெழுதும்போது 'இதற்கு, நன்னன் என்னும் பெயர் தீயொடு அடுத்த தன்மையின் ஆனந்தமாய் பாடினாரும், பாட்டுண்டாரும் இறந்தாரென்று ஆளவந்த பிள்ளை யாசிரியர் குற்றம் கூறினார்' என்று நச்சினார்க்கினியர் (பத்துப் பாட்டு: 621) எழுதியுள்ளார். ஆளவந்த பிள்ளையாசிரியர் எழுதிய நூல் எது என்றும் தெரியவில்லை.

இந்த இரண்டு ஆசிரியர்களும் செய்யுளுக்கு இருக்கக் கூடாத குற்றங்களைக் கூறியுள்ளனர். இவை பின்னர் வளர்ச்சி எய்தி பாட்டியல் நூல்களில் காணப்படும் பொருத்தம் தொடர்பான செய்திகளாக மாறி இருக்கக் கூடும். இவற்றை அறிய இந்தச் சில சூத்திரங்களேனும் கிடைக்கும் பாட்டியல் நூல்களைத் தொகுத்து ஆராய வேண்டும். இந்தத் தேடல் பன்னிரு பாட்டியலின் முதல் நூல்களைத் தேடும் ஆராய்ச்சிக்கு இட்டுச் செல்லும்.

## 3 அ

சிற்ப நூல்களில் பொருத்தம் பற்றிய செய்திகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சிற்பம் செய்யப் பயன்படும் கல், மரம் முதலியவற்றின் தேர்வு, கோயில், யாகசாலை நிறுவப்படும் இடம், சிலை, கோயில் ஆகியவற்றிற்கும், அவற்றைச் செய்விப்போனுக்கும் இருக்க வேண்டிய பொருத்தங்கள் ஆகிய இடங்களில் சிற்ப நூல்களில் பொருத்தம் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. பொதுவாக சிற்பத் தொழிலில் சகுணம் பார்த்தல், நம்பிக்கை அடிப்படையிலான சடங்குகள் ஆகியன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஆகவே எல்லா இடங்களிலும் பொருத்தம் பற்றிப் பாட்டியல் நூல்களில் காணப்படும் செய்திகள் சிற்ப நூல்களில் பரவலாகக் காணப்படுகின்றன. சிற்பம் செய்வதற்கு ஏற்ற கற்களைத் தெரிவு செய்யும் போது அந்தக் கற்களைப் பின்வருமாறு வகைப்பாடு செய்கின்றனர்.

> சிலையானது (கல்) வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு என்று நான்கு வகைகளாகும்... வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு இந்நிறங்கள் முறையே பிராமணாதி ஜாதிகளுக்கு உரியவைகளாகக் கூறப்பட்டுள்ளன. அந்தந்த ஜாதிகளுக்குரிய சிலைகள் அந்தந்த ஜாதிக்கு ஸ்ரேஷ்டமாகும். ஹீந ஜாதிச் சிலைகள் நிஷித்தமன்று. ஆனால் ஹீந ஜாதியினருக்கு உத்தம ஜாதிச் சிலைகள் கூடாதவைகளாம். (சுப்பிரமண்ய சாஸ்திரி: 1960: 83, 84)

பாட்டியல் நூல்களில் பாக்களை நான்கு வருணமாகப் பிரிப்பது போலவே இந்தப் பிரிவு காணப்படுகிறது. பாட்டியல் நூல்களில் பாக்களை இப்படி நான்கு வருணமாகப் பிரிப்பதற்கு எந்த அடிப்படையோ, காரணமோ சொல்லப்படவில்லை. இந்த மேற்கோளில் கற்கள் நான்கு வருணமாகப் பிரிக்கப்படுவதற்குக் காரணம் (வண்ணம்) சொல்லப்பட்டுள்ளது. சிற்பம் செய்யப் பயன்படும் மரங்களைத் தேர்ந்தெடுக்கும் போது இதுபோன்றதொரு பாகுபாடு காணப்படுகிறது.

> அழுத்தமும் பசையும் (களிப்பும்) உள்ள பூமியிலுண்டானது. வளைவில்லாமல் நேராக இருப்பது, அழுத்தமாக இருப்பது, கனமாக இருப்பது, ஸ்வல்பமான வாஸனையுடனிருப்பது, பழம் புஷ்பம் இவைகள் அழுத்தமாகவும் கனமாகவும் இருப்பது, குளுமையும் உஷ்ணமும் கலந்திருப்பது, மனதிற்குக் கவர்ச்சிகரமாக இருப்பது, இத் தகைய குணங்களையுடைய விருக்ஷமானது, புருஷ விருக்ஷம் எனப்படும். இத்தகைய புருஷ விருக்ஷமானது, புருஷ தேவதைகளின் சூலதாரு நிர்மாணத்திற்கு உகந்ததாகுமென்று கூறப்படுகின்றது. ஸாரமுள்ள (களிப்பு) பூமி, ஸாரற்ற பூமி இவைகளிலுண்டானது அதிக மிருதுவாக இல்லாதது, அடி முதல் நுனி வரையில் முறையே சிறுத்திருப்பது, புஷ்பம், பழம் இலைகள் மிகவும் மிருதுவாக இருப்பது, அதிகப் பசையுள்ளது. அதிக ருசி (சுவை)யுள்ளது இத்தகைய குணங்களுடையது ஸ்திரீ விருக்ஷ மாகும். இது ஸ்திரீ தேவதைகளின் சூலதாருவுக்கு உகந்ததாகும். அடி சிறுத்தது, பழம், புஷ்பம் இதழ்கள் மிகவும் துர்பலமாக இருப்பது, நபும்ஸக விருக்ஷமாகும். *(சுப்ரமண்ய சாஸ்திரி, 1960: 384,85)*

இப்பகுதியில் ஆண்மரம், பெண்மரம், அலிமரம் என மரங்கள் அவற்றின் கணம், இலை, பூ, பழம், சாறு ஆகியவற்றின் அடிப் படையில் பிரிக்கப்படுகின்றன. இப்பகுதியிலும் மரங்களை இப் படி ஆண், பெண், அலி என்று பிரிக்கப்படுவதுற்குக் காரணம் கூறப்பட்டுள்ளது. பாட்டியல் நூல்களிலும் எழுத்துகள் ஆண், பெண், அலி என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால் பாட்டியல் நூல்களில் எந்தக் காரணமும் சொல்லப்பட வில்லை. சிற்பம் செய்யப் பயன்படும் கற்கள் அகவை அடிப்படை யில் பின்வருமாறு பிரிக்கப்படுகின்றன.

> சிலையானது, ஒலி, உருவம் இவைகளின் பேதங் களால், பாலை, யுவதி, விருத்தை என்றும் புருஷ சிலை, ஸ்திரீ சிலை, நபும்ஸக சிலை என்றும் பாகுபாடு செய்யப்பட்டிருக்கும். கெல்லும்

> பொழுது, சத்தமும் குட்டையான உருவமும் உடைய சிலையானது பால சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கின்றது. மணியின் ஓசையைப் போன்ற ஓசையும் நீண்ட வடிவமும் உடையது ஸ்திரீ (யுவதி) சிலை. எரசலான சத்தமுடையது விருத்தசிலை என்று கூறப்பட்டிருக்கின்றது. (சுப்ர மண்ய சாஸ்திரி: 1960:88)

ஒலி அடிப்படையிற் கற்கள் இனங்காணப்பட்டாலும் அவற்றை அகவை அடிப்படையில் பாலை(சிறுமி), யுவதி (இளம் பெண்), விருத்தை(மூதாட்டி) என்று பிரிக்கின்றனர். பாட்டியல் நூல்களில் வரும் தானம் என்ற பொருத்தமும் இதே அடிப்படை யில் அமைக்கப்பட்டிருப்பது நோக்கத்தக்கது.

> குற்றெழுத்தைந்தோடும் தமக்கொத்த நெடிலைச் சேர்த்தும் இ, உக்கள் நின்ற தானத்து முறையே ஐகார, ஔகாரங்களைச் சேர்த்தால் உயிரும் மெய்யும் என்று சொல்லப்பட்ட தொகை எல் லாம் ஐந்து கூறாயடங்கும். இவற்றைப் பட்டு டைத் தலைமகன் இயற்பெயரின் முதல் எழுத் தின் கூற்றைத் தொடங்கிப் பாலன், குமரன், இரா சன், மூப்பு, மரணம் என வருவித்தால் அவற்றுள் மூப்பும் மரணமும் ஆகா. அல்லன முதற்சீரின் முதல் எழுத்தாய் வருதல் நன்று. (வெண்.10)

இப்பகுதியில் எழுத்துகளை அகவை அடிப்படையில் ஐந்தாகப் பிரிப்பதற்குக் காரணம் ஏதும் காட்டப்படவில்லை.

> (லிங்கத்தின்) உயர அங்குலத்தை 8 ஆல் பெருக்கி 27 ஆல் வகுத்து மீதம் வரும் எண்ணானது அசு வதி முதலிய நக்ஷத்திரங்களாகும்... அர சன், யஜ மானன் இவர்களது ஜன்ம நக்ஷத்திரம் முதல் லிங் கத்தின் நக்ஷத்திரம் வரையில் எண்ண வேண்டும். அவ்விதம் தேவலாய நக்ஷத்திரம் வரையில் எண்ண வேண்டும். இவ்விதம் எண்ணி வரும் நக்ஷத்திர மானது அப்பலனைக் கொடுக்கக் கூடிய சுப

> நக்ஷத்திரமாக இருக்க வேண்டும். ஐந்மத்திரயம் (1.10.19 வது நக்ஷத்திரங்கள்) ஐந்ம நக்ஷத்திரத் திற்கு 2 வது நக்ஷத்திரம். 4 வது நக்ஷத் திரம், 8-வது நக்ஷத்திரம், 6வது நக்ஷத்திரம் 9 வது நக்ஷத்திரம், இவைகள் சுப பலனைக் கொடுக்கக் கூடிவைகள் என்று கூறப்பட்டிருக்கின்றன. மற்ற (3 -5- 7வது) நக்ஷத்திரங்கள் அசுப பலனைக் கொடுக்க கூடி யவைகளாம். (சுப்ரமண்ய சாஸ்திரி, 19960: 99 -101)

என்ற பகுதியில் நாள்களைக் கணக்கிடும் முறையும்; ஏற்கும், ஏற்காத நாள்கள் இவை என்றும் கூறப்பட்டுள்ளன. இவை செய்விப்போனுக்கும் செய்யும் சிற்பத்தின் அளவுக்கும் இருக்க வேண்டிய பொருத்தங்களாகும். பாட்டியல் நூல்களிலும் நாள் பொருத்தம் கூறப்பட்டுள்ளது. மொழிக்கு முதலாக அமையும் எழுத்துகளை 27 நட்சத்திரங்களாகப் பிரித்து பாட்டுடைத் தலைவன் நட்சத்திரத்திற்கு ஏற்ற எழுத்தை முன் வைத்துத் தொடங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பாட்டியல் நூல் களில் நட்சத்திரங்களுக்கு எழுத்துகளைப் பிரித்து அமைத் துள்ள முறையில் எந்த அடிப்படையும் இல்லை.

இதுவரை வருணம், பால், தானம், நாள் ஆகிய நான்கு பொருத்தங்கள் சிற்ப நூல்களில் அமைந்துள்ள முறை காட்டப் பட்டது. இவற்றில்,

1. பாட்டியல், சிற்பநூல் ஆகிய இரண்டிலும் உள்ள பொருத்தப்பகுதிகள் நெருங்கிய ஒற்றுமையுடை யன;
2. பாட்டியல் நூல்களில் இவற்றிற்கு தகுந்த கார ணம் கூறப்படவில்லை; சிற்ப நூல்களில் வண் ணம், உருவம், அளவு முதலிய அடிப்படைகளில் காரணங்கள் தரப்பட்டுள்ளன;

ஆகிய கருத்துகள் தெளிவாகின்றன. இவற்றை நோக்கும் போது பாட்டியல் நூல்களில் உள்ளதைவிட சிற்ப நூல்களில் பொருத்தப் பகுதிகள் சிறப்பாகவும் பொருத்தமாகவும் இருப்பதை அறிய லாம். இதனால் இலக்கிய உலகில் காணப்படும் பொருத்தம்

தொடர்பான சிந்தனைகள் சிற்ப நூல்களில் இருந்து வந்திருப்பதற்கான வாய்ப்புகள் மிகுதி என்று கூற இயலும். இங்கு சிவத்தம்பி அவர்கள்,

> ஒரு சமூகத்தின் சமூக நடவடிக்கைகளில் ஒன்று என்ற வகையில் இலக்கியமானது அச்சமூகத்தில் மற்றக் கலைகளின் பயில்வு பயன்பாடு என்பனவற்றுடன் இணைத்தே ஆராயப்பட வேண்டும்...தமிழ்க் கவிதையின் அழகியலைத் தெளிவுபடுத்த முனையும் பொழுது தமிழ்நாட்டின் சிற்ப, படிமக்கலை வளர்ச்சிகள் பற்றிக் குறிப்பிடாது அப்பணியினை நிறைவுறச் செய்தல் முடியாது. உண்மையில் ஒரு குழுமத்தின் அல்லது காலத்தின் அடிப்படையான அழகியல் கலைக்குக் கலை தொடர்பற்றதாக, வேறுபட்டதாக இருக்க முடியாது ஒவ்வொரு கலை வடிவத்தினதும் தனித்துவத்துக்கு ஏற்ற வகையில் வெளிப்படுவதாய், ஆனால் அடிப்படையில் ஒரு நீர்மையதாகவே அழகியலுணர்வு அமையும். (1988:178)

என்ற கூற்று எண்ணிப் பார்த்தலுக்கு உரியது. அழகியல் பற்றி அவர் கூறியுள்ள இந்தக் கருத்து மற்றவற்றுக்கும் (உருவம், நம்பிக்கைகள் முதலியன) பொருந்தும்.

இங்கு மற்றொன்றையும் குறிப்பிடுதல் தகும். பாட்டியல் நூல்களில் காணப்படும் பொருத்தங்கள் பாட்டுடைத் தலைவனுக்கும் பிரபந்தங்களுக்கும் - குறிப்பாக முதல் சீருக்கும் - இருக்க வேண்டிய பொருத்தங்களையே பெரிதும் குறிப்பிடுகின்றன. பாட்டுடைத் தலைவனை முன்வைத்துப் பாடப்பெறும் பிரபந்தங்கள் (சங்க இலக்கியம் தவிர்த்து) கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் தோன்றுகின்றன. பாண்டிக்கோவை, நந்திக் கலம்பகம் முதலியவற்றை இவ்வாறு கூறலாம். இன்று முழுமையாகக் கிடைக்காத முத்தொள்ளாயிரம் முதலியவற்றையும் இவ்வகையினதாகக் கொள்ளலாம். இந்த நூல்கள் பரிசில் பெறுவதற்காக பாட்டுடைத் தலைவனைப் புகழ்பவை என்பது தெளிவு. ஆகவே இங்கு பாட்டுடைத் தலைவன் முக்கிய இடம் பெறுகிறான். பாட்

டுடைத் தலைவனுக்குத் துன்பம் நேராதவாறும் நல்லனவே நடக்கு மாறும் மங்கலம் முதலிய பொருத்தங்கள் அமையப் பாட வேண் டும் என்ற எண்ணம் தோன்றியிருக்கும். சிற்ப நூல்களிலும் செய் விப்போன் (அரசன், யஜமான்) முக்கிய இடம் பெறுகின்றான். அவனால் செய்யப்படும் சிலை முதலியவற்றைக் கணக்கிட அவன் நடுவிரல் நடுக்கணுவின் நீளம் அல்லது அகலமே அடிப்படை அலகாகக் கணக்கிடப்படும். இதைச் சிற்பநூலார் 'மாத்திராங் குலம்' என்பர். (சுப்ரமண்ய சாஸ்திரி, 1960: 27) இதுவும் சிற்ப நூல்களுக்கும் பாட்டியல் நூல்களுக்கும் உள்ள தொடர்புகளை விளங்கிக் கொள்ளத் துணை செய்யும்.

## 4

பாட்டியல் நூல்களில் காணப்படும் பிரபந்தங்களுக்கும் பண்டைய தமிழ் இலக்கியங்களுக்கும் உள்ள தொடர்புகள் குறித்துக் காணும்போது, இவற்றின் தொடக்கத்தைத் தொல்காப் பியத்திலிருந்தே கண்டெடுக்கலாம். பொதுவாகப் பிரபந்தங் களை அவை தோன்றிய வித்தை அடிப்படையாகக் கொண்டு நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை
2. ஒரு பெருநூலின் ஒரு பகுதியாக இருந்து தனித்து வளர்வனவும், காலப்போக்கில் கிளைத்தெழுவனவும்
3. நாட்டார் பாடல் வடிவங்களிலிருந்து தோன்றியவை
4. வடமொழி வாயிலாகத் தமிழில் உண்டானவை.

பொதுவாக எல்லா பிரபந்தங்களையும் இந்த வகைப்பாட் டிற்குள் கொண்டு வந்து விடலாம். எனினும் பிரபந்தங்களை வகைப்படுத்துவதில் அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடு கள் நிலவுகின்றன.

தொல்காப்பியம் காட்டும் இலக்கிய வகைகள், பாட்டு, உரை, நூல், பிசி, வாய்மொழி, அங்கதம், முதுசொல் முதலியன வாகும். இவற்றுடன் பண்ணத்தி முதலியவற்றையும் சேர்த்துக்

கூறுவதுண்டு. தொல்காப்பியர் இவற்றை அடிவரையறை உள்ளவை, அடிவரையறை இல்லாதவை எனப்பிரித்து விளக்குகிறார். பிரபந்தங்கள் வளர்ந்தபோது பாட்டியல் ஆசிரியர்கள் தொல்காப்பியத்தில் ஒரு துறையாகவோ அல்லது நிகழ்வாகவோ காட்டப்பட்டுப் பின்னர் தனிப்பிரபந்தமாக வளர்ந்துவிட்டவற்றைப் பிரபந்தங்களின் பட்டியலில் சேர்த்துக் கொண்டனர். பிள்ளைத் தமிழ், உலா முதலிய பலவற்றை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய இலக்கிய வகைகள் என நாற்பத்திரண்டினைக் குறிப்பிடுகிறார் வையாபுரிப்பிள்ளை. (1943:119,120) சங்க இலக்கியம், பதினென்கீழ்க்கணக்கு நூல்கள், பக்தி இலக்கியங்கள் ஆகியவற்றில் பல பிரபந்தங்கள் வழங்கி வந்தன. இவற்றிலிருந்தும் பல பிரபந்தங்கள் தோன்றின.

## 5

பாட்டியல் நூல்களின் மூன்றாவது இறுதிப் பகுதியாக அமைபவை பொதுவியல் செய்திகள். நான்கு பாவிற்கும் உரிய வருணம், நிறம், திணை, இராசி, தேவதை நால்வகைக் கவிஞர்களின் இயல்பு, அவை இலக்கணம், அரங்கேற்றம், நால் வருணத்தார் இயல்பு, பாயிரத்தின் இலக்கணம், நூலின் இயல்பு, உவமை மரபு, ஓலை இலக்கணம் முதலியன இதில் அமையும். இவற்றில் நான்கு பாவிற்கும் உரிய வருணம் முதலியன வாய்ப்பியம் முதலான நூல்களில் சொல்லப்பட்டமை முன்பே காட்டப்பட்டது. நால்வகைக் கவிஞர்களின் இயல்பும், அவையின் இலக்கணமும், யாப்பருங்கலவிருத்தி முதலியவற்றிலும் சொல்லப்பட்டுள்ளன. நால்வருணத்தார் இயல்பு, பாயிரத்தின் இலக்கணம், நூலின் இயல்பு ஆகியவை தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன.

இவை மூன்று பகுதியும் இணைந்து பாட்டியல் நூலாக உருவாகக் காரணமாக அமைந்த காலச் சூழலையும் இங்குக் கருத்தில் கொள்ள வேண்டும். பிரபந்தங்களைப் பாடுவோரை இரு வகையாகப் பிரிக்கலாம். 1. பரிசில் வேண்டிப் பாடுவோர். 2. அவைக்களப் புலவர்களாக விளங்கி, அரசனைப் போற்றிப்

பிரபந்தங்கள் பாடுவோர். ஒரு பிரபந்தத்தை இயற்றி அதை அந்த அரசனது அவையில் அரங்கேற்றிச் சிறப்பும் பரிசும் பெறும் புலவர்களுக்குப் பாட்டியல் நூல்கள் மிகவும் துணையாக இருக் கின்றன. இதற்கு வரையறுத்த பாட்டியலின் நூற்பயன் கூறும் செய்யுள் நல்ல உதாரணமாகும்.

> விளங்கிய மங்கலமே முதலாக விரித்த பத்தும்
>
> துளக்கு அற நாடும் பொருத்தமன்றே இல்லை, சொல்லறியா
>
> உளக் கவிவாணர் எனைப்போல நாள் தொறும் உண் பொருட்டால்
>
> வளக் கவி பாடிப் பிழைப்பது இந்நூலின் வரும் பயனே (3)

என்று உண்ணும் பொருட்டால் பாடிப் பிழைக்கும் கவிஞர் களுக்கு இந்தப் பாட்டியல் நூல் பயன்தரும் என்று எழுதியுள் ளார். இதை இன்னொரு வகையிலும் விளக்கலாம். சங்க காலத் திலிருந்தே இப்படிப் பாடிப் பிழைப்போர் இருந்தனரெனினும் அவர்கள் அந்த நேரத்திற்குத் தோன்றியதைப் பாடிப் பரிசில் பெற்றனர்; அவற்றை அரங்கேற்றம் செய்ததாக சான்றுகள் இல்லை. பாட்டியல் நூல்கள் தோன்றிய காலத்தில் அரங்கேற்றம் செய்ததற்கான சான்றுகள் பல உள்ளன. யாப்பருங்கல விருத்தி யில் நல்ல அவை, தீய அவை, குறை அவை, நிறை அவை (யா.வி. :552) என்று அவைகளை வகைப்படுத்தி விரிவாக விளக்கப்பட் டுள்ளது. இது மட்டுமின்றி நூல் இயற்றி அரங்கேற்றம் செய்த கவிஞனுக்குப் பாட்டுடைத் தலைவன் செய்ய வேண்டிய மரி யாதைகளையும் அளிக்க வேண்டிய பரிசில் பற்றியும் விரிவாகப் பிங்க ,ருல நிகண்டில் பேசப்பட்டுள்ளது.

> பாடும் கவிதை நாடுறக் கொள்ளின்
> தோரணம் நாட்டித் துகில்கொடி எடுத்து,
> வார்முரசு இயம்ப மறையோர் வாழ்த்த,
> விழுத்தகு கோலத்து வரித்த பூங்கலிங்கத்துப்
> பழிப்பில் பாலிகைப் பல்லுணா முளையின்
> விளக்கு நிறை குடத்த விதானப் பந்தரில்,
> துளக்கம் இல் பல்வகைத் தூண் நிரைப் பொதியில்
> பல்கிளை நெருக்கில் பாவையர் பல்லாண்டின்
> மல்கு வனப்பு அமைந்த வளமனை நாப்பன்

வெண்துகில் உடுத்து, வெண்பூச் சூடித்
தன்தவிசு இருத்தி, தான் அயல் இருந்து
மங்கலச் செய்யுள் மகிழ்ந்து கேட்டுப்
பொன்னும் ஆடையும் பூணும் கடகமும்
இன்னவை பிறவும் கொடுத்து, ஏழு அடி நிலம்
புலவன் பின் சென்று ஒழிக என நிற்றல்
பூ அலர் நறுந்தார்ப் புரவலன் கடனே. (பிங்கலம்: 1370)

இப்படிப் புலவனுக்கு அரசன் வரிசைகள் நடத்த வேண்டும். பரிசில் அளிக்காத புரவலனைத் தண்டிக்கப் புலவன்,

பரிசில் ஈயாப் பாவி தன் பனுவலைத்
தெரி தர எழுதி, செம்பூச் சூடித்
தன் மனைப் புறத்திலும் சாமுண்டி முன்றிலும்
பன்னகம் வாழும் பழம்பதி தன்னினும்
மயானத்து இடத்தினு மறுகு தன்னினும்
தியானித்து இருந்து, செந்தீக் கொளுத்த,
ஈர் அறு திங்களின் இறுதியாம் என்பது,
ஆதிப் புலவன் அறைந்த மொழியே (பிங்கலம்: 1372)

என்று கூறிய வண்ணம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் பரிசு கொடுக்காதவன் ஒரு ஆண்டிற்குள் இறந்துவிடுவான் என்று பிங்கல நிகண்டு கூறுகிறது. இதிலிருந்து அரங்கேற்றமும் பிரிசில் அளித்தலும் பாட்டியல் நூல்களில் இடம் பெற்றமைக் கான காரணங்களை ஊகிக்கலாம். அவைக்களப் புலவர்களாக விளங்கி அரசனைப் புகழ்ந்து பிரபந்தங்கள் பாடுவோருக்கும் பாட்டியல் நூல்கள் துணை செய்திருக்கும்.

பாட்டியல் நூல்களாக இங்கு எடுத்துக்கொண்ட காலத்தில் தோன்றியவற்றில் பன்னிரு பாட்டியல், வெண்பாப்பாட்டியல் நவநீதப் பாட்டியல் ஆகிய மூன்றும் பாட்டியலுக்குச் சொன்ன பொருத்தம், பிரபந்தங்கள் கூறும் பகுதி ஆகியவற்றைக் கொண்டுள்ளன. வரையறுத்த பாட்டியல் பொருத்தப் பகுதி ஒன்று மட்டுமே கொண்டுள்ளது. நவநீதப் பாட்டியலும் வெண்பாப் பாட்டியலும் ஒழிபியல் பகுதியைக் கொண்டுள்ளன. பன்னிரு பாட்டியலில் ஒழிபியல் பகுதி இல்லை.

## 6

பன்னிருபாட்டியல் நூலின் பெயர்க்காரணமும் இந்நூல் அமைந்துள்ள விதமும் குறித்துப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இவற்றை ஆராய்தல் இங்குப் பொருத்தமாக இருக்கும். ஏனெனில் இங்கு ஆராயப்படும் கருத்துகள் பன்னிரு பாட்டியலின் மரபு குறித்த ஆய்வுக்குத் துணை செய்யும். மேலும் இன்று முழுவதும் கிடைப்பனவற்றில் முதலாவதான இப்பாட்டியலின் அமைப்பும் இதன் மரபை விளங்கிக் கொள்ளத் துணை செய்யும்.

முதலாவது இந்நூலுக்குப் பன்னிரு பாட்டியல் என்று பெயர் தோன்றிய விதம் குறித்தது. இதைக் குறித்துப் பலர் கருத்துகளைக் கூறியுள்ளனர். இந்நூலின் எழுத்தியலில் எழுத்துகளின் பிறப்பும் எட்டு வகைப் பொருத்தங்களும் (வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னம், புள், நாள்) சொல்லியலில் மூன்று பொருத்தங்களும் (சீர், மங்கலம், பெயர்) ஆகப் பன்னிரண்டு பொருள்கள் கூறப்பட்டிருப்பதால் பன்னிருபாட்டியல் என்று பெயர் வந்தது என்று கோவிந்தராச முதலியார் கூறியுள்ளர்.(1978:3)

> எழுத்தியலில், எண்வகைப் பொருத்தங்கள், சொல்லியலில் மூவகைப் பொருத்தங்கள், இனவியலில் கூறப்படும் செய்திகள் எனப் பன்னிரு வகையாக வகுத்து இப்பன்னிரு பொருள்களைக் கூறியமையால் பன்னிரு பாட்டியல் எனப் பெயர் எய்திற்று என்றும் கூறலாம். (செயராமன், ந.வீ: 1977: 58)

என்றும் இதன் பெயர்க்காரணம் கூறப்பட்டுள்ளது. அகத்தியர் மாணக்கர் பன்னிருவர் கூடிப் பன்னிருபடலம் இயற்றியது போல பன்னிரு புலவர்களால் இயற்றப்பட்டது இந்நூல் என்ற கருத்தும் உள்ளது. வெவ்வேறு புலவர்களால் இயற்றப்பட்ட பன்னிரண்டு பாட்டியல்களிலிருந்தும் தொகுக்கப்பட்ட நூலே பன்னிருபாட்டியல் என்று கி. இராமாநுஜையங்கார் கூறுகிறார் (இராகவையங்கார். இரா. 1904:1) அரங்காராசனும் இக்கருத்தையே ஏற்றுக் கொள்கிறார் (1983:124)

இக்கருத்துகளை நோக்கும்போது பல கேள்விகள் எழுகின்றன. இவற்றின் வன்மை, மென்மையை அறிய இக்கருத்துகள் ஒவ்வொன்றையும் எடுத்து ஆராய்தல் அவசியம். முதலாவது கருத்தில் (கா.ர. கோவிந்தராச முதலியார்) எழுத்தியலில் கூறப்பட்டுள்ள எட்டுவகைப் பொருத்தங்களோடு சொல்லதிகாரத்தில் கூறப்பட்டுள்ள மூன்று பொருத்தங்களும் சேர்ந்து பதினொரு பொருத்தங்கள் ஆகிறது. இவற்றுடன் எழுத்துகளின் பிறப்பையும் ஒரு பொருளாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவது - அது எழுத்தியலில் கூறப்பட்டிருப்பினும் கூட - பொருத்தமாக இல்லை. மேலும் வெண்பாப்பாட்டியலிலும் நவநீதப்பாட்டியலிலும் எழுத்துக்களின் பிறப்பு வருணப் பொருத்த்திலே சொல்லப்பட்டுள்ளது. எழுத்துகளின் பிறப்புப் பற்றிய செய்தி வருணப் பொருத்தத்துடன் தொடர்புடையது.

> உயிர் பன்னிரண்டும் க, ங, ச, ஞ, ட, ண என்ற ஆறெழுத்தும் ஆகப் பதினெட்டெழுத்தும் பிராமணருக்கு உரியன. இவர்க்குத் தேவதை அயனும், அரியும், அரனும் ஆறுமுகக் கடவுளும் காக்கவென்று பாடுக. த, ந, ப, ம, ய, ர என்னும் ஆறெழுத்தும் க்ஷத்திரியருக்கு உரியன. இவர் களுக்குப் பிரபந்தம் பாடுமிடத்து முதற்சீர்கண் இந்த எழுத்தை வைக்க. இவர்களுக்கு தேவதை இந்திரன், சூரியன் சந்திரரும் காக்க வென்று பாடுக.
> (நவநீத.:12,13)

என்று நவநீதப் பாட்டியலில் எழுத்துகளின் வருணத்தோடு அதைப் படைத்த தேவதைகளையும் சேர்த்துச் சொல்லுதலைக் காணலாம். எனவே எழுத்துகளின் பிறப்பு என்பது தனித்ததொரு பொருளாகாமை காணலாம்.

இரண்டாவதாக (ந.வீ. செயராமன்) உள்ள கருத்து பதினொரு பொருத்தங்களும் இனவியலில் கூறப்படும் செய்திகளும் என பன்னிரண்டு செய்திகள் உள்ளதால் பன்னிரு பாட்டியல் என்று பெயர் பெற்றது என்பதாகும். பொருத்தங்களைக் கூறும் பகுதிக்கும், பிரபந்தங்களின் இலக்கணம் கூறும் பகுதிக்கும் இத்தகைய தொடர்பு உள்ளதென்று கூறமுடியாது.

பன்னிரண்டு புலவர்கள் கூடி எழுதிய நூல் பன்னிரு பாட்டியல் என்ற கருத்தும் பொருந்துவதில்லை. அப்படி பன்னிருவர் கூடி எழுதியிருப்பின் திட்டமான வரையறை செய்து கொண்டு இந்தப் பகுதியை இவர் பாடுவது என்று பாடியிருக்க வேண்டும். மாறாக ஒரே கருத்துள்ள பல நூற்பாக்கள் காணப்படுவதால் பன்னிரு புலவர் கூடி எழுதிய நூல் என்ற கூற முடியாது. அகத்தியர் பெயரில் இரண்டு நூற்பாக்கள் மட்டுமே காணப்படுவது இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இறுதியாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டு பாட்டியல் நூல்களில் இருந்து தொகுக்கப்பட்டது என்ற கருத்தும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனெனில் இந்நூலில், 1. பொய்கையார், 2. பரணர், 3. இந்திரகாளியார், 4. அவிநயனார், 5. அகத்தியர், 6. கல்லாடனார், 7. கபிலர், 8. சேந்தம்பூதனார், 9. கோவூர்கிழார், 10. மாபூதனார், 11. சீத்தலையார், 12. பல்காயனார், 13. பெருங்குன்றூர் கிழார், ஆகிய பதின்மூன்று ஆசிரியர்கள் இயற்றிய பாட்டியல் நூல்களில் இருந்து சூத்திரங்கள் எடுக்கப்பட்டுள்ளன. பதின்மூன்று ஆசிரியர்கள் இயற்றிய பாட்டியல் நூல்களிலிருந்து எடுத்ததை பன்னிரு பாட்டியல் என்பது பொருந்தாது. இதற்கு,

> ‘பன்னிருபாட்டியல்’ பன்னிரண்டு பாட்டியல் நூல்களின் தொகுப்பாயின் பன்னிருவர்க்கும் மேற்பட்ட புலவர்களின் பெயரால் நூற்பாக்கள் காணப்படுவதற்குக் கரணியமென்னை என்னும் வினா எழுதலியல்பே. நூல் ஆக்கப்பட்ட காலத்தில் பன்னிரண்டு பாட்டியல் நூல்களினின்றே நூற்பாக்கள் எடுத்துத் தொகுக்கப்பட்டிருக்கும் என்றும், பின்னர் பிற்காலத் தெழுந்த பாட்டியனூல்களினின்றும் சில நூற்பாக்கள் இடைச் செருகலாக இணைந்திருக்கக் கூடும் என்றும் எண்ணுவதானேரும் இழுக்கேதுமில்லை. என்னை? இடைச் செருகல் தமிழர்க்கு கைவந்த கலையாகலான் என்க. (ச. அரங்கராசன் 1983: 117)

என்று கூறுவது பொருத்தமாக இல்லை. மேலும் கல்லாடனார் பெயரால் காணப்படும் சூத்திரங்கள் (இவை குறட்பா யாப்பில்

உள்ளன) பிற்காலத்தவை என்றும் இவர் கூறுகிறார். ஆனால் இதற்கு ஆதாரம் இல்லை. பல ஆசிரியர்களின் சூத்திரங்கள் சேர்ந்து ஒரு நூல் உருவானது என்று கூறும்படியாகவே பன்னிரு பாட்டியல் அமைந்துள்ளது.

இதையொட்டி மற்றொரு கருத்து இந்நூலின் ஆசிரியர் பற்றியதாகும். ஆசிரியர் யார் அவரது பெயர், ஊர், சமயம், காலம் முதலியன அல்ல இங்கு கருதுவது, இவர் இந்த நூலை இயற்றிய வரா அல்லது தொகுத்தவர் மட்டும்தானா? என்ற கேள்வியே இங்கு பிரதானமாகிறது. பன்னிரண்டு (அல்லது பதின்மூன்று) பாட்டியல் நூல்களில் இருந்து சூத்திரங்களை எடுத்துத் தொகுத் தவரே இந்த ஆசிரியர் என்ற கருத்தை இராமானுஜையங்காரும் (இராகவையங்கார்,இரா.: 1904: 1) அரங்கராசனும் (1983: 124) கூறியுள்ளனர்.

இதற்கு மாறாக ஒரு ஆசிரியர் இயற்றியதே இந்நூல் என்றும் அவர் தமக்கு முன்பிருந்த பதின்மூன்று பாட்டியல் நூல்களில் இருந்தும் மேற்கோள் காட்டியுள்ளார் என்றும் கோவிந்தராச முதலியார் கூறியுள்ளார்(1978:11) நலங்கிள்ளியும் இக்கருத்தை ஒப்புக் கொள்கிறார் (1986:16) ஆனால் ஆசிரியர் பல நூல்களி லிருந்து எடுத்த சூத்திரங்களைச் சேர்த்து உருவாக்கிய நூலில், தமது சூத்திரங்கள் சிலவற்றையும் சேர்த்து இந்நூலை உருவாக்கி இருக்கிறார் என்ற கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

நூலமைப்பைப் பார்க்கும் போது இது எழுத்தியல், சொல் லியல், இனவியல் என்று மூன்று இயலாகப் பிரிக்கப்பட்டுள் ளது. இந்நூலில் எழுத்தியலில் 52 சூத்திரங்களும் சொல்லியலில் 32 சூத்திரங்களும் இனவியலில் 148 சூத்திரங்களுமாக 231 சூத் திரங்கள் உள்ளன. மேற்கோளாகக் காட்டப்படுபவை 137 சூத் திரங்களாகும்.

எழுத்தியலில், பிறப்பு, வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள், நாள் என்ற பொருத்தங்கள் சொல்லப்பட்டுள்ளன. இதில் உள்ள பிறப்பு, வருணம் என்ற பொருத்தப் பகுதிக்குள் அடங்கிவிடும். ஆதலால் இப்பகுதியில் எட்டுப்பொருத்தங்கள் சொல்லப்பட்டுள்ளன. சொல்லியலில், சீர்க்கணம், மங்கலச்

சொல் பெயர்ப் பொருத்தம் என மூன்று பொருத்தங்கள் சொல்லப்பட்டுள்ளன. இனவியலின் தொடக்கத்தில் பாப்பொருத்தம் சொல்லப்பட்டுள்ளது. ஆக 12 பொருத்தங்கள் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன. இதைத் தவிரப் பிற பாட்டியல் நூல்கள் எதுவும் 12 பொருத்தங்களைச் சொல்லவில்லை. மற்ற பாட்டியல் நூல்களில் கன்னல், புள் பொருத்தங்கள் சொல்லப்படவில்லை.

கன்னல், புள் பொருத்தங்களை விளக்கும் பகுதியில் இந்திர காளியார், கபிலர், பரணர் ஆகிய மூவர் இயற்றிய பாட்டியல்களிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. பொருத்தங்களைப் பேசும் பகுதியும் பிற பாட்டியல் நூல்களில் ஒரே இயலாக உள்ளது. பன்னிரு பாட்டியலில் மட்டுமே மூன்று இயல்களிலும் பொருத்தம் தொடர்பான கருத்துகள் உள்ளன. இது மட்டுமன்றி பிற பாட்டியல் நூல்கள் இயல்களைப் பகுத்துள்ள முறையும் வேறுபடுகின்றது. இது பின்னர் விளக்கப்படும். மற்ற பாட்டியல் நூல்களில் பொதுவியலில் கூறப்படும் நால்வகைக் கவிகள், அவை இலக்கணம், ஓலை இலக்கணம், நால் வருணத்தார் இயல்பு முதலியன பன்னிரு பாட்டியலில் இடம் பெறவில்லை. வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல் ஆகியவற்றில் பொதுவியலில் கூறப்பட்டுள்ள பாப்பொருத்தம் பற்றிய செய்திகள் இதன் இனவியலில் கூறப்பட்டுள்ளன. இயல் அமைப்பு, பொருத்தங்கள் பற்றிய கருத்துகள், ஒழிபியல் ஆகிய அடிப் படைகளில் பன்னிரு பாட்டியல் பிற பாட்டியல்களின் மரபிலிருந்து தனித்து நிற்பதாகத் தெரிகிறது.

## வெண்பாப்பாட்டியல்

இதை இயற்றியவர் குணவீர பண்டிதர். இவரது ஆசிரியரான வச்சணந்தியின் பெயரால் வச்சணந்தி மாலை என்றும் இந்நூல் வழங்கும். வெண்பா யாப்பில் இந்த நூல் சூத்திரங்கள் இயற்றப்பட்டுள்ளதால் இதற்கு வெண்பாப் பாட்டியல் என்ற பெயர் வழங்குகிறது. இந்த நூலில் முதன் மொழியியல், செய்யுளியல், பொதுவியல் என மூன்று இயல்கள் உள்ளன. பாட்டியல் இலக்கண வகையில் வேறு பல நூல்கள் இருந்தாலும் வெண்பாப் பாட்டியலே அதிகமும் ஆட்சியில் உள்ளது. இந்த நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. வெண்பாப் பாட்டியலின் காலம்

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு. வெண்பாப் பாட்டியலின் ஒழிபியலில் நால்வகைப் பாக்களுக்கும் சாதி முதலியன கூறப் பட்டுள்ளன. அரங்கேற்றம், பரிசில் அளித்தல் முதலியன கூறப் பட்டுள்ளது. நால்வகைக் கவிகளின் இயல்பு செய்யுளியல் விளக் கப்பட்டிருக்கிறது.

## வரையறுத்த பாட்டியல்

வரையறுத்த பாட்டியலும் பன்னிருபாட்டியல் போலவே தனித்து நிற்கிறது. வரையறுத்த பாட்டியல் காரிகையாப்பில் அமைந்தது. இப்போது பத்துக் காரிகைகள் மட்டுமே உள்ளன. உள்ள பகுதி ஒரு பெருநூலின் சிறு பகுதியே என்று அருணா சலம் கூறியுள்ளார். *(1969:100)* முதல் பாடல் தற்சிறப்புப்பாயிர மாகவும் இரண்டாம் பாடல் அவையடக்கமாகவும் மூன்றாம் பாடல் நூற்பயன் கூறுதவாகவும் உள்ளன. ஏனைய ஏழு பாடல் களே நூலாகும். இந்த நூல், பாட்டியலில் பொருத்தப் பகுதியை மட்டும் சுட்டுகிறது. அதிலும் மங்கலப் பொருத்தம் என்ற ஒன்று மட்டுமே விளக்கப்படுகிறது. 'விளங்கிய மங்கலமே முதலாக விரித்தபத்தும்'*(3)* என்று கூறிவிட்டு, மங்கலப் பொருத்தம் மட் டுமே கூறியுள்ளதால் முன்காட்டிய அருணாசலம் அவர்களின் கூற்று சரியே எனலாம்.

மங்கலச் சொற்களைத் தொகுத்துக் கூறும் பிற பாட்டியல் நூல்கள் இன்ன பெயருக்கு இன்ன மங்கலச் சொல் பொருத்த மானது என்று கூறவில்லை. வரையறுத்த பாட்டியல் மட்டும் இப்படிக் கூறியுள்ளது. இந்த எழுத்தில் தொடங்கும் பெயருக்கு இந்த மங்கலச் சொல்லை முதலில் பெய்ய வேண்டும் என்று கூறாமல் அதற்கு மாறாக இந்த மங்கலச் சொல்லிற்கு இந்தப் பெயர் பொருந்தும் என்று வரையறுத்த பாட்டியல் கூறியுள்ளது.

## நவநீதப் பாட்டியல்

நவநீதப் பாட்டியலை இயற்றிய ஆசிரியர் நவநீதநடர். இவர் நாட்டியம் பயிற்றுவிக்கும் குலத்தைச் சார்ந்தவர். கட்டளைக் கலித்துறை யாப்பில் இந்த நூலின் சூத்திரங்கள் இயற்றப்பட் டுள்ளன. இதில் பொருத்தவியல், செய்யுள் மொழியியல், பொது மொழியியல் என்ற மூன்று இயல்களே உள்ளன. நவநீதப் பாட்டி

யல் 108 சூத்திரங்கள் உள்ளன. இந்த நூலுக்கு இரண்டு பழைய உரைகள் கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து தமிழில் இருந்த பல பாட்டியல் நூல்கள் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது. உரையாசிரியர்களின் பெயரை அறிய இயலவில்லை. நவநீதப் பாட்டியலின் காலம் கி.பி.14 ஆம் நூற்றாண்டு ஆகும்.

நவநீதப் பாட்டியல், அகத்தியர் பாட்டியலின் வழிநூல் என்று சிறப்புப் பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது. நவநீதப் பாட்டியலின் ஒழிபியலில் ஓலையின் இலக்கணம். அவையின் இலக்கணம், பரிசில் கொடுத்தல் முதலியன பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன.

பொருத்தம் பற்றிய செய்திகளில் பன்னிருபாட்டியல் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல் ஆகியவற்றிலிருந்து எவ்வாறு மாறுபட்டுள்ளது என்பது முன்பு காட்டப்பட்டுள்ளது. நூல் அமைப்பு பிரபந்தங்களின் வகைகள், ஒழிபியல் செய்திகள் ஆகியவற்றில் இந்த மூன்று பாட்டியல் இலக்கண நூல்களும் எவ்வாறு வெவ்வேறு மரபைக் காட்டுகின்றன என்றும் நோக்குதல் வேண்டும்.

நூலின் அமைப்பு முக்கியமாகக் கருதப்பட வேண்டிய ஒன்றா? என்ற கேள்விக்கு விடையளித்தல் நன்று. நூலின் பிரிவுகள் அதில் சொல்லப்படும் செய்திகள் ஆகியவற்றில் எதற்கு முதன்மை அளிக்கிறார் என்பதும், எடுத்துக் கொண்ட பொருளை எந்த நோக்கில் பகுக்கிறார் என்றும் அறிய நூலின் அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

### இயல் பிரிவுகள்

| பன்னிருபாட்டியல் | வெண்பாப்பாட்டியல் | நவநீதப்பாட்டியல் |
|---|---|---|
| எழுத்தியல் | முதன்மொழியியல் | பொருத்தவியல் |
| சொல்லியல் | செய்யுளியல் | செய்யுள் மொழியியல் |
| இனவியல் | பொதுவியல் | பொதுமொழியியல் |

என்று இயல்பிரிவுகள் அமைந்துள்ளன. பொருத்தம் பற்றிய செய்திகள் பன்னிரு பாட்டியலில் உள்ள எழுத்தியல், சொல்லியல் ஆகிய இரண்டு இயல்களிலும் கூறப்பட்டுள்ளன. இவற்றில் பதினொரு பொருத்தங்களும் எழுத்துகளின் பிறப்பும் உணர்த்

தப்பட்டுள்ளன. வெண்பாப் பாட்டியலில் முதன் மொழியியல் என்ற பகுதியிலும் நவநீதப் பாட்டியலில் பொருத்தவியல் என்ற பகுதியிலும் பொருத்தம் பற்றிய செய்திகள் உணர்த்தப்பட்டுள்ளன. வரையறுத்த பாட்டியலில் உட்பிரிவுகள் ஏதுமில்லை. பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப் பாட்டியல் ஆகிய மூன்று பாட்டியல் நூல்களிலும் பிங்கல நிகண்டிலும் கூறப்பட்டுள்ள பொருத்தங்களைப் பின்வரும் அட்டவணை காட்டும்.

| எண் | பன்னிரு பாட்டியல் | வெண்பாப் பாட்டியல் | வரையறுத்த பாட்டியல் | நவநீதப் பாட்டியல் | பிங்கலம் |
|---|---|---|---|---|---|
| 1. | பிறப்பு | மங்கலம் | மங்கலம் | மங்கலம் | கணம் |
| 2. | வருணம் | சொல் | | சொல் | எழுத்து |
| 3. | கதி | எழுத்து | | எழுத்து | தானம் |
| 4. | உண்டி | தானம் | | தானம் | நாள் |
| 5. | பால் | பால் | | பால் | உண்டி |
| 6. | தானம் | உண்டி | | உண்டி | புள் |
| 7. | கன்னல் | வருணம் | | வருணம் | கன்னல் |
| 8. | புள் | நாள் | | நாள் | பால் |
| 9. | நாள் | கதி | | கதி | மங்கலம் |
| 10. | சீர் | கணம் | | கணம் | பா |
| 11. | மங்கலப் பொருத்தம் | | | | |
| 12. | பெயர்ப் பொருத்தம் | | | | |

பெயர்ப்பொருத்தத்தை பன்னிரு பாட்டியல் தவிர பிற நூல்கள் சொல்லவில்லை. பன்னிருபாட்டியலில் சொல்லப்பட்டுள்ள பிறப்பு மற்ற நூல்களில் வருணத்தோடு சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது. கன்னல், புள் ஆகிய இண்டு பொருத்தங்களைப் பன்னிரு பாட்டியலும் பிங்கல நிகண்டுமே கூறுகின்றன. பிங்கல நிகண்டில் கூறப்படும் பால்பொருத்தம், வெண்பாப்பாட்டியலில், பொதுவியலிலும் நவநீதப் பாட்டியலில் பொது மொழியியலிலும், பன்னிரு பாட்டியலில் இனவியலிலும் அமைந்துள்ளது. நான்கு பாக்களுக்கும், சாதி, இடம், நிறம், இராசி, நாள், தேவதை ஆகியவற்றை வெண்பாப் பாட்டியலும், கடவுள், நாள், இராசி, வாசனைப் பொருள், பூ, வண்ணம், நிலம் ஆகியவற்றைப் பன்னிரு பாட்டியலும் கூறுகின்றன.

பொருத்தங்களில் முக்கியமான தொன்றான மங்கலப் பொருத்தத்திற்கு எல்லா நூல்களும் முதலிடம் அளித்துள்ளன.

இன்று முழுவதும் அகப்படும் பாட்டியல் நூல்களேயன்றி அகத்தியர் ஆனந்தவோத்து முதலிய நூல்களும் மங்கலத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. வரையறுத்த பாட்டியல் மங்கலப் பொருத்தம் ஒன்றையே வேறுவிதத்தில் விளக்குகிறது. பன்னிரு பாட்டியல் மங்கலப் பொருத்தத்தை இறுதியில் வைத்துள்ளது. வெண்பாப் பாட்டியலும், நவநீதப் பாட்டியலும் மங்கலப் பொருத்தத்தை முதலில் வைத்துள்ளன. மங்கலச் சொற்களைக் கூறுவதிலும் பாட்டியல் நூல்கள் தமக்குள் வேறுபடுகின்றன. நான்கு பாட்டியல் நூல்களிலும் பிங்கல நிகண்டிலும் மங்கலச் சொற்கள் கூறப்பட்டுள்ள விதம் பின்வருமாறு.

| | பன்னிரு பாட்டியல் | வெண்பாப் பாட்டியல் | வரையறுத்த பாட்டியல் | நவநீதப் பாட்டியல் | திவாகரம் | பிங்கலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பொன் | சீர் | சீர் | திரு | சங்கு | திரு |
| 2. | பூ | எழுத்து | எழுத்து | மணி | சக்கரம் | களிறு |
| 3. | திரு | பொன் | பொன் | பூ | மதியம் | தேர் |
| 4. | மணி | பூ | பூ | திங்கள் | அரிமா | தேர் |
| 5. | புனல் | திரு | திரு | ஆரணம் | இடபம் | கடல் |
| 6. | ஆரணம் | மணி | திங்கள் | சொல் | வேழம் | பொலிவு |
| 7. | கடல் | நீர் | மணி | சீர் | ஆசனம் | மணி |
| 8. | (செங்)கதிர் | திங்கள் | நீர் | எழுத்து | நிறைகுடம் | பூ |
| 9. | 23.ரு கிரி | சொல் | சொல் | பொன் | தோட்டி | புகழ் |
| 10. | தேர் | கார் | கங்கை | தேர் | விளக்கு | சீர் |
| 11. | பரி | பரிதி | வாரணம் | புனல் | முடி | |
| 12. | எழுத்து | யானை | குஞ்சரம் | கார் | கடல் | |
| 13. | நிலம் | கடல் | உலகு | புயல் | சூலம் | |
| 14. | கங்கை | உலகம் | பார் | நிலம் | கொடி | |
| 15. | மலை | தேர் | தேர் | கங்கை | தாமரை | |
| 16. | புகழ் | மலை | | மலை | இரேகை | |
| 17. | அமுதம் | மா | | உலகம் | | |
| 18. | கார் | கங்கை | | பரி | | |
| 19. | புயல் | நிலம் | | கடல் | | |
| 20. | உலகம் | | | ஆனை | | |
| 21. | கயிறு | | | பருதி | | |
| 22. | அருந்ததி | | | அமுதம் | | |
| 23. | பார் | | | புகழ் | | |
| 24. | மதி | | | | | |
| 25. | நாள் | | | | | |
| 26. | சீர் | | | | | |
| 27. | ஞெண்டு | | | | | |

இவற்றில் பன்னிரு பாட்டியல் அதிக அளவாக இருபத்தேழு சொற்களையும் பிங்கல நிகண்டு பத்து சொற்களையும் கூறியுள்ளன. வெண்பாப் பாட்டியல் உரையில் பரியாய நாமம் வரினும் என்று எழுதப்பட்டுள்ளது. (இராமலிங்கத் தம்பிரான், கொ.: 1976: 8) பரியாய நாமம் என்பது ஒரு பெயரின் பொருளைக் குறிக்கும் மறு பெயர். வரையறுத்த பாட்டியல் உரையில் 'கங்கை என்னும் மங்கலச் சொல்லுக்குப் பரியாயமாகக் கடல், கார் என்னும் மங்கலச் சொற்களைக் கொண்டு' (மேற்படி:80) என்று எழுதப்பட்டுள்ளது. இவற்றில் திவாகர நிகண்டில் உள்ள மங்கலச் சொல்லை விடவும் மங்கலமான பொருளே சிறப்பிடம் பெறுவதற்கு உரியது என்பது புலனாகும்.

திவாகரத்தில் இவை மங்கலச் சொற்கள் என்று குறிப்பிடப் படவில்லை. இவற்றை 'திருப்பொறிவகை' என்றே திவாகரம் கூறுகிறது. இரண்டு காரணங்கள் பற்றி இவை இங்கு கொடுக்கப் பட்டுள்ளன. முதலில் இந்த பட்டியலில் உள்ள சங்கு, சக்கரம், வேழம், மதியம், கடல், இரேகை, கொடி, தாமரை முதலியன மங்கலச் சொற்களாக பிற பாட்டியல்களிலும் கூறப்பட்டுள்ளன. திவாகரத்தில் உள்ள இந்த நூற்பா சில வேறுபாடுகளுடன் நவநீதப் பாட்டியல் உரையில் காட்டப்பட்டுள்ளது. அதன் கீழ் 'இவையும் முதன் மங்கலச் சொல்லுக்கு வைக்கப்படும்' என்று உரையாசிரியர் எழுதியுள்ளார் (5).

மங்கலமான பொருள்தான் முக்கியமே தவிர சொல் முக்கியமில்லை. ஆகவே பரியாயப் பெயரும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பிரபந்தங்களின் இலக்கணம் கூறும் பகுதி பாட்டியல் நூல்களின் மையப்பகுதியாகும். பாட்டியல் நூல்கள் பிரபந்தங்களைக் கூறும் வரிசை முறையும் இலக்கணம் கூறும் விதமும் அவற்றின் மரபைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. பாட்டியல் நூல்களில் காணப்படும் பிரபந்தங்களின் வகையும் இலக்கணமும் தமிழ் இலக்கிய வரலாற்றில் இந்தக் குறிப்பிட்ட இலக்கிய வடிவம் தோன்றிய காலம், தோற்றத்திற்கான சூழல், முதலிய பின்னணியில் ஆராய வேண்டியதாகும்.

பாட்டியல் நூல்கள் கூறும் பிரபந்தங்களின் எண்ணிக்கையில் ஆய்வாளர்கள் தமக்குள் மாறுபடுகின்றனர். பிரபந்தங்கள்

96 என்பது பிற்கால வழக்கு. ஆனால் இன்று இவற்றின் தொகை முந்நூற்றுக்கும் மேல் சென்று விட்டது. இந்த எண்ணிக்கை யிலும் கூட ஆய்வாளர்கள் தமக்குள் மாறுபடுகின்றனர்.

பன்னிருபாட்டியல் 62 பிரபந்தங்களையும் வெண்பாப் பாட்டியல் 53 பிரபந்தங்களையும், நவநீதப் பாட்டியல் 56 பிர பந்தங்களையும் கூறுகின்றன. இலக்கிய வகைகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை மூன்று. காப்பியம் பெருங்காப்பியம், புரா ணம் ஆகியன. இந்த மூன்றுக்கும் இலக்கணம் பன்னிரு பாட்டி யலில் கூறப்படவில்லை. தமிழில் பெருங்காப்பியங்கள் என்று கூறப்படுவனவற்றுள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண் டேனும் பன்னிருபாட்டியலுக்கு முன் தோன்றியவை. ஆயினும் பன்னிருபாட்டியலில் காப்பிய இலக்கணமோ, பெருங்காப்பிய இலக்கணமோ சொல்லப்படவில்லை.

வெண்பாப் பாட்டியல் மட்டுமே புராணத்தையும் ஒரு பிர பந்தமாகக் கூறுகிறது. நவநீதப் பாட்டியல், பெருங்காப்பியம், காப்பியம், தொகை நிலைச் செய்யுள் என கூறுகிறது. மூன்று பாட்டியல் நூல்களுமே பிரபந்தங்களின் பெயர், வரிசை இவற் றில் தம்முள் மாறுபட்டுள்ளன. (பின்னிணைப்பு 2)

ஒழிபியல் செய்திகளைப் பார்க்கும் போது நால்வகைக் கவிகளின் இயல்பு வெண்பாப் பாட்டியலில் செய்யுளியலிலும், நவநீதப் பாட்டியலின் பொது மொழியியலிலும் சொல்லப்பட் டுள்ளன. அவை இலக்கணம், நால்வருணத்தார் இயல்பு முதலியன இரண்டிலும் ஒழிபியல் பகுதியிலேயே சொல்லப்பட்டுள்ளன.

பாட்டியல் நூல்களில் உள்ள இலக்கணக் கூறுகள் பற்றிய சிந்தனைகளைத் தொல்காப்பியத்தில் அதிகம் காண இயல வில்லை. மூன்று கூறுகளாக உள்ள பாட்டியல் இலக்கணத்தில் பிரபந்தங்களைப் பற்றிக் கூறும் பகுதியில் மட்டும் தொல்காப் பியத்துடன் ஓரளவு பாட்டியல் இலக்கணம் ஒத்துள்ளது. பொருத் தங்கள் பற்றிய சிந்தனைகள் தொல்காப்பியத்தில் இல்லை. இத் தகைய சிந்தனைகள் இசை, நாடக நூல்களிலிருந்தும் சிற்ப நூல்களில் இருந்தும் பாட்டியல் நூல்கள் பெற்றிருக்க வேண்டும். ஒழிபியலில் கூறப்படும். நான்கு பாக்களுக்கும் உரிய வருணம் முதலியனவும் நால்வகைக் கவிஞர்கள் பற்றியும் தொல்காப்பியத் தில் குறிப்புக் காணப்படவில்லை.

## துணைநூற் பட்டியல்

அகத்தியலிங்கம் எஸ்., பாலசுப்பிரமணியன், க.(பதி.) 1974. இலக்கண ஆய்வுக்கட்டுரைகள், அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அரங்கராசன், ச. 1983. இலக்கண வரலாறு - பாட்டியல் நூல்கள், மருதூர்: பாலமுருகன் பதிப்பகம்.

அரவிந்தன், மு.வை. 1968. உரையாசிரியர்கள், சிதம்பரம்: மணிவாசகர் நூலகம்.

அருணாசலம்பிள்ளை, மு.(பதி.) 1972. அகத்திணை யியல் உரைவளம் (தொல்காப்பியம்), மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

அருணாசலம், மு. 1969. தமிழிலக்கிய வரலாறு (பதி னான்காம் நூற்றாண்டு), திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம்.

........1970. தமிழ் இலக்கிய வரலாறு (பதின்மூன்றாம் நூற் றாண்டு), திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம்.

......... 1975. தமிழிலக்கிய வரலாறு (பத்தாம் நூற்றாண்டு), திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம்.

....... 1975. தமிழிலக்கிய வரலாறு (ஒன்பதாம் நூற்றாண்டு), திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம்.

........ (பதி.) 1976. பிபந்த மரபியல், சென்னை: அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம்.

....... 1981. இளம்பூரணர், அண்ணாமலை நகர்: அண்ணா மலைப் பல்கலைக்கழகம்.

அழகப்பன், ஆறு. (பதி.) 1985. இலக்கணக் கருவூலம் - 1, அண்ணாமலைநகர் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

........... (பதி.) 1987. இலக்கணக் கருவூலம் - 2, அண்ணா மலை நகர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

.......... (பதி.) 1992. இலக்கணக் கருவூலம் - 3, அண்ணா மலை நகர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ஆறுமுக நாவலர். (பதி.) 1969. நன்னூல் (மூலம்), சென்னை : வித்யானுபாலன யாந்திர சாலை.

இராகவையங்கார், இரா. 1904. பன்னிரு பாட்டியல், மதுரை : மதுரைத் தமிழ்ச் சங்கம்.

இராசாராம், சு. 1992. வீரசோழிய இலக்கணக் கோட் பாடு, நாகர் கோயில்: இராகவேந்திரா.

இராமலிங்கத் தம்பிரான், கொ. (பதி.) 1976. வெண்பாப் பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும், சென்னை: சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகம்.

...........(பதி.) 1992. தண்டியலங்காரம், சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

இளங்குமரன், இரா. (பதி.) 1973. யாப்பருங்கல விருத்தி, சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

.......(பதி.), 1973-1. களவியற் காரிகை, சென்னை: சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகம்.

..........(பதி.), 1974. காக்கை பாடினியம் (உரையுடன்), சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

......... 1988. இலக்கண வரலாறு சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

இறையனார் களவியல், 1976. சென்னை: சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம்.

கந்தசாமி, சோ. ந. 1989. தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சி யும் (முதல்பாகம் - முதல் பகுதி), தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

குலாம் காதிறு நாவலர், 1900. பொருத்த விளக்கம். காரைக்கால்: மதானி யந்திர சாலை.

கோதண்டராமன், பொன். 1974. "வினைத் தொகை" இலக்கணக் கட்டுரைகள், (பதி.) அகத்தியலிங்கம், எஸ்., பாலசுப்பிர மணியன், க., அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

கோபாலையர், தி.வே. (பதி.), 1973. பிரயோக விவேகம், தஞ்சாவூர்: சரஸ்வதி மகால் நூல்நிலையம்.

......(பதி.), 1973. இலக்கண விளக்கம், தஞ்சாவூர்: சரஸ்வதி மகால் நூல்நிலையம்.

......(பதி.), 1990. இலக்கணக் கொத்து, தஞ்சாவூர்: சரஸ்வதி மகால் நூல் நிலையம்.

கோவிந்தராச முதலியார், கா.ர. (பதி.) 1956. நேமிநாதம், சென்னை : சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

......(பதி.), 1969. நம்பியகப்பொருள் விளக்கம், சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

......(பதி.), 1970. வீரசோழியம், சென்னை: சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.

........(பதி.), 1978. பன்னிரு பாட்டியல், சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

சண்முகம், செ.வை. (பதி.) 1976. சுவாமிநாதம், அண்ணா மலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

..... 1980. எழுத்திலக்கணக் கோட்பாடு, அண்ணாமலை நகர்: அனைத்திந்திய மொழியியல் கழகம்.

...... 1984. சொல்லிலக்கணக் கோட்பாடு-1, அண்ணா மலை நகர்: அனைத்திந்திய மொழியியல் கழகம்.

...... 1986. சொல்லிலக்கணக் கோட்பாடு-2, அண்ணா மலை நகர்: அனைத்திந்திய மொழியியல் கழகம்.

சண்முகம் பிள்ளை, மு., சுந்தர மூர்த்தி, இ. (பதி.), 1990. திவாகரம் (முதல் தொகுதி), சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.

........... 1993. திவாகரம் (இரண்டாம் தொகுதி), சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம்.

சாமிநாதையர், உ.வே. (பதி.), 1937. தமிழ்நெறி விளக்கம், சென்னை.

....... (பதி.), 1946. நன்னூல் மயிலைநாதர் உரை, சென்னை.

........ (பதி.), 1985. சிலப்பதிகாரம், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக் கழகம்.

........(பதி.), 1986. பத்துப்பாட்டு (நச்சினார்க்கினியர் உரையுடன்), தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

.... (பதி.), 1991. புறப்பொருள் வெண்பாமாலை, சென்னை: உ.வே. சா. நூல்நிலையம்.

சிவஞான முனிவர், 1968. தொல்காப்பியச் சூத்திர விருத்தி, திருவா வடுதுறை: திருவாடுதுறை ஆதீனம்.

சிவத்தம்பி, கா. 1982. இலக்கணமும் சமூக உறவுகளும், சென்னை: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்.

........ 1988. தமிழில் இலக்கிய வரலாறு, சென்னை: நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்.

.......1995. “தமிழில் கவிதை பற்றிய இலக்கண மயப்படுத் தப்பட்ட நோக்குகளும் தமிழிலக்கியத்தின் உள்ளார்ந்த படைப்பாற்றல் நெகிழ்வுணர்வும்” (முதன்மை அமர்வு ஆய்வுரைகள்), தஞ்சாவூர்: எட்டாம் உலகத் தமிழ் மாநாடு.

சிவலிங்கனார், ஆ. (பதி.) 1982. தொல், சொல். கிளவி யாக்கம் உரைவளம், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

........1983. வேற்றுமையியல்.

........1984. வேற்றுமை மயங்கியல்.

........1984. விளிமரபு.

........1984. பெயரியல்.

........1987. வினையியல்.

........1986. இடையியல்

........1987. உரியியல்.

........1988. எச்சவியல்.

சுந்தரமூர்த்தி, இ.(பதி) 1981. உவமான சங்கிரகம், சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.

சுப்ரமணிய சாஸ்திரி,(பதி.)1960. காசியப சிற்ப சாஸ்திரம், தஞ் சாவூர்: சரஸ்வதி மகால் நூல்நிலையம்.

சுப்பிரமணியன், ச.வே. (பதி.). 1979. வீரசோழியம், சென்னை: தமிழ்ப் பதிப்பகம்.

செயராமன், நவீ.1977. பாட்டியல் திறனாய்வு, சென்னை: மணிவாசகர் நூலகம்.

........1980. யாப்பியல் ஆய்வுக் கோவை, சென்னை: இலக் கியப் பதிப்பகம்.

தஞ்சைவாணன் கோவை, 1972. சென்னை: சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.

தேவநாதாச்சாரியார், (பதி.), 1989. சில்பரத்தினம். தஞ்சாவூர்: சரஸ்வதி மகால் நூல்நிலையம்.

தேவநேயப் பாவணர், ஞா.(பதி.), 1964. தொல். எழுத் ததிகாரம் - இளம்பூரணர் உரை, சென்னை: சைவசித் தாந்த நூற் பதிப்புக்கழகம்.

தொல்காப்பியம், 1981. சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.

தொல். சொல். தெய்வச் சிலையார் உரை, 1984. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

நலங்கிள்ளி, அரங்க., 1986, பாட்டியல்கள் (ஓர் அறிமுகம்), புதுவை: வாணிதாசன் பதிப்பகம்.

பிங்கல நிகண்டு, 1978. சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

பொற்கோ, 1978. இலக்கண உலகில் புதிய பார்வை, சென்னை: தமிழ் நூலகம்.

..... 1981. இலக்கண உலகில் புதிய பார்வை (தொகுதி 2), சென்னை: தமிழ் நூலகம்.

...... 1989. தமிழ் இலக்கணக் கோட்பாடுகள், சென்னை: தமிழ் நூலகம்.

மீனாட்சி சுந்தரம், க. 1974. "குறிப்பு வினை", இலக்கண ஆய்வுக் கட் டுரைகள் - 1 அகத்திய லிங்கம், ச., பாலசுப் பிரமணியம், க. (பதி.), அண்ணாமலை நகர்: அண்ணா மலைப் பல் கலைக்கழகம்.

மீனாட்சி சுந்தரன், தெ.பொ. 1965. சமணத் தமிழ் இலக்கிய வர லாறு, சென்னை: பாரி நிலையம்.

....... 1971. தொல். சொல். கல்லாடனார் விருத்தி, சென்னை: அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்.

...... 1982. தமிழ் மொழி வரலாறு, மதுரை: சர்வோதய இலக்கியப் பண்ணை.

விசய வேணுகோபால். 1987. "வீரசோழிய இலக்கணக் கோட்பாடுகள்", இலக்கண கருவூலம் - 2, (பதி.) ச. அகத்தியலிங்கம். க. பாலசுப்பிரமணியம், அண்ணா மலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

வீரபத்திர முதலியார். 1984. விருத்தப்பாவியல், சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

வெள்ளை வாரணன், க. 1957. தமிழ் இலக்கிய வரலாறு (தொல்காப்பியம்) அண்ணாமலை நகர்: அண்ணா மலைப் பல் கலைக்கழகம்.

....... 1974. தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம், அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

....... 1971. தொல்காப்பியம் - நன்னூல் சொல்லதிகாரம், அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

...... 1983. புறத்திணையியல். மதுரை: மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

.......1983. களவியல்.

...... 1983. கற்பியல்.

...... 1983. பொருளியல்.

...... 1985. உவமவியல்.

...... 1986. மெய்ப்பாட்டியல்.

...... 1989. செய்யுளியல்.

...... 1994. மரபியல்.

வேங்கடசாமி நாட்டார், ந.மு. (பதி.) 1944. யாப்பருங்கலக் காரிகை, சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

வேங்கடசாமி, மயிலை, சீனி., 1967. மறைந்து போன தமிழ் நூல்கள் சென்னை: சாந்தி நூல் நிலையம்.

வேங்கடராஜுலு ரெட்டியார், வே., 1937. சில இலக் கணக் கட்டுரைகள், சென்னை.

....... 1963. நுண்பொருள் விளக்கம், சென்னை.

வேணுகோபாலப்பிள்ளை, மே.வீ., 1968. யாப்பருங்கலக் காரிகை, சென்னை: பாரி நிலையம்.

வேலுப்பிள்ளை, ஆ., 1979. தமிழ் வரலாற்று இலக்கணம், சென்னை: பாரி புத்தகப் பண்ணை.

வையாபுரிப்பிள்ளை, எஸ். 1943. நவநீதப்பாட்டியல், சென்னை.

........1989. இலக்கியச் சிந்தனைகள், சென்னை: வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம்.

......1991. இலக்கிய உதயம், சென்னை: வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்.

Chidambaranatha chettiyar, A. 1977. Advanced studies in Tamil prosody, Annamalai Nagar. Annamalai University.

Marr. J.R. 1985. The Eight Anthologies, Madras: Institute of Asian Studies.

Meenakshisundaran, T. P. 1974. Foreign Models in Tamil Grammar, Trivandram: Dravidian Linguistics Association.

Subramanya Sastri, P. S. 1934. History of grammatical Theories in Tamil and their Relation to the grammatical Literature in Sanskrit, Madras: The Journal of Oriental Research.

# பின்னிணைப்புகள்

## பின்னிணைப்பு 1

கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பு உள்ள காலத்து ஐந்திலக்கணங்களையும் விளக்கும் நூல்கள் பல தோன்றியுள்ளன. இவை மட்டுமன்றி இசை, நாடக இலக்கண நூல்களும் தோன்றி யுள்ளன. அவற்றின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்த விவ ரங்கள் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்களின் 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்ற நூலில் உள்ளபடி தரப்பட்டுள்ளன.

### இலக்கண நூல்கள்

அகத்தியர் பாட்டியல்
அணியியல்
அவிநயம்
நாலடி நாற்பது
கைக்கிளைச் சூத்திரம்
கவிமயக்கறை
காக்கை பாடினியம்
கையனார் யாப்பு
சங்க யாப்பு
சிறுகாக்கை பாடினியம்
செய்யுள் வகைமை
தக்காணியம்
நக்கீரர் அடி நூல்
நற்றத்தம்
நல்லாறன் மொழிவரி
பரிமாணனார் யாப்பு
பல்காப்பியம்
பல்காயம்
பனம்பாரம்
பன்னிருபடலம்
பாட்டியல் மரபு
பெரிய பம்மம்
மயேச்சுரர் யாப்பு

இரா. சீனிவாசன்

முள்ளியார் கவித்தொகை

வாருணப்பாட்டியல்

## இசை இலக்கண நூல்கள்

இசைநுணுக்கம்

இந்திரகாளியம்

சிற்றிசை

பஞ்சபாரதீயம்

பஞ்சமரபு

பேரிசை

வாய்ப்பியம்

## நாடக இலக்கண நூல்கள்

கூத்த நூல்

சயந்தம்

செயன்முறை

செயிற்றியம்

பரத சேனாபதீயம்

மதிவாணனார் நாடகத்தமிழ்

முறுவல்

## பின்னிணைப்பு 2

### பாட்டியல் நூல்கள் காட்டும் பிரபந்தங்கள்

| எண் | பன்னிரு பாட்டியல் | வெண்பாப் பாட்டியல் | நவநீதப் பாட்டியல் |
|---|---|---|---|
| 1. | சாதகம் | பிள்ளைக் கவி | பிள்ளைத் தமிழ் |
| 2. | பிள்ளைப்பாட்டு | பல்சந்த மாலை | காப்புமாலை |
| 3. | வேந்தன் குடைமங்கலம் | அந்தாதி | இலம்பகம் |
| 4. | ஒரு போகு | கலம்பகம் | மும்மணிக் கோவை |
| 5. | கலம்பகம் | ஒலியந்தாதி | மும்மணிமாலை |
| 6. | உலா | மும்மணிக்கோவை | நான்மணிமாலை |
| 7. | சின்னப்பூ | ஊர்வெண்பா | இருபாஇருபது |
| 8. | பரணி | கோவை | இரட்டைமணிமாலை |

| | | | |
|---|---|---|---|
| 9. | மடல் | கைக்கிளை | இணைமணிமாலை |
| 10. | மறம் | மும்மணிமாலை | பல்சந்தமாலை |
| 11. | பல்சந்தமாலை | நான்மணிமாலை | வெண்பாவந்தாதி |
| 12. | இணைமணி மாலை | இருபா இருபஃது | கலித்துறையந்தாதி |
| 13. | இரட்டைமணி மாலை | இரட்டைமணிமாலை | தொகைவெண்பா |
| 14. | மும்மணிமாலை | இணைமணிமாலை | ஒலியந்தாதி |
| 15. | நாண்மணிமாலை | ஒருபாஒருபஃது | பன்மணிமாலை |
| 16. | கலம்பகமாலை | பன்மணிமாலை | சின்னப்பூ |
| 17. | மும்மணிகோவை | சின்னப்பூ | தசாங்கம் |
| 18. | கலிஅந்தாதி | தசாங்கநிலை | ஆனைவிருத்தம் |
| 19. | ஒலியந்தாதி | விருத்தம் | குதிரைவிருத்தம் |
| 20. | யானைத்தொழில் | ஊர்வெண்பா | வேல்விருத்தம் |
| 21. | வருக்கமாலை | அலங்காரபஞ்சகம் | வில்விருத்தம் |
| 22. | நாமமாலை | ஊசல் | வாள்விருத்தம் |
| 23. | இன்னிசைத் தொழில் | நாழிகைவெண்பா | குடைவிருத்தம் |
| 24. | விருத்தவகை | அட்டமங்கலம் | கோல்விருத்தம் |
| 25. | ஐம்படை விருத்தம் | நவமணிமாலை | நாட்டுவிருத்தம் |
| 26. | நாழிகைக்கவி | தசப்பிராதுற்பவம் | நகரவிருத்தம் |
| 27. | நவமணிமாலை | நயனப்பத்து | ஊர்வெண்பா |
| 28. | கைக்கிளை | பயோதரப்பத்து மாலை | அலங்காரப் பஞ்சகம் |
| 29. | அரிபிறப்பு | உலா | கைக்கிளை |
| 30. | அட்டமங்கலம் | குழமகன் | பாதாதிகேசம் |
| 31. | இல்லறவெள்ளை | வளமல் | கேசாதிபாதம் |
| 32. | தாரகைமாலை | அங்கமாலை | அங்கமாலை |
| 33. | செந்தமிழ்மாலை | பாதாதிகேசம் | உலா |
| 34. | தாண்டகம் | கேசாதிபாதம் | தூது |
| 35. | பதிகம் | ஆற்றுப்படை | குழமகன் |
| 36. | மங்கலவெண்பா | தானைமாலை | மடல் |
| 37. | சீர்மெய்க்கீர்த்தி | வஞ்சிமாலை | நாமமாலை |
| 38. | செருக்களவழி | வாகைமாலை | புகழ்ச்சிமாலை |
| 39. | மறக்களவஞ்சி | தாரகைமாலை | ஆனைத்தொழில் |

| | | |
|---|---|---|
| 40. செருக்களவஞ்சி | மங்களவள்ளை | நயனப்பத்து |
| 41. ஆற்றுப்படை | யானைவஞ்சி | பயோதரப்பத்து |
| 42. கண்படைநிலை | மெய்க்கீர்த்தி | பொன்னூசல் |
| 43. துயிலெடை நிலை | கையறம் | அரசன்விருத்தம் |
| 44. விளக்குநிலை | புகழ்ச்சிமாலை | அட்டமங்கலம் |
| 45. கடாநிலை | நாமமாலை | தவமணிமாலை |
| 46. யாண்டுநிலை | இரட்டைமணிமாலை | தசப்பிராதுற்பவம் |
| 47. பறைநிலை | வருக்கமாலை | மெய்க்கீர்த்தி |
| 48. அந்தாதித் | செருக்களமாலை | ஆற்றுப்படை தொகை |
| 49. மருட்பா | வரலாற்றுவஞ்சி | கோவை |
| 50. பாதாதிகேசம் | பரணி | நாழிகைக்கவி |
| 51. பணைமுலைப் | பெருங்காப்பியம் | வஞ்சிமாலை பத்து |
| 52. நயனப்பத்து | காப்பியம் | மருட்பா |
| 53. உழத்திப்பாட்டு | புராணம் | பரணி |
| 54. குறத்திப்பாட்டு | | பெருங்காப்பியம் |
| 55. ஒருபாஒருபஃது | | சிறுகாப்பியம் |
| 56. இருபாஇருபஃது | | தொகைநிலைச் செய்யுள் |
| 57. கோவை | | |
| 58. கணக்கு | | |
| 59. தொடர்நிலைச்செய்யுள் | | |
| 60. பத்துப்பாட்டு | | |
| 61. கடைநிலை | | |
| 62. கையறுநிலை | | |

## பின்னிணைப்பு – 3

வீரசோழியம் - நடை

நடையாவது, ஒழுக்கம். இப்பாட்டு எந்நடை பற்றி வந்தது? என்றால், இந்நிலத்தின் ஒழுக்கம் பற்றி வந்தது என்றறிவது. அஃதாமாறு;

### குறிஞ்சி நடையியல்

அறிந்தோர் ஆய்ந்த அன்புதரு வகையில்
குறிஞ்சி நடைவகை கூறும் காலை,
அரிவைக்கு ஆகிய இறைவியை வர்க்கந்
தெரிமணிப் பூணான்
தெரியச் செப்பலும்
நன்னலம் புகழ்தலும் நாணினம் அழுங்கலும்
பொன்னவிர் பூசைப் புணர்ப்பது உரைத்தலும்
பிரிவு நனி கருதலும் பிரிவு இன்மை பேசலும்
பெருமை செய்தலும் பெறற்கு அரிது என்றலும்
ஊழ்வினை வலித்தும் உறு தெய்வம் பேணலும்
தோழனை நினைத்தலும் அகறலும் அணுகலும்
இடத்தொடு புலம்பலும் ஏழையை வினவலும்
மடத்தகு சாயல் மாதரைக் கண்டலும்
வனம் புலம்பு அகற்றலும் ஆர்வ நோக்கமும்
குவளை உண்கண் புதைத்துத் தலைவி இறைஞ்சலும்
ஆற்றான் மொழிதலும் அஞ்சிய நோக்கமும்
ஏற்ற உவகையோடு இனியவள் மறுவலும்
ஆங்கவன் புணர்தலும் அவ்வயின் புணர்ச்சியைப்
பாங்கற்கு உணர்த்தலும் பழி எனக் கூறலும்
தேங்கமழ் தாரோன் தெரியான் செப்பலும்
கிளைஞன் கழறலும் கேடு எனக் கூறலும்
இளையவன் வடிவும் இடனும் ஈதலும்
அண்ணல் கவர்சிக்கு அவள் வட்வு மினும்
திண்ணிதில் செப்பலும் சென்றவன் காண்டலும்
வெறிகமழ் கோதை மிகுநலம் புணர்தலும்
அறிவும் நிறையும் அண்ணலை பெய்தலும்
வெற்றிடங் காட்டலும் இலங்கிழை உணர்தலும்
ஊறன்றா முடிவில்தன் பாங்கற் கூட்டமும்

தையல் தளர்ச்சியை நோக்கித் தோழி
ஐயுறு நிலைமை அறிய உரைத்தலும்
மனைவி போல வல்லவை மொழிதலும்
விழுப்பம் பேசலும் வேண்டா என்றலும்
பழித்தக உணர்த்தலும் பார்த்து உறவு உரைத்தலும்
பொருந்தா என்றலும் பொய்யுரை புரிதலும்
வருந்தும் என்றலும் வடிவு இது என்றலும்
நின்குறை நீயே சென்று உரை என்றலும்
சீர்மலர்க் கோதைக்குச் செவ்வியன் என்றலும்
நீர்மை அன்று என்றலு நீங்குமின் என்றலும்
மூரல் முறுவலோடு முகம் மலர்ந்து உரைத்தலும்
இரங்கி மொழிதலும் ஏத்தி மொழிதலும்
கலங்கி மொழிதலுங் கழறி மொழிதலும்
வள்ளல் தளர்ச்சியு மடலேற்று மொழிதலும்
உள்ளங் குளிர்ப்பித்து ஒன்தழை என்றலும்
நெஞ்சுத் தடங்கிய நின்றுகுறை ஏற்றலும்
இன்சொல் இரக்கமும் வன்சொலின் மயக்கமும்
புகழ்தலும் மயங்கி உரைத்தலும்
கயற்கண் ஏழையைக் கவிற்சி தீர்த்தலும்
பகற்குறி நேர்தலும் அக்குறி உரைத்தலும்
இற்செறிவு உரைத்தலும் வரைவு கடாவலும்
இரவு வரவு இசைத்தலும் வரவு விலக்கலும்
மற்று அவள் தளர்ச்சியும் இரவுக்குறி நேர்தலும்
எய்துகுறி வினவலும் ஏந்திழை மகிழ்வுடன்
குறி உரைத்தலும் அது கடன் நேர்தலும்
மெய்க்குறி உரைத்தலும் மிகுதியில் கொண்டலும்
ஏந்திழை எடுப்பதும் இடப்புறத்து அகற்றலும்
பூந் தண் சிலம்பன் புணர்ச்சியது குறியும்
செவிலியது சேறலும் சென் எதிர் கோடலும்
கவ்வை பெரிது இவள் கண்டு அறி என்றலும்
அம்பலும் அலரும் ஆயின என்றலும்
வம்பலர் கோதை வாட்டம் கூறலும்
நற்றாய் செவிலி என்று இவர் நன்னுதல்
உற்றதை அறியாது நற்றிரம் படர்தலும்
கட்டுரை கேட்டலும் கேட்டவள் கூற்றும்
ஓட்டிவெறி அயர்தலும் ஒண்ணுதல் அழுங்கலும்
இவ்வியல் அன்னைக்கு உணர்த்துக என்றலும்
அவ்வியல் ஒட்டாள் மொழிதலும் ஆயிடைப்
பூத்தரு புணர்ச்சியும் புனல்தரு புணர்ச்சியும்

காப்பெரும் புனத்துக் களிறுதரு புணர்ச்சியும்
தாய் தரு புணர்ச்சியும்
கூறிய தாயது குறிப்புவழி மொழிதலும்
வனரந்துநனி புகுதலும் வனரவு அவர் மறுத்தலும்
கரைந்துநற் இரங்கலும் கவற்சி தீர்த்தலும்
எதிர்கொளல் மொழிதலும் ஏற்று மகள் மொழிதலும்
விரவிய இயற்கையோடு இன்னவை பொருளே.

## நெய்தல் நடையியல்

கையறு புலம்பும் கலவியும் தலைதரு
நெய்தல் நடையியல் நேரும் காலைக்
கடலுங் கழியுங் கைதையுங் கானலும்
மடலிரும் பெண்ணையும் வான்சிறைப் புள்ளும்
கழுமிய இருளும் கதிரொளி மதியும்
பொழுதுங் காற்றும் என்று இவை முதலாம்
எவ்வகைப் பொருளும் இரந்து குறை உறுதலும்
அவ்வகைப் பொருளுக்கு ஆற்றாது உரைத்தலும்
விரைமலர்த் தாரோன் விழுப்பம் கூறலும்
இரவுக்குறி நேர்தலும் பகற்குறி மறுத்தலும்
இரவிடம் காட்டலும் பகலிடம் காட்டலும்
வரவு அறிவுறுத்தலும் வான்துயில் கோடலும்
இறைவளைத் தோளியை இன்துயில் எடுப்பதும்
துறைவனின் துயிலெழீஇத் தன்னுதற் பொருட்டால்
ஏதில் கூறலும் இடத்து உய்த்து அகற்றலும்
மேதகு கிளவியின் மீண்டு எதிர் கோடலும்
சிறப்புறக் கிளத்தலும்
அம்பலும் அலரும் ஆயின என்றலும்
வம்பலர் தாரோய் வருந்தினன் என்றலும்
குறிவழிப் படுத்தலும் கொண்கன் தோன்றலும்
அறியக் கூறலும் அருங்காப்பு மிகுதலும்
தாம்பிழைப்பு இன்மையும் தலச்செல வருகையும்
வன்பழிக்கு அஞ்சலும் வாரலை என்றலும்
இரவு வரல் என்றலும் பகல் வரல் என்றலும்
இரவும் பகலும் வாரல் என்றலும்
அவ்விரு பொழுது மாய்ந்து வரல் என்றலும்
கவ்வை உரைத்தலும் களவு அவன் உரைத்தலும்
வரைதல் வேட்கையோடு வந்தவும் பிறவும்
உரைதரு பெருமையோடு உரைத்தனர் பலரே.

## பாலை நடையியல்

நூலியல் முறைமை நுண்ணிதின் உணர்ந்தோர்
பாலை நடையது பகரும் காலை
உடன்போக்கு உணர்த்தலும் அப் போக்கு உரைத்தலும்
மடவோன் தன்திறம் மாண்புற நோக்கலும்
கற்பியல் காட்டலும் கையுய்த்து மொழிதலும்
வெற்பிடைப் போதலும் மெல்லியல் தளர்தலும்
தளர்ந்தோள் ஓம்பலும் தம்பேர் என்றலும்
எதிர்ந்தோர் மொழிதலும் எதிர்கொளத் தவிர்தலும்
கண்டோர் ஏத்திய கற்புடை ஒழுக்கம்
தண்தளிர் மாடந் தனக்குரை மாற்றமும்
தாங்கரும் பூசல் தன்னையர் எழுச்சியும்
ஆங்கவள் வலித்தலும் அமைந்தோர் திருத்தலும்
பதியுடன் படுத்தலும் பண்பு எய்த மொழிதலும்
ஈன்றோள் இரங்கலும் எதிர்ந்தோர் கூறலும்
அம்பலும் அலரும் ஆதலும் அயலோர்
தோன்றக் கூறிய தோமறு கற்பும்
அன்புறு செவிலி பின்செல வலித்தலும்
சென்றவள் வினவலும் கண்டோர் தெருட்டலும்
ஒன்றிய உள்ளமொடு உவந்து அவள் மீண்டலும்
வறுஞ்சுரங் கடந்தவர் வளநாடு புகுதலும்
பிறங்குபுகழ்ப் புதல்வரைப் பெறுதலும் பெற்றோன்
இருங்கிளை மருங்கின் தூது விடுத்தலும்
ஒருங்க வருந்தலும் உவந்து உடன் சென்றலும்
மாதரைக் கொண்டுதம் வாழ்பதி புகுதலும்
ஓதிய வனைத்தும் உரியவை புக்கபின்
பொருள்வயின் பிரிதலு அப்பிரிவு உணர்த்தலும்
இருள்புரி கூந்தல் இற்று என மொழிதலும்
ஆற்றான் ஆதலும் அதுபேட்டு மொழிதலும்
கூற்றம் கோளிய உலகியல் உரைத்தலும்
நனிபகர் பள்ளியின் நடந்துசெலவு அழுங்கலும்
பரத்தையிற் பிரிவொழித்து எல்லாப் பிரிவும்
உரைக்கும் காலை உணர்ந்தன நோக்கே."

## மருத நடையியல்

கருதற்கு அமைந்த கற்றோர் பூண்ட
மருத நடையது மாண்புறக் கூறின்
விழவு விரும்புதல்
பொழில்மகிழ்ந்து இருத்தல் புனலாட்டு அயர்தல்
இல்லிடைப் பரத்தையர் இயலிடைப் பரத்தையர்
கல்வியொடு பழகிய காதல் பரத்தையர்

நல்லியல் நிலைமை நயப்புப் பரத்தையர்
சொல்லிய பரத்தையர் நால்வருங் கூற
ஆங்கவர்ப் புணர்தல் அவர்க்கண் அகறல்
வீங்கு முலைப் பரத்தையர் உழைநின்று விடர்க்குப்
பாங்கன் தோழி பாணன் என்னும்
ஆங்கவர் முதலியர் இரந்துகுறை உறுதல்
புகரறு கோதை பொறுத்தல் குறையிரத்தல்
ஊரன் புகுதல் உவந்து எதிர் கோடல்
பேராச் சீற்றமொடு பெருமுனிவு பேசல்
விருந்தொடு புகுதல் புதல்வரொடு புகுதல்
திருந்திழை அரிவையைத் திரிந்து எதிர் கோடல்
சென்னிறக் கோலச் சிறுமி புகுதல்
அன்னிற நன்னாள் அருள் அங்கவி றுறைதல்
உண்ணிறை உவகையோடு ஒன்றுதல் உவற்றல்
வெண்ணிறக் கோலத்து மேதக உணர்தல்
பண்ணமைக் கிளவியொடு பள்ளி மகிழ்தல்
அவை புனல் ஊரன் ஆற்றான் புகுதல்
புகவிகற்பு ஒன்றல் நண்ணிச் சீறல்
ஆற்றா னாகி அவள் எதிர் ஊடல்
தேற்றேன் என்ற தொழித்துவழி படுதல்
வளவய லூரன் வதுகை கேட்டுளை
உளநனி அடக்கி உவந்தோள் போறல்
பண்ணி விடுதல் பான்மையின் மொழிதல்
எண்ணிய சிறப்பி எங்கை என்று இசைத்தல்
மனைச் செல் பரத்தையை மகிழ்ந்து எதிர் கோடல்
முனித்தகவு இன்மை முயன்றுபண்பு பெய்தல்
ஆயிடை அவர்கள் அமர்ந்து எதிர் கோடல்
போயஃ தீண்டல் புகழ்தல் ஏத்தல்
பள்ளியுள் மகிழ்தல் பாங்குறப் புணர்தல்
எள்ளருந் தோழி ஏற்பக் கூறல் எனச்
சொன்னவை போல அன்னவும் எல்லாம்
பன்னுங் காலை அவ்வயின் படுமே.

### முல்லை நடையியல்

இறைச்சிப் பெருமையோடு இறைவழிப் பட்டுக்
கற்புக்கடம் பூண்டு கடப்பாடு ஆற்றும்
முல்லைத் திணைநடை சொல்லும் காலை
இறைவன் பிரிய இல் இருந்து ஆற்றி
நினைவுநனி காத்தல் நீர்மையின் மொழிதல்
மாழையங் கண்ணி வருந்தினள் பெரிது எனத்
தோழி கவறல் கவன்ற தோழிக்கு

ஆற்றுவன் என்றல் அவன் பயம் உரைத்தல்
வேற்றுமை கூறல் வெய்து உயிர்த்து இரங்கல்
மின்மலி கார்கண்டு மெலிந்தவள் மொழிதல்
தொன்மலி தோழி காலம் மறுத்தல்
காதல் பெயர் காரன் திரு எனத்
தாதவிழ் கோதை தானே கூறல்
பருவங் காட்டிப் பிரிவொழி என்றல்
வருவர் நமர் என வாய்மொழி வலித்தல்
அந்தியும் ஆம்பலும் மாலையு மணியும்
தென்றலும் திங்களும் பிறவும் அன்னவை
பகன்று அற ஆற்றாள் அகன்று அவள் மொழிதல்
என்குறை இது என இரந்துகுறை கூறல்
பொருள்வயின் நிற்றல் அவ்வயின் நிலையும்
இயல்வளி முற்றுதல்
கார்கண்டு உரைத்தல் கனவின் அரற்றல்
போர்வேல் கண்ணி புலம்பும் என்று இரங்குதல்
தூது விடுதல் தூது எதிர் கோடல்
போதவிழ் கோதை புலம்புநனி தீர்த்தல்
கோவொரூஉ மொழிதல் தேர் அவண் வருதல்
ஆர்மலி தேரை அமர்ந்தவன் ஏறல்
பாகனைக் கடாவெனப் பன்மணி நெடுந்தேர்
வேக நிலைமையின் விரைந்துநனி கடாவுதல்
இல்லியல் மடந்தையர் இயல்பும் கேட்டல்
நல்லியல் நெடுங்கொடி நன் நகர் காட்டல்
இறைவன் செருத வெதிர்சென்று வணங்குதல்
பொறைமலி மடந்தையைப் புலவித் தலை அளித்தல்
பரு நா நோக்கிப் பயன்கண்டு மொழிதல்
செருவேல் கண்ணி சேக்கையிற் களித்தல்
முல்லை நல்லியாழ் முறைமையில் கேட்டல் எனச்
சொல்லிய பிறவும் சொன்னதன் பொருளே.
குடவரைக் குறிஞ்சியுங் குணகடல் நெய்தலுங்
கடவ தாகுங் களவிற் குரித்தே.
இருதிணைத் தொழிலும் இயன்று தம்முள்
ஒரு திணைக்கு ஓதல் ஒழிந்தன இயல்பே.
நன்னில மருதமும் தொன்னில முல்லையும்
துன்னருங் கற்பொடு தோன்றும் தொடர்ந்தே.
இடைநிலைப் பாலை இருபாற்கும் உரித்தே
படர்கொடி முல்லையின் பாற்படும் இயற்றே.
ஒருவயின் தணத்தலும் பொருள்வயின் பிரிதலும்
கருதிய களவிற்கு உண்மையானே.

# ஆசிரியர் பெயர் அகர வரிசை


அகத்தியர் 23,29,92,122,228,230,248
அடியார்க்குநல்லார் 29,48,186,218,234
அமிதசாகரர் 184,194,205,
அரங்கராசன், ச. 12,227,229,246,248,249
அரவிந்தன்,மு.வை. 57
அருணாசலம்,மு. 59,80,179,181,227,251
அவிநயனார் 43,45,84,85,100,145,185,228,230,248
ஆளவந்தபிள்ளைஆசிரியர் 236
இந்திரகாளியார் 228,230,248,250
இராகவையங்கார் 246,249
இராசபவித்திரபல்லவதரையன் 125
இராசாராம் 30,33,34,105,
இராமலிங்கத்தம்பிரான் 255
இராமானுஜர் 61
இராமானுஜையங்கார் 246,249
இளங்குமரன் 12,212,219
இளம்பூரணர் 26,29,36,38,59,65,67,89,91,132,136,137,153–155,166,179,182,183,189,194,195,199–207,209–213,216,225,234
இளவரசு, சோம. 12
ஈசுரபாரதி 57
ஐயனாரிதனார் 134,166
கடியநன்னியார் 143
கபிலர் 228,248,250
கல்லாடர் 26,65,91,228,248
காக்கைபாடினியார் 190,219
காங்கேயர் 124
கால்டுவெல் 10
குணசாகரர் 179,222
குணவீரபண்டிதர் 38,75,250
கூரத்தாழ்வார் 80
கோதண்டராமன்,பொன். 125
கோவிந்தராசமுதலியார் 246,247,249
கோவூர்கிழார் 228,248
சங்கரநமச்சிவாயர் 40
சண்முகம், செ.வை 11,66,68,80
சாமிநாததேசிகர் 99
சாமிநாதையர் 133
சாமுண்டிதேவநாயகர் 134
சிகண்டி 218
சிதம்பரநாதசெட்டியார் 231
சிவஞானமுனிவர் 30,37,39,57,62,92,192
சிவத்தம்பி,கா. 11,241
சிறுகாக்கைபாடினியார் 190
சீத்தலையார் 228
சுப்பிரமணியசாஸ்திரி 79,106,237–239,242
சுப்பிரமணியதீட்சிதர் 37,40,57
சுவாமிகவிராயர் 44,45
சுவாமிநாததேசிகர் 37,39
சுவாமிநாதவிருத்தியுரை ஆசிரியர் 44
செம்பூட்சேயார் 144
செயராமன்,ந.வீ. 219,246,247
செயிற்றியனார் 228
சேந்தம்பூதனார் 228,248
சேனாவரையர் 26,29,39,62,65,89,91,92,115
சொக்கப்பநாவலர் 161,176
தண்டியலங்காரஆசிரியர் 56
தத்துவராயசுவாமிகள் 61
திருப்பிரவாசிரியர் 144
தெய்வச்சிலையார் 26,39,65,91

தேவநேயப்பாவாணர் 68
நச்சினார்க்கினியர் 26,29,38,40, 65,89,91,132,137,153,179,183,189, 194,206,208–213,226,236
நற்றத்தனார் 219,228
நன்னூலார் 70,81,84,119,122,125
நாற்கவிராசநம்பி 134
பரணர் 228,248,250
பரிமேலழகர் 62
பல்காயனார் 220,228,248
பவணந்திமுனிவர் 38,43,45,59, 120,122,123
பனம்பாரனார் 81
பாடலனார் 81
பாணினி 22,36
பிள்ளைலோகார்யஞ்சீயர் 80
புத்தமித்திரர் 44,45,91,223
பெருங்குன்றூர்கிழார் 228,248
பெருந்தேவனார் 39,44,45,65, 223
பேராசிரியர் 26,29,48,50,132, 137–139,166,179,180,182,183,189, 190,200,203–209,211,213,218, 225,226
பொய்கையார் 228,248
மண்டலபுருடர் 125
மயிலைநாதர் 38,43,65,80,81,84,85, 90,117,118,122,125,126,192
மயேச்சுரர் 185
மாப்பூதனார் 228,248
மார் 31,32
மீனாட்சிசுந்தரனார்,தெ.பொ. 30
யாப்பருங்கலவிருத்தியுரை ஆசிரியர் 27,56,185,189,196,199,201,210, 211,213
யாஸ்கர் 22
வரருசி(காத்தியாயனர்) 106
வாத்ஸ்யாயனர் 32
விசயவேணுகோபால் 34
வெள்ளைவாரணன் 46,123,206, 213
வேங்கடசாமி,மயிலை.சீனி. 181
வேதகிரிமுதலியார்,களத்தூர், 61
வேலுப்பிள்ளை, ஆ. 12,40
வைத்தியநாததேசிகர் 38,44,45,60
வையாபுரிப்பிள்ளை 57,61,135, 177


## நூல், இதழ் பெயர் அகர வரிசை


அகத்திணை 136
அகத்தியம் 119,122
அகத்தியர்ஆனந்தவோத்து 235, 236,254
அகத்தியர்பாட்டியல் 236,252
அடிநூல் 24,144
அணியியல் 18,28
அமரகோசம் 57
அரையர்கோவை 136
அவிநயம் 13,14,41,68,75,121, 125–129,132,145,185,190,197,224
அஷ்டாத்யாயி 22
ஆசிரியமாலை 143
இசைநுணுக்கம் 218
இந்திரகாளியம் 232,233
இலக்கணக்கொத்து 37,64,98
இலக்கணவரலாறு 11
இலக்கணவரலாறு–பாட்டியல் நூல்கள் 12
இலக்கணவிளக்கம் 44,60
இறையனார்களவியல் 24, 29,36,41,65,81,91,131,132,136,140, 141,143,144,148,150,155,157,160, 162,172,175,177,187
இன்னிசைமாலை 136
உவமானசங்கிரகம் 16,27
எட்டுத் தொகை 186
ஐந்திணை 136
ஐந்திரம் 23
கண்டனலங்காரம் 136

கயாதரம் 124
களவியல்காரிகை 25,132,135, 136,145,152,154,158–161,163,164, 172,178,186
கற்பியல் 31,32
காக்கைபாடினியம் 14,141,184, 197,224
காமசாத்திரம் 32
காவ்யாதர்சம் 18
கிளவித்தெளிவு 136
கிளவிமாலை 136
கிளவிவிளக்கம் 136
குறுந்தொகை 133
கூற்றியல் 24,144
கைக்கிளைச்சூத்திரம் 24,143
கோயில்அந்தாதி 136
சங்க இலக்கியம் 133,134,144, 241,243
சங்க யாப்பு 179–181,185,210,224
சந்தோபிசிதி 21
சம்பந்தப்பாட்டியல் 53
சரஸ்வதி(இதழ்) 13
சிதம்பரப்பாட்டியல் 228
சிலப்பதிகாரம் 25,187,217, 218, 232,256
சிவப்பிரகாசம் 45
சிற்றெட்டகம் 134,136
சிறுகாக்கைபாடினியம் 179, 180,181,188,224
சுவாமிநாதம் 39,44
சூடாமணிநிகண்டு 57,59,60
செய்யுள்வகைமை 228
செயிற்றியம் 232
தஞ்சைவாணன்கோவை 134, 161,162,176
தண்டியலங்காரம் 18,26
தமிழ்நெறிவிளக்கம் 25,132,133, 145,148,154,156,158,161–164,172, 175,177,178,186
தமிழ்வரலாற்றுஇலக்கணம் 12,38
தமிழில் இலக்கிய வரலாறு 18
திணைநூல் 24,144
திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் 10
திருக்கோவையார் 187
திருவாசகம் 187,229
திவாகரம் 28,57,124,228,254, 255
தூக்கியல் 144
தேவாரம் 187,229
தொல்காப்பியர்பாட்டியல் 228
தொன்னூல்விளக்கம் 40
நக்கீரர்அடிநூல் 185
நந்திக்கலம்பகம் 25,187,241
நம்பியகப்பொருள்விளக்கம் 25, 132,134,135,143,144,151,152,154, 159–161,163,173,175–178
நவநீதப்பாட்டியல் 25,227,228, 232,236,245,247,250–256
நறையூர்அந்தாதி 136
நன்னூல் 13,25,40,42,59,65, 79–87,90,109,114–128,191
நாட்டிய சாத்திரம் 32
நாலடிநாற்பது 179
நாலாயிரத்திவ்வியபிரபந்தம் 25, 186,187,229
நிகண்டுசூடாமணி 125
நிருக்தம் 22
நேமிநாதம் 25,40,65,74–79,81, 85,87,90,91,96,97,110–112,114, 126,128
பத்துப்பாட்டு 186,236
பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் 186,187
பரிபாடல் 142,214
பல்காயம் 192
பல்சந்தமாலை 136
பல்பொருள்சூளாமணி 57
பன்னிருதிருமுறை 25,186
பன்னிருபடலம் 14,40,134, 143,145,146,158,166,169,170,173, 178,246
பன்னிருபாட்டியல் 25,227,228, 232,245–248,250–256
பாட்டியல் 18,
பாட்டியல் மரபு 228
பாண்டிக்கோவை 136,187,241

பெரியபம்மம் 190
பெரியமுப்பழம் 228
பெருங்கதை 187
பிங்கலம் 57,124,228,244,245, 253–255
பிரபந்தமரபியல் 229
பிரயோகவிவேகம் 27,37,40,57, 64,98,105
புறத்திரட்டு 143,186
புறநானூறு 144
புறப்பொருள்வெண்பாமாலை 25,132,134,143,145,158,164,166–168,173,174,178
பெரியதிருமொழி 80
பெருங்கதை 25
பெரும்பொருள்விளக்கம் 143
பொருத்தவிளக்கம் 53
மணிமேகலை 25,187,256
மயேச்சுரர்யாப்பு 224
மலைபடுகடாம் 235
மழவைஎழுபது 136
மாமுலம் 228
முத்துவீரியம் 39
முத்தொள்ளாயிரம் 241
முள்ளியார்கவித்தொகை 228
யாப்பருங்கலக்காரிகை 25, 41,136,141,142,179,181,184,185, 189,196,197,224
யாப்பருங்கலம் 25,41,141, 142,146,179,184–186,189,191,197, 198,202,224,225
யாப்பருங்கலவிருத்தியுரை 27, 43,45,47,50,56,62,81,132,145,146, 158,179–228,231,232,234,235, 244
வங்கர்கோவை 136
வச்சணந்திமாலை 75
வரையறுத்தபாட்டியல் 228, 229,244,245,251,253,254
வாய்ப்பியம் 231,232,243
வீரசோழியம் 18,25,26,32–34,39, 40,44,57,65,66,68–80,86,90,91, 93,97,99,100,101,103,109,110,130, 131,132,145,149,154,157–159,164, 171,172,174,176,178,179,185,188, 189,197,220–223
வெண்பாப்பாட்டியல் 53,55,228, 232,245,247,250–256


## பொருளகராதி


அஃறிணை 111,130
அகத்திணையியல் 134,137,139, 151
அகத்திய மரபு 228
அகநிலைஒத்தாழிசைக்கலி 215
அகப்புறப்பாகுபாடு 24
அகப்பொருள் 31
அகவை 55,238
அங்கதம் 214,242
அசை 190,208
அசைச்சீரடி 200
அசையோத்து 184
அடி 205
அடிமறிமண்டில ஆசிரியப்பா 215
அடியாகுஎதுகை 50
அடியோத்து 184
அணி 35
அணியிலக்கணம் 28
அணுகுமுறைகள் 17
அணுத்திரள்ஒலி 43–45,84, 128
அணுமோனை 208
அதமம் 49,51
அந்தணர் 232,233
அந்தாதி 205
அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா 215
அம்போதரங்கஒருபோகு 215
அம்மானை 217
அரங்கேற்றம் 230,243–245

அரிச்சுவடி 62
அரசர் 232,233
அரசன் 52
அரசியல் 17
அல்வழித்தொடர் 117
அல்வழிப்புணர்ச்சி 71,86
அலங்காரப்படலம் 18
அலர் 155
அலி (எழுத்து) 54
அலிமரம் 54,238
அவ்வியபாவசமாசம் 104
அவத்தை 32,138
அவதிக்காரகம் 102
அவலமுற்றோர்இசை 234
அவைஅடக்கியல் 142
அவைஇலக்கணம் 243,250,252
அவைக்களப்புலவர் 243,245
அவையல்கிளவி 90
அளபெடை 101,205,206
அளவடி 181,198
அளவியல் 212
அளவு 67
அளவுப்பெயர் 87
அறத்தொடுநிற்றல் 151,152,155, 160,162–164
அறுசீரடி 197,209,221
அறுநூற்றுஇருபத்தைந்து அடி 199,202,203,226
அன்மொழித்தொகை 104,105
அனுபோகவகை 228
ஆகமம் 15,41,73,74
ஆசிரமக்கோட்பாடு 32
ஆசிரியஅடி 198
ஆசிரியஉரிச்சீர் 200
ஆசிரியஉரிச்சீரடி 200
ஆசிரியத்தளை 222
ஆசிரியத்தாழிசை 216
ஆசிரியத்துறை 216
ஆசிரியப்பா 204,209,214,215, 217,232
ஆசிரியர்தன்மதம் கூறுதல் 188
ஆசிரியவிருத்தம் 216
ஆசு 230
ஆண்மரம் 238
ஆணையாளர் 60
ஆதாரக்காரகம் 101,102
ஆதேசம் 73,74
ஆய்தம் 82,127
ஆய்தக்குறுக்கம் 76,128
ஆய்தத்தொடர் 82
ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் 191
ஆய்வுத்தரவு 14
ஆயிடைப்பிரிவு 134,149,163, 164
ஆற்றுக்கால் 195
ஆற்றுநோக்கு 195
ஆற்றுப்படை 166,231
ஆற்றுவரி 218
ஆறாம்வேற்றுமை 103,118
ஆறுஅறிவுஉயிர் 46
ஆறுதொகைகள் 90,104
ஆறுவகைப்பெயர்ச் சொற்கள் 86
ஆனந்தப்பையுள் 234
இசைஇலக்கணம் 229,231,232, 234,256
இசைத்தமிழ் 14,24,217
இசைத்தமிழ்நூல் 48,187
இசைப்பா 47
இசைப்பாடல் 48,187,216–218
இசையானந்தம் 234
இடந்தலைப்பாடு 153,155
இடை 59
இடைக்காலச்சோழர் காலம் 33
இடைக்காலத்தமிழ் 34
இடைச்சீர் 194,221
இடைச்செருகல் 31,33
இடைச்சொல் 123
இடைத்தொடர் 82
இடைத்தொடர்க் குற்றியலுகரம் 191
இடைநிலை 82,218
இடையாகெதுகை 50
இடையியல் 90,112,115,123
இடையீடு 208
இணை 205

இணைக்குறள் ஆசிரியப்பா 215
இணைமோனை 211
இந்தியத்துணைக்கண்டம் 16
இயலசை 193
இயற்கைப்புணர்ச்சி 151,153,155,156,160
இயற்சீர் 200
இயற்சீர்வெள்ளடி 200
இயற்சொல் 127
இயற்பெயர் 235
இயைபு 205,206
இயைபுப்பொழிப்பு 207
இரசவாதம் 41
இரட்டைத்தொடை 205
இரண்டாம்வேற்றுமை 99,104
இரண்டாம்வைப்பு 75
இரவுக்குறி 151,154,155,159
இராசன் 239
இராசி 52
இருசீரடி 198,209,221
இருபெயரொட்டுப் பண்புத் தொகை 59
இருவகையெச்சம் 59
இருவரும்உள்வழி அவன் வரவுணர்தல் 155
இலக்கணஉருவாக்கம் 11,16,22
இலக்கணஎழுதுமுறை 11
இலக்கணக்கோட்பாடு 10,11,29,30
இலக்கணச்சிந்தனை 21
இலக்கணமரபு 9,14,17,18,25
இலக்கணவரலாற்றுச் சிக்கல்கள் 11
இலக்கியவரலாறு 10,12,186
இலக்கியங்களின்தொடர்ச்சி 10
இலங்கை 9
இலத்தீன் 21
இலிங்கம் 49,51,56
இயல்தமிழ் 14,24
இழிகுலத்தோர் 172
இறந்தகாலம் 109,110
இறைச்சி 151
இன்னிசைவெண்பா 215,221
இஸ்லாம் 42
ஈரசைச்சீர் 194,221,
ஈரடித்தொடை 207,211
ஈரெழுத்துஒருமொழிக் குற்றியலுகரம் 191
ஈற்றுநிலை 82
உடன்போக்கு 148,153,160–164
உண்டி 15,51
உத்தமதசதாலம் 49
உத்தமம் 49,50
உபகாரகப்படலம் 93,94,101–103
உம்மைத்தொகை 59,105
உயிர்ஈறு 68
உயர்திணை 113,114,130
உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் 84,191
உயிர்மயங்கியல் 67,87
உயிரளபெடை 83,208
உயிரீற்றுப்புணரியல் 82,86,129
உயிரெதுகை 208
உயிரெனக்கூறல் 156
உரி 59
உரிப்பொருள் 147,151
உரியசை 193,200
உரியியல் 90,110,114,122,123
உருபியல் 67,68
உருபுபுணரியல் 82
உருபுமயங்கியல் 111
உருவம் 82
உரை 18,242
உரைச்சூத்திரம் 128,135,157,186,189,196,212,226
உரைநடை 27,180
உரைமரபு 189
உரையாசிரியர் 29
உரையிற்கோடல் 58
உலகம் தழுவிய இலக்கியங்கள் 27
உலா 243
உலோகச்சிலை 49
உலோபம் 73,74

உவமவியல் 32,137,139,140,147
உவமத்தொகை 59,105
உவமைக்கோட்பாடு 31
உவமைமரபு 243
உள்ளுறைஉவமம் 139
உறழ்கலிப்பா 215
உறுப்பியல் 184
எச்சவியல் 89,110,114,124
எட்டுகணம் 233
எட்டுச் சிற்ப நூல்கள் 16
எண்ணுப்பெயர் 85
எண்வகைமணம் 31
எதிர்காலம் 109,110
எதுகை 49,60,205,206,221
எதுகைப்பொழிப்பு 207
எய்துதலருமை 156
எல்லை 29
எழுசீர்அடி 197,209
எழுத்ததிகாரம் 26,35,37,59,190,191
எழுத்தானந்தம் 234,235
எழுத்தியல் 68,82,246
எழுத்துகளின்பிறப்பு 43
எழுத்துவழக்கு 39
எழுத்தோத்து 184
எழுபதுதளைவழு 186,199,200, 226
எழுவாய் 59
எழுவாய்வேற்றுமை 95,96,99,118
எஜமான் 52
ஏகவசனம் 95,97
ஏழுஇசைநூல்கள் 25
ஏனைஉவமம் 139
ஐகாரக்குறுக்கம் 70,76,78,83, 128
ஐந்தாம்வேற்றுமை 100
ஐந்திணைப்பாகுபாடு 31
ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் 23,29
ஐந்திலக்கணம் 24,26,27,60, 65,66,80,131,188,229
ஐந்திலக்கணமரபு 36
ஐந்துஅறிவுஉயிர் 46
ஐந்துசீர்அடி 197,209,221
ஐம்பத்தொருநிலம் 209
ஐம்பால் 113
ஐரோப்பியர் 9
ஐவகைமுரண் 208
ஒத்தாழிசைக்கலிப்பா 142,215
ஒப்பாய்வியல் 27
ஒருகுணம்தழுவிய உரிச்சொல் 125
ஒருசொல்பல்பொருள் பெயர்த்தொகுதி 125
ஒருசொல்பல்பெயர் தொகுதி 56,60,125
ஒருசொல்ஒருபெயர்த் பெயர்த்தொகுதி 56
ஒருதலைஉள்ளுதல் 153
ஒருபோகு 142,215
ஒருஉ 205,208
ஒருஉமோனை 211
ஒலிபற்றிய பெயர்த் தொகுதி 228
ஒழிபியல் 134,151,184,230,245
ஒற்றளபெடை 83,84,127
ஓரசைச்சீர் 194,200
ஓரடித்தொடை 207,211
ஓலையின் இலக்கணம் 233, 243,250,252
ஔகாரக்குறுக்கம் 70,76,78,83, 84,127
கட்டடம் 16,41
கட்டளைக்கலித்துறை 187
கட்டளைவகையடி 197,225
கடியாறு 195,196
கடைச்சீர் 194,221
கடையாகுஎதுகை 50
கணம் 15,51
கணவிரி 194
கணிதம் 41
கத்தியம் 188,221
கதி 50–52
கந்தருவம் 31,156
கந்தருவமார்க்கம் 47,217
கந்தருவவழக்கம் 148
கரணக்காரகம் 101
கரணம் 31,103
கருத்தா 103

கருத்தாக்கம் 11
கருத்தாகாரகம் 101
கருதுகோள் 23
கருப்பொருள் 147
கருமக்காரகம் 101
கருமத்தின்காரகம் 103
கருவறை 49
கருவிஇலக்கணம் 68
கருவிநூல் 56
கருவிளம் 194,196
கலித்தளை 222
கலித்தாழிசை 216
கலித்துறை 216
கலிப்பா 142,201,204,209, 211,214,215,218,232
கலியடி 198
கலிவிருத்தம் 216
கலிவெண்பா 142,215
கலிவெண்பாட்டு 215
கழிநெடிலடி 181,198
களங்காடு 195
களவியல் 32,134,137,147,151, 152,159,161,177
களவு 31
களன் 28
கற்பியல் 134,137,147,151,163, 177
கற்பொடுபுணர்ந்தகவ்வை 161
கன்மதாரயசமாசம் 104
காஞ்சிப்பொதுவியல் 168
காப்பியம் 256
காந்தாரபஞ்சமம் 234
காரகபதம் 97
காரிதக்காரிதத்தாது 108
காரிதத்தாது 108
காலகட்டப்பிரச்சினை 22
காலம்காட்டும்இடைநிலை 110
கானல்வரி 218
கிரந்தவரிவடிவு 15
கிரியாபதப்படலம் 92,109
கிரியாபதம் 110
கிரேக்கம் 21
கிளவிகளை அடைவுறக் கோத்தல் 176
கிளவியாக்கம் 89,90,94,111,113,115, 116,120,126,129
கிளைமொழி 22
கிறித்தவம் 42
கீழ்க்கதுவாய் 205
குமரன் 239
குரவை 217
குரு 189,223
குளத்துக்கால் 195
குளத்துமடை 195
குளிறுபுலி 195
குற்றியலிகரம் 76,83,128
குற்றியலுகரஈறு 68
குற்றியலுகரப்புணரியல் 67,85
குற்றியலுகரம் 70,76,128,129,180, 191,193
குறட்பா 248
குறள் 212,215,221
குறள்தாழிசை 216,221
குறளடி 181,198
குறிஞ்சி 234
குறிப்புவிட்டிசை 208
குறிப்புவினை 106,107
குறில்ஒற்றின் கீழ்க் குற்றியலுகரம் 192
குறில்நெடில்ஒற்றின் கீழ்க் குற்றியலுகரம் 192
குறில்நெடில் கீழ்க் குற்றியலுகரம் 192
குறிலிணைஒற்றின் கீழ்க் குற்றியலுகரம் 192
குறிலிணைக் கீழ்க் குற்றியலுகரம் 192
குறுவெண்பாட்டு 214
குறைஅவை 244
குறையுறஉணர்தல் 155
கூதிர்ப்பாசறை 174
கூவிளம் 196
கூழை 205
கேட்போர் 28
கேவலக்கேவலக் கேவலத்தாது 109
கேவலத்தாது 109

கைக்கிளை 142,144,151,152,160, 172,214
கையேடு 32
கொச்சகஒருபோகு 215
கொச்சகக்கலிப்பா 215
கொச்சகம் 218
கொளு 169,172
கோயில் 52,236
கோவை 151
கோளி 103
கோளிக்காரகம் 101
சங்கஇலக்கியம் 23
சங்ககாலம் 244
சங்கதஇலக்கணம் 39
சட்டகம் 48
சந்தம் 182,189,223
சந்திஇலக்கணம் 70,77
சந்திப்படலம் 69
சமணசமயம் 42,44,231
சமணர் 24,38,39,40,225
சமணசமயக்கொள்கை 42,43
சமயச்சார்பு 44
சமயக்கல்வி 32
சமயச்சிந்தனைகள் 41,42
சமயப்பின்னணி 11
சமயம் 33,41
சமஸ்கிருதம் 21,29,31,33,105
சமுதாயமொழியியல் உருவரை 33
சமுகவியல் 19
சவலை 223
சார்புநூல் 184
சார்பெழுத்து 69,82,83,191
சாரியைகள் 71
சிங்கநோக்கு 80,117
சித்திரம் 230
சிந்தடி 181,198
சிந்தனைமரபு 23
சிந்தியல் 212,215,221
சிந்து 223
சிலப்பதிகாரம் 217
சிலை 48,51,54
சிற்பசாத்திரம் 15
சிற்பநூல் 9,15,16,48,49,51–53, 55,229,231,237,240,241,256
சிற்பம் 41
சிறப்பிலக்கணம் 90,115,116, 124
சிறப்பிற்பொதுவியல் 168
சிறப்புப்பாயிரம் 28,29,74,80, 110,134
சிறுகதை 27
சிறுதேவபாணி 218
சீர் 50
சீர்வகையடி 197,225
சீரந்தாதி 208
சீரோத்து 184
சுதந்திரப்போராட்டம் 10
சுவடி 15
சூத்திரர் 232,233
சூலம் 54,55
செந்துறை 46,47,218
செந்தொடை 205,207
செம்பியன் 72
செய்கைஇலக்கணம் 68
செய்யுளியல் 137,140,141–143, 147,150,179–181,184,218,226
செவியறிவுறூஉ 142
செவிவழிக்கதைகள் 29
சென்னைப் பல்கலைக்கழகம் 9,19
சேயிடைப்பிரிவு 162
சேற்றுக்கால் 195
சைவசமயத்தவர் 39
சைவசித்தாந்தசாத்திரம் 45
சைவசித்தாந்தம் 44,45,61
சைவம் 39,42,44
சொல்அதிகாரம் 26
சொல்முரண் 207
சொல்லானந்தம் 234,235
சோதிடஅறிவு 15
சோதிடக்கருத்துகள் 15
சோதிடநூல் 15
சோதிடநூல்சுவடி 15
சோதிடம் 21,41
சோழப்பெருமன்னர் 37
சோழர்காலஅரசியல் 35
சோழர்காலம் 33

தடவுமருது 195
தத்திதப்படலம் 93,106
தத்திதப்பிரத்தியம் 106
தத்திதப்பெயர் 72
தத்திதம் 73,74
தத்திதாந்தம் 93,106
தத்துவச்சிந்தனை 61
தத்துவம் 11,42,61
தத்துவமரபு 11
தம்துணிபுஉரைத்தல் 98,99
தமிழ்இலக்கணஉருவாக்கம் 11,22
தமிழ்இலக்கணமரபு 18,35,41
தமிழ்இலக்கண வரலாறு 23, 25,41
தமிழ்இலக்கியவரலாறு 11
தமிழ்நாட்டுக்கோயில்கள் 16
தமிழ்நாடு 36
தமிழ்ச்சமூகம் 15
தமிழ்நிலப்பரப்பு 11
தமிழ்நெறி 40
தமிழ்மொழி 182
தமிழ்வரிவடிவு 15
தமிழ்வழங்கும்நிலப்பரப்பு 16
தமிழகத்தின்எல்லை 16
தமிழியல்ஆய்வு 10
தலைபோகுமண்டிலம் 218
தலையாகெதுகை 50
தளை 197
தளையோத்து 184
தளைவழு 211
தற்கிழமை 118
தற்சிறப்புப்பாயிரம் 251
தற்புருடசமாசம் 104
தனித்தமிழியக்கம் 66
தாண்டகம் 189,223
தாது 73,74,93,108,109
தாதுப்படலம் 93,108
தாதுப்பெயர் 73
தாய்மொழி 34
தாலம் 49
தாழிசை 187,216,219,221
தானம் 15,51
திசைச்சொல் 127
திசைப்பெயர் 87
திணைமயக்கம் 147
திரட்டுநூல்கள் 14
திராவிடஇயக்கம் 66
திராவிடசாஸ்திரம் 80
திராவிடமொழிக்குடும்பம் 66
திரிசொல் 127
திரிபாதி 223
திருப்பொறிவகை 255
திருவாரூர் 60
திருவேங்கடநாதஅய்யர் 60
திலதம் 223
தீயஅவை 244
துயிலெடைநிலை 166
துவந்துவசமாசம் 105
துவிகுசமாசம் 105
துவிவசனம் 95,98
துறை 187,214,216,219,221
தூக்கானந்தம் 234
தூக்கியல் 24
தெரிநிலைவினை 105
தெளித்தல் 156
தெளிவுஅகப்படுத்தல் 153
தென்மொழி 40
தேமா 194,196
தேவபாணி 142,215
தைலம் 55
தொகை 93
தொகைநிகண்டு 125
தொகைநூல்கள் 187
தொகைப்படலம் 93,104
தொகைமரபு 67,68
தொடர்நிலைச்செய்யுள் 183
தொடரியல் 89,116,117,125,129
தொடை 197,205
தொடையானந்தம் 234
தொடையோத்து 184
தொல்காப்பியஇலக்கணமரபு 35
தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் 29
தொல்காப்பியப்பயிற்சி 186,188
நட்சத்திரப்பொருத்தம் 53
நட்சத்திரம் 53
நடனம் 42
நடுவாய்தம் 69,76

நயப்புணர்த்தல் 156
நல்லஅவை 244
நவதாலம் 50
நவீனஇலக்கணஆராய்ச்சி 10
நன்னன் 236
நாட்டார்பாடல் 242
நாடகஇலக்கணம் 229,231,233, 234,256
நாடகத்தமிழ் 14,24,219
நாடகம் 47
நாதம் 43
நால்வகைக்கவிகள் 230,231,243, 250
நால்வகைப்பா 189
நால்வருணம் 32,231,243,250
நாலசைச்சீர் 194
நாவல் 27
நாற்சீரடி 197,211,221
நான்காம்வேற்றுமை 100,104
நிகண்டு 21,22,27,28,57,60, 61,124
நிகழ்காலம் 109,110
நிரல்நிரை 205
நிரை 180,194
நிரைபு 180,193,194
நிரையீற்றுவஞ்சியடி 200
நிலை 218
நிலைமண்டிலஆசிரியப்பா 215
நிறைஅவை 244
நிறைப்பெயர் 87
நீடுகொடி 195
நுண்ணியல்அளவு 10
நூற்பயன் 244,251
நூற்பெயர் 29
நூன்மரபு 67
நெடில்ஒற்றின் கீழ்க் குற்றியலுகரம் 192
நெடில்கீழ்க்குற்றியலுகரம் 192
நெடில்தொடர்க் குற்றியலுகரம் 192
நெடிலடி 181,198
நெடுவெண்பாட்டு 214
நேர் 180,194,198
நேர்க்கோட்டுத் தன்மையற்ற போக்கு 11
நேர்பு 180,194
நேரிசை 221
நேரிசைஆசிரியப்பா 215
நேரிசைஒத்தாழிசைக்கலிப்பா 215
நேரிசைவெண்பா 215
நேர்ற்றுமுவசைச்சீர் 193
பஃறொடைவெண்பா 215
பகற்குறி 151,154,155
பகுபதஉறுப்புகள் 86
பகுவசனம் 95,98
பஞ்சமம் 234
படிமங்களின் உடல் உறுப்புகள் 16
படிமம் 54
பண்டிதர்கள் 39
பண்ணத்தி 216,242
பண்புத்தொகை 59,105
பத்தியம் 188,221,223
பத்துளச்சம் 90,126
பத்துப்பொருத்தம் 51
பதம் 82
பதவியல் 82,110
பதிப்பாசிரியர் 136
பதிப்புப்பணி 9
பதினோராவதுநிகண்டு 125
பயன் 29
பயிற்றுஇலக்கணம் 33
பரத்தை 32
பரிபாடல் 214
பரியாயநாமம் 255
பல்பொருள்கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி 57,125
பல்லவர் 24
பலகுணம்தழுவிய உரிச்சொல் 124
பலநெல்சமாசம் 104
பலபொருள்தரும் ஒரு சொல் 125
பன்னிருமாணவர்கள் 29
பாங்கற்கூட்டம் 153,155,160
பாங்கியிற்கூட்டம் 153,155,160
பாட்டியல் 9,12,14,15,24,27,51, 53,55,63,227–256
பாட்டு 242
பாட்டுடைத்தலைவன் 241,244

பாதிரி 194,196
பாய்குரங்கு 195
பாயிரம் 112,184
பால் 15,51,54,55
பாலன் 239
பாலை(சிறுமி) 54,239
பாலையாழ் 234
பாவினம் 14,187,189,214,216, 217,220,225,232
பாறுகுறுகு 195
பிசி 242
பியந்தை 234
பிரகிருதி 95,96,106
பிரத்தாரம் 223
பிரத்தியய் 105,107–110
பிரபந்தம் 15,53,151,229,230, 241,243–245,247,255
பிரிவச்சம் 156
பிள்ளைத்தமிழ் 243
பிறப்பியல் 67
பிறப்பு 67,82
பிறர்மதம்கூறல் 99,188,189
பிறிதின்கிழமை 119
புணரியல் 67
புத்தவிகாரை 33
புதுக்கவிதை 13,27
புரவலன் 245
புராணம் 256
புலிசெல்வாய் 196
புலிபடுவாய் 196
புள்ளிமயங்கியல் 67
புளிமா 194,196,197
புறத்திணையியல் 137
புறநிலைவாழ்த்து 142
புறனடை 80,184
புனல்தருபுணர்ச்சி 150
பூத்தருபுணர்ச்சி 150
பூமருது 195,196
பெண்மரம் 238
பெயர் 67
பெயரியல் 90,112,115,116,118, 120
பெயரெச்சம் 121
பெருங்காப்பியம் 256
பெருந்திணை 144,148,151
பெருந்தேவபாணி 218
பெருநிலைமொழி 33
பேச்சுவழக்கு 39
பேரியல்அளவு 10
பொதுஇலக்கணம் 90,116,117
பொதுப்பாயிரம் 81
பொதுவியல் 115,118,125,126
பொதுவியல்திணை 168
பொருட்போலி 108
பொருத்தம் 14,15,51,230
பொருட்படலம் 135,158,159
பொருத்தம்பற்றிய கருத்தாக்கம் 15
பொருள்இலக்கணம் 18,35,41
பொருள்கோள் 116,126
பொருள்முரண் 206
பொருளதிகாரம் 32,35,131, 135,140,149,179,189
பொருளானந்தம் 234,235
பொருளியல் 134,137,152,175
பொழிப்பு 205
பொழிப்புமோனை 211
போதகாசிரியர் 58,61
போதுபூ 196
போரேறு 195,196
போலி 82
பௌத்தசமயம் 44
பௌத்ததத்துவம் 61
பௌத்தம் 42,231
பௌத்தமரபு 40
மகரக்குறுக்கம் 76,83,84,128
மங்கலச்சொல் 15
மத்திமதசதாலம் 49
மத்திமம் 49,51
மதுரம் 230
மந்திரம் 21
மரணம் 239
மரபியல் 137,166
மரபுஇலக்கணம் 29
மரபுவழுவமைதி 13
மருட்பா 214
மருத்துவம் 42
மழகளிறு 195,196

மறைந்துபோனதமிழ் நூல்கள் 14
மாங்காடு 195
மாசெல்வாய் 196
மாத்திராங்குலம் 242
மாசெல்வாய் 196
மாபடுவாய் 196
முக்கட்கூட்டம் 162
முகநிலை 218
முகம் 218
முச்சங்கம் 29
முச்சீரடி 197,209,221
முத்தகம் 218
முதல்நிலை 82
முதல்வேற்றுமை 95
முதல்வைப்பு 75
முதலெழுத்து 50,69,83,191
முதற்சீர் 194,221
முதுசொல் 242
முரண் 205
முரண்பொழிப்பு 207
முரி 218
முரிநிலை 218
முல்லைப்பொதுவியல் 168
முற்றியலுகரம் 192,193
முற்று 59,205
முன்னுறவுணர்தல் 155
முப்பு 239
முவசைச்சீர் 194
மூன்றாம்வேற்றுமை 99,104
மெய்ப்பாட்டியல் 137,138,140, 146,147,175
மெய்ப்பாடு 137–139
மெய்ம்மயக்கம் 82
மெய்தொட்டுப்பயிறல் 155
மெய்யீற்றுப்புணரியல் 81
மெய்யீறு 68
மெய்யுறுபுணர்ச்சி 155
மென்றொடர்க்குற்றியலுகரம் 191
மேற்கதுவாய் 205
மொழிச்சூழல் 33
மொழிமரபு 13,67
மொழியாக்கமரபு 111,113
மொழியியல் 27,37,66
மொழியியல்அணுகுமுறை 27
மொழியியல்கல்வி 9
மொழிவரலாறு 10
மோனை 205,207
மோனைப்பொழிப்பு 207
யாகசாலை 236
யாப்பதிகாரம் 35,188,220
யாப்பிலக்கணக் கோட்பாடுகள் 185
யாப்பிலக்கணம் 41
யாப்பிலக்கணமரபுகள் 179
யாப்பு 10,35
யாப்புப்படலம் 188,220
யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சங்கத்தார் 60
யாற்றுமடை 195
யுவதி 239
லகு 189,223
வச்சணந்தி 250
வஞ்சித்தாழிசை 216
வஞ்சித்துறை 216
வஞ்சிப்பா 142,209,214,215,232
வஞ்சியுரிச்சீர் 194,200,221
வஞ்சிவிருத்தம் 216
வடசொல் 107
வடநூல் 56
வடநூல்வழித்தமிழாசிரியர் 26, 56,182,223
வடநூற்கடல் 37
வடமொழி 10,15,18,21,22,33–36,39,40,56,65,66,70,72,73,93, 181,182,241
வடமொழிஇலக்கணம் 10, 22,23,26,27,29,30,36,91,92
வடமொழிஇலக்கணமாதிரி 92,98
வடமொழிக்காரகஇலக்கணம் 94, 103
வடமொழிச்சந்தி 79
வடமொழிச்சார்பாளர் 37
வடமொழிநாடகக்கோட்பாடு 31
வடமொழிமரபு 10,37,97,98, 102,103,106,188,189,221
வடிவம் 55
வடிவு 67
வடுகு 180

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா 215
வண்ணகம் 142,215
வண்ணம் 185,220
வணிகர் 232,233
வர்க்கஎழுத்து 70
வர்க்கம் 73
வரகுசோறு 195
வரகுதவிடு 195
வரி 217
வருக்கமோனை 208
வருணம் 32,51,52,163,232, 233,237,243,247
வரைவியல் 134,151,152,160,161, 177
வரைவுகடாதல் 153
வழுவமைதி 114
வன்பொறை 156
வன்றொடர்க் குற்றியலுகரம் 84, 191
வனப்பு 183,220
வாசகர் 17,28,29
வாய்மொழி 242
வாயில்கள் 151
வாயில்நேர்தல் 163
வாயில்நேர்வித்தல் 163
வாயில்மறுத்தல் 163
வாயில்வேண்டல் 163
வாயுறைவாழ்த்து 142
வாழ்த்து 142
வானப்பிரஸ்தம் 32
விகாரப்புணர்ச்சி 86
விசயன் 235
விட்டிசை 208
வித்தாரம் 230
விமானம் 49
வியாகரணம் 21,22,36,91
விரிமுரண் 218
விருத்தம் 187,214,216,219,221, 223
விருத்திசந்தி 73,74
விருத்தை 55,239
விளிமரபு 90,104,112,115,129
விளிவேற்றுமை 59,101,104, 116–118
விறகுதீ 196
வினை 93
வினைத்தொகை 105
வினைமுற்று 106
வினையியல் 90,94,112,115
வினையெச்சம் 119,120
வீடுபேறு 32,195
வீரசோழன் 33
வீரசோழியமரபு 29
வீரராசேந்திரன் 72
வெண்கலிப்பா 222
வெண்சீர் 194,221
வெண்சீரடி 200
வெண்செந்துறை 47,216,221
வெண்டாழிசை 216
வெண்டுறை 216,218
வெண்பா 43,187,198,200,201, 209,212,214,215,232
வெண்பாஉரிச்சீர் 200
வெளிப்படைநிலை 163
வெளிவிருத்தம் 216
வேட்கை 32,153
வேணுக்கோல் 195
வேதம் 21,22,31
வேதமொழி 22
வேதாங்கம் 21
வேற்றுமை 93,94,103
வேற்றுமைஉருபு 87
வேற்றுமைத்தொகை 104
வேற்றுமைத்தொடர் 117
வேற்றுமைப்படலம் 93,94,101,103
வேற்றுமைப்பிரத்தியம் 107
வேற்றுமைப்புணர்ச்சி 71
வேற்றுமைமயக்கம் 116,118
வேற்றுமைமயங்கியல் 89,90, 104,111,115,118,129
வேற்றுமையியல் 89,90,111,115, 118,129
வேனிற்பாசறை 174
வைணவம் 42
வைதிகசமயத்தவர் 226
ஸ்திரி 54



இவர், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் ஆய்வியல் நிறைஞர், முனைவர்ப் பட்டங்களைப் பெற்றவர். இலக்கணம், அழகியல், சிற்பக்கலை, நவீன இலக்கியம், நாட்டுப்புறவியல், மக்கள் தொடர்புச் சாதனங்கள் ஆகிய துறைகளில் ஈடுபாடு உடையவர். கணிப்பொறியியலில் மிகவும் ஆர்வம் கொண்ட இவர், தமிழை மின்னணுச் சாதனத்திற்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இவரது முனைவர்ப் பட்ட ஆய்வேடு, இப்பொழுது புத்தகமாக வெளிவருகிறது.

தமிழ் இலக்கிய, இலக்கண வளம் மிகுந்த மொழி. இருபதாம் நூற்றாண்டில் மொழியியல் துறை வளர்ச்சி பெற்றபின், இலக்கண ஆராய்ச்சி பெருகியது. அறிஞர்கள் இதில் ஈடுபட்டுப் பல புதிய முடிவுகளைக் கண்டனர். இதனால் இலக்கணம் பற்றிய புரிதலில் பல பரிமாணங்கள் ஏற்பட்டன. இலக்கணத்தின் பகுதிகளைத் தனித்தனியே கூர்மையாகவும் துல்லியமாகவும் ஆய்வுசெய்து வெளியிட்ட முடிவுகள் நிறைய வந்துள்ளன. எனினும் இலக்கணத்தை இன்னும் பல கோணங்களில் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. தமிழில் இலக்கணத்தின் தோற்றம் பற்றிய கருத்தாக்கம் உண்டாகவில்லை.

இந்தப் புத்தகம் தமிழில் பல இலக்கண மரபுகள் நிலவி வந்தன என்பதை ஆதாரங்களோடு நிறுவ முயன்றுள்ளது. இப்படிப் பல இலக்கண மரபுகள் தோன்றுவதற்கான காரணங்களை ஆராய முயன்றுள்ளது. இலக்கண நூல்களுக்கும் சிற்ப நூல்களுக்கும் உள்ள உறவுகளைச் சுட்டிக் காட்டுகிறது. இசை, நாடக நூல்களின் முக்கியத்துவம் பற்றிக் கூறுகிறது. காலத்தால் அழிந்துவிட்ட இலக்கண நூல்களையும் சான்றுகளாகக் கொண்டு, மரபுகளை இனம் காண முற்படுகிறது.